T. N. L. A Debates

Official Report

VOL. LXVI NO. 1

April 17th 1984

V211, 31 N84
N84.66:1;1
36258

ஆவணக்காப்பக
136258
சென்னை-600 008.
D
V211,31'N84
N84.66-131

## உள்ளடக்கம்.

**17-4-1984.**

| | |
|---|---|
| (அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | i |
| (ஆ) Personnel of the Govt. of Tamil Nadu. | iii |
| (இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | v |
| (ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல். | x |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் — | 1—34 |
| 2. அறிவிப்பு— | |
| கைது செய்யப்பெற்ற உறுப்பினர் திரு நெடுமாறன் விடுதலை செய்யப்பெற்றது.. | 35 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| கரூர் மில் தொழிலாளர்களது வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்வது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களும் உண்ணாவிரதம் இருப்பது .. | 35—53 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| செங்கற்பட்டு மாவட்டம் சாத்தினஞ்சேரி ஏரிக் கால்வாய் பராமரிப்பு .. | 53—58 |
| 5. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி.) .. | 58—109 |
| (அ) கோரிக்கை எண். 16—மருத்துவம் — | |
| (ஆ) கோரிக்கை எண். 19—பொதுச்சுகாதாரம் .. | |
| மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே .. | 60—62 |
| டாக்டர் கே. சௌரிராஜன் .. | 62—76 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் .. | 76—83 |
| திரு. துரைமுருகன் .. | 83—102 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 110—111 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)— பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)— வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்,

9. மாண்புமிகு திரு. பி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள். எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டுவசதி குடிசை மாற்றுவாரியம் புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு, (தொழில் துறை அமைச்சர்) — பெருந்தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்),—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.



20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)— கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU

THIRU. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister)-Public General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance) - Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) - Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development) - Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) - Information and Publicity, Film Technology, Tourism, Tourism Developement Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permit.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education) Education, including Technical Education, Official Language

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)- Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) - Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) - Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour) Labour, Housing Slum Clearance Board Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) - Health.

13. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)- Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries, Mines and Minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works)- Prohibition excluding grant of liquor permit, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidas Welfare)- Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals) - Nutritious Meals.

18. Hon. Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control) - Environmental Pollution Control.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)- Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY Minister for Khadi)- Khadi.

22. Hon. Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)- Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries)- Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries) Fisheries.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
2. திரு. மா. சின்னராசு
3. திருமதி. ம. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்.
5. திரு. என். வரதராஜன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.

### குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்

திரு. ஜே. ரெஜீனால்ட் ஜான், பி.ஏ.

திரு. வ. சா. ஜான், பி.ஏ.

### எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்த நாரயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல். எல்.பி.

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 25-10-83 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட

பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி |
| 14 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ |
| 18 | ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்–2 |
| 19 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 20 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கொ. | செங்கல்பட்டு |
| 21 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 24 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 25 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 26 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 27 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 28 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 29 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 30 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 33 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 34 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 35 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 36 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 39 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 40 | இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதா கிருஷ்ண நகர் |
| 41 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 42 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 44 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 45 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 46 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 47 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 48 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 49 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 51 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 52 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 56 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57 | கருப்பையா, திரு இரா. | குளித்தலை |
| 58 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.) |
| 59 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 60 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 61 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 62 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63 | காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஜி. | காங்கேயம் |
| 65 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 66 | கிருட்டினமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 67 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிகுப்பம் |
| 68 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 69 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 70 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 71 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 72 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 73 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 74 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 | குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 79 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 81 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 84 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ.வ.) |
| 85 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 86 | சட்டநாதகரையாளர், திரு. கி. | தென்காசி |
| 87 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 88 சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 89 சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 90 சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 91 சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 92 சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டனம் |
| 93 சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 94 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 95 சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 96 சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 97 சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 98 சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 99 சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 100 சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 101 சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 102 சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 103 சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 104 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 105 சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 106 சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 107 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 108 சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 109 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 110 சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 111 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 112 சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 113 சுப்பிரமணியன், திரு. கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர் |
| 114 சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 115 சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவ |
| 116 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117 சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 118 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 119 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 120 செல்வமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 121 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 122 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123 சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 124 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 125 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 126 சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 127 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2 |
| 128 சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 130 தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 140 திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141 திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா. |
| 142 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 143 தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 144 துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 145 துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146 துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 147 துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 150 நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 151 நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 152 நவநீதகிருஷ்ண பாண்டியன், | ஆலங்குளம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 153 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 154 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 156 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 157 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 158 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 160 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 161 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 162 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 163 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 167 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 168 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 169 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 171 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 173 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு.வேடச்சந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 175 | பாலன், திரு. சு. | பெரம்பூர்(செ.வ.) |
| 176 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 177 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 179 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 181 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 182 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 184. | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 185 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 186 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 187 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 188 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 189 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 191 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.). |
| 192 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 193 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 194 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ). |
| 198 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 199 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 200 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 201 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.). |
| 202 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 203 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 204 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 205 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 206 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர் பேட்டை(செ.வ. |
| 207 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 208 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 210 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 211 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 212 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213 | வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 214 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |
| 215 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 216 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 218 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 219 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 222 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 223 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலமலை |
| 226 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 228 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 230 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 231 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232 | வெற்றிடம். | |
| 233 | வெற்றிடம். | |
| 234 | வெற்றிடம். | |
| 235 | வெற்றிடம். | |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.**

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5 மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்
6 மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்
7 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

1984, ஏப்ரல் 17, செவ்வாய்க்கிழமை

சித்திரை 5, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்

கற்றான் கருதிச் செயல்''

மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும் நோயின் அளவையும் காலத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு மின்வாரியம் கொடுக்கவேண்டிய பணம்

585—(*வினா எண். 20649) திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு மின்வாரியம் மின்சாரம் வாங்கிய வகையில் பணம் கொடுக்க வேண்டி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) 11-3-84 நிலவரப்படி ரூ. 64.49 கோடி கொடுக்க வேண்டும்.

(இ) நிலுவைத் தொகையை விரைவில் செலுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெய்வேலிக்கு நம்முடைய மின்வாரியம் செலுத்த வேண்டிய தொகையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஏற்கனவே இந்த தமிழ்நாடு

மின்சார வாரியம் விவசாயிகளுக்கு எல்லாம் குறைந்த விலையிலே தருகிறோம், இன்னும் மற்றக் காரணங்களால் நஷ்டத்திலே நடைபெற்று வருவதால், இந்தத் தொகையில் ஏதாவது மானியம் மத்திய அரசிடம் கேட்கின்ற எண்ணம் அரசுக்கு உள்ளதா? அப்படி கேட்டுள்ளதா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல், குறைந்த கட்டணத்திலே விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவதால் மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. கடந்த நிதி ஆண்டில் 190 கோடி ரூபாயில், 164 கோடி கடனாகவும், 26 கோடி உதவித் தொகையாகவும், மாநில அரசு மின்வாரியத்திற்கு வழங்கி உள்ளது, அதனுடைய நிதிநிலையைச் சரிகட்டுவதற்காக இந்தச் சூழ்நிலையில், இத்தகைய அதாவது ரூரல் டெவலப்மெண்ட் என்று கிராமப் பொருளாதாரத்தினுடைய வளர்ச்சிக்கு மத்திய அரசும் முன் வந்து உதவி செய்யவேண்டும் என்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு கேட்டதற்கு இணங்க தவணை தந்து உள்ளார்களா? இந்த பாக்கிக்கு நம்முடைய அரசிடமிருந்து ஏதாவது வட்டி வசூலிக்கிறார்களா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நெய்வேலி நிர்வாகத்தோடு கலந்து பேசி, தவணை முறையில் தான் செலுத்தி வரப்படுகிறது. வட்டியை அவர்கள் கேட்டாலும் தருவதில்லை. பொதுவாக அரசு நடத்துகிற நிறுவனங்களோடு, அத்தகைய பரிமாற்றங்கள் ஏற்படுகிறபோது வட்டி வாங்குவது என்பது சரியான கொள்கையாகாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேசனுக்கு மின்சாரம் வாரியம், மின்சாரத்திற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ஆனால் இந்த கார்ப்பரேசன் நிலக்கரியைத் தோண்டுகிற இடத்திலே, உற்பத்தியாகிற தண்ணீரை, தன்னுடைய உபயோகத்திற்குப் பயன்படுத்துகிறது. இந்த தண்ணீருக்காக, தமிழ்நாடு அரசுக்கு இந்த கார்ப்பரேசன் பணம் ஏதாவது கொடுக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய கருத்துரு எதுவும் இல்லை.



டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேசனுக்கு மின் வாரியம் மின்சாரத்திற்காக பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால், என்ன விலையில் அதை வாங்கியது? இத்தனை ஆண்டுக்காலத்திற்குள் கொடுக்கவேண்டும் என்று ஏதேனும் ஒப்பந்தம் இருக்கிறதா? அப்படியானால் அந்த ஒப்பந்தம் இப்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேசனிடமிருந்து நாம் பெறுகின்ற மின்சாரத்திற்கு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அதற்குரிய விலையைத் தந்து வருகிறோம். 1-4-80 முதல் 31-3-84 முடிய ஒப்பந்தம் அமுலில் இருந்தது. இப்போது அந்த ஒப்பந்தம் அமுலில் இல்லை. ஆகவே விலையை உயர்த்துவதற்கு நெய்வேலி நிர்வாகம் கோரியுள்ளது. விலை நிர்ணயம் பற்றி பேச்சு வார்த்தை இப்போது நடைபெற்று வருகிறது.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, கனிவளம் நாட்டுக்குச் சொந்தமானது. ஆகவே, இதுகாறும் கனிவளத்தை உத்தேசித்து ராயல்டி என்ற முறையில் ஏதாவது அளிக்கப்படுகிறதா? அப்படி அளிக்கப்படாமல் இருந்தால், அந்த ராயல்டி வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி எல்லாம் அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு இன்னும் பாக்கி வைத்துள்ளதால், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷன், மின்சாரம் கொடுப்பதில் ஏதேனும் சிக்கல் உள்ளதா? நமக்கு வேண்டிய மின்சார அளவு ஏதேனும் குறைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தற்போது எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி மூலம் ஒன்றும் ஏற்பட்டுவிட வேண்டாம்,

திரு தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, 64.49 கோடி ரூபாய் பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு கடன் கொடுக்க வேண்டும், மின் வாரியத்தின் மூலமாக என்று சொன்னார்கள். அது எத்தனை ஆண்டுகளில் பாக்கியாக நிற்கிறது? அல்லது 1983 ஆம் ஆண்டு பாக்கி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அது கடந்த ஆண்டு பாக்கி.

கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்.

586—(*வினா எண். 20769) திரு சி. கணேசன், திரு. என். வரதராஜன், திரு. கு. ரமணி, திரு. செ. செம்மலை, திரு. இரா. தாமரைக்கனி, திரு எம். சின்னசாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் அணு மின்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்விசை தமிழ்நாடு மின்சார 'கிரிட்'டிற்கு (மின் சேமிப்புத் தொகுப் ) வழங்குவதற்குத் தமிழக அரசு மைய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) 23-7-83 முதல் 235 மெ·வாட் உற்பத்தி திறன் கொண்ட முதல் பிரிவு நிலையம் உற்பத்தியைத் தொடங்கியது. இது ஜனவரி இறுதி வாரத்திலிருந்து வணிக ரீதியில் உற்பத்தியை தொடங்கி, அதன் தேவைக்கு போக மீதியை தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகிறது. கல்பாக்கத்திலுள்ள அணுமின் நிலையத்திற்கு முதல் பிரிவில் முழு மின்சாரத்தையும், இரண்டாவது பிரிவின் உற்பத்தியில் 50 சதவீதம் மின்சாரத்தையும் தமிழகத்திற்கு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

(ஆ) இறுதி பதில் இதுவரையில் கிடைக்கவில்லை.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய சேமிப்பு தொகுப்புக்கு கல்பாக்கம் அணுமின் நிலையத்திலிருந்து கிடைக்க வேண்டிய நம்முடைய பகுதி ஈவு கிடைக்கவில்லை, பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்- தமிழகத்திலே தொடர்ந்து விவசாயமும், தொழிலும் பாதிக்கப்பட்டு, கடுமையான நஷ்டத்திற்கும், கஷ்டத்திற்கும், உள்ளாகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, நமக்கு தமிழகத்திலேயிருக்கிற அனல் மின்சார நிலையங்களிலிருந்தும் கிடைக்க வேண்டிய ஈவு கிடைக்கவில்லை; இராமகுண்டலத்திலிருந்து கிடைக்க வேண்டியதும் கிடைக்காமல் இருக்கிறதே, வெறும் பேச்சு வார்த்தையோடு நின்றால் மட்டும் போதுமா? இதற்குத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, அதைப் பெறுவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டாமா என்று அறியவிரும்புகிறேன்'

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பிரதம அமைச்சருக்கும், மத்திய எரிசக்தி அமைச்சருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30-9-83 அன்றும், 6-12-83





அன்றும் கடிதம் எழுதியுள்ளார்கள். 7-3-84ல் சட்டப் பேரவையிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாரதப் பிரதமர் அவர்களை முதல்வர் அவர்கள் நேரில் சந்திக்கிற போதும், இது பற்றி அவரிடத்திலே தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நமக்கு இருக்கிற மின்சாரப் பற்றாக்குறை ஒரு பெரிய நெருக்கடியை வெகு சீக்கிரத்தில் சிருஷ்டிக்கப் போகிறது. இங்கு இருக்கக் கூடிய பேசின் பிரிட்ஜ் மின்சார நிலையம் வேலை செய்ய முடியாத அளவுக்கு அது மூடப்படப் போகிறது என்ற நிலை இருக்கிறது. ஆகவே, பக்கத்திலே இருக்கக்கூடிய கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தி ஆகிற அந்த மின்சாரத்தை, தமிழகத்தில் கரண்டே போதாமல் இருக்கக்கூடிய இந்த நெருக்கடி நிலையில் தொழிலும் விவசாயமும் ஸ்தம்பித்து போகாமல் பாதுகாப்பதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு மின்சாரத்தை முதலிலே நமக்கு தரவேண்டும்; அதற்குப் பிறகு அதன் ஈவு என்ன என்று கணக்கிட்டு பார்த்து மத்திய சர்க்கார் தீர்மானிக்கட்டும். ஆகவே இப்படிப்பட்ட எமர்ஜன்சி நிலையை சமாளிப்பதற்கு அரசு என்ன தீவிர நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தற்போது வணிக ரீதியில் அண்மைக் காலமாக உற்பத்தியை அதிகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் தான் பயன்படுத்தி வருகிறோம். இருப்பினும், இது குறித்து ஒரு நிலையான கொள்கையினை மத்திய அரசு முடிவெடுப்பது நல்லது என்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதி உள்ளார்கள். மத்திய எரிசக்தித் துறை அமைச்சரிடமிருந்து முதல்வருக்கு கடிதம் வந்திருக்கிறது. பிரதமரிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருப்பது ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்கோ, அல்லது மாநிலங்களுக்கோ வரையறை வைத்து தருவது என்பது எப்படிமுடியும். அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமையை ஒட்டித்தான் தர முடியும் எனக் கூறியுள்ளனர். இந்தக் கடிதம் ஆங்கிலத்திலே இருக்கிறது, அப்படியே சொல்கிறேன்.

(முற்பகல் 9-10)

'It has been decided that power from Central Projects would not be firmly allocated to any one State or States but the Centre would in the context of power position in different States in a region decide distribution of power from time to time.' என்ற வகையிலே அவ்வப்போது முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்ற வகையிலே மத்திய எரிசக்தி அமைச்சரிடமிருந்து 31-3-84 ஆம் தேதியிட்ட அந்தக் கடிதம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மிகுதியான மழை இந்த நடப்பு ஆண்டிலே பெய்திருந்தாலும் நடப்பு மாதங்களிலே மின்சாரத் தட்டுப்பாடு தமிழ் நாட்டில் ஆங்காங்கே தலை தூக்குகிறது, இது குடிநீர் நெருக்கடியைக் கூடக் கூடுதலாக்கும். போதுமான குடிநீர் இப்போது இருந்தாலும்கூட பம்ப் செய்யமுடியாத நெருக்கடி ஏற்படுவதால் பல பகுதிகளிலே நெருக்கடியான சூழ்நிலை ஏற்படும். நம்முடைய தேவையை வற்புறுத்த சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு தூதுக் குழு அவசரமாக சென்று அந்த உரிமையைப் பெறுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அது தேவையில்லை.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின்நிலையத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு இதுவரையில் எவ்வளவு யூனிட்டுகள் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது: அப்படி வழங்கப்படுகிற நேரத்திலே ஒரு யூனிட் என்ன விலைக்கு கொடுக்கப்படுகிறது? அதை வாங்கி விநியோகிக்கிற போது எந்த விலைக்கு நாம் அளிக்கிறோம் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இதுவரையில் 42 கோடி யூனிட்டுகள் நமக்கு கல்பாக்கத்திலிருந்து கிடைத்திருக்கிறது. அவர்கள் அதிகக் கட்டணம் கேட்டிருக்கிறார்கள். நாம் குறைத்துச் சொல்லி வருகிறோம். தற்காலிகமாக யூனிட் ஒன்றுக்கு 38 காசாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, பயனீட்டாளர்களுக்கு ஏற்கனவே உள்ள கட்டண விகிதங்களில் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கல்பாக்கம் மின் திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்விசை எல்லாம் தமிழ்நாட்டிற்குக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாராளுமன்றத்திலே உறுதிமொழி கொடுத்திருக்கிறார்களே, அந்த உறுதிமொழி மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது? மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சி செய்தார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே அந்த உறுதிமொழிதான் நமக்கு இருக்கிற ஒரே நம்பிக்கை.

## பாண்டியாறு புன்னம்புழா மற்றும் நெல்லித்துறை மின்திட்டங்கள்.

587—(*வினா எண். 21115) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பாண்டியாறு—புன்னம்புழா, மற்றும் நெல்லித்துறை மின் திட்டங்கள் தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வுகாண மாநில அரசு, கேரள அரசுடன் நேரிடையாகப் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) பாண்டியாறு புன்னம்புழா நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக கேரள, தமிழக மாநிலங்களுக்கிடையே 1965-ம் ஆண்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இத்திட்டத்தின் மீது முடிவெடுக்குமுன் பாண்டியாறு புன்னம்புழா நதிகளின் நீரைப் பாசனத்துக்கு திருப்பிவிட முறையீடுகள் வரப்பெற்றன. இது குறித்து கேரள அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, இரண்டு அரசுகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஓர் உடன்பாடு ஏற்படுத்துவது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காவிரி நீர்ப்பிரச்சினையில் இறுதித் தீர்வு ஏற்பட்ட பின்னர் நெல்லித்துறை நீர்மின் திட்டம் நிறைவேற்றுதல் பற்றிய செயற்குறிப்பை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாமென அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்திட்டங்களைச் செயல்படுத்துவது சம்பந்தமாக 1965 ஆம் ஆண்டு 2 மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டும் இன்னும் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. அதேபோல் காவிரி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதால் பல்வேறு நீர்மின் திட்டங்கள் 20, 25 ஆண்டுக் காலமாக அமல்நடத்தப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த மின்திட்டங்களை தேசிய நீர்மின் திட்டக் கழகத்திடம் ஒப்படைத்து அவர்கள் உற்பத்தி செய்வதற்கு மாநில அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த காலதாமதத்தைப் பொறுத்தவரையில் அதற்கு நாம்தான் காரணம். வேறு யாரும் அல்ல. 1965 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி மின்சாரத்தை மட்டும் தான் எடுத்துக்கொள்ள முடியும். அந்த ஆற்றிலிருந்து நீரை கேரளா பயன்படுத்த வேண்டி வரும். ஒப்பந்தம் 1965 ஆம் ஆண்டு போட்டாலும் மேற்கே நோக்கிப் பாய்கின்ற அந்த ஆறுகளிலிருந்து நீரை ஓரளவுக்கு கோவை மாவட்டத்திற்கு திருப்பிவிட வேண்டுமென்று நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருவதால் தான் இந்தக் காலதாமதம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திற்கு பவானி திட்டத்திலிருந்து 10 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்தால் மாநில

அரசு போடுகின்ற அனைத்து நிபந்தனைகளுக்கும் ஒத்துக் கொள்ளும் என்று அந்த அரசு கூறியுள்ளதா? ஆம் என்றால் அந்த கருத்தின் மீது மாநில அரசும் தமிழக அரசின் மின்சார வாரியமும் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தொடர்ந்து நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் இந்த ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கின்ற போது 2 மாநிலங்களுக்கும் பயன் தரக்கூடிய வகையில் அது இருந்தால் தான் அந்த ஒப்பந்தத்தை இரு மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்ள இயலும். அந்த வகையில் கேரள அமைச்சரும் நானும் பல முறை பேசி இருக்கிறோம். ஓரளவுக்கு பவானியி லிருந்து கேரளத்திற்கு நீரை நாம் தருகின்றபோது அவர்கள் பாண்டியாறு புன்னம்புழாக்கு நீரை நமக்கு தருவதற்கு ஒரு வழி வகை ஏற்படுத்த முடியும். ஆனால் அதிலே என்ன சிக்கல் என்றால் பவானி என்பது காவேரி ஆற்று ஒப்பந்தத்தை பொறுத்து இருக்கிறது. கர்நாடகத்துனுடைய சம்பந்தம் இல்லாமல் எத்தகைய காரியத்தையும் நாம் மேற்கொள்ள முடியாது. அதிலே சட்ட சிக்கல் இருப்பதால் அந்த பிரச்சினையைப் பற்றி சட்ட நிபுணர்களோடு கலந்து ஆலோசித்து வருகிறோம். 25-10-82 லும் 7-11-82 லும் கேரள மின் துறை அமைச்சரோடு நானும் நம்முடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் நடத்திய பேச்சு வார்த்தைகளில் ஓரளவுக்கு ஒப்பந்தம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் இப்போது ஏற்பட்டு இருக்கின்றன. அதன்படி கோவை மாவட்டத்திற்கும் நீரைப் பெற்றுத் தர இயலும். கேரளத்திற்கும் மின்சார இழப்பு இல்லாமல் பவானியிலிருந்து ஓரளவுக்கு நீரை திருப்பி அவர்கள் மின் உற்பத்தியை மேற்கொள்ள இயலும். ஆனால் அதிலே சட்டப் பிரச்சினைகள் சில இருப்பதனால் காலதாமதம் ஆகி வருகிறது.

திரு. கி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு புன்னம்புழா திட்டம் செயல்படாமல் இருப்பதற்கு காரணமே கேரள அரசு நம்முடைய அரசிடமிருந்து அரிசியும், சிமெண்டும் கேட்பதால் தான் கால தாமதம் ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள். அப்படி அந்தத் திட்டம் கால தாமதம் இல்லாமல் உடனடியாக செயல்படுத்துவதற்கு அந்த அரசோடு பேசி செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து சரி அல்ல Silent Valley Project-ல் அவர்கள் எடுத்துக்கொள்ள முடியாமல் போய் விட்டதால் பவானியிலிருந்து ஓரளவுக்கு மின் உற்பத்தி பெற





வேண்டும் என்று கேரள அரசு முயற்சி செய்கிறது. அந்த வகையில் தான் இது பரிசீலனையில் இருக்கிறதே தவிர இதில் அரிசி, சிமெண்டு பிரச்சினை எழவில்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாண்டியாறு புன்னம்புழா நீர் மின் திட்டம் பற்றி சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நெல்லித்துறை நீர்மின் திட்டம் 1974 லேயே மத்திய அரசு ஒப்புதல் கொடுத்து இருந்தும் இன்னும் கால தாமதம் ஏற்படுகிறது. அதற்கான காரணங்கள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லித்துறை நீர்மின் திட்டமும் காவேரி ஆற்றுப்படுகையோடு சம்பந்தப்பட்டது. ஆகவே காவேரி ஆற்றுப் பிரச்சினை தீருகின்ற வரையில் அந்தத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற கோவை மாவட்டத்திற்கு பாண்டியாறு புன்னம்புழா நீர் பாசனத் திட்டம் மிகவும் அத்தியாவசியமான ஒன்று. ஆகவே இப்பகுதியினுடைய தேவையை கருதி காவேரி பிரச்சினையோடு இதை இணைக்காமல் கேரள அரசோடு பேசி தனியாக ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு அதுவும் பவானி தண்ணீர் நமக்கு உபயோகத்தில் இருக்கிற நீர்தான். ஆகவே இதை காவேரியோடு இணைக்காமல் தனியான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா? அடுத்த கட்ட பேச்சு வார்த்தை எப்போது நடைபெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965 லே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தை நாம் மாற்ற வேண்டும் என்கிறோம். அப்படி மாற்றுகிறபோது அது ஒரு மாநிலத்திற்கு பயன் அளிக்கக் கூடியதாக இருந்தால் மற்ற மாநிலம் எப்படி அதில் கையெழுத்துப் போடும் என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் சிந்திக்கவேண்டும். எந்த ஒப்பந்தமும் இரு மாநிலத்திற்கும் பயன் அளிக்கின்ற வகையில் இருந்தால்தான் அந்த ஒப்பந்தம் செயல்படும். ஆகவே பவானியோடு இணைத்து கேட்கவேண்டிய நிலையில் கேரள அரசு இருக்கிறது. ஆகவே தனியாகப் பேசுவது என்பது ஒப்பந்தத்தை வரவேற்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்காது. நான் ஏற்கனவே அறிவித்து போல சில சட்ட சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தால் அது சம்பந்தமாக நாங்கள் சட்ட நிபுணர்களிடம் கருத்து கேட்டு இருக்கிறோம். திரு. ஏ. கே. சென், திரு. கே. கே.

வேணுகோபால் மற்றும் தலைமை வழக்கறிஞர் அவர்களிடத்தில் இதுபற்றி கேட்டு இருக்கிறோம்? அவர்களிடமிருந்து அந்த விவரம் வந்த பிறகு மீண்டும் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப் படும்.

சங்கரன்கோவில் நகரில் அறநிலையத்தின் சார்பில்
பாலிடெக்னிக் அமைக்கும் திட்டம்.

*588—(*வினா எண். 18489)*—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ)** திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் நகரில் அறநிலையத்தின் சார்பில் பாலிடெக்னிக் அமைப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் அனுப்பப் பெற்றுள்ளதா?

**(ஆ)** ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : *(அ மற்றும் ஆ)* இல்லை.

(முற்பகல் 9.20)

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்வியை விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த அரசு தீர்மானித்திருப்பது வரவேற்கத் தக்கது. இந்தத் திட்டத்தினை, சங்கரன்கோவில் அறநிலையத்தின் சார்பில் ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை விட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது. எனவே, அதை மீண்டும் பரிசீலனை செய்து, பாலிடெக்னிக் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வி, சங்கரன்கோவில் நகரில் அறநிலையத்தின் சார்பில் பாலிடெக்னிக் அமைப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் அனுப்பப் பெற்றுள்ளதா என்பது; அதற்குத்தான் இல்லை என்று பதில் அளித்துவிட்டேன். ஆகவே, அரசுக்கு எந்தவிதமான விண்ணப்பமும் வரவில்லை; அறநிலையத் துறை ஆணையாளருக்கு வரவில்லை. பொதுவாக, பாலிடெக்னிக் ஆரம்பிப்பது என்பது ஒரு மிகப்பெரிய செலவினத்தைக் கொண்டதாக இருக்கிறது. இப்பொழுது அரசினுடைய முடிவின்படி தனியார் நிறுவனங்கள் — அறநிலையத் துறையும் தனியார் நிறுவனமாகத்தான் கருதப்படுகிறது — புதிதாகத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கும்பொழுது, எல்லாச் செலவுகளையும் அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இப்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு, சங்கரன்கோவில் ஆலயத்திலே நிதி வசதி இப்பொழுது இல்லை.



திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற, ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ள அனைத்து ஆலயங்களின் சார்பிலேயும் பாலிடெக்னிக்குகளைப் போன்ற தொழில் கல்வி நிலையங்களை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவ ரவர்களே, ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள ஆலயங்கள் தங்களுடைய தேவைக்கே பற்றாக்குறையாக இருந்து கொண்டு வருகின்றன. ஆகவே, ஐம்பது இலட்சம் ரூபாய், அறுபது இலட்சம் ரூபாய் முதலீடு செய்து பாலிடெக்னிக் ஆரம்பிப்பது என்பது இயலாத காரியம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் மூலம், பழனி தேவஸ்தானத் திலிருந்து இந்த ஆண்டு பொறியியல் கல்லூரி அமைக்க அனுமதி கேட்டு விண்ணப்பித்தார்களா? அப்படி அனுமதி கொடுக்கப்பட்டு விட்டதா? அது எப்பொழுது ஆரம்பிக்கப்பட ஏற்பாடு செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது, சங்கரன்கோவில் ஆலயத்தைப்பற்றிய கேள்வி. தனிக்கேள்வி போட்டால் அதற்கான தகவல்கள் தரப்படும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறநிலையத்தைச் சார்ந்த தேவஸ்தானங்களில் சில தேவஸ்தானங்களில் காலியிடம் ஏராளமாக இருக்கிறது. இந்தக் காலியிடங்களை அரசுக்குக் கொடுத்தால் பாலி டெக்னிக்கோ அல்லது கல்வி நிலையங்களோ அமைப்பதற்கு அரசு முன்வருமா? அல்லது ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேறு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவ ரவர்களே, ஆலயங்களுக்குச் சொந்தமான இடங்கள் தரிசாகவோ அல்லது காலி நிலங்களாகவோ இருந்தால், இப்படிப்பட்ட பொதுமக்களினுடைய தேவைகளுக்காக — கல்வி, மருத்துவ வசதி போன்ற தேவைகளுக்காக வழங்குகின்ற நடைமுறை இருந்து வருகிறது. முறையாக அரசினுடைய அந்த சம்பந்தப் பட்ட துறைகள் ஆலயங்களை அணுகும்பொழுது, நிலைமைக் கேற்றவாறு, நிதிவசதிக்கேற்றவாறு, அது குறைந்த விலையிலும் தரப்படுகிறது; அல்லது விலை பெறாமலேயும் தரப்படுகிறது. ஆகவே, ஆலயங்களின் — அறநிலையங்களினுடைய நிலங்களைப் பொறுத்தவரையில் அந்த நிலங்களுக்குச் சொந்தமான நிறுவனங்கள் — அந்த ஆலயங்கள் நிதியிலே பற்றாக்குறையாக இருந்து சங்கடப்படுகின்ற சூழ்நிலைகள் இல்லையென்றால், இப்படிப்பட்ட நிலங்களைக் குறைந்த செலவிலே கூட, அப்படிப் பட்ட பொதுக் காரியங்களுக்குத் தரப்படுகிறது அரசுக்கு.

[1984 ஏப்ரல் 17

ஈரோடு நகரிலுள்ள அருள்மிகு மாரியம்மன் கோவில்.

589—(*வினா எண். 1965) — திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் ஈரோடு நகரத்தில் மாரியம்மன் கோவில் தர்மகர்த்தாக்களாகச் சென்ற ஆண்டு இருந்தவர்கள் நீக்கப்பட்டு வேறு ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கென்ன காரணம்?

(இ) சென்றாண்டு இக்கோவில் திருவிழாவின்போது ஏலம் விடப்பட்ட கடைகள் மூலம் என்ன வருமானம் கிடைத்தது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஈரோடு நகரில் அருள்மிகு பெரிய மாரியம்மன் சின்ன மாரியம்மன் எனப்படும் ஒரு ஆலயமும், கருங்கல்பாளையம் பகுதியில் அருள்மிகு சின்ன மாரியம்மன் எனப்படும் ஒரு ஆலயமும் உள்ளன. மாரியம்மன் கோவில் என்று அழைக்கப்படும் ஆலயம் எதுவும் ஈரோடு நகரில் இல்லை. எவ்வாறாயினும், ஈரோடு நகரில் உள்ள மேற்கூறிய இரு ஆலயங்களிலும் அறங்காவலர் எவரும் பதவி நீக்கம் செய்யப் படவில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

(இ) அருள்மிகு பெரிய மாரியம்மன் சின்ன மாரியம்மன் ஆலயத்திற்கு 1982 ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்ட கடைகள் மூலம் ரூ. 1,21,095 வருமானம் கிடைத்தது. கருங்கல் பாளையம் அருள்மிகு சின்ன மாரியம்மன் ஆலயத்திற்கு திருவிழாவின்போது கடைகள் ஏலம் விடப்படுவது இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டுள்ள இந்த அறங்காவலர்கள் மீது அவர்களுடைய நடவடிக்கையிலே குறைபாடு உள்ளது என்றும் அந்தக் கோயில்களின் நிர்வாகத்தில் முறைகேடுகள் ஏற்பட்டு வருகின்றன என்றும் ஏதாவது புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றதா? அப்படிப்பட்ட புகார்கள் மீது ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றனவா? அவர்கள் நீக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் புகார்கள் வரப்பெற்று அதன்மீது விசாரணையோ அல்லது நடவடிக்கையோ எடுக்கப் பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, என்னிடத்திலே இருக்கின்ற தகவல்படி அப்படிப்பட்ட புகார்கள் வந்திருப்பதாகக் குறிப்புகளிலே இல்லை. நீக்கப்பட்டது உண்மையா என்கின்ற கேள்விக்கு அப்படிப்பட்ட நடவடிக்கைகள் துவும் இல்லை என்று தான் பதிலளித்து இருக்கிறார்கள். அப்படி ஏதாவது புகார்கள் வரப்பெற்று அவை பரிசீலனையில் இருக்கின்றதா என்பது பற்றி இப்போது இந்தத் தகவலில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, திருவிழாக்கள் நடக்கும்போது கடைகளை ஏலம் விடுகின்ற வழக்கம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மற்ற கோயில்களில் திருவிழாக்களின் போது ஏலம் விடப்படுகின்றது. அப்படி இருக்கும்போது இந்தக் குறிப்பிட்ட கோயில்களிலே மட்டும் ஏலம் விடாமல் இருந்தால் அதன் காரணமாக திருவிழாக்களின் போது நடைபெறுகின்ற வியாபாரம் மற்றும் கொடுக்கல் வாங்கல் இல்லாமல் போய் கோயிலுக்கு வருமானம் வராமல் போவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆனால் பல இடங்களில் அப்படி வருமானம் வருவதற்குரிய வழிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கே மட்டும் அப்படிச் செய்யாமல் இருப்பதற்கான காரணம் என்ன? மற்ற கோயில்களிலே இந்த நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாக எங்களுக்குப் புகார்கள் வந்ததன் காரணத்தால்தான் இந்தக் கேள்வியையே அனுப்பினோம். ஆகவே அந்த வருமானம் ஏமாற்றப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. அதுபற்றி ஏதாவது விவரங்கள், புகார்கள் அமைச்சருக்கு வந்திருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த ஈரோட்டில் இருக்கின்ற இரண்டு ஆலயங்கள் அதாவது பெரிய மாரியம்மன், சின்ன மாரியம்மன் ஆகிய ஆலயங்கள் ஒரு நிர்வாகமாகவும், கருங்கல்பாளையத்தில் உள்ள சின்ன மாரியம்மன் ஆலயம் இன்னொரு தனி நிர்வாகமாகவும் இருக்கின்றன. இந்த பெரிய மாரியம்மன், சின்ன மாரியம்மன் என்று அழைக்கப்படுகின்ற இரண்டு ஆலயங்களைப் பொறுத்த வரையில் திருவிழாக்களின் போது அங்கே ஏலங்கள் விடப்படு கின்றன. அப்படி விடப்பட்டதன் காரணத்தால் 1982 ஆம் ஆண்டுக்கான வருமானம் 1,21,095 ரூபாய் என்றும் 1983 ஆம் ஆண்டு 1,77,831 ரூபாய் என்றும் விவரங்கள் தரப்படுகின்றன. ஆனால் கருங்கல்பாளையத்தில் உள்ள சின்ன மாரியம்மன் கோயிலின் ஆண்டு வருமானமே 4,840 ரூபாய்தான். அங்கே திருவிழாக்களின்போது அப்படிப்பட்ட ஏலங்கள் விடப்படுவ தில்லை. அங்கே இந்த ஏலங்கள் விடுவது சம்பந்தமாக குறிப்பிட்ட புகார்கள் எதுவும் இப்போது இங்கு இல்லை. ஆனால் அதற்குப் பிறகு, இந்தக் கேள்வி எழுப்பப்பட்டதற்குப் பின்னால் ஏதாவது புகார்கள் வந்திருக்குமேயானால் அதைப் பற்றி ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆனால் பொதுவாக ஏலங்கள் விடப்படுகின்றபோது பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தங்களின் சொந்த இலாபத்தைக் கருதி அதனைப் பெற முடியாமல் போவதால் கூட இப்படிப்பட்ட புகார்கள் எழுப்பப்படுகின்ற சூழ்நிலை ஆங்காங்கே வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே புகார்கள் வருகின்றன என்பதையே அடிப்படையாக வைத்து தவறுகள் நிகழ்கின்றன என்ற முடிவை எடுக்க முடியவில்லை. ஆகவே புகார்கள் வந்தால் உடனடியாக அதைப்பற்றி விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம்; அவ்வாறு விசாரிக்கப்படுகின்றது; உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. எனவே தவறுகள் இருந்தால் அது உடனடியாகக் கண்டிக்கப்பட்டு அதற்கான தண்டனைகளும் வழங்கப்படுகின்றன. அது அறங்காவலர்களாக இருந்தாலும் அல்லது நிர்வாக அதிகாரிகளாக இருந்தாலும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### இராமேசுவரத்தில் அடிக்கடி ஏற்படும் மணல் தூவைத் தடுக்கும் திட்டம்.

**590—(*வினா எண் 21184)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமேசுவரத்தில் அடிக்கடி ஏற்படும் மணல் தூவை (Sand dunes) தடுக்க அப்பகுதியில் தாய்லாந்து சவுக்கு மரங்களைப் பயிரிடுவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இராமேசுவரம் தீவில் அடிக்கடி காற்றின் விளைவால் ஏற்படும் மணல் தூவைத் தடுக்க வனத்துறை, வனச் செயல் முறை திட்டப்படி சவுக்கு மரத் தோட்டங்களை ஏற்படுத்தி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் தாய்லாந்து சவுக்கு மரத் தோட்டங்கள் எழுப்புதல் பற்றி பரிசோதனையும் செய்து வருகிறது.

(முற்பகல் 9-30)

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இராமேசுவரம் தீவில் மணல் தூவைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பெட்ரோல் கம்பெனி ஏதோ ஒரு திராவகத்தைத் தூவி மணல் கிளம்பாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக ஒரு அறிவிப்பு வந்ததே, அது எந்தளவு உண்மை ? மேலும் இஸ்ரேல் போன்ற நாடுகளில் பாலைவனத்தையே நல்லமுறையில் கொண்டுவருவதற்கு, மணல் தூவு ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள், அதற்கான வகைகளைக் கண்டுபிடித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அங்கே நாம் யாரையாவது அனுப்பி அந்த முறையை இங்கே கையாண்டு இராமேஸ்வரம் தீவைக் காப்பாற்ற இந்த அரசு முன்வருமா ?





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இப்படி காற்றால் மணல்குன்றாக மேவி அங்கே பல தொல்லைகள் ஏற்படுத்துகிற சூழ்நிலையைத் தடுப்பதற்கு வனத் துறையைப் பொறுத்தவரையில் மரங்களை வளர்க்கிற, சவுக்கு மரங்களை வளர்க்கிற அந்த முறையைத்தான் பின்பற்றிக்கொண்டு வருகிறோம். 1961-ல் இருந்து 1969 வரை மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. அதற்குப் பிறகும் சவுக்குத் தோட்டங்கள் நல்லமுறையில் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் இராமேஸ்வரத்தில் 679.82 ஹெக்டேர் ஒதுக்கக் காடுகளிலும், 1,448.05 ஹெக்டேர் வனத்துறையைச் சாராத இதர நிலங்களிலும் ஆக, 2,127.87 ஹெக்டேர் நிலங்களில் சவுக்கு பயிரிடப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப்போன்று இந்த எண்ணெய் கம்பெனி மூலம் என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்ற விவரம் வனத்துறையினடத்தில் இல்லை. மேலும், இஸ்ரேல் போன்ற நாடுகளில் பாலைவனங்களை அவர்கள் எந்தளவிற்கு பயன்படுத்தியுள்ளார்கள் என்பதெல்லாம் மிகப் பெரிய அளவில் ஒரு நாட்டினுடைய அரசாங்கம் அதை ஆய்ந்து பார்த்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள். அப்படிப்பட்ட முயற்சிகள் இதுவரையில் வனத்துறையினிடத்தில் இல்லை. ஆனால் இந்த சவுக்கு மரங்களைப் பொறுத்தவரையில் நம் சவுக்கு உப்புக் காற்று படுவதால் அவை நல்லமுறையில் வளர்ச்சி பெறாமல் மறைந்து விடுகின்றன, கருகி விடுகின்றன. ஆனால் தாய்லாந்து சவுக்கு என்பது உப்புக்காற்றையும் மணலையும் தாங்கிக்கொண்டு பெரிய அளவில் வளர்ந்துவருவதாக இப்போது நம் ஆய்விலிருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். மரக்காணத்திற்குப் பக்கத்தில்தான் தாய்லாந்திலிருந்து 1950-ல் கொண்டுவரப்பட்டு, அந்தக் கன்றுகளை அங்கே பரிசோதனையில் வைத்து இப்போது நல்லமுறையில் 200 மரங்கள் அங்கே வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் துரதிருஷ்டவசமாக வந்த மரங்கள் எல்லாம் ஆண் மரங்கள். ஆகவே விதைகள் கிடைக்கவில்லை. பனை போன்று இதில் ஆணும் இருக்கிறது பெண்ணும் இருக்கிறது. ஆகவே இந்த சவுக்கை புதிதாக உற்பத்தி செய்யக்கூடிய முறையில் பதியங்கள் போட்டு, பெண்ணை உருவாக்கி, அதற்குப் பிறகு இந்த மரங்களை பெரிய அளவில் வளர்த்து இராமேஸ்வரம் பகுதியில் நடுவதற்கு— பொதுவாக மணல்பாங்கான இடங்களில் நடுவதற்கு வனத்துறையால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பாலமலை மலைச்சாலையைப் புதுப்பிக்கும் திட்டம்.

**591—(*வினா எண் 22461)—திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம் 'பாலமலை மலைச்சாலை' புதுப்பிப்பதற்கு வனத் துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) இதன் மீது வனத் துறை எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஆம்.

(ஆ) பாலமலைச் சாலையை இப்பொழுது இருக்கும் அகலத்திலேயே மரங்களை வெட்டாமல் மேம்படுத்தவோ அல்லது மீண்டும் போடவோ ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுமதி வழங்குமாறு வனத்துறை தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**திரு. மா. சின்னராசு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில் நல்லதொரு மலைப் பாதையை பாலமலைக்கு ஏற்படுத்துவதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதிகளில் அவர்களுக்குத் தேவைப்படுகிற சாலை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வனத்துறையே அதை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா? அப்படி ஏதாவது சாலைப் பணிகளை வனத்துறை எடுத்துக்கொண்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ;** தலைவர் அவர்களே, பொதுவாக வனப்பகுதிகளில் உள்ள சாலைகள் வனத்துறை பொறுப்பில் இருந்து வருகின்றன. அவற்றை நிர்வகிக்கிற பொறுப்பும் பராமரிக்கிற பொறுப்பும் வனத்துறையினிடத்தில் தான் இருக்கிறது. அப்படி ஏதாவது இதுவரை மாற்றப்படாமல் இருக்குமானால், அதை வனத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தச் சாலைகளை வனத்துறையினுடைய பொறுப்பில் எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. மா. சின்னராசு :** தலைவர் அவர்களே, பழங்குடியினர் வாழ்கிற பகுதிகளின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுகிறபோது வன இலாகா தனியாக அதற்கான அங்கீகாரத்தை வழங்குவது அல்லது மறுப்பது என்ற நிலை இல்லாமல் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்தில் கலந்துகொண்டு அந்த முடிவை மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு உத்தரவை வழங்கினால் நிச்சயமாக இதுபோன்ற பணிகளில் தடை ஏற்படுவதைக் குறைக்கலாம். அந்த வகையில் வனத்துறை அதிகாரிகள் ஒரு திட்டத்தை அங்கீகரித்து அனுப்புவதற்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனை அல்லது அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்ற முறையில் இதற்கான ஒரு அறிவிப்பை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிக்குள்ளே நடைபெறுகிற வேலைகளுக்கு எப்படி அனுமதி வழங்க வேண்டுமென்பதிலே, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து வழங்குவதா அல்லது அவர்களிடம் பேசாமல் அனுமதி வழங்குவதா, மறுப்பதா



என்பதிலே பிரச்னை எழவில்லை. புதியதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற இந்திய அரசினுடைய வனப் பாதுகாப்புச் சட்டத்தினால் இந்தச் சிக்கல்கள் இப்போது உருவாகியிருக்கின்றன. இந்த மாநிலம் முழுவதற்கும் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இப்போது இந்தப் பிரச்னை வந்து கொண்டிருக்கிறது. நான் நேற்று வனத் துறை மானியக் கோரிக்கையின்மீது பதிலளிக்கின்றபோது இந்தக் கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். தொடர்ந்து மத்திய அரசினிடத்திலே இதுபோன்ற மலைவாழ் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்றுகிறபோது, வனத்துறை முடிவெடுப்பதற்கு மாநில அரசுக்கு விதிவிலக்கு அளிக்கும் அதிகாரம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், மத்திய அரசு இன்னும் அதற்கான முடிவை, அப்படி விதிவிலக்கு அளிக்க அவர்கள் முன்வரவில்லை. இந்தச் சூழ்நிலையில் பிரச்னைகள் எழுகின்றனவே தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர்களை கலந்து, இந்தப் பிரச்னையில் பரிகாரம் காண முடியாது. ஏனென்றால், சட்டத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பு இந்த வனத் துறை அதிகாரிகளுக்கு இருக்கிறது. அதைத்தான் நான் முன்பேகூட, இங்கே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் சொல்லுகின்றபோது, அதைத் தெளிவுபடுத்தி இருக்கிறேன். காரணம், மத்திய அரசு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் யாராவது தவறு செய்வார்களானால், அந்த அதிகாரிகள்மீது மத்திய அரசே நேரடியாக நடவடிக்கை எடுக்கும் என்றுகூட அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். அப்படி ஒரு குறிப்பு இருப்பது அல்லது உணர்வு கொண்டிருப்பது தவறு என்று மாநில அரசின் சார்பில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது இருக்கின்ற பிரச்னையெல்லாம், வனத் துறை எப்படி இந்தத் தடையை அகற்றுவது என்பதாகும். வன பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பு வனத் துறை அதிகாரிகளுக்கு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பணிகளை ஆற்றுவதில் சிக்கல்கள் இருக்கின்றன. அதைத்தான் இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வனத்திலே அபிவிருத்தி வேலை செய்வதற்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். நேற்றும் எடுத்துச் சொல்லி, இதைத் தெளிவாக்கியிருக்கிறார்கள். ஆனால், சமீப காலத்தில் நமக்கு வந்த தகவல், கேரள மாநில அரசுக்கு வனத்திலே ஏற்கனவே தங்கியிருக்கக் கூடியவர்களுக்கு அந்த நிலத்தை பட்டா செய்து கொடுப்பதற்கு அனுமதித்திருப்பதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அப்படியென்றால், மத்திய அரசை நம் மாநில அரசு அணுகி, கேரள மக்களுக்கு இப்படி ஒரு சலுகை அளித்திருப்பதுபோல், நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு,

அங்கே அபிவிருத்தி வேலைகள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று கேட்க, நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திற்கு மத்திய அரசு அப்படி வனத்திலே குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க அனுமதித்திருக்கும் செய்தியை பத்திரிகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்ததுபோல், நாங்களும் பார்த்திருக்கிறோம். அது எந்த அளவிற்கு உண்மை அல்லது உறுதிப்படுத்தப்பட்ட செய்தி என்பது தெரியவில்லை. ஏனென்றால், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு காட்டுப் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அனுமதிக்க வேண்டுமென்று எழுதிய போது, அவர்கள் அப்படி அனுமதி வழங்க முடியாது என்று மறுத்திருக்கிறார்கள். இதிலே பிரச்சனை என்னவென்றால், அந்த ஏழை மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி அளிப்பது பற்றி மத்திய அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. பத்திரிகையிலே வந்த செய்தி உண்மையாக இருக்குமேயானால், கேரளத்திற்கு ஒரு நீதி, தமிழகத்திற்கு ஒரு நீதி என்ற அளவில் அவர்கள் அமுல்படுத்த முடியாது. ஆகவே, அந்த உரிமை தமிழக அரசுக்கும் வந்து சேரும்.

### பெரியார் மாவட்டத்தில் துவங்கப்படவுள்ள நவீன இரும்பு உருக்கு மற்றும் வார்ப்படத் தொழிற்சாலை.

592— (* வினா எண் 17103) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982–83-ல் பெரியார் மாவட்டத்தில் நவீனமயமான இரும்பு உருக்கு மற்றும் வார்ப்புத் தொழிற்சாலையைத் தனியார் நிறுவனம் துவக்க உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், பள்ளகவுண்டன் பாளையத்தில் திருவாளர்கள் சக்தி பவுண்டரீஸ் லிமிடெட் என்ற நிறுவனம் எஸ். ஜி. அயர்ன் கேஸ்டிங்ஸ் என்ற பொருளை உற்பத்தி செய்ய உள்ளது. இதன் உற்பத்தித்திறன் ஆண்டிற்கு 3,600 டன்னாக இருக்கும். சுமார் ரூ. 2 கோடியாக முதலீடு இருக்கும்.

(இ) ஏற்கனவே ஐம்பது ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு தொழிற்கூடத்திற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.



(முற்பகல் 9-40)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்திற்கு நம்முடைய தமிழ்நாடு அரசு ஏதாவது உதவி செய்திருக்கிறதா? அப்படி உதவி செய்திருக்குமேயானால் என்ன, என்ன வகையான உதவி என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? இந்த நிறுவனத்திலே நம்முடைய மாநிலத் தவர்களுக்கு மட்டும்தான் வேலை தரப்பட வேண்டுமென்கிற நிபந்தனையை அரசாங்கம் விதித்துள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் சிப்காட் மற்றும் டி.ஐ.ஐ.சி. ஆகிய நிறுவனங்களிடமிருந்து தலா ரூ. 60 இலட்சம் மற்றும் ரூ. 30 இலட்சம் கடன் கேட்டு விண்ணப்பித்திருக்கிறது. வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது சுமார் 250 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தனியார் நிறுவனங்கள் ஒரு தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்று நம்முடைய அரசுக்கு கோரிக்கைகள் வருகின்ற பொழுது அவர்களே இடத்தைத் தேர்வு செய்கிறார்களா? அல்லது நம்முடைய அரசாங்கம் இந்த இடங்களிலே இப்படிப் பட்ட தொழில்களை ஆரம்பியுங்கள் என்று ஆலோசனை ஏதாவது வழங்குகிறதா? அப்படி ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தால் பிற்பட்ட பகுதிகளிலே இதுபோன்ற தொழில் களை ஆரம்பிக்க இனிமேலாகிலும் நம்முடைய அரசு அதுபோன்ற ஆலோசனையை வழங்குமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் தொழில் தொடங்கும்போது அவர்கள் விரும்புகிற இடங்களிலேதான் தொழில்கள் தொடங்க முடியும். அவர்களை அந்த இடத்திலே தொடங்கு, இந்த இடத்திலே தொடங்கு என்று கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் பெரும்பாலும் பின்தங்கிய பகுதிகளிலே அவர்களே தொழில் களைத் தொடங்க முன் வருவார்கள். ஏனென்றால் அந்தப் பகுதியிலே சப்சிடி, கடன், மானியம் போன்ற வசதிகள் இருக் கின்றன. எனவே பெரும்பாலும் அந்தப் பகுதியிலேதான் தொடங்க முன்வருகிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நடுத்தர தொழில் நடத்திக் கொண்டிருக்கிற வர்களுக்கு அவர்கள் செலுத்திய வணிக வரித் தொகையை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டு அரசாங்கம் கடன் கொடுக்கின்ற முறை இருந்து வருகிறது. ஆனால் அதே நேரத்திலே சிறிய தொழில் நடத்துகின்றவர்களுக்கு ஒரு

குறிப்பிட்ட தேதியிலிருந்து அதற்குப் பின்னாலே தொழில் தொடங்கியவர்களுக்குத்தான் அவர்கள் செலுத்துகின்ற வரியைக் கணக்கிட்டுத்தான் கடன் கொடுக்கப்படுகிறது. பிற்பட்ட பகுதியிலே தொழில் நடத்துகின்றவர்களுக்கு அந்த மாதிரி ஒரு சலுகையை, இதற்கு முன்னாலே எந்த ஆண்டு தொடங்கப் பட்டிருந்தாலும், சிறிய தொழில் நடத்துபவர்கள் கட்டிய வணிக வரித் தொகை கணக்கிலிருந்து அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கம் பற்றி கேட்கப்பட்டிருக்கிற துணைக் கேள்விகள் இவை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டகேள்வியை ஒட்டி வட்டியில்லா விற்பனை வரிக் கடன் புதிய தொழில்களைத் தொடங்குகிறபொழுது ரூ. 1 கோடி வரைக்கும் பழைய தொழில்களாக இருந்தால் விரிவாக்கம் செய்வதற்கு ரூ. 50 இலட்சம் வரைக்கும் தமிழ்நாடு அரசு கடன் கொடுக்கிறது. சிப்காட் மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது. இது சிறிய தொழிலாக இருந்தாலும், நடுத்தரத் தொழிலாக இருந்தாலும், பெரிய தொழிலாக இருந்தாலும் எல்லோருக்கும் அவரவர்கள் முதலீட்டுக்கு ஏற்ப, அவர்கள் கட்டுகிற அல்லது கட்ட இருக்கிற விற்பனை வரிக்கு ஏற்ப உச்சபட்சம் எவ்வளவு என்பதை நிர்ணயித்து அதற்கு ஏற்ப உச்சபட்சமாக, ரூ. 1 கோடி வரைக்கும், விரிவாக்கத்திற்கு ரூ. 50 இலட்சம்வரை கடன் வழங்கப்படுகிறது.

**தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் அரசுத்துறை மூலம் துவக்கப்பட்டுள்ள தொழில்கள்.**

(598—*வினா எண் 21586) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீபத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்ட சில பகுதிகளில் அரசுத்துறை மூலம் பெரிய தொழில்கள் துவங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) சமீபத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்ட சில பகுதிகளில் அரசுத்துறை மூலம் பெரிய தொழில்கள் துவங்கப் பட்டுள்ளன.

(ஆ) அரசுத்துறையில் 7 தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன.



திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதி என அறிவிக்கப்பட்ட சில பகுதிகளில் அரசுத்துறை மூலம் பெரிய தொழில்கள் துவங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எந்த, எந்தப் பகுதியில் அப்படி ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம், புதுக்கோட்டை, காட்பாடி, குடியாத்தம், கடலூர், மாயனூர், ஓசூர், மதுரை, வாலாஜாபாத், இராணிப்பேட்டை, இப்படித் தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக மாநில அரசும் மத்திய அரசும் அறிவித்து இருக்கிற பல்வேறு பகுதிகளில் தொழில்கள் துவங்கப்படுகின்றன.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக சுமார் 64 இடங்களை இந்த அரசு அறிவித்து இருக்கிறது, ஆனால் 7, 8 இடங்களில் மட்டும்தான் அரசுத் துறை மூலமாக தொழில்கள் துவங்கப்பட்டு இருக்கிறதாக சொல்லி இருக்கிறார்கள். ஆகவே பிற்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் அரசுத் துறை மூலமாக தொழில்களைத் துவங்கவும், அதன்மூலம் பொதுத் துறையை ஊக்குவிக்கிற முறையிலும் அரசு செயல் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தமிழகத்திலே 30 தாலுக்காக் களை தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவித்து இருக்கிறது. மாநில அரசு 1977-க்குப் பின்னாலே இன்றைக்கு வரையிலும் 33 தாலுக்காக்களை தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து இருக்கிறது. இதைத் தவிர இரண்டு இடங்களில். ஓசூர், இராணிப்பேட்டையில் ஏற்கெனவே சிப்காட் மூலமாக 500 ஏக்கருக்கு குறையாத இடத்தில் தொழில் பேட்டைகள் இருந்துக் கொண்டிருக்கின்றன. இதைத்தவிர இன்னும் ஐந்து மாவட்டங்களில் பெரிய தொழில் பேட்டைகள் சிப்காட் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. எனவே அரசுத் துறையில் நிறுவனங்கள் தொழில் துவங்குகிறபோது இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்சஸ் என்று சொல்லப்படுகிறவைகளில், அல்லது ஏற்கனவே அறிவித்திருக்கிற 94 பின்தங்கிய தாலுக்காக் களில் முன்னுரிமை கொடுத்துதான் தொழில்கள் துவங்கப்படு கின்றன. மாநில அரசே கட்டாயமாக தொழில்களைத் துவங்க வேண்டுமென்ற உணர்வோடு இருப்பதில்லை. மாநில அரசு துவங்குகிறபோது பின்தங்கிய பகுதிகளில் இந்தத் தொழில்களைத் துவங்குகிறது. இதைத் தவிர தனியார்கள் முன்வருகிறபோது அவர்களை உற்சாகப்படுத்தி 15 சதவீதம் மூலதன மானியம். மின்சாரம், தண்ணீர், நிலம் ஆகியவைகளில் கன்சஷன்ஸ், சலுகைகளைக் கொடுத்து தனியார்களை அந்தப் பகுதிகளில் தொழில் துவங்க உற்சாகப்படுத்துகிறோம். இதுதான் இப்போது நடைமுறையில் இருக்கிற நடைமுறைகள்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதிகளில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்; தொழில் வளர்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தொழிற்சாலைகளைத் துவங்க வேண்டும். அவைகளை அரசாங்கமும் துவங்க வேண்டும்; தனியார்களும் துவங்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு மத்திய அரசு, மாநில அரசு இரண்டும் சேர்ந்து வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தருகிற நோக்கத்தோடு வங்கிகள் மூலமாக கடனும், மானியமும் வழங்குகிறது. அனைத்து வட்டங்களிலும் இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே அரசு ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் என்று சொல்லப்படுகிற தொழில் பேட்டையை துவங்குவதற்கு நடவடிக்கை எடுத்து, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்கும், தொழில் நடத்துவதற்குமான வசதிகளை செய்து தருவதற்கும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-க்கு முன்னாலே பெரிய தொழில் பேட்டை ஓசூரில் அமைக்கப்பட்ட அந்த தொழில் பேட்டைதான். 1967-லிருந்து 1977 வரையில் அந்த இடைப்பட்ட 10 ஆண்டு காலத்தில் இராணிப்பேட்டையில் ஒரு பெரிய தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட்டது. 1977-க்குப் பின்னாலே இன்று வரையில் தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டை, கடலூர், கும்மிடிப்பூண்டி ஆகிய ஐந்து இடங்களில் சிப்காட் மூலமாக பெரிய தொழில் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர 'ப்ரி ட்ரேட் சோன்ஸ்' என்று ஒரு தொழில் பேட்டை 500 ஏக்கரில் அமைக்கப்பட இருக்கிறது. இப்படி ஏழு மாவட்டங்களில் தொழில் பேட்டைகள் இருக்கின்றன. இதைத்தவிர மாவட்டம் தோறும் மாவட்டத்திற்கு ஒரு தொழில் பேட்டை அமைக்க வேண்டுமென்ற உணர்வோடு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக எல்லா மாவட்டங்களிலும் தொழில் பேட்டை அமைக்க சிப்காட் நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிற வட்டங்களில் மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து அறிவித்து இருக்கிற வட்டம் மதுரை மாவட்டத்தில் இருக்கிற உசிலம்பட்டியாகும். ஆனால் அறிவித்த காலத்திலிருந்து இன்றைக்கு வரையிலும் எந்த ஒரு தொழிலும் அந்தப் பகுதியில் வந்ததாகத் தெரியவில்லை. எனவே அரசாங்கம், மதுரை மாவட்டத்தில் தொழில் துவங்க முன் வருபவர்களுக்கு அந்த உசிலம்பட்டி பகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று வற்புறுத்தவோ அல்லது அரசாங்கத்தின் மூலம் ஒரு பெரிய தொழிலை அங்கே துவங்கவோ ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களை நாம் அந்த இடத்தில்தான் தொழில் தொடங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த இயலாது. இந்த இடத்தில்தான் தொழில் துவங்கவேண்டும் என்று வற்புறுத்த முடியாது. அரசு தொழில் துவங்கும்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற உசிலம்பட்டி போன்ற இடங்களில் தொழில் துவங்க முன்னுரிமை கொடுத்து துவங்கப் படுகிறது. அந்த வகையில் அரசு அதை கவனிக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுதான் சேலம் மாவட்டத்தில் உள்ள ராசிபுரம் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டது. ஓராண்டு காலம் ஆகியும் அங்கே எப்படிப்பட்ட தொழில் தொடங்குவது என்று தெரியாத காரணத்தால் அந்தப் பகுதிக்குச் சாதகமான தொழில்கள் எவையெவை என்பதை ஆய்வு செய்ய ஒரு குழுவை அனுப்பி, அதைத் தெரிவு செய்து அதற்கென விரிவான பட்டியல் ஒன்றைத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதைப்போலவே, சிப்காட் மூலமாக அங்கே தொழில் பேட்டை ஒன்றை தொடங்குவதற்கான ஆய்வு மேற்கொண்டு இருக்கிறார்கள். அதை விரைவுபடுத்தி இந்த ஆண்டே அங்கே தொழில்பேட்டை அமைக்கும் உத்தேசம் அமைச்சரிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதியில் என்னென்ன தொழில்களைத் தொடங்கலாம் என்பதற்கு சிப்காட் என்கிற நிறுவனம், தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன், இன்டஸ்டிரியல் டெக்னிகல் கன்சல்டன்சி ஆர்கனைசேஷன் போன்றவைகள் நூற்றுக்கு மேற்பட்ட தொழில் துவங்குவதற்கான ஆலோசனைகளை தொழில் துவங்க விரும்புகிறவர்கள் அணுகினால் அளிக்கத் தயாராக இருக்கிறது. இந்த நிறுவனங்கள் எந்தப் பகுதியில் என்ன ரா-மெட்டீரியல்ஸ் கிடைக்கிறது, அதற்கு எந்த வகையில் மார்க்கெட் இருக்கிறது, அதற்கு முதலீடு எவ்வளவு தேவை, என்னென்ன தொழில்களைத் துவங்கலாம் என்ற ஆலோசனைகளைத் தொழில் துவங்க விரும்புகிறவர்கள் அணுகினால் தருவார்கள்.

அதைப்போலவே, பின்தங்கிய பகுதிகளில் தொழில் துவங்குவதைப் பொறுத்தவரையில், டிக் நிறுவனம் கடன் வழங்குவதை மட்டுமே இதுவரையில் செய்து வந்தது. ஆனால் சமீப காலமாக கடன் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், எந்தப் பகுதியில் என்ன தொழில்களைத் தொடங்கலாம் என்பதற்கும் பிராஜக்ட் ரிப்போர்ட்ஸ் கொடுக்கிறது. ஆகவே, இதுபோன்ற பணிகளை அந்த நிறுவனங்கள் செய்து வருகின்றன. அவைகளை அணுகினால் நல்ல வகையில் தொழில்களைத் துவங்க ஆலோசனைகளைச் சொல்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் மைய, மாநில அரசுகள் சேர்ந்து சில வட்டங்களைப் பின்தங்கிய பகுதியாக அறிவித்து இருக்கிறார்கள். நான் ஏற்கனவே கேட்டு இருக்கிறேன். மத்திய அரசால் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் தனியார்கள் தொழில் துவங்க ஏதாவது வட்டி குறைவான வகையில் கடன் கொடுக்கப் படுகிறதா? நம்முடைய அரசு அறிவித்துள்ள பகுதிகளில் வட்டி ஜாஸ்தியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அதோடு, மதுரை மாவட்டத்தில் ஒரு இன்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ் ஆரம்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டும், இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லையே, அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலே தொழிலில் பின் தங்கிய பகுதிகளில் தொழில் துவங்கும்போது அதற்காக இருக்கும் சிப்காட், டிக் போன்ற நிறுவனங்கள் கடன் கொடுத்து வருகின்றன. இதைத் தவிர மத்திய அரசு நேரடியாக எந்தக் கடனும் தருவது இல்லை. ஆனால் மத்திய அரசு நிறுவனமான ஐ.டி.பி.ஐ. ஏறக்குறைய 1 கோடி ரூபாய் அளவிற்கு பெரிய தொழில்கள் துவங்குவதற்கு கடன் கொடுத்து வருகிறது. மற்றும் சிப்காட் நிறுவனம், ஐ.டி.பி.ஐ. மூலம் பிரி—பைனான்ஸ், பெற்று அந்தக் கடனை வழங்கிக்கொண்டு வருகிறது. ஆகவே, இதிலே வட்டி விகிதத்தில் வித்தியாசம் எதுவும் இல்லை. தனியார் துறையாக இருந்தாலும், பொதுத்துறையாக இருந்தாலும் வித்தியாசம் எதுவும் இல்லை. அதேபோல் ஐ.டி.பி.ஐ. சிப்காட் கொடுக்கிற கடனிலும் வட்டி வித்தியாசம் எதுவும் இல்லை.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பின்தங்கிய பகுதியான பாளையத்தில், தமிழ்நாடு சிமின்ட் கார்ப்பரேஷன் மூலம், அந்த அரசு நிறுவனத்தின் மூலம், ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக மனு செய்யப்பட்டு, அது டெல்லியில் மைய அரசின் ஆய்வில் தற்போது இருந்து கொண்டு இருக்கிறது. இவ்வாறு பல பெரிய தொழில்கள் அங்கே தொடங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவரவர்களே, மத்திய மாநில அரசுகள் தொழில் துறையில் பின்தங்கிய பகுதி என்று இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த எந்த வட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்? மைய அரசிலிருந்து வெடி மருந்துத் தொழிற்சாலை ஒன்றை பின்தங்கிய பகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்காக இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி பகுதியில் 3,000 ஏக்கர் நிலத்தையும் பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த ரிப்போர்ட் என்னவாயிற்று? அதைத் தொடர்ந்து பரிசீலனை செய்து, அந்தத் தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

*1984 ஏப்ரல் 17]*

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, முதுகளத்தூர், இராமநாதபுரம், சாத்தூர், சிவகங்கை, திருவில்லிப்புத்தூர், திருவாடானை, காரைக்குடி, இராஜபாளையம், விருதுநகர் ஆகிய பகுதிகளை தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் என்று மாநில அரசு அறிவித்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அநேகமாக இராமநாதபுரம் மாவட்டம் முழுமையும் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற பட்டியலில் வந்துவிடுகிறது. வெடிமருந்துத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்குவதற்கான திட்டம் எதுவும் இல்லை. ஆனால், வடாற்காடு மாவட்டத்தில் காட்பாடியில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ்வீடன் நாட்டு கொலாபரேஷனுடன் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஏ.சி. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு 33 தாலுகாக்களை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாக்கள் என்று அறிவிக்கப்பட்டதைப்போன்று இந்த ஆண்டும் புதிதாக சில பகுதிகளை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அறிவித்ததைப்போல தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக தமிழக அரசு 33 தாலுகாக்களையும் மத்திய அரசு 30 தாலுகாக்களையும் ஆக 63 தாலுகாக்கள் பின்தங்கிய தாலுகாக்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில பகுதிகளை தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று நாம் மைய அரசோடு பேசிக்கொண்டிருக்கிறோம். சமீபத்தில் மைய அரசு தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிப்பதற்கு மூன்று 'காட்டகிரி'களை, அதாவது ஏ, பி, சி என்று மூன்று பிரிவுகளை அறிவித்திருக்கிறது. ஏ காட்டகிரி என்பது 'சீரோ இண்டஸ்டிரி டிஸ்டிரிக்ட்ஸ். அந்தப் பகுதிகளில் தொழில் தொடங்கும்போது 25 இலட்சம் ரூபாய் வரையில் மானியம் கிடைக்கும். அந்த வகையில் 118 மாவட்டங்களை இந்தியா முழுவதிலும் அறிவித்திருக்கிறார்கள். அதிலே தமிழ்நாட்டிலுள்ள ஒரு மாவட்டம் கூட இடம் பெறவில்லை. முதலிலே இப்படி 'சீரோ இண்டஸ்டிரி டிஸ்டிரிக்ட்ஸ்' என்று அறிவிக்கப்பட்டதில் தமிழ்நாட்டிலுள்ள சில மாவட்டங்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இல்லை என்றால் மாவட்டம் என்பதற்குப் பதிலாக தாலுகா அல்லது பஞ்சாயத்து யூனியன் என்பதை அளவாகக் கொண்டு, ஏற்கெனவே தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில், 'ஏ காட்டகிரி'யாக அறிவிக்கப்பட்டிருக்கிற பட்டியலில் சேர்த்து, 25 இலட்சம் ரூபாய் மானியம் பெற தகுதியுள்ளதாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாநில அரசு தொழில் துறையில்

பின்தங்கிய தாலுகாக்கள் என்று அறிவித்திருக்கிற சில தாலுகாக்கள் மைய அரசுத் திட்டத்தின்கீழ் அறிவித்தால் இன்னும் சில தாலுகாக்களை நாம் தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாக்களாக அறிவிக்க இயலும்.

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

594—(*வினா எண். 21831)—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** இல்லை.

**திரு. மு. ஜான் வின்சென்ட் :** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் பல கோரிக்கைகளை தெரிவித்தபோது சலுகைகள் கொடுப்பதாக கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, மூலக்கேள்வி நெல்லை மாவட்டம் வள்ளியூரில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வி போட்டிருப்பார்கள் போல் தோன்றுகிறது. அந்த கேள்வி எடுத்துக் கொள்ளப்படும் போது அதற்கான பதில் அளிக்கப்படும்.

**திரு. மு. ஜான் வின்சென்ட் :** தலைவரவர்களே,' தாழையூத்து சிமெண்ட் தொழிற்சாலைக்கு 60 ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் கற்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. வள்ளியூர் பகுதியில் வேறு தொழில் ஒன்றும் இல்லாத காரணத்தால், அங்கே ஒரு மினி சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொழில் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் பெரிய இடர்பாடுகளுக்கு ஆளாகிறார்கள். சிமெண்ட் தொழில் தொடங்க தேவையான மூலப்பொருள் அங்கே இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு மினி சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, மினி சிமெட்ண் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் என்பது இப்போது ஏறத்தாழ 100 டன் கபாசிட்டி அல்லது 200 டன் கபாசிட்டி கொண்ட தொழிற்சாலைகளை தனியார் துறையில்





அமைத்து வருகின்றார்கள். அதற்கு அரசு சில விசேஷ சலுகைகளைக் கொடுக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் தனியார் நிறுவனமாக இருந்தால் அதிலே 1/3 பகுதியை அவர்கள் லெவியாகக் கொடுக்க வேண்டுமென்ற நடைமுறை இப்போது இருக்கிறது.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** இதுவே மினி சிமெண்ட் பிளாண்ட் ஆக இருக்குமானால், லெவி கொடுக்க வேண்டியது இல்லை. முழுவதையும் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பொரேஷனில் பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறது. இந்த சலுகைகள் ஏற்கனவே பெரிய அளவிலே உள்ள 1250 டன் திறன் கொண்ட பெரிய தொழிற்சாலை இருக்குமானால் — உதாரணத்திற்கு தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளை நடத்திக்கொண்டிருக்கிறது. அந்த தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் இன்னும் இரண்டு மினி பிளாண்ட் போட்டால் மத்திய அரசு அளித்துவரும் சலுகைகள் நமக்கு கிடைக்காது. அதனால் மினி சிமெண்ட் தொழிற்சாலை என்ற வகையில் 200 டன் கெபாசிட்டியிலே ஆரம்பித்தால் நஷ்டத்தில் தான் இயங்கும். அதை கருத்தில் கொண்டு, மினி சிமெண்ட் பிளாண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான அந்த அணுகுமுறை சிமென்ட் கார்ப்பொரேஷனிடத்தில் இல்லை. ஏற்கனவே சொன்னது போல், ரூ. 40 கோடி முதலீட்டில் மதுரை பக்கத்தில்பாளையத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை துவங்க சிமெண்ட் கார்ப்பொரேஷன் அனுமதி கேட்டிருக்கிறது. இது மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் லைசன்ஸ் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, வள்ளியூர், சாத்தான்குளம் போன்ற பகுதிகளில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் நிறைய கிடைக்கின்றன. அங்கிருந்து 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர் தள்ளியுள்ள தாழையூத்தில் எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். எனவே உற்பத்தி அதிகமாக இருக்கின்ற அந்தப் பகுதிகளில், சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி, தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரைக்கும், சிமெண்ட் தொழிற்சாலைகளை இருக்கிற இடத்திலே பாக்கெட், பாக்கெட்டாக ஆரம்பிக்க முடியாது. 50 கிலோமீட்டர் சுற்று வட்டாரத்தில் லைம் ஸ்டோன் மூலப்பொருள் கிடைக்கவேண்டும். ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பது என்றால், ரூ. 40, 50

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1984 ஏப்ரல் 17

கோடி செலவாகிறது. அப்படி ரூ. 40, ரூ. 50 கோடி செலவாகிற போது, ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளிலே அதை மூடிவிட முடியாது. 50 ஆண்டுகளுக்கு, 100 ஆண்டுகளுக்கு இருக்கின்ற அளவில், ஸ்டோரேஜ், மூலப்பொருள் கிடைக்கிறதா என்று பார்த்துத் தொடங்கவேண்டும். ஏற்கனவே சொன்னது போல் மினி சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கலாம். ஆனால் மத்திய அரசின் சலுகை கிடைக்காது. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் ஆரம்பித்தால், மத்திய அரசு சலுகைகள் தராது. ஆகவே அந்தப் பகுதியில் சிறிய, பெரிய தொழிற் சாலைகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை.

### சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறையில் பதிவுசெய்யத் தகுதிபெற்ற தொழிற்சாலைகள்.

**595—(*வினா எண். 22960)—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுற்றுப்புறச் சூழல் மாசு கட்டுப்பாட்டுத் துறையில் பதிவு செய்யத் தகுதிபெற்ற தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) இதுவரை எத்தனை தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** (அ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா தொழிற்சாலைகளும் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் பிரிவு 25 மற்றும் 26-ன் கீழ் சாக்கடை நீர்/தொழிற்சாலைக் கழிவு நீரினை நீர் நிலைகள் மற்றும் நிலத்தில் வெளியிட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் பெறவேண்டும்.

(ஆ) ஒப்புதல் கோரி 698 நிறுவனங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பித்துள்ளன. இவைகளில் 640 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 126 தடையில்லா சான்றிதழ்களும் (No objection certificate) 167 ஒப்புதல்களும் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் 698 தொழிற்சாலைகள் தான் இந்த சுற்றுப் புறச் சூழல் மாசு கட்டுப்பாட்டுத் துறையில் பதிந்திருப்பதாக கூறப்படுகிறது. 640 விண்ணப்பங்கள் தான் வந்திருப்பதாக கூறப்படுகிறது. இன்னும் அதிக அளவில் பதிவு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அப்படி நடவடிக்கைகள் எடுக்கும்போது, நிறைய தொழிற்சாலைகளுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நோட்டீஸ் விட்டதாக பத்திரிகைகளில் படித்தேன். எத்தனை தொழிற்சாலைகள்



1984 ஜனவரி 17] [திரு. இரா. தாமரைக்கனி]

ஓடாமல் இருக்கின்றன. இப்படி நின்று விடுவதால் தொழிலாளர் களுக்குப் பாதகம் ஏற்படுகிறது. பொருளாதாரம் பாதிக்கப்படு கிறது. உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இப்படி பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இந்தக் கட்டுப்பாட்டுத் துறை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** தலைவர் அவர்களே, நிறைய கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்கின்றனர். தமிழ்நாட்டில் பல்லாயிரக் கணக்கான தொழிற்சாலைகள் நீர், நிலம், காற்று இவைகளை மாசு படுத்திக்கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகள் அனைத்துமே வாரியத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும். காரணம், புதியதாக ஆரம்பிக்கப்பட்ட, அந்தத் தொழிற்சாலைகளுக்கும், சிறிய தொழிற்சாலைகளுக்கும், பெரிய தொழிற்சாலைக்கும் வாரியத்தின் ஒப்புதல் பெற்ற பின்னர்தான், அவைகளுக்கு உரிமமே வழங்கப்படவேண்டும் என்ற சட்டத்தை மத்திய அரசு இயற்றியிருக்கிறார்கள். ஏற்கனவே பல்லாயிரக் கணக்கான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவைகள் குறைந்த எண்ணிக்கையில் தான் கழிவு நீரை வெளியே விடுகின்ற தொழிற்சாலைகளாக பதிவு செய்திருக்கின்றன. இந்த கொடுக்கப்பட்ட எண்ணிக்கை கூட, கழிவு நீரை வெளியேற்று கின்ற தொழிற்சாலைகளைப்பற்றி மட்டும் தான் குறிப்பிடப் பட்டது. ஆனால் காற்றை மாசுபடுத்துகின்ற தொழிற்சாலைகள் சிமெண்ட் பேக்டரிகள் போன்ற பெரிய ஆலைகளும், சிறிய ஆலை களும் ஏராளமாக இருந்தாலும்கூட, இதுவரை வாரியத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு அளிக்கப்பட்ட மனுக்கள் மூன்றே மூன்று தான். இந்த காற்றை மாசுபடுத்துகிற தொழிற்சாலைகள் பதிவதற்கான காலக்கெடு 31-3-84-டன் முடிந்துவிட்டது. ஆகவே அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகளை வாரியம் எடுத்துக்கொண்டு வருகிறது. அதைப்போலவே கழிவுநீரை வெளியேற்றுகிற தொழிற் சாலைகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிற காரணத்தால், அவை களும் 31-5-84-க்குள் பதிந்து கொள்ளவேண்டும் என்று காலக்கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் போல, சாக்கோ தொழிற்சாலைகளைப் போல, இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஏராளமாக பல்லாயிரக் கணக்கில் தமிழகத்தில் இருக்கின்றன. அவைகளுக்கு 31-5-84-டன் காலக்கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலக்கெடு கொடுப்பதிலேயிருந்து மத்திய அரசு இதிலே மிக மிக அக்கறை காட்டுகிறது என்பதை, அந்தத் தொழில் அதிபர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் காலக்கெடு கொடுக்கப்படுகிறது. காலக் கெடுவிற்கும் பின்னால், அது நீடிக்கப்படுமானால், மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் மட்டுமல்லாமல், சமீபத்தில்கூட வைகை ஆற்றில் சாக்கடை நீர் கலப்பதால், அங்கே வியாதிகள் வருகின்றன

என்று மாண்புமிகு அமைச்சர் கூட மதுரை மாநகராட்சிக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதை சரி செய்வதற்கு முன்னால் அந்த வைகை ஆற்றில் மக்கள் குடிப்பதற்கு தடை விதிக்கப்படுமா? அதேபோல் சென்னையில் கூட கூவம் ஆற்றில், இந்தச் சுற்றுப்புற சூழல் கட்டுப்படுத்தாத காற்று இதெல்லாம் இருக்கிறது. அதனால் மிகக் கெடுதல் ஏற்படுகிறது. ஆகையினால் கூவம் ஆறும் சரி செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வைகையை எடுத்துக் கொள்ளலாமா அல்லது கூவத்தை எடுத்துக்கொள்ளலாமா என்பதை உறுப்பினர் சொல்லவேண்டும். ஒரே சமயத்தில் இரண்டு கேள்வி கேட்கக் கூடாது. ஏதாவது ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம், நீர், காற்று இந்த மூன்றையும் மாசுபடுத்துகிற அதற்கு பொறுப்புதாரர்கள், இந்தச் சட்டத்திற்குள்ளே வருகிறார்கள் என்பது மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டத்தை படித்துப் பார்க்கும் போது தெரிகிறது. ஆகவே உள்ளாட்சியும் லோக்கல் பாடிகளும் அதற்கு பொறுப்புதாரர்கள் ஆகிறார்கள் என்ற அடிப்படையிலே மதுரை மாநகராட்சிக்கும், சென்னை மாநகராட்சிக்கும், கோவை மாநகராட்சிக்கும் கூட உள்ளாட்சித் துறையிலேயிருந்து எல்லாம் நோட்டீஸ் விடப்பட்டிருக்கிறது. அவர்களும் அதற்கான காரண காரியங்களை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். விரைவிலே அவர்களுடைய தகவல் தெரிந்த பின்னால், என்ன நடவடிக்கையை வாரியம் எடுக்கவேண்டுமோ, அதை வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU. K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker Sir, arising out of this question may I know from the Hon'ble Minister what action the Government is going to take or has taken to see that there is no pollution from cooum river due to the Corporation bad waters mingling into it and thus creating more hardship and insanitary condition to the people.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால், இந்த நாட்டில் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் இந்தத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிற காரணத்தால், நிலம், நீர், மற்றும் காற்று இவைகளை மாசுபடுத்துகிறவர்கள், மாசுபடுத்தாமல் இருக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த வாரியம் 'என்போர்ஸ்மென்ட் போர்ட்' ஆகத்தான் இருக்கிறதே தவிர, இதை இப்படிச் செய்யவேண்டும் என்று, என்ன செய்யவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தவோ, வழிவகைகள் காட்டுவதற்கான முயற்சிகளை எடுக்குமே தவிர,





செய்வது என்பது சம்பந்தப்பட்ட பொறுப்புதாரர்களே தவிர, இந்த வாரியம் அல்ல. அந்த அடிப்படையிலே கார்ப்பரேசன்களுக்கு நாங்கள் நோட்டீஸ் விட்டிருக்கிறோம் என்றால், அவர்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கையை அவர்கள்தான் எடுக்கவேண்டும். எப்படி எடுக்கிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகை போக்கும் தொழிற்சாலைகள் மட்டுமல்லாமல், பேருந்துகள், கார்கள் போன்றவைகள் எல்லாம் புகைகளை கக்கி அதனால் சுகாதாரக் கேடுகள் வருகின்றன. இது குறித்து அரசும் மாண்புமிகு சு.சூ.க. துறை அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—10)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வி நல்ல கேள்வி. ஆலைகளால் மட்டும் தான் புகைகள் வெளியிடப்பட்டு, சுகாதாரம் கெடுகிறது என்பது அல்ல. ரோட்டிலே போகிற லாரிகளாலும், வாகனங்கள் மூலமாகவும் இப்படிப்பட்ட கேடுகள் ஏற்படுகின்றன. இதற்கென போக்குவரத்துச் சட்டம் கூட ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. இந்த வாரியத்தின் சார்பாக, மைய அரசால் கொண்டு வரப்பட்ட சட்டத்திலேயும், வாகனங்கள் வெளியிடுகின்ற புகைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்ற வகையில் அந்தச் சட்டத்திலேயே ஒரு பிரிவு இருந்தாலும், அதை எந்த வகையிலே கட்டுப்படுத்தலாம் என்று வாரியம் ஆய்ந்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே அதற்கான ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் வகுக்கப்பட்டு, அதன் பிறகு அவை நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாபுஜனார்த்தனன் அவர்கள் சு.சூ.க. என்று ஏதோ அமைச்சரைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பெயரை முழுவதுமாக ஏன் சொல்லவில்லை? அவர் பெயரைச் சொல்லாமல் அவரை பா.ஜ ன். என்று சொன்னால் எப்படி இருக்கும்?

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சூழ்நிலை கட்டுப்பாட்டுத்துறை என்பதைத்தான் அவர்கள் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : நாங்களும் அப்படி சுருக்கமாக சொல்ல ஆரம்பித்தால் அசிங்கமாக இருக்கும்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இதை அசிங்கம் என்று சொன்னால், பிறகு அசிங்கத்திற்கு வேறு இடமே இல்லாமல் போய்விடும். இது மூன்றும் அசிங்கமான வார்த்தை அல்ல.

குடிசைமாற்று வாரிய வீடுகளை அதில் குடியிருப்போருக்கே உரிமையாக்கும் திட்டம்.

596—(*வினா எண். 16486) திரு. செ. செம்மலை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைமாற்று வாரியத்தினால் அமைக்கப்பட்டிருக்கும் வீடுகளை அதில் குடியிருப்போருக்கே உரிமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்குகின்ற அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டு, குடியிருப்பவர்களுக்கு அந்த வீடுகளை தருவதற்காக, வாடகை வீடு என்ற நிலையை மாற்றி அவர்களுக்கே சொந்தமாக்குகின்ற நிலையில், மாதத்திற்கு 30ரூ., 35ரூ., 40ரூ., 45ரூ. என்ற வீதத்தில் குடியிருப்பவர்களிடமிருந்து 25 ஆண்டுகளுக்கு வசூல் செய்து, குடிசையை அவர்களுக்கே சொந்தமாக்கித் தரவேண்டும் என்று 5-10-82 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு, அந்த முடிவை குடிசை மாற்று வாரியம் நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில மாவட்டங்களில் குடிசை வாசிகளுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மட்டும் அல்லாமல், வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் குடிசை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. எனவே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பெறும் வீடுகளை குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்குவது போல், வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்பெறும் வீடுகளையும், சொந்தமாக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா? அதற்குரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில், சென்னையிலே குடிசை மாற்று வாரியத்தினுடைய வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்குவதுபோல, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பெற்ற குடிசை வீடுகளில் குடியிருப்பவர்களுக்கும் அதை சொந்தமாக்க முயற்சிகளை மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படும்.





திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டுள்ள வீடுகளை ஒதுக்கீடு முறையில் தருகிறபோது, சிலர் தவறானதகவல்களைக் கொடுத்து வீடுகளைப் பெற்றுக் சாண்டு பிறகு சப்-லீஸ் என்ற முறையில் மற்றவர்களுக்கு வாடகைக்கு விடுகிறார்கள். ஆகவே, அப்படி வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்குகின்ற நேரத்தில், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டாளர்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, சொந்தமாக்கப்படுமா? அல்லது குடியிருக்கும் ஏழை எளியவர்களைக் கணக்கில் கொண்டு தரப்படுமா? ஏனென்றால் ஏழை எளியவர்கள், உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்கள் அந்த வீடுகளை சொந்தமாக்கிக் கொள்ள முடியாத நிலை இருக்கிறதே. அதை மாற்ற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகளை ஒப்படைக்கிற நேரத்தில், அவர்கள் குடிசையிலே இருக்கிறார்களா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் அவர்களுக்கு அந்த வீடுகள் ஒப்படைக்கப்படுகின்றன. ஆனால் சில பேர் வேறு இடத்திலே மறுபடியும் குடிசை போட்டுக் கொண்டு, அவர்களுக்குக் கொடுத்த வீட்டை, பிறருக்கு விற்பனை செய்யக்கூடிய அளவுக்கு பணம் வாங்கிக் கொண்டும் விடுகிறார்கள், சில பேர் வாடகைக்கு விடுகிறார்கள். இவைகள் எல்லாம், புகார்களாக வந்த காரணத்தால், வாரியத்தின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பல பேர் வீடுகளை காலி செய்திருக்கிறார்கள். காலி செய்பவர்களின் வீடுகள் குடிசைகளே இல்லாத வேறு புலருக்கு தரப்படுகிறது. அந்த வகையில் ஒரு பட்டியலே குடிசை மாற்று வாரியத்திடம் இருக்கிறது. இதனாலே யார் குடிசையிலே நிச்சயமாக வசிக்கிறார்கள் என்று ஆராய்ந்த பிறகு தெரிகிறதோ அவர்களுக்கு மட்டுமே தர முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அரசோடு ஒத்துழைத்தால், அதனை இன்னும் சிறப்பாக செய்யலாம்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கான போனஸ்

597—(*வினா எண். 17184) திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்கப்படும் என்று 27-1-1982 அன்று அறிவிப்புச் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன்படி போனஸ் வழங்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27–1–1982-ல் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதற்குப் பின்னால், அது குறித்து ஒரு வழக்கு, வழக்கு மன்றத்தில் இருக்கிற காரணத்தால், முழுமையான முடிவுகளை அறிவிப்பதற்கு இயலாத நிலையில் இருக்கிறேன்.

## எல்லா மாவட்டங்களிலும் பனைத் தொழில் மையங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

598—(*வினா எண். 20782) திரு. சி. கணேசன்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா மாவட்டங்களிலும் பனைத் தொழில் மையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி: பழனிச்சாமி: ஏற்கனவே செங்கல்பட்டு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பனைப் பொருள் உற்பத்தி மையங்கள் உள்ளன.

2. தென் ஆற்காடு, வடஆற்காடு, திருநெல்வேலி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பனைப் பொருள் உற்பத்தி மையங்களைத் தொடங்க, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

3. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், இராமநாதபுரம், பெரியார், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பனைப் பொருள் உற்பத்தி மையங்களை துவக்குவது குறித்து அரசு மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமும் பரிசீலித்து வருகின்றன.

4. எஞ்சியுள்ள சென்னை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பனை மரமே இல்லாமையால் பனைப் பொருள் உற்பத்தி மையங்கள் இந்த மாவட்டங்களில் துவக்க வாய்ப்பேதுமில்லை.

599—(*வினா எண். 21307) திரு. டி. மணி: மாண்புமிகு கதர் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் கீழ் அதங்கோடு என்னுமிடத்தில் பனைத் தொழில் மையம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அதங்கோட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 38.452 இலட்சம் செலவில் ஒரு பனைத் தொழில் மையம் நிறுவிட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலனை செய்து வருகிறது. இவ்வாரியப் பரிந்துரை வந்தவுடன் உரிய ஆணை பிறப்பிக்கப்படும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. அறிவிப்பு.

### கைது செய்யப்பெற்ற உறுப்பினர் திரு. நெடுமாறன் விடுதலை செய்யப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு மதுரை தெற்கு காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி 16-4-84 அன்று வரப்பெற்றது.

Refer my D.T.O. 141515 regarding the arrest of Thiru Nedumaran, M.L.A., Tamil Nadu Kamaraj Congress. I have the honour to inform you that Thiru Nedumaran, M.L.A. who was on remand at Central Prison, Madurai in connection with B-4 Police Station Crime Number 793/84 under Section 151 Cr.P.C. read with Section 7 (1) (A) Criminal Law Amendment Act was released to-day (16-4-84) at 21.45 hours.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### கரூர் மில் தொழிலாளர்களது வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்வது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களும் உண்ணாவிரதம் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ரா. உமாநாத், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், சு. பாலன், பாபு ஜனார்த்தனன், பெ. சு. திருவேங்கடம், அன்பில் தர்மலிங்கம், ஜே. எஸ். இராசு, கு. ரமணி, பி. எம். தங்கவேல்ராஜ், எஸ். இராசாராமன் ஆகியோர் "திருச்சி மாவட்டம் கரூர் மில் அனைத்துச் சங்கத் தொழிலாளர்களும் நிர்வாகத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளையும் வன்முறை நடவடிக்கைகளையும் எதிர்த்து கடந்த 80 நாட்களுக்கு மேல் வேலை நிறுத்தம் தொடருகிறபோது அதற்குத் தீர்வு காண மாநில அரசு நடவடிக்கை எடுக்காமல் மேலும் சிக்கலாகியுள்ளதால், அதை ஆட்சேபித்து கரூரில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் 8-4-84 முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் துவக்கியுள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும்." என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1984 ஏப்ரல் 17

(முற்பகல் 10.20)

திரு ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மில் ஸ்டிரைக் ஆரம்பித்து நான் இந்தத் தீர் மானத்தைக் கொடுத்து இன்று சுமார் 80 நாட்கள் ஆகின்றன. சொல்லப் போனால் It is a case of broken promise and Government arrogance என்று சொன்னால் அது மிகையாகாது. அதாவது மீறப்பட்ட வாக்குறுதிகள் அரசினுடைய அகந்தை இவற்றிற்கு உதாரணமாக இது எடுத்துக் காட்டுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது, கிட்டத்தட்ட 95 சதவீத தொழிலாளர்கள் உறுதுணையுடன் இந்த வேலை நிறுத்தத்தில் நிற்கிறார்கள். 13 அம்சக் கோரிக்கைகளின் மீது நடக்கும் போராட்டம் இது. நோட்டோரியஸ் அருப்புக்கோட்டை ஜெய விலாச மோட்டார் முதலாளியின் கொடுமைகளுக்கு எதிராக நடக்கக்கூடிய ஸ்டிரைக். 14-2-84-ல் அன்றைக்கு சென்னை நகரத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தம் நடந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த எந்த பிரச்சினையிலே தலையிட வேண்டும் என்று அந்த ஒரு நாள் ஸ்டிரைக் சென்னையில் நடந்த போது எல்லா யூனியனும் ஜாயிண்டாக சேர்ந்து அப்போது கொடுத்ததில் இந்த கரூர்மில் டிஸ்பூட்டும் ஒன்று. இந்த ஸ்டிரைக்கில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு தீர்க்கவேண்டும் என்று கொடுத்து இருக்கக் கூடிய பட்டியலில் இதுவும் ஒன்று. ஆனால் சிம்சன் தாவா முடிந்தவுடன் மற்ற தாவாக்கள் பற்றி பேச்சு வார்த்தை நடத்த இன்னொரு தேதி வேண்டும் என்று அங்கு இருக்கக்கூடிய தொழிற் சங்கத் தலைவர்கள் அனைவரும் கேட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னொரு தேதி பிறகு தருகிறேன் என்று அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இன்றுவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேதி கொடுக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிடாமல் தவிர்க்கிறபோது மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சராவது இரு சாராரையும் அழைத்துப் பேச வேண்டும் என்று நாங்கள் கோரினோம். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒன்று இரண்டு பிரச்சினைகளை தொழில் கோர்ட்டுக்குவிடப் போவதாக தெரிந்தவுடன் பிரச்சினை அப்படி தீராது என்று நாங்கள் உண்மையான நம்பிக்கையோடு இரு சாராரையும் கூப்பிட்டு அமைச்சர் அளவில் பேசினால்தான் பிரச்சினை தீரும் என்று நம்பிக்கை இருப்பதால் நீங்கள் கோர்ட்டுக்கு விட்டால் பிரச்சினை தீராது. ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் லெவலில் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்று நாங்கள் கோரினோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த யோசனையை உதறி விட்டு 11 கோரிக்கைகளில் ஒன்று இரண்டு கோரிக்கைகளை மட்டும் தொழில் கோர்ட்டுக்கு விட்டு அதோடு முடித்து விட்டார்கள். நாங்கள் நினைத்தபடி போர் வார்ன் பண்ணியபடி கோர்ட்டுக்கு விட்டு பல நாட்கள் ஆகிவிட்டன. அந்த வேலை நிறுத்தம் நிற்கவில்லை. தொடர்கிறது. அரசு முடிவை கிட்டதட்ட 95 சதவீத தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள



1984 ஏப்ரல் 17] [திரு. ரா. உமாநாத்]

வில்லை என்பதற்கு இந்த தொடர்ந்து நடக்கும் வேலை நிறுத்தம்—அவ்வளவு பட்டினியாக இருந்தாலும கூட-நடப்பதி லிருந்து ஊர்ஜிதம் ஆகிறது. ஏன் என்று சொன்னால் முதலாளி யினுடைய ரவுடிசத்தினால் மில்லுக்கு உள்ளேயும், வெளியிலேயும் அந்தத்தொழிலாளர்கள் உயிருக்கும் பாதுகாப்பு கிடையாது என்ற பிரச்சினை அங்கே நிற்கிறது. Even after a reference வழியில் போகும் தொழிலாளர்களை முதலாளிகள் என்கேஜ் செய்து இருக்கக்கூடிய ரவுடிகள் பிடித்துக்கொண்டு போக வேண்டியது மில்லுக்குள் கொண்டு போய் அடித்து முதலாளியே தயார் செய்து இருக்கக்கூடிய 18 (1) டிராப்டில் கையெழுத்து வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நடவடிக்கை இன்னும் நிற்க வில்லை. இணை ஆணையாளர் கொடுத்த ஒரு மத்தியஸ்த தீர்ப்பை இன்னும் அமுல்படுத்தவில்லை. வேலைக்கு திரும்பினால் பழி வாங்காமல் தடுக்கப்படும் என்பதற்கு எந்தவிதமான உத்திரவாதமும் இல்லை. முதலாளிகள் லோகல் போலீசை வைத்து தொழிலாளர்கள் மீது பொய் கேஸ் போடப்படுகின்றது. அந்த பொய் கேஸ்கள் சம்பந்தமாக அதை வாபஸ் பெறுவதற்கு எந்த பேச்சும் இல்லை. 13 கோரிக்கைகள் என்பது பெரும் பாலானவை தீர்க்கப்படாமல் விடப்பட்டுள்ளன. ஆகவே கோர்ட் டுக்கு ஒன்று இரண்டு பிரச்சினை அனுப்பப்பட்டதால் நாம் குறிப்பிட்ட பிரச்சினைகள் எப்படி தீர்க்க முடியும். ஒன்று இரண்டை விடுவதனால் நாம் சொல்லியிருக்கக்கூடிய லிஸ்டில் உள்ள including victimisation cases, rowdism cases affecting personal security மில்லுக்கு உள்ளேயும. வெளியிலேயும் இந்த பிராபளம் இன்னும் தீர்க்கப்படவில்லை. ஆகவே இந்த ஸ்டிரைக் தொடர்ந்து நடக்கிறது. இல்லை என்று போனால் இதை நீடிக்க மாட்டார்கள். அதற்குதான் கோர்ட்டுக்கு விட வேண்டாம் என்றும் நீங்கள் நேரிடையாக இரு சாரரையும் கூப்பிட்டுப் பேசி பாருங்கள் என்று சொல்லிப் பார்த்தோம். ஆனால் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். அவர் நினைத்த அந்த வழி படி கோர்ட்டுக்கு விட்டு அது தொடர்ந்து நடக்கிறது. அதாவது வேலை நிறுத்தம் தொடர் கிறது மட்டும் அல்ல அதற்கு தீவிரமாகவே இன்று பல்வேறு ஆதரவாக கரூரில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை போலீஸ் கைது செய்து ஆஸ்பத்திரிக்கு-அனுப்பப்பட்டு பிறகு அவர்கள் அங்கு உண்ணாவிரதம் இருந்து அந்த உண்ணாவிரதத்தை கைவிடச் செய்ய Forcible feeding-க்கு வேண்டிய முயற்சிகள் பலவந்தமாக செய்கிறபோது உண்ணாவிரதம் இருந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் அதை ரெஸிஸ்ட்டு செய்தார்கள். ரெஸிஸ்ட்டு செய்து டென்ஷன் இன்னும் அதிகமாகி அந்த கரூர் நகரத்திலும் தாலுக்கா பூராவிலும் பதட்ட நிலை ஏற்பட்டு நிலைமை உச்சக் கட்டத்தை அடைந்ததால்தான் 12 ஆம் தேதி இந்த அவையில் இந்தப் பிரச்சினையை ரெயிஸ் செய்யும்போது 12 ஆம் தேதி கரூர் நகரத்தில் டோட்டல் அர்த்தால் குறிப்பிட்டபடி அவ்வளவு depth of feeling அந்த நகரத்கில் ஓர்க்கர்ஸ் புராபளமாக இல்லாமல் அது ஓர்க்கஸ்-ஓடு நிற்காமல் - depth of fieling என்பது

for the first time in history கரூரில் உள்ள தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அந்த பந்தில் வக்கீல்கள் அன்றைக்கு கோர்ட்டை பாய்காட், செய்தார்கள் என்று பத்திரிகையில் வந்தது.

Lawyers boycott d the courts in Karur on this question ஒர்க்கர்ஸ் பிரச்சினையாக இருந்த போது அதை தீர்க்கவில்லை. அது இப்போது most popular property of the public ஆக மாறி விட்டிருக்கிறது. ஆகவே வக்கீல்கள் பகிஷ்கரித்து விட்டார்கள். பேசித் தீர்க்காமல் அரசு கோர்ட்டுக்கு அனுப்பியதை கரூர் பொது மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு இதைவிட உதாரணமாக வேறு அத்தாட்சி தேவையில்லை. அந்த உண்ணாவிரதம் தொடர்ந்து இருந்தால் கரூர் நகரத்தில் பதட்ட நிலை மேலும் உச்சக் கட்டம் அடைந்து இருக்கும்.

ஆனால், அதைத் தவிர்ப்பதற்காகத்தான்-12 ஆம் தேதி உங்களுக்குத் தெரியும், மாண்புமிகு எங்கள் தலைவர் தோழர் சங்கரய்யா அவர்களும் தோழர் ரமணி அவர்களும், சி. பி, ஐ. தலைவர் தோழர் கருப்பையா அவர்களும் இந்தப் பிரச்சினையை இங்3க எழுப்பினார்கள். இந்தப் பிரச்சினை உச்சக் கட்டத்தில் இருந்தது. கரூர் பற்றி உங்களுக்கே தெரியும். பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் பெரிய விவகாரங்களெல்லாம் நடந்த இடம். That is for the fighting peopl:.

அதைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்தப் பிரச்னையில் தலையிட்டு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்ற கருத்து வந்த நேரத்தில் இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி திரு. இராமச்சந்திரன் அவர்கள் தலையிட்டு, முதல்வரிடம் காண்டக்ட் செய்து ஒரு மணி நேரம் கழித்துச் சொல்கிறேன் என்று சொல்லி, ஒரு மணி நேரம் கழித்துச் சொன்னார்கள. அப்பொழுது என்ன யோசனை தெரிவிக்கப்பட்டது என்றால், சீப் மினிஸ்டர் தலையிட்டு, திருச்சி கலெக்டரிடம் சொல்லி, செட்டில்மெண்ட் பண்ணி வைப்பது என்ற யோசனையை சீப் மினிஸ்டரிடம் கன்வே செய்ததாகவும், சீப் மினிஸ்டர் அதை ஒத்துக்கொண்டதாகவும் என்ற அந்தப் பிரப்போசலை அன்றைக்கு வாக்குறுதியாக அளித்ததால்தான் அதை நம்பினார்கள். இதுதான் விஷயம். தொ.மு.ச., சி.ஐ.டி.யு. ஏ.ஐ.டி.யு.சி., போன்றவைகளுக்குத் தந்தி அடித்து. ரமணி அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள் என்று சொல்லி அந்தத் தலைவர்களைக் கைவிட வைத்தோம். ஆனால், அரசாங்கம் இரண்டாவது தடவையும் இந்த வாக்குறுதியை மீறிவிட்டது. முந்தாநாள் நான் அங்கிருந்து புறப்பட்ட நேரத்தில், சாயங்காலம் ஏழு மணி அளவிற்கு திருச்சி கலெக்டரிடத்தில் போன் செய்து கேட்ட நேரத்தில், பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லி இதுவரைக்கும் எனக்கு வரவில்லை, வந்திருந்தால் தலையிட்டிருப்பேன் என்று சொல்லி, that also has been violated· அந்த வாக்குறுதி ..





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவரவர்களே, அதில் ஒரேயொரு சிறு திருத்தம். முதல்வரிடத்திலே சொன்னபொழுது, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் விரும்புகிறார்கள் என்பதை நான் சொன்னேன். மாண்புமிகு முதல்வரவர்கள், அதுபற்றிய முழு விவரங்களையும் அங்கே திருச்சியிலேயிருந்து—கரூரிலேயிருந்து பெற்று முடிவெடுப்பேன் என்று கூறினார்கள். இதைத்தான் மாண்புமிகு திரு. ரமணி அவர்களிடத்திலேயும், திரு. கருப்பையா அவர்களிடத்திலேயும் தெரிவித்தேன். கலெக்டரிடத்தில் உடனடியாகப் பேசி நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லவில்லை. முழுத் தகவல்களையும் பெற்று நான் முடிவெடுப்பேன் என்றுதான் என்னிடத்திலே சொன்னார்.

**திரு. ரா. உமாநாத்:** திரு. கருப்பையா அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அவர்களும் பேச இருக்கிறார்கள். திரு. ரமணி அவர்களும் இருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தை நடந்த பொழுது நான் அங்கே இல்லை. சீப் மினிஸ்டர் தலையிட்டு, கலெக்டர் இரு சாராரையும் கூப்பிட்டு செட்டில் பண்ணச் சொல்லி செய்ய வேண்டும் என்ற யோசனையைக் கன்வே செய்ததாகவும், சீப் மினிஸ்டர் ஒத்துக் கொண்டதாகவும், மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைக் கன்வே செய்ததாகவும் தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் அதை மறுத்திருக்கிறீர்கள். அதற்கு அவர்கள் ரிப்ளை செய்யட்டும்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னபடியே பார்த்தாலும் கூட, அங்கிருந்து தகவல் சேகரிக்கப்பட்டு விட்டதா? 12 ஆம் தேதி நடந்து இன்றைக்கு 19-ஆம் தேதியை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். இன்றைக்குத் தேதி 17 ஆகிவிட்டது. இந்தத் தகவலைச் சேகரிப்பதற்கு 5 நாள் டைம் ஆக வேண்டுமா? ஆகவே, இப்பொழுது மினிஸ்டர் சொல்லியபடியே பார்த்தாலும் கூட, அந்த வாக்குறுதியும் அமல்படுத்தப்படவில்லை.

ஆகவே, நான் கேட்க விரும்புகிறேன், அவர்கள் சொன்னபடி உள்ள வாக்குறுதியானாலும் சரி, அல்லது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதாகக் கூறிய அந்த வாக்குறுதியானாலும் சரி, அந்த வாக்குறுதியை ப்ளாக் செய்தது யார்? யார் அதைத் தடுத்தார்கள்? அதில் என்ன சமாச்சாரம் என்பது தெரிய வேண்டும்.

ஒரு சுமுக நிலையை உண்டாக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் கொடுத்த ஒரு ஒத்துழைப்பை A hand of co-op ration· அது சும்மா நீடிக்கக்கூடாது, அதை உடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு துர்ப்பிரயோகப்படுத்துகிறது என்ற சார்ஜைச் சொல்ல விரும்புகிறேன். இது நம்பிக்கைத் துரோகம் ஆகாதா? அவர்கள் சொன்னபடியே அந்த வாக்குறுதி கொடுத்

திருந்தாலும்கூட அதையும் அமல் நடத்தவில்லையே. அந்த வாக்குறுதியை நம்பி உண்ணாவிரதத்தைக் கைவிட வைத்தோம். We took responsibility. ரெஸ்பான்சிபிலிட்டி எடுத்துக்கொண்டு, உண்ணாவிரதத்தைக் கைவிட வைத்தபிறகும் பேசாமல் இருந்தால், it is breach of trust. நம்பிக்கை துரோகம் ஆகும்.

வாக்குறுதி கொடுத்து, உண்ணாவிரதத்தை வாபஸ் பெறச் செய்த அரசு, கரூரில் உள்ள தொழிலாளர்களையும், அரசியல் கட்சித் தலைவர்களையும், பொதுமக்களையும் ஏமாற்றியதாகக் கருதி, அளவு கடந்த ஆத்திரம் கரூர் நகர மக்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே, மீண்டும் கடுமையான போராட்டத்தில் இறங்க இருக்கிறார்கள்.

அரசை மிரட்டுவதற்காக நான் இதைக் கூறவில்லை. நாங்கள் மிரட்டி அரசு மிரளும் என்று நாங்கள் நம்பவில்லை. அல்லது அரசு மிரட்டினால் கரூர் தொழிலாளர்களும், பொதுமக்களும் மிரளுவார்கள் என்று அரசு நினைத்தாலும் அது தப்பு.

It is wrong. கலெக்டர் தலையிட்டுச் சொல்கின்ற கட்டம் மாறிவிட்டது; அந்தக் கட்டத்தைத் தாண்டியாகிவிட்டது. The situation has gone to that extent. அப்படிச் செய்திருந்தால் இன்றைக்கு செட்டில்மெண்ட் வந்திருக்கும். It is now too late. ஆகவே, முதலமைச்சரவர்கள் சிம்சன் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக, இந்தப் பிரச்னையை இணைத்து, மற்றப் பிரச்னைகளையும் சேர்த்துக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சிம்சன் பிரச்னையைத் தீர்த்து வைத்தார்.

(முற்பகல் 10-30)

அதுபோன்று, சிம்சன் பிரச்சினையைத் தீர்த்தது போன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருசாரரையும் கூப்பிட்டுப் பேசி தீர்த்து வைக்க வேண்டும் என்ற வகையில் ஒரு அஸ்ஸூரன்ஸ் இப்போது தரவேண்டும். நான் சீரியஸ் ஆகவே கேட்கிறேன்; மறுபடியும் சொல்கிறேன்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிம்சன் பிரச்சினையைத் தீர்த்தது மாதிரி இந்தப் பிரச்சினையிலும் தலையிட்டுத் தீர்ப்பார் என்ற உறுதியினை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இல்லாவிட்டால் பேரவைக்குள்ளும் சரி, பேரவைக்கு வெளியிலேயும் சரி நாங்கள் கரூர் நகரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் பக்கம் தான் ——

whatever the consequences. நாங்கள் என்ன சஃபர் பண்ணினாலும் சரி We will stand by the workers and the people of Karur both inside the legislature as well as outside the legislature.





நாங்கள் அப்படித்தான் நிற்கவேண்டி இருக்கும் மிரட்டுவதற்காக இதை நான் சொல்லவில்லை. வேறு வழியில்லை. எங்கள் கடமையை நிறைவேற்ற நாங்கள் உறுதியாக நிற்க வேண்டி இருக்கும். ஆகவே இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இதுகுறித்து விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, கரூர் மில் தொழிலாளர்கள் கடந்த 90 நாட்களாக நடத்தி வருகின்ற வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரையில் ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்கான முறையிலே தொடர்ச்சியாக பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த மன்றத்திலே தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் தலையிட்டு இதைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு பேசபட்டுப் வருகின்றது. வேலைநிறுத்தம் இன்றைக்கும் தொடர்ந்து நீடித்து நடக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தமான நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. சென்ற 17-1-84 அன்று துவக்கப் பட்ட வேலைநிறுத்தம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் பட வேண்டும் என்பதற்காகத் தொழிலாளர்கள் தரப்பிலே, தொழிற் சங்கங்கள் தரப்பிலே மாநில மட்டத்திலே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்றைக்கும் அதை உதாசீனப்படுத்து வது என்கிற ஒரு கொள்கையைத்தான் அரசு கடைப்பிடிக்கின்றது என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

யாருடைய நலன்களைப் பாதுகாக்க இந்த நிலை நீட்டிக்கப் படுகின்றது என்பதுதான் அடிப்படையான கேள்வியாகும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களின் உணர்வுகளைப் பற்றி நன்கு தெரிந்தவர். வேலை நிறுத்தத்திலே தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கும்போது அவர்களுடைய குடும்பங்கள் எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றி எலலாம் அவர்கள் நன்கு தெரிந்திருக்கக்கூடியவர்கள். இருந்தாலும் இந்தப் பிரச்சினையிலே நிச்சயமாக தீர்த்துவைக்கக் கூடாது என்ற உறுதியான ஒரு நிலையை எடுத்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து அங்கு ஏவி விடப்பட்ட அடக்கு முறைகள், ரவுடித்தனமானத் தாக்குதல்கள் ஒரு புறத்திலே இருக்க காவல் துறை கையாண்டு வருகின்ற முறைகளின்படி 140 பேர் மீது இன்றைக்கும் வழக்கு இருந்துவருகின்றது. அதிலே 40 பேர் மீது 307 செக்ஷன்படி வழக்கு போடப்பட்டிருக்கின்றது. இதற்கு எப்படியாவது ஒரு நிலையை உருவாக்கித் தீர்வு காணவேண்டும் என்பதற்காகத்தான் அமைதியான முறையிலே தொழிற்சங்கத் தலைவர்கள் 8 ஆம் தேதி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்கள். 12 ஆம் தேதி விடியற்காலையில் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கரூர் நகரத்திலே இருக்கின்ற அனைத்து தொழிலாளர்களும், அனைத்து மக்களும் வழக்கறிஞர்கள் உட்பட தங்களுடைய உணர்வுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். கரூர் வட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காணவேண்டும் என்று

அனைவரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்காட்டக் கூடிய முறையிலே நூற்றுக்கு நூறு அமைதியான முறையிலே வரலாற்றிலே இல்லாத அளவுக்கு ஒரு ஹர்த்தால் போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட தலைவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து நீட்டிக்கக் கூடிய சூழ்நிலையிலே மாலையிலே அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். இப்பிரச்சினை தொடர்பாக நானும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்களும், சி.ஐ.டி.யு. தோழர் திரு. ரமணி அவர்களும் மின்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். இந்தப் பிரச்னையிலே ஏற்கனவே முதல்வருடைய வாக்குறுதி இருக்கிறது. சென்ற பிப்ரவரி மாதத்தில் சென்னை நகரத்திலே நடைபெற்ற பந்த் போராட்டத்தை ஒட்டி, அனைத்துத் தொழிற்சாலைகளுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்காக, சிம்சன் பிரச்னையைத் தீர்த்த மாதிரி, மற்ற பிரச்னைகளைத் தீர்க்க அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அவர் இதையும் தீர்க்க வேண்டும். தலையிட வேண்டுமென்று அவரிடத்திலே கூறினோம். கரூர் நகரத்திலே இருக்கிற விசேஷமான நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், 1946-ல் நடைபெற்ற நிகழ்ச்சிகள், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைவருக்கும் தெரியும். கரூர் நகரம் ஒரு சென்சிட்டிவ் பிளேஸ்ஸாக இருக்கிறது. ஆகவே, அமைதியான முறையிலே நடத்தப்பட்டு வரும் இந்தப் போராட்டத்திற்கு தீர்வு காண்பதற்கு முதல்வர் முன் வர வேண்டும். அவரால் நேரடியாக வர முடியாது என்ற நிலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக — — ஏனென்றால், அன்றைய தினம் கரூர் நகரத்திலே பந்த் நடந்து கொண்டிருக்கிறது — — மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தேவையான தகவல்களைக் கொடுத்து, அறிவுரை கொடுத்து' பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத் தீர்க்க வேண்டுமென்ற முறையிலே நாங்கள் வற்புறுத்திக் கூறினோம். நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களும் முதல்வரிடத்திலே தொடர்பு கொண்டு 1/2 மணி நேரம் கழிந்து, இம்மாதிரி நீங்கள் குறிப்பிட்டுப் பேசிய பேச்சுக்களையும், கருத்துக்களையும், யோசனைகளையும் முதல்வரிடத்திலே கூறி அவரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்றுதான் மின் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே அந்த அடிப்படையிலேதான் அங்கே இருக்கிற தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டு, அங்கே ஒரு நிலைமை உருவாக்கப்பட்டது. மின் துறை அமைச்சர் இன்றைய தினம் முதல்வருக்குத் தெரிவித்தேன் என்ற முறையிலேதான் கருத்துக் கூறினார்கள். ஆனால்; அன்றையதினம் நானும் தோழர் ரமணியும் மின் துறை அமைச்சரைச் சந்தித்த நேரத்திலே முதல்வர் அவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே தீர்வு காணப்படும் என்றுதான் கூறினார்கள். இன்றைய தினம் உண்ணாவிரதம்





கைவிடப்பட்டு வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்கிறது ஆகவே, இந்தப் பிரச்னையை மேலும் நீடித்துக் கொண்டு போவதிலே யாருக்குப் பயன் இருக்கிறது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தொழிலாளிகளைப் பாதுகாப்பது என்கிற கொள்கையை விடுத்து இன்றையதினம் அங்கேயிருக்கிற அருப்புக்கோட்டை ஜெய விலாஸ் முதலாளியைப் பற்றி எல்லோருக்கும், அமைச்சரவையிலே இருக்கிற அனைவரும் அறிவார்கள், எல்லா கட்சிகளும் அறிவார்கள் எப்படிபட்ட ஆள் என்று. ஏற்கனவே நாங்கள் அவருடைய நடவடிக்கையைப் பற்றி விவரமாக இந்த இடத்திலே பேசியிருக்கிறோம். ஆகவே அம்மாதிரியான நபர் அங்கே தொழில் அமைதியைக் கெடுத்து தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்தப் போராட்டத்தை அடக்குவது என்ற முறையிலே .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன சமாச்சாரம் என்று எடுத்துச் சொல்கிறீர்கள். தொழிலாளர் நல அமைச்சரை ஒரு சைடிலே தள்ளி விடுகிறீர்கள். அவர் தொழிலாளர் பக்கமே இல்லையென்று பேசிவிட்டு எப்படிப் பரிகாரம் காணுவது என்று நினைக்கிறீர்கள்? நியாயம் கேட்கிற மாதிரி பேசுங்கள். நியாயத்தைத்தான் கேட்க வேண்டுமே தவிர, அவர் ஒரு பக்கம் என்று முடிவு எடுத்துவிட்டு இந்த மாதிரி செய்ய மாட்டீர்கள் என்று பேச ஆரம்பித்தால் எங்கே போய் முடிவது? நீங்களும் நாளைக்கு அமைச்சரானால் எப்படி நடந்து கொள்வீர்கள். இருக்கிற நிலைமையைச் சொல்கிறேன். அவரவர்களுக்குச் சில சங்கடங்கள் இருக்கின்றன. எதையாவது பேசுவதால் புண்ணியம் இல்லை. பரிகாரம் காண முயற்சிக்க வேண்டுமென்று சொல்லுங்கள்.

திரு. இரா. கருப்பையா : இவ்வளவு தூரம் 90 நாட்கள் நடந்து கொண்டிருக்கிற வேலை நிறுத்தம், அதிலே தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடம், தொழில் உற்பத்தி முடங்கியிருக்கிறது ஆகிய நிலைமைகளை அமைச்சருடைய கவனத்திற்கு இப்பொழுதும் கொண்டு வருகிறேன். நான் அழுத்திச் சொல்வதன்மூலம் அவரை வேறு எங்கோ தள்ளிவிட வேண்டுமென்பது என்னுடைய நோக்கம் அல்ல. தொழிலாளர்கள் பக்கம் உறுதியாக நின்று பிரச்னையைத் தீர்த்துக் கொடுப்பதற்கான முறையில் நடவடிக்கைகள் வர வேண்டுமென்பதற்காகத்தான் நான் திரும்ப, திரும்ப வலியுறுத்தி பேசுகிறேன்.

அதே மாதிரி இப்பொழுது பின்னி கம்பெனியில் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அறிவுரை வழங்கியிருக்கிறார். வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்கிறது. வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் பிரச்னைகளைத் தீர்க்காமல், அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல், வேலைக்குச் செல்லுங்கள் என்று சொல்வதன் மூலமாக, இந்தத் தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதுதான் .. ..

(முற்பகல் 10–40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்திருப்பது கரூர் மில்லைப் பற்றி; ஆனால் பி அண்ட் சி மில்லைப் பற்றி பேசுகிறார்கள். நாங்கள் வேலைக்குப் போகவேண்டும் என்று சொல்கிறோம். மத்திய அரசிலேயிருந்து, இந்த மில்லை தேசிய மயமாக்க முடியாது; அது தேவையில்லை; கமலரத்தினம் அவர்கள் கொடுத்த அவார்ட் படி, ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி செய்தால் தான் இந்த மில் உருப்படும், தேறும், அந்தப் பிரச்னையை தொழிலாளர்களுக்குச் சொல்லுங்கள்;

'The State Government should use its good offices to tell the workers to call off the strike and resume work and show production and productivity according to the Kamalarathnam recommendation entered into under Settlement 12 (3)'

என்று சொன்னதை படித்துக் காண்பித்து அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். அதையெடுத்து கரூர் மில் பிரச்னையில் இணைத்துப் பேசுவது எப்படி சரியாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, கரூர் மில் பொறுத்தவரையில் என்னுடைய பேச்சுக்களை லிமிட் செய்து கொள்ள விரும்புகிறேன். நான் குறிப்பிட விரும்பியது என்னவென்றால் ஒரு போராட்டம் நடைபெறக்கூடிய நேரத்தில் அந்தப் போராட்டத்திற்கு ஒரு தீர்வு இல்லாமல், சட்டில்மெண்ட் இல்லாமல் தொழிலாளர்களை வேலைக்குச் செல்லுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையில் எப்படி அங்கே ஒரு அமைதியை பார்க்க முடியும்; தொழிலாளர்கள் நலன்களை பாதுக்காக்க முடியும் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். வேறு பிரச்னைகளுக்குச் செல்ல வில்லை. ஆகவே, அந்த அடிப்படையில் கரூரில் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. அதில் உடனடியாகத் தீர்வு காண வேண்டும், முதல்வர் அவர்கள் சிம்சன், பிரச்னையில் தலையிட்டு தீர்த்து இருக்கிறார்கள். அதுவும் கோர்ட்டிற்கு விடப்பட்ட பிரச்னை தான். ஆகவே அந்த அடிப்படையில்இந்தக் கரூர் மில் பிரச்னையை மேலும் நீடிக்காமல் காலம் தாழ்த்தாமல் உடனடியாக இன்றைக்கே தலையிட்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது சம்பந்தமாக பல்வேறு நிலைமைகள் இன்றைய தினம் உருவாகிக் கொண்டிருக்கிறன. இந்த மன்றத்திற்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. ஆகவே தொழில் அமைதியை பாதுகாப்பதற்கும், தொழிலாளர் நலன்களை பாதுகாப்பதற்கும், முறையாக அந்தத் தொழிற்சாலை இயங்குவதற்கும், இந்த வேலை நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கும் முழுமையாக எல்லா அம்சங்களைப் பற்றியும் விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. அன்பில் தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மில் தொழிலாளர்கள் போராட்டம் 17-1-84 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டு, 17-4-84 இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஏறக்குறைய 90 நாட்கள், மூன்று மாதங்களாக இது நடந்து கொண்டிருக்கிறது. அங்கே நடைபெறுகிற போராட்டம் அவர்கள் சம்பளம் உயர்வு கேட்டோ போனஸ் கேட்டோ பஞ்சப்படி கேட்டோ நடைபெறவில்லை. இப்பொது நடைபெறுகிற போராட்டம், பணியாற்றக் கூடிய தோழர்களில் 700 பேர்களில் 400 பேர்கள் இன்னமும் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பவர்கள், நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், அதே சமயத்தில் இன்றைக்கு தொழிலாளர் நலத் துறை ஆணையாளராக இருக்கிற திரு. ராஜா சுப்பிரமணியன் அவர்கள் அன்றைக்கு ஒரு ஒப்பந்தம் செய்து, அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடும், நடைபெறுகிற போராட்டமாகும். அதைத்தவிர போனசிற்காக, பஞ்சப்படிக்காக நடைபெறுகிற போராட்டமல்ல இது. இதுவரையில் தொழிலாளர்கள் போனஸ் பஞ்சப்படி கேட்டுத்தான் போராட்டம் செய்வது வழக்கம். ஆனால் போடப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுங்கள் என்பதற்காக ஒரு போராட்டம் நடக்கிறது என்றால் உண்மையில் விசித்திரமாக இருக்கிறது.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் காலத்தில் அமைச்சர் உண்ணாவிரதம் இருந்ததைப் பற்றி திரு. அன்பில் இப்போது குறிப்பிட்டதால் அதற்குப் பதில் சொல்லும் வகையில் மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டார். எனவே திரு. இராகவானந்தம் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தது பற்றி திரு. அன்பில் தர்மலிங்கம் பேசியதில் இருந்து, அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் பதில் சொன்னது வரையில் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

திரு. அன்பில் தர்மலிங்கம் : இப்படியே எக்ஸ்பஞ்ச் செய்து கொண்டு போனால், இது எக்ஸ்பஞ்ச் சட்டசபையாகப் போய் விடும் போல் இருக்கிறது. அண்ணா அவர்கள் சொன்னதை இல்லை என்று சொல்லிவிடமுடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கே பலது தெரியும். அதையெல்லாம் சொல்லிவிடமுடியாது. ஆகவே, இப்போது அவைமுன் உள்ள கரூர் பிரச்னையைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து எல்லாம் தொழிலாளர் தலைவராக இருந்தவர் இன்றைக்கு தொழிலாளர்கள் மீது அக்கறை இல்லாமல் அவரே முதலாளியாக ஆகி விட்டாரோ என்று சந்தேகப்படுகிற அளவிற்கு இப்போது செயல்படுகிறாரா என்பதுதான். இப்போது நடைபெறுகிற

---

* *முற்பகல் 10-43—10-46-வரையிலான பகுதிகள் பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

போராட்டம் அரசாங்கத்தால், ஆணையரால் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக நடக்கும் போராட்டமாகும். இதிலே பெரிய விவகாரம் ஒன்றும் இல்லை. ஆகவே, இதை 90 நாள் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. ஒரு போரட்டம் 90 நாள் நடப்பது என்பது சாதாரண போராட்டம் அல்ல. சிம்சன் போராட்டம் இதே மாதிரிதான் நடந்தது மற்ற மற்ற போராட்டங்களும் இப்படியே நடக்கின்றன. நான் ஒன்றை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன், கரூரில் ஒரு போராட்டம் தொடங்கினால் அது பெரிய ஆபத்தில் கொண்டு போய் முடியும். இது சபாநாயகர் அவர்களுக்கும் தெரியும், நம்முடைய முன்னவர் அவர்களுக்கும் தெரியும். 1946-லே திராவிடர் கழகத்திலே நாங்கள் எல்லாம் எப்படி அடிபட்டு, உதைபட்டு போராட்டம் நடத்தினோம் என்பது தெரியும். கரூரில் ஒரு போராட்டம் துவங்கியது என்று சொன்னால், அது தமிழ்நாடு பூராவுக்கும் பரவிவிடும். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது இந்தப் போராட்டம்.

கடந்த 90 நாட்களாக அங்கே என்ன நடைமுறையில் அந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது என்று சொன்னால், அங்கே முறைப்படி, சட்டப்படி அவர்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்தி ஒவ்வொரு நாளும் ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டியதாகிவிட்டது. அதற்குப் பிறகு விளக்கப் பொதுக்கூட்டங்கள் கோரிக்கையை வற்புறுத்தி நடத்தப்படுகின்றன. அதற்குப் பிறகு பேரணிகள் நடத்தப்பட்டன. அதற்குப் பிறகு அடையாள உண்ணாவிரதம், வேலை நிறுத்தம் ஆகிய இவ்வளவும் செய்தாகிவிட்டது. கடந்த 8-4-84 முதல் சர்வ கட்சியினரும் சேர்ந்து, ஒரு கட்சி மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளும், அ.தி.மு.க. உள்பட அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். 8-4-84 முதல் அங்கே சாகும் வரையில் தொடர்ந்து உண்ணாவிரதம் இருப்பது என்று முடிவு எடுக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நகர செயலாளர் எஸ். வி. சாமியப்பன், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சோமு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சோடியப்பன், ஜனதா கட்சியைச் சேர்ந்த ஆர். எம். சுந்தரம் ஆகியோர் ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு இன்னின்னார் இருப்பது என்று திட்டம் போட்டு வைத்து இருக்கிறார்கள். ஆகவேதான் 9-ஆம் தேதியே இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். அதை இன்றைக்கு எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அவர்கள் உயிருக்குப் போராடும் நிலை வந்த பின்னாலும் உண்ண மாட்டேன் என்று சொன்னார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள், அவர்கள் உண்ணமாட்டேன் என்று சொல்லியும் கூட, ஏதோ முதலமைச்சர் அவர்களுடன் பேசித் தீர்க்கப்படும் என்று சொல்லி வாக்குறுதி கொடுக்கப்பட்டதால், இன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதத்தைத் நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். இது மீண்டும் தொடரக்கூடும். ஆகவே, இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(முற்பகல் 10-50)

திரு. பி.எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, கரூர் நகரில் ஏறத்தாழ 3 மாதங்களாக தொழிலாளர்கள் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நாடு அறியும், அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். கரூர் என்னுடைய சொந்த ஊர். அங்கே வாழுகின்றவர்கள் மிகவும் சாதுவானவர்கள், அகிம்சா முறையில் எந்த காரியத்தையும் சாதித்துக்கொள்ள முயற்சி செய்பவர்கள். ஆனால், 'சாது மிரண்டால் காடு தாங்காது' என்று சொல்வார்கள். அதைப்போன்று அவர்களுடைய கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமல் வாளாவிருந்தால் நிலைமை மிகவும் தீவிரமாகிவிடும் என்று நான் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் சொன்னதைப் போல் 1946-ல் ஒரு பெரும் போராட்டம் கரூரிலே நடைபெற்றது. அதைப்போன்று பின்னாலே விவசாயிகள் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டம் 2, 3 மாதங்கள் நடைபெற்றது. அரசாங்கம் அந்தப் பிரச்சனையிலே சரியாகச் செயல்படாத காரணத்தால் கரூர் நகரமே அன்றைக்கு தீப் பற்றி எரிந்ததை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சனையை நீட்டிக்க விடாமல், தொழிலாளர்களுடைய உணர்வுகளை கருத்திற்கொண்டு, தொழிலாளர் தலைவர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி, இதற்கு ஒரு தீர்வு விரைவிலே காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தொழிலாளர்கள் போராட்டம் என்றால் அதை ஊகாயாக நினைத்து ஊற வைத்தால் அதனால் பெரிய தீங்கு ஏற்படும். ஏற்கனவே சிம்சன் தொழிற்சாலையில் பல மாதங்கள் போராட்டம் நடைபெற்றது. அதைப் போன்று பி. அன்ட் சி. தொழிற்சாலையில் பல மாதங்கள் போராட்டம் நடந்தது. பி அன்ட் சி மில் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு முன்வந்தும் மாநில அரசு மெத்தனமாக இருந்ததால் நீண்டநாள் அந்தப் போராட்டம் நடைபெற்றதை இந்த அவை நன்றாக அறியும் (குறுக்கீடு). தலைவரவர்களே, நான் இதை ஒரு உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். இந்த அரசின் மெத்தனப் போக்கால் பல போராட்டங்கள் முடிவு பெறாமல் இருக்கின்றன. முடிவு பெறாதது மட்டுமல்லாமல் பல தீமைகளும் அதனால் ஏற்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், மூன்று மாத காலமாக சம்பளம் இல்லாமல் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்றால் அந்தத் தொழிலாளர்கள் நிலைமை என்னவாகும்? அவர்களுடைய குடும்பம் எந்த நிலைக்குப் போகும்? அவர்களுடைய சுற்றத்தார் நிலைமை எப்படி இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பல்வேறு

யிரச்சனைகள் பற்றி விரிவாகப் பேச வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரூர் மில்லில் 654 தொழிலாளர் கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் நிரந்தரமாக பணி புரிந்தவர்கள் 392, மற்றும் பயிற்சியாளர்கள் (அப்ரண்டிஸ்) 262. இந்நூற்பாலையில் ஐ.என்.டி.யூ.சி., ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ., அண்ணா தொழிற்சங்கப் பேரவை, கே.என்.டி.யூ.சி., டி.என்.டி.யூ.சி., தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை ஆகியச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

170 அப்ரண்டிஸ் தொழிலாளிர்களின் ஆட்குறைப்பு, வேலைப் பளு, ஊதிய மாற்றம் போன்ற கோரிக்கைகள்மீது தொழிலாளர் கள் 28-12-81 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இத்தொழிற் தகராறில், சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை நடை பெற்று, அதன் பயனாக தொழிற்தகராறு சட்டப் பிரிவு 12 (3)–ன் கீழ் ஒரு ஒப்பந்தம் 17-2-1982 அன்று ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப்படி வேலை நிறுத்தம் உடனே கைவிடப்பட்டது.

ஒப்பந்த சரத்துக்களில் 1, 2-ன்படி வேலைப்பளு மற்றும் ஊதிய மாற்றம் ஆகியவைகளில் நேரடிப் பேச்சுவார்த்தை முறிவடைந்ததால், அந்தப் பிரச்சனைகளிலும். இதுதவிர 170 அப்ரண்டிஸ் தொழிலாளர்கள் ஆட்குறைப்புப் பிரச்சனையிலும் இணை ஆணையர் முடிவை (இன்ஃபார்மல் ஆர்பிட்ரேஷன் டிசிஷன்) ஏற்றுக்கொள்ள இரு தரப்பினரும் சம்மதித்தனர். இந்தப் பிரச்சனை தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு விசாரணையில் இருக்கும்போது நிர்வாகம் சில தொழிற் சங்கங்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி இரு ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொண்டதாகத் தெரிகிறது. அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் இணை ஆணையர் தனது முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

தொழிலாளர் துறை இணை ஆணையர் தனது முடிவை 22–9–1983 அன்று தெரிவித்தார். இந்த முடிவின்படி வேலைப் பளு, ஊதிய மாற்றம் ஆகியவைகளில் இரு தரப்பினருக்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கண்டுள்ள வேலைப்பளு மற்றும் ஊதிய மாற்றம் நியாயமாகத் தெரிவதால், அவற்றை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்வதாகக் கூறி யுள்ளார்:—

(1) ஆட் குறைப்பு இருக்கக் கூடாது.

(2) மாற்றப்பட்ட வேலைப்பளுவினால், ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ.10/-க்குக் குறையாமல் ஊதிய உயர்வு இருக்கவேண்டும்.



(3) ஆலையின் வியாபாரத்திற்குப் பாதகமில்லாமல் தகுந்த 'கவுண்ட்' நூல்களை உபயோகித்து தற்காலிக தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை நிர்வாகம் அளிக்கவேண்டும்.

(4) தற்காலிகத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் போது, நிர்ணயிக்கப்பட்ட வேலைப்பளு அவர்கள் கொடுத்தால், அவர்கள் வேலை செய்த நாட்களுக்கு, அவ்வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படவேண்டும்.

நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி பயிற்சியாளர் களுக்கும் அமல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை உள்ளிட்டு, பல கோரிக்கைகளை வலியுறுத்தி அந்தத் தொழிலாளர்கள் 17-1-84 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அதுதான் முக்கியம். மாண்புமிகு உறுப்பினர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள்தான் இந்தப் பிரச்சினையைச் சரியாகச் சொன்னார்கள். இந்தப் போராட்டம் நடத்துவது எதற்காக என்று பின்பாயிண்ட் பண்ணிச் சொல்லும்போது, தொழிலாளர் துறை இணை ஆணையரின் தீர்ப்பை நிரந்தரத் தொழிலாளர் களுக்கு மட்டுமின்றி பயிற்சியாளர்களுக்கும் அமுல்படுத்தவேண்டு மென்ற கோரிக்கை உள்ளிட்ட பல பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிலாளர்கள் 17-1-84 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐ.என்.டி.யூ.சி. மற்றும் ஏ.டி.பி. தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளவில்லை. சுமார் 120 தொழிலாளர்கள் வேலைக்கு செல்வதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

9-3-84 நாளைய 556 எண்ணிட்ட அரசு ஆணையில் சுமார் 264 தொழிலாளர்களின் தகுதி நிலைமை (ஸ்டேடஸ்) நிர்ணயம் செய்தல், வேலைக்கேற்ப சம்பளம் வழங்குதல், பதவி வாரியாக பதவி உயர்வு அளித்தல் ஆகிய கோரிக்கைகள் தீர்ப்புக்காக தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன.

தற்சமயம் இவ்வாலையில் பகல் ஷிப்ட் சுமுகமாக நடை பெற்று வருகிறது. பகல் ஷிப்டில் சுமார் 134 தொழிலாளர்கள் வேலைசெய்து வருகின்றனர்.

8-4-84 முதல் கரூர் தாலுக்கா அலுவலகம் முன்பு உண்ணா விரதப் போராட்டம் நடந்ததாகத் தெரிகிறது. நீதிமன்றத் தீர்ப்பாயத்திற்கு இந்த இரண்டு பிரச்சினைகளும் அனுப்பப்பட்டி ருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்வதோடு, இந்த மில்லை அரசே எடுத்து நடத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. எனவே இந்தப் பிரச்சினை பற்றி ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

திரு. என். சங்கரய்யா. பாய்ண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மில்லை எடுப்பதைப் பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே சம்பந்தப்பட்டவர்களை அழைத்து உடனடியாக ஒரு சுமுகமான உடன்பாடு கண்டு, அரசு இந்த மில்லை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி எடுத்துக்கொள் கிறோம் என்று திட்டவட்டமாக அறிவிப்பு கொடுத்தால், எனக்கு பரிபூர்ண சம்மதம் தான். அதை விடுத்து, அரசு பரிசீலித்து வருகிறது என்று சொல்வது சரியல்ல. நான் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை மட்டுமல்ல, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இது அரசாங்கத்தினுடைய ஒரு பிரச்சினையல்லவா? பொறுப்புள்ள அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அதற்கு அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்துகொண்டு, இந்த மில்லை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லவேண்டும். அதற்கு மாறாக, அரசு ஆலோசித்து வருகிறது என்று சொன்னால், என்ன அர்த்தம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர். இந்தப் பிரச்சினை கன்சிலியேஷனிலே தான் முடியும். அதையெல்லாம் சட்டசபையிலே பேசி இதற்கு ஒரு தீர்வு காணமுடியாது. நான் அனுபவத்திலிருந்து சொல்கிறேன். கன்சிலியேஷனுக்குப் போய் அங்கு உட்கார்ந்து பேசவேண்டும். (குறுக்கீடுகள்) பேச்சுவார்த்தைக்கு முதலில் போகவேண்டும். அந்தப் பேச்சுவார்த்தைகளில் முடிவு காண முயற்சிசெய்யுங்கள். இங்கே வாதப் பிரதிவாதங்கள் தேவையில்லை. சட்டசபையிலே பேசிப் பிரயோசனம் இல்லை, பிரச்சினையை தீர்க்காது. விளம்பரம் தான் கிடைக்கும்.

திரு. சோ. அழகர்சாமி. அங்கே தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சிசெய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். பேச்சுவார்த்தைக்குப் போகாமல், பிரச்சினையை தீர்க்கமுடியாது. அரசு ஆலோசித்து வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை விடுத்து, அமைச்சர் இந்த பதிலைத்தான் சொல்லவேண்டுமென்று 'கம்பல்' பண்ண முடியாது.

(முற்பகல் 11-00)

பேச்சு வார்த்தையிலே இது முடிந்துவிடாது. (குறுக்கீடு). எனக்குத் தெரியும். இல்லை என்றால் உமாநாத் அவர்கள் சொன்னமாதிரி சட்டசபையிலும் வெளியிலேயும் பார்த்தால் தான் முடியும்.



திரு. என். சங்கரய்யா. இந்த மானியக் கோரிக்கையைக் காட்டிலும் இது முக்கியமானப் பிரச்சனை. இந்த மானியக் கோரிக்கை என்பது வருஷாவருஷம் வரக்கூடியது. ஆனால் இவ்வளவு பேசியதற்குப் பிறகும், அரசாங்கம் அதனுடைய கடுமையான தன்மையைப் பற்றி அவர்கள் ஒரு முடிவிற்கு வந்து, ஒன்று சொல்லட்டும். அதை நாங்கள் எடுத்துக்கொள் கிறோம். அந்த அடிப்படையிலே அரசாங்கத்தினுடைய தொழிற்சாலை என்ற முறையில் இந்தப் பிரச்சனையை பேசித் தீர்ப்போம் என்று சொன்னால் பிரச்சனை முடிந்துவிடும். பரிசீலித்து வருகிறோம் என்று, 90 நாள் வேலைநிறுத்தத்திற்குப் பிறகு சொன்னால், என்ன பிரயோசனம்? நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர். பரிசீலிக்காமல் என்ன பண்ண முடியும்? (குறுக்கீடு). எனக்குத் தெரியவில்லை. நீங்கள் சொன்ன பாலிட்டிக்ஸ் எனக்குப் புரியாது. நீங்கள் உள்ளேயும், வெளியிலும் நாங்கள் தடுக்க வேண்டியதாக இருக்கும் என்று சொன்னீர்கள், தடுங்கள்.

திரு. ரா. உமாநாத். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது பரிசீலிக்கிறது என்று சொல்வதும் மில்லை அரசாங்கம் எடுத்துக்கொள்வது சம்பந்தமாக. ஆனால் இப்போது Srtike on Demands. நடந்து கொண்டிருக்கிறது. அதை செட்டில் பண்ணவேண்டிய பிரச்சனையிருக்கிறது. இந்த மில்லை எடுத்துக்கொள்வது சென்ட்ரல் கவர்ன்மென்ட் வரைக்கும் போய், அது ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னால்' டில் தென் ஸ்ட்ரைக்கை செட்டில் பண்ணாமல் இருந்தால் எப்படி? That cannot be tolerated. We cannot accept that position.

மாண்புமிகு பேரவைத் தலைவர். அவருடைய பதிலிலே, உண்ணாவிரதம் இருந்த நிகழ்ச்சியை எல்லாம் ஏற்கனவே விவரித்துவிட்டு அதற்கு ஒரு நல்ல முடிவு காண்பதற்காக முயற்சி எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கும்போது, நீங்கள் ஏன் மீண்டும் மீண்டும் சொல்கிறீர்கள்? நல்ல முடிவு எடுப்பதற்கு முயற்சிக்கிறேன், இல்லை என்றால், அரசே எடுத்துக்கொள்வது பற்றி ஆலோசிக்கும் என்று இரண்டையும் சொல்லியிருக்கிறார்கள். He has given two alternatives (குறுக்கீடு). தீர்க்கவேண்டும் என்றால், இங்கே பேசி தீர்க்க முடியாது. (குறுக்கீடு). உங்கள் கருத்தை வலியுறுத்தி சொல்லிவிட்டீர்கள். உங்கள் கருத்துக்களுக்குப் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் ஒரு பதில்தான் எதிர்பார்க்க முடியும். இப்படித்தான் பதில் சொல்லவேண்டும் என்று நான் அமைச்சரை வலியுறுத்த முடியாது.

திரு. ரா. உமாநாத். பதில் இந்த மாதிரி வருகிறது என்றால் எப்படி? We cannot accept it.

மாண்புமிகு பேரவைத் தலைவர். நீங்கள் எதிர்பார்க்கிற பதில் வரவேண்டும் என்று எப்படி நீங்கள் சொல்ல முடியும்? ஒரு பிரச்சனையில் ஒரு அமைச்சரை கேள்வி கேட்கிறீர்கள். அதற்கு அமைச்சர் முடிந்த அளவிற்கு பதில் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு, என்ன வேண்டும் என்பதைப் பற்றி, நீங்கள் உங்கள் சைடைப் பாருங்கள். அவர்கள், அவர்கள் சைடைப் பார்க்கட்டும். இதிலே வலியுறுத்துவதற்கு வழி ஒன்றும் இல்லை.

திரு. என். சங்கரய்யா. இதைப்பற்றி அவர்கள் இடத்திலே முறைப்படி பேசினோம். அன்றைக்கு நான்தான் இந்தப் பிரச்சனையைக் கிளப்பினேன். அப்போது மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சான்னார்கள். உடனடியாக விவரங்கள் நம்முடைய கையிலே இல்லாவிட்டாலும் கூட உறுப்பினர்களுடைய உணர்வுகளை புரிந்துகொண்டு, அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்து, ஆவன செய்வதாகச் சொன்னார். அதற்குப்பிறகு நானும், தோழர் ரமணியும் கருப்பையாவும் அந்த அறையிலே உட்கார்ந்து அரை மணிக்கு மேலே விரிவாகப் பேசினோம். மாண்புமிகு முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு பதில் கேட்டு சொல்லச்சொன்னோம். அரை மணி கழித்து அவர்களும் கேட்டுச் சொன்னார்கள். இந்த மாதிரி நீங்கள் சொல்லியிருக்கிற அந்த வகையிலே ஏற்பாடு செய்யலாம் என்று சொல்லி, அந்த அடிப்படையிலே உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லச் சொன்னார்கள். இவ்வளவு சுமுகமாக இந்தப் பிரச்சனைகளை முடிப்பதற்கு நாங்கள் உதவி செய்திருக்கிறோம் என்பதையும் நீங்கள் பார்க்க முடியும். அப்படிப்பட்ட நேரத்திலே கடைசியாக ஒரு வார்த்தையைச் சொல்கிறார்களே? அரசாங்கம் எடுத்துக்கொள்ள முடிவு செய்து விட்டது என்று சொன்னால் பிரச்சனை தீர்ந்துவிட்டது.

திரு. சோ. அழகர்சாமி. பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்ற அடிப்படையில் தான் உண்ணாவிரதமே அங்கு நிறுத்தப் பட்டிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர். இதைப்பற்றி எல்லாம் நீங்கள் அங்கே போய் டீபர்தராக தொடர்ந்து பேசவேண்டும். (குறுக்கீடு) உங்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, தொழிலாளர் நலப் பிரச்னையிலே, இங்கே சட்டமன்றத்திலேயே பேசி முடிவு எடுத்திருப்பதாக இதுவரைக்கும் உலக வரலாற்றிலே கிடையாது....

திரு. ரா. உமாநாத். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயே இதைப்பற்றி பேசவேண்டும், இங்கேயே இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை, முதல்வர் அவர்கள் தலையிட்டு இந்த செட்டில்மெண்ட் பண்ண வேண்டும் என்றுதான் சொல்கிறோம். (கூச்சல், குழப்பம்)



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற நிலைமைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து எடுத்துச் சொன்னார்கள். அரசைப் பொறுத்தவரையில் இருக்கிற நிலைமைகளையும், எடுத்த நடவடிக்கைகளையும் இப்போது என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதையும், எப்படி வழக்கு மன்றத்திற்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறது என்பதையும், என்ன செய்யலாம் என்பதைப்பற்றி எவ்வாறு ஆராய்ந்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசு எடுத்துக் கொண்டிருக்கிற இந்த முயற்சிகளுக்கு இடையில் இப்போதே உடனடியாக தீர்வு காணவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கோருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க் கட்சியைச் சேர்ந்த முக்கியமான தலைவர்களும், தொழிலாளர் நல அமைச்சரும், முதல்வர் அவர்களோடு உட்கார்ந்து பேசி இதற்கு என்ன முடிவு எடுக்கலாம் என்பதைப் பற்றி யோசிக்கலாம். அதற்கான ஏற்பாட்டை நான் பண்ணுகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ரா. உமாநாத். தலைவர் அவர்களே, இதைத்தான் கேட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். ஆனால் இதை அவர் சொல்லிவிட முடியாது. தொழிலாளர் நலத்துறையில் ஒரு பிரச்னை இருக்கிறபோது, அவர் தானே வந்து அதைத் தீர்ப்பதற்குத்தான் முயற்சிப்பாரே தவிர, இன்னொருவரிடம் கொண்டு போய்விடவேண்டும் என்று நினைக்க மாட்டார் நான் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோது கூட அப்படி நினைத்ததில்லை.

I know the difficulties of the Labour Minister.

திரு. என். சங்கரய்யா. மாண்புமிகு தலைவர் அவர்களே தொழிலாளர் நல அமைச்சரை நாங்கள் பை-பாஸ் பண்ணவில்லை. எங்களுக்கு வேண்டியது முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்பதுதான்....

திரு. ரா. உமாநாத். தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சரை நாங்கள் பை-பாஸ் பண்ணவில்லை. அவர் தான் கோர்ட்டுக்கு இது போனபிறகு, தாமே ஒதுங்கிவிட்டார்.

## 4. கவன ஈர்ப்பு

செங்கற்பட்டு மாவட்டம் சாத்தினஞ்சேரி ஏரிக் கால்வாய் பராமரிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர். திருவாளர்கள் இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி, கி. கா. நல்லட்டபன், எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. இரா. கருப்பையா. தலைவர் அவர்களே "உத்திரமேரூர், சாத்தினஞ்சேரியில் உள்ள ஏரி பாசனக் கால்வாயை சில வசதி படைத்த விவசாயிகள் தூர்த்து சாகுபடி செய்து வருவதால் சிறு விவசாயிகள் பாதிக்கப் பெற்றுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப். தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

செங்கற்பட்டு மாவட்டம், உத்திரமேரூர் வட்டம் 260–ம் எண்ணுள்ள சாத்தினஞ்சேரி கிராமம் சாத்தினஞ்சேரி ஏரி பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ளது. அதன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு 608 ஏக்கர். மேற்கண்ட ஏரி அதனுடைய நீர் பிடிப்பு பரப்பிலிருந்து தண்ணீர் பெறுவதுடன் பாலாற்றிலிருந்து வரும் ஊற்றுக் கால்வாய் மூலமும் நீர் பெறுகிறது. கால்வாயின் நீளம் 4 00 கி.மீ., அகலம் 4.00 மீ. கால்வாய் சாதாரணமான நிலையில் உள்ளது. கால்வாயின் தண்ணீர் தற்போது ஏரிக்கு பாய்ந்து கொண்டு உள்ளது. கால்வாயின் எந்த இடத்திலும் ஆக்கிரமிப்பு இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. இரா. கருப்பையா. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சாத்தினஞ்சேரி ஏரியிலிருந்து தண்ணீர் வரக்கூடிய கால்வாயை அந்த கிராமத்திலே இருக்கக் கூடிய முன்னாள் நிலப்பிரபுக்கள், பெரிய வசதி படைத்தவர்கள், அதை அப்படியே அழித்து விட்டார்கள். அழித்ததன் காரணமாக அந்த பின் பகுதிக்கு தண்ணீர் செல்வது தடைபட்டு நிற்கிறது. ஆனால், இது சம்பந்தமாக எந்த ஆக்கிரமிப்பும் இல்லை, எதுவும் நடைபெறவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இந்த தண்ணீர் வருவதை தடைப்படுத்தி, அந்த கால்வாயே அழிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே, இது சம்பந்தமாக நேரிடையாக உயர் மட்ட அதிகாரிகளை அந்த இடத்திற்கு அனுப்பி, இது சம்பந்தமான விவரங்களை சேகரித்து, இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10).

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்த பிறகு அதைப்பற்றிய விவர அறிக்கை தகுந்த முறையில் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பப் படுகிறது. அந்த முறையில் தரப்படுகிற அந்த விவரங் களின் அடிப்படையில் பதில் அளிக்கப்படுகிறது. அந்தக் கால்வாயை மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டதாகச் சொல்கிறார்கள். அந்தக் கால்வாயில் இப்போது தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது



என்றால் அதிலே எந்த விதமான ஆக்கிரமிப்பும் இல்லை என்பது தான். அந்த அடிப்படையில் எந்தவிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் மேற் கொண்டு என்னால் பதில் அளிக்க முடியும்.

திரு. சோ. அழகர்சாமி: செங்கற்பட்டு மாவட்டம் உத்திர மேரூர் தாலுக்கா, சாத்தினஞ்சேரியில் உள்ள ஏரியில் 600 ஏக்கர் வரை ஆயக்கட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். அந்த ஏரியை ஒட்டி கரையை ஒட்டியுள்ள 100 ஏக்கர் விவசாயம் செய்யக்கூடிய பெரிய விவசாயிகள்—அந்த ஏரியில் அதிகமான தண்ணீர் நிரம்புவது கஷ்டம் என்று சொல்கிறார்கள், ஆகவே தண்ணீர் இல்லாத நேரங்களிலே—கிணறுகள் மூலமாக பாசனம் செய்கிறார்கள், அந்தக் கால்வாயைத் தூர்த்து தண்ணீர் மற்ற சிறு விவசாயிகளுக்குப் போகவிடாமல் பாசனம் செய் கிறார்கள். மற்றவர்களுக்கு தண்ணீரை காசுக்கு விற்கிறார்கள். இதனால் கீழே உள்ள சுமார் 400 விவசாயிகள் பாதிக்கப்பட்டி ருக்கிறார்கள். இப்போது அந்தக் கால்வாயை அடைத்து விட்டதன் காரணமாக தண்ணீர் போகவேயில்லை. அமைச்சர் அவர்கள் அந்த 600 ஏக்கருக்கும், கரையோரத்திலே உள்ளவர் களுக்குத்தவிர மீதியுள்ளவர்களுக்கும் தண்ணீர் கொடுக்கக்கூடிய முறையிலே அந்தக் கால்வாயை சீர்செய்து செப்பனிட்டு பாசன வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, ஒரு சிறு திருத்தம். 600 ஏக்கர் அல்ல 608 ஏக்கர். 608 ஏக்கரில் மேல்பகுதியில் உள்ள ஒரு சில நிலங்கள் பெரிய நிலச்சுவான் தார்கள் கையில் இருப்பதாகவும் அதிலே கிணறுகளை வெட்டி குளத்திற்கு செல்லவேண்டிய தண்ணீரையெல்லாம் தேக்கி வைத்துக்கொண்டு அதையும் சிறிய விவசாயிகளுக்கு விற்பனை செய்வதாகவும் சொன்னார்கள். இங்கே தரப்பட்டிருக்கிற அறிக் கையிலே ஏரிக்குரிய தண்ணீர் செல்வதாகத் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு விவரத்தைத் தந்திருக்கிறார்கள். அந்தவிவரம் உண்மைதானா சரிதானா என்று தெரிந்து கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்கள் வலியுறுத்தப்படுவார்கள். அவ்வாறு தெரிந்துகொண்டதற்குப் பிறகு அது உண்மையாக இருக்கு மானால் நிச்சயமாக ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியிலிருந்து விடப்படுகிற தண்ணீரைப் பொறுத்தவரையில் நாங்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய கவனஈர்ப்பு என்னவென்றால் மேலே இருக்கக்கூடிய அதிக நிலம் வைத்திருக்கிறவர்கள் தண்ணீரை எடுத்துக்கொள்கிற காரணத்தினாலே கீழே இருக்கிற சிறு விவசாயிகளுக்கு தண்ணீர் போய்ச் சேருவதில்லை என்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையில் இருந்து முறையான பதிலை அலுவலர்கள் அரசுக்கு அனுப்ப

வில்லை என்று தெரிகிறது. அதற்காக குழு அமைப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்கள். அப்படி ஒரு குழுவை அமைத்து சிறிய விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்வதன் மூலமாக இப்படிப்பட்ட முறைகேடுகள் மூலம் ஆக்கிரமிப்பு இல்லாதவாறு பார்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே விவரங்கள் தெரிந்து கொள்வதற்காக ஒரு குழுவை அமைப்பதாகச் சொல்லவில்லை. சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக தெரிந்து கொள்வோம் என்று சொல்லியிருக்கிறேன். ஒருக்கால் தரப்பட்ட தகவல் சரியான தகவலாக இல்லாமல் தவறாக இருக்குமானால் அதற்கு உள்நோக்கம் இருக்குமானால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: துணைத் தலைவரவர்களே, உத்திரமேரூர் தாலுகாவிலே உள்ள சாத்தினஞ்சேரி ஏரி சம்பந்தமாக சில வசதிபடைத்த நிலவுடமையாளர்கள் கால்வாய் வழியாகப் போய்க் கொண்டிருக்கிற தண்ணீரை ஆக்கிரமித்துக் கொண்டு சிறு விவசாயிகளுக்கு தண்ணீர் விடவில்லை என்று நாங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் அலுவலர்கள் தவறான தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக் காலமாக வசதிபடைத்தவர்கள் கால்வாய் வழியாகப் போய்க் கொண்டிருக்கிற தண்ணீரை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் சிறு விவசாயிகளுக்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியவில்லை. அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது தவறு. எனவே அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு சிறு விவசாயிகளுக்கு தண்ணீர் விடச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் இப்படிப்பட்ட விவர அறிக்கைகள் எல்லாம் சேகரிக்கிறபோது அமைச்சர்களே பாதிக்கப்பட்ட இடத்திற்கு போய் பார்த்து அறிக்கைகள் வெளியிடுவது இல்லை. தரப்பட்ட விவர அறிக்கை சரியானதா என்பதை ஒவ்வொரு முறையும் அமைச்சர்கள் போய் பார்த்து அந்த விவரங்கள் சரியானது என்று இங்கே பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படி சொன்னால் அரசு அலுவலர்களை நம்பித்தான் அரசு பணியாற்ற முடியும். அவ்வாறு பணியாற்றுவதால் அவர்கள் தரப்பட்ட அறிக்கையில் ஏதாவது தவறுகள் இருக்குமானால் அந்த தவறுக்கு உள்நோக்கம் இருக்குமானால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் முன்பே சொல்லியிருக்கிறேன். அதை மறுபடியும் வலியுறுத்துகிறேன்.



திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேரடியாகச் சென்று இந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறேன். அந்த அடிப்படையில் நான் சொல்கிறேன். அந்த பாலாற்றில் இருந்து வரக்கூடிய தண்ணீரை அங்கு இருக்கக்கூடிய வசதிப் படைத்த நில உடைமையாளர்கள் அதை எடுத்துக்கொள்கிறார்கள். இதில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறிப்பாக ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இது மட்டும் அல்ல, அந்த கிராமத்திற்கு சாலைகள் கூட கிடையாது. கடந்த 1 ஆண்டு காலமாக பல்வேறு கால கட்டங்களில் காஞ்சிபுரம் கலெக்டரிடம் போய் முறையிட்டு இருக்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய எழிலகம் முன்னால் மாண்புமிகு அமைச்சரையும் முதலமைச்சரையும் சந்தித்துப் பார்க்கவேண்டும் என்று 500-க்கும் மேற்பட்ட விவசாய தொழிலாளர்கள் இங்கே ஊர்வலமாக வந்தார்கள். அப்படி தொடர்ந்து அந்த கிராமங்களுக்கு பாதை வசதிக்கும், நீர்ப்பாசன வசதிக்கும் அந்த மக்கள் பல்வேறு வகையில் போராடி வந்து இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக செல்ல வேண்டும் என்று நான் கேட்கவில்லை. நாங்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினையை தீர்ப்பதற்கு உடனடியாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து துரிதமாக அந்த மக்களுடைய குறைகளைப் போக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராமத்தில் வசிப்பவர்கள் பெரும்பாலும் ஆதி திராவிட குடியினர் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆதி திராவிடர்கள் உட்பட அனைத்து கிராமங்களுக்கும் உரிய சாலை வசதி மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தரவேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய திட்டமாகும். அந்த திட்டத்தின் அடிப்படையில் தான் தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக பல்வேறு பணிகள் இன்று தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்து இருக்கின்றன. அதேபோல் நான் நேரிடையாகப் போய்ப் பார்த்து-அங்கே ஆக்கிரமிப்பு கால்வாயில் செய்யப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இருக்கக்கூடிய மிகப் பெரிய சந்தேகம் எல்லாம் பாலாற்றில் இருந்து வருகின்ற கால்வாய் என்று சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக பாலாற்றில் இருந்து தண்ணீர் விடவில்லை. ஊற்றுக் கால்வாய்தான் இங்கே இருக்கிறது. அந்த ஊற்றுக் கால்வாயில் உண்மையிலேயே ஆக்கிரமிப்பு இருக்கிறதா? அவர்கள் சொல்கின்ற கால்வாயும், நான் சொல்கின்ற கால்வாயும் ஒன்றா என்பதற்கு விவரம் என்னிடமும் இல்லை, அவர்களிடமும் இல்லை. அந்த வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தான் நாம் நம்பவேண்டியிருக்கிறது. அவர்கள் தருகின்ற அறிக்கையில் ஏதாவது தவறுகள் இருக்குமானால், நிச்சயமாக அதற்கு வேண்டும் என்று ஏதாவது

[திரு. யா. சை. மு. யூசுப்] [1984 ஏப்ரல் 17

உள்நோக்க அர்த்தத்தோடு செய்து இருப்பார்களானால் நிச்சய மாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும், உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு இந்த கால்வாய் தூர் எடுக்கப்பட்டு சம்பந்தப் பட்ட விவசாயிகளுக்கு சிறு விவசாயிகளுக்கு உரிய பாசன வசதி செய்து தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

5. வரவு-செலவுத் திட்டம் 1984-85—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 18—மருத்துவம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 99,31,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

Thiru N. S. V. CHITHAN. Sir, To discuss the need to open medical centres at all residential areas in Madras City and Municipal towns and to avoid the rush at headquarters hospitals, I move;

That the allotment of Rs. 99,31,08,000 under Demand No. 18—Medical be reduced by Rs. 100.

(முற்பகல் 11.20)

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் இடம் நெருக்கடியாய் உள்ளதை மாற்றி மருத்துவமனைக்கு புதிய கட்டிடங்கள் கட்டித் தரவேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 99,31,08,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: : தலைவரவர்களே, யதுப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவதன் மூலம் தற்பொழுது நடைபெறும் முறைகேடுகளை களைவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 99,31,08,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



1984 ஏப்ரல் 17]

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் படுக்கை வசதிகள் அதிகப் படுத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,31,08,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 164,33,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

Thiru N. S. V. CHITTAN: Mr. Deputy Speaker, Sir, To discuss the need to provide basic education on Public Health to students at elementary class level and the need to conduet exhibition periodically at all villages, I move;

"That the allotment of Rs. 164,33,88,000 under demand No 19—Public Health be reduced by Rs. 100.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொம்மி குப்பம் என்னுமிடத்தில் புதிய சுகாதார நிலையம் ஆரம்பிக்கப் படவேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 164,33,88,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கிராமங்களில் அடிப் படை சுகாதார நிலையங்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாம லிருப்பதும், அந்த நிலையங்களில் இரவு காலத்திலும் தொடர்ந்து டாக்டர்கள் பணியாற்றிவர உத்தரவாதமில்லாமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 164,33,88,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, பெருந்துறை தொகுதியில் உள்ள தாய் சேய் நல விடுதிகள் அனைத்திற்கும் செவிலியர்கள் நியமனம் செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 164,33,88,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக் கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான—என்னுடைய மற்றும் சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சருடைய—கொள்கை விளக்கக் குறிப்புகள் ** அச்சிடப்பட்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் இந்த மன்றத்தில் நாங்கள் பேசியதாகக் கருதி குறிப்பிலே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இந்தக் குறிப்பேட்டிலே வைத்தி ருக்கும், இந்த நூல்களிலே வைத்திருக்கும் குறிப்புகளைப் பொறுத்த வரையில் ஒரேயொரு கருத்தை இங்கே முன்னுரை யாகச் சொல்ல விரும்புகிறேன்.

1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆல்மேட்டா என்ற இரஷ்ய நாட்டில், கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். By 2000 A. D. Health for all. என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்திற்குப் பல நாடுகள் கையெழுத்துப் போட்டு, அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்றுக் கொண்டிருக்கும் நாடுகளில் இந்திய நாடு கூட ஒரு நாடாக இருக்கிறது. எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், இதுதான் மிக முக்கியமான தத்துவமாக, இந்த முக்கியமான குறிக்கோளை அடைய நம் நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களின் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்த துறைகளெல்லாம் அதற்காகப் பணியாற்றிக்கொண்டு வருவோம், வந்து கொண்டிருக்கின்றது என்பதை வலியுறுத்த இதைச் சொல்கிறேன்.

---

** 112–219ம் பக்கங்களில் இணைப்பு I, II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



கி. பி. 2000-க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்றால், அதற்கு என்ன அளவுகோல் என்ற பிரச்னை எழுப்பப்பட்டது. அந்தப் பிரச்னை எழுப்பப்பட்ட நேரத்தில், What is the yardstick by which we can ensure that these countries have obtained "Alma health for all by 2,000 A.D.'' என்கிற பிரச்னை வந்த நேரத்தில், அப்பொழுது நான்கு குறிக்கோள்களை அங்கே வைத்திருந் தார்கள். மத்திய அரசாங்கத்திற்கு, நம்முடைய இந்திய அரசாங்கத்திற்கு, டபிள்யூ. எச். ஓ.,—உலக சுகாதார நிறுவனம் நான்கு குறிப்புகளைக் கொடுத்தார்கள். நான்கு இலக்கினைக் கொடுத்தார்கள். முதலாவதாக என்ன சொன்னார்கள் என்றால் நம்முடைய பிறப்பு விகிதாச்சாரத்தைப் பொறுத்த வரையில் கி.பி.2000 க்குள்ளாக ஆயிரத்திற்கு 21 பேர் என்ற வகையிலே குறைக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். இது ஒரு குறிக்கோள். அடுத்தபடியாக கி.பி. 2000.க்குள்ளாக டெத் ரேட்டை 9 ஆகக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல் இன்ஃபன்ட் மார்ட்டலிட்டி ரேட் என்பதைப் பொறுத்தவரையில் ஆயிரத்திற்கு 60 ஆகக் குறைக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான்காவதாக பாப்புலேஷன் எஸ்க லேஷன் என்புதைப் பொறுத்தவரையில் அதாவது ஆண்டுதோறும் நம்முடைய ஜனத்தொகைப் பெருக்கத்தைப் பொறுத்தவரையில் 1.1 சதவீதமாகக் குறைககவேண்டும் என்று சொன்னார்கள். ஆக ஒட்டுமொத்தமாக பிறப்பு விகிதாச்சாரம் 21 ஆகவும், இறப்பு விகிதாச்சாரம் 9-ஆகவும் அதே மாதிரி குழந்தைகளின் இறப்பு விகிதாச்சாரம் ஆயிரத்திற்கு 60 ஆகவும், பாப்புலேஷன் க்ரோத் 1.1 ஆகவும் ஆக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த ஒரு நல்ல மகிழ்ச்சிகரமான புள்ளிவிவரத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் குறித்து வைத்துப் பார்க்கவேண்டும் என்பதற் காகத்தான் சொல்கிறேன்.

இந்த நான்கு குறிக்கோள்களில் இரண்டு குறிக்கோள்களை 1985 ஆம் ஆண்டுக்குள்ளாகவே நாம் எட்டிவிட முடியும். டெத் ரேட்டைப் பொறுத்தவரையில் 9 ஆகக் குறைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதனை 1985 ஆம் ஆண்டுக் குள்ளாகவே எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. காரணம் என்னவென்றால் 1983 ஆம் ஆண்டிலேயே 10-க்கும் குறைவாக ஆக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அகில இந்திய சராசரியே 13 ஆகத்தான் இருக்கின்றது. இறப்பு விகிதாச்சாரத்தைப் பொறுத்த வரையில் We have brought it to less than 10 by 1983 end. ஆகவே இந்த ஒன்றரை ஆண்டுகளுக் குள்ளாக நாம் அதனை 9 ஆகக் குறைத்து விட முடியும். ஆக, கி.பி.2000 க்குள்ளாகத்தான் அதைக் கொண்டு வரவேண்டும் என்றாலும் அதனை 1985 ஆம் ஆண்டுக்குள்ளேயே நாம் எட்டி விடுவோம்.

இன்ஃபன்ட் மார்ட்டாலிட்டி ரேட் என்பதைப் பொறுத்த வரையில் அகில இந்திய சராசரியே ஆயிரத்திற்கு 115 ஆகத்தான் இருக்கின்றது. சில இடங்களில் இன்னும் ஜாஸ்தியாக இருக்கின்றது. ஆனால் அதை நாம் 77.2 ஆக 1982-ஆம் ஆண்டிலேயே கொண்டு வந்துவிட்டோம். ஆனால் அவர்கள் 60-ஆகத்தான் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அந்தப் புள்ளி விவரத்தையும் நாம் 1985-ஆம் ஆண்டுக்குள்ளாக, 1985-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக 60 ஆகக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

மற்ற இரண்டு புள்ளிவிவரங்களைப் பொறுத்த வரையில் பர்த் ரேட் என்பதை 21-ஆகக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அதே மாதிரியாக பாப்புலேஷன் க்ரோத் என்பதை 1.1 ஆகக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த இரண்டு புள்ளி விவரங்களும் 1990-ஆம் ஆண்டிலேயே அதாவது அவர்கள் குறிப்பிட்ட கி.பி. 2000-க்கு பத்து வருடங்கள் முன்பாகவே கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையிலே நாம் செயல்பட்டு வருகிறோம். ஆகவே இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்கள் எல்லாம் They are all oriented towards this particular objective of attaining health for all not by 2,000 A.D. as envisaged by the WHO but much earliar i.e. 15 years earliar as for as two statistics are concerned, As far as the other two are concerned before 1990. அந்த அளவுக்குத் தமிழகம் மற்ற எல்லா மாநிலங்களையும் விட முன்னேறி இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியாகத் தெரிவித்துக் கொண்டு மற்ற கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதற்குப் பிறகு அதற்குச் சரியான வகையிலே பதிலளிப்பதுதான் சரியாக இருக்கும் என்று சொல்லி இந்த அளவுக்கு என்னுடைய முன்னுரையை நான் முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984-85-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் 18, 19 சுற்றுப்புற சூழ்நிலை ஆகியவற்றின் மீது நான் இந்த விவாதத்திலே பங்கு கொள்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாகவும், தனிப்பட்ட முறையிலே தமிழ்நாட்டிலே சென்னை மாநகரத்திலே கடந்த 30 ஆண்டு காலமாக மருத்துவனாகப் பணியாற்றுகிறேன் என்ற வகையில் அந்த ஒரு அனுபவத்தின் காரணமாகவும் நான் சில கருத்துக்களை இங்கே சொல்ல முன்வருகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்; நோய்க்கு இடம் கொடேல்; கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக் குடி; சுத்தம் சோறு போடும். Cleanliness is next to Godliness. என்றெல்லாம் இப்போதல்ல—பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே





கூறப்பட்ட பழமொழிகள், தமிழ்நாட்டில் வாழ்கின்ற மக்கள் மருத்துவத்திற்கும், சுகாதாரத்திற்கும் எவ்வளவு முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதற்கு சான்றாக இருக்கின்றன.

(முற்பகல் 11-30.)

அமைச்சர் அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள் சோவியத் நாட்டிலே நடந்த உலக சுகாதாரக் கழகத்தினுடைய குறிக்கோள்கள் எல்லோருக்கும் நல்வாழ்வு, ஆரோக்கியமான வாழ்வு, கி.பி. 2,000 ஆண்டிலே நமக்குக் கிடைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் எல்லா நாடுகளும் அந்த உடன்படிக்கையிலே கையெழுத்திட்டு, நம்முடைய இந்திய நாடும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்த இலக்கை நாம் அடைய முடியுமா என்பது என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் எவ்வளவு புள்ளி விவரங்கள் கொடுத்தாலும் சாத்தியக்கூறு இல்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே சொல்லிக் காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், ஆரோக்கியமான வாழ்வு என்று ஒரு புறத்திலே இருந்த போதிலும் அதைவிட மிக முக்கியமான மெடிகேர் ஃபார் ஆல் இந்த நாட்டிலே, இந்த உலகத்திலே உள்ள சாதாரண ஒரு மனிதனுக்குக்கூட, இந்த உலகத்திலே உள்ள உயர்ந்த விஞ்ஞான முறையின் அடிப்படையிலே வைத்தியம் செய்கிறார்களே, அந்த விஞ்ஞான அடிப்படையிலே வளர்ந்து கொண்டிருக்கிற விஞ்ஞான அறிவு சாதாரணமான ஒரு மனிதனுக்குப் பயன்படுகிறதா, கிராமத்திலே உள்ள ஒருவனுக்குக் கிடைக்கிறதா என்பதைப் பார்த்து அந்த இலக்கை நாம் அடைந்து விட்டாலே போதும் என்ற அந்த எண்ணம்தான் இந்த நேரத்திலே எனக்கு உதவுகிறது. அதையொட்டி எனக்குச் சில கருத்துக்கள் நினைவிற்கு வருகின்றன. சோவியத் நாட்டிலே—உலகத்திலே பொதுவுடைமைப் பூங்கா என்று எல்லோராலும் புகழப்படுகிற அந்த நாட்டிலே மாமேதை லெனின் அவர்கள் ஒரு காலத்தில் அதிபராக இருந்தபொழுது நோய்வாய்ப்பட்டிருந்தாராம். அவருக்கு அங்கே மருத்துவம் பார்த்த வைத்தியர்கள் எல்லோரும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலே புதிய விஞ்ஞான முறையிலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு மருந்தைக் கொடுக்க வேண்டும். அதை விட்டால் வேறு வழியில்லை. அந்த அதிபர் பிழைக்க முடியாது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் மாமேதை லெனின் அவர்கள் அப்பொழுது, இந்த மருந்தை அயல் நாட்டிலிருந்து ஏராளமான பணம் செலவழித்து வருவித்து நான் பிழைக்க வேண்டுமென்று சொன்னால் அது எனக்குத் தேவையில்லை. அந்த மருந்து இந்த சோவியத் நாட்டிலே உள்ள சாதாரண கிராமத்திலே, குக்கிராமத்திலே வாழ்கின்ற ஒரு மனிதனுக்கு அவன் நோய்வாய்ப்படுகின்ற பொழுது கிடைக்குமானால் நான் ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னார்கள். ஆனால் நடந்த விஷயம் வேறு. அவர்கள் மருந்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். அங்கே வைத்தியன் அவருடைய துணைவியாரிடத்திலே மறைமுகமாக ரொட்டியிலே மருந்தைக் கொடுத்ததாகவும் அவர் மருந்து கொடுக்கப்பட்டு பிழைத்தபொழுது

யார் இதை மீறினார்கள் என்று கேட்டபொழுது, உங்களுடைய துணைவியார் என்று பதில் சொன்னபொழுது, ஜனாதிபதி அவருடைய கட்டளையை மீறிய துணைவியாருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டுமென்று சொன்னபொழுது, அந்த நீதிமன்றம் ஜனாதிபதி கட்டளையை மீறியதற்காக மரண தண்டனை; ஆனால் இந்த நாட்டின் ஜனாதிபதியினுடைய உயிரைக் காப்பாற்றியதற்காக மரண தண்டனையை ரத்து செய்ததாக ஒரு வரலாறு இருக்கிறது.

அதைப் போல் நம்முடைய பாரதத் திருநாட்டில் அண்ணல் காந்தி அடிகள் அவருடைய துணைவியாராகிய கஸ்தூரி பாய் அம்மையார் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில், அயல் நாட்டிலிருந்து மருந்து வரவழைத்துக் கொடுத்து, கஸ்தூரி பாய் அம்மையாரைப் பிழைக்க வைக்க முடியும், அதற்காக உடனடியாக மருந்தை அமெரிக்காவிலிருந்தோ, இங்கிலாந்திலிருந்தோ வரவழைத்துக் கொள்ள முடியும் என்று சொன்ன பொழுதுகூட, காந்தி அவர்கள் சொன்னார்கள், இந்த நாட்டிலே சாதாரணமானவர்களுக்கு இந்த மருந்து கிடைக்கவில்லையென்று சொன்னால், காந்தியின் துணைவியார் என்ற காரணத்திற்காக அவள் பிழைக்க வேண்டியது அவசியம் இல்லை என்றார். அப்படிப்பட்ட மருத்துவ வரலாறு நம்முடைய பாரதத்தினுடைய வரலாறு.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதே நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் என்னிடத்திலே ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். இராயப்பேட்டை மருத்துவமனையிலே சிறுநீரக மாற்று சிகிச்சைப் பிரிவு ஒன்று புதிதாக திறந்து வைக்கும் வாய்ப்பு நம்முடைய தமிழகத்தினுடை முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைத்தது. அந்த நேரத்திலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டார்களாம், இந்த சிகிச்சைக்கு எவ்வளவு செலவாகும் என்று. சிறுநீரகத்தை மாற்றுகின்ற அறுவை சிகிச்சைக்கு சுமார் ரூ. 40,000 ஆகும் என்று சொன்னாராம். இது இனாமாக கொடுக்கப்படுகிறதா என்று முதல்வர் அவர்கள் கேட்டார்களாம். ஆமாம், இனாமாகத்தான் தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களாம். இது அமைச்சர் அவர்கள் எனக்குக் கொடுத்த தகவல். இதை எதற்காக இந்த நேரத்திலே சொல்கிறேன் என்றால், அப்படிப்பட்ட உணர்வுகள் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது. ரூ. 40,000 செலவழித்து ஒரு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யக்கூடிய அளவு இந்தத் தமிழகத்திலே உள்ள சாதாரண மனிதனுக்குக்கூட அந்த வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்ற உணர்வு இருக்கிறதே என்று டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்லி அதைத் தெரிந்து அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்தபடியாக பத்திரிக்கையிலே நீங்கள் பார்த்து இருப்பீர்கள். கடந்த 20 ஆம் தேதி இந்த நாட்டினுடைய ஜனாதிபதி ஜெயில்சிங் அவர்கள் பெங்களூரில் உள்ள ஜெயதேவா இன்ஸ்டிடியூட் ஆப் கார்டியலாஜி என்ற இதய சிகிச்சை ஆஸ்பத்திரியை திறந்து வைத்து பேசுகிறபோது ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த நாட்டிலே 70 சதவீதம் மக்கள் கிராமப் புறங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு விஞ்ஞானத்தின் அடிப்படையிலே வளர்ந்துள்ள நம்முடைய அறிவும், ஆற்றலும் போய் சேர்கிறதா என்றால் சேரவில்லை. என்று வருத்தத்தோடு சொல்லி இருக்கிறார்கள். அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரத்திலும், இங்கிலாந்து நாட்டில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியிலும், 'ஓப்பன் ஹார்ட் சர்ஜரி' என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அதுபோல இதயத்தைத் திறந்து அப்போதே அறுவை சிகிச்சை செய்து முடிக்கும் ஒரு பிரிவு அண்மையில் மதுரையில் ஆரம்பிக்கப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது கொள்கைக் குறிப்பிலேயும் சொல்லி இருக்கிறார்கள். அதில் 100 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தால் 10 பேர்கள் இறந்து விடுவார்கள். ஆனால் ஹூஸ்டன் நகரில் உள்ள ஆஸ்பத்திரியிலும், இங்கிலாந்து நகரிலுள்ள ஆஸ்பத்திரியிலும் நூறு பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்தால் ஒரே ஒருவர்தான் இறப்பார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய ஜனாதிபதி அவர்கள் கூட அங்கே சென்று சிகிச்சை செய்து கொண்டதாக சொல்லியிருக்கிறார்கள். அதேபோல இந்தநாட்டிலேஉள்ள அவசியமான, அவசரமான உயிர் காக்கும் மருந்துகள் தேவையென்றால் அவைகளை உடனடியாக தருவிக்க வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் கொள்கைகள் எப்படி இருந்தாலும் வகை செய்யப்பட வேண்டுமென்ற கருத்தையும் ஜனாதிபதி ஜெயில்சிங் அவர்கள் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் சில புள்ளி விவரங்களைச் சொல்லி இருக்கிறார்கள். ரூரல் ஏரியாவில் சாவு விகிதாச்சாரம் 11.7; ஆனால் அர்பன் ஏரியாவில் 1/3 பாப்புலேஷன் வாழ்கிற இடத்தில் சாவு விகிதாச்சாரம் 7.1; ஆகவே நகர்ப்புறங்களில் வாழ்கிற 1,000 பேர்களில் ஏழு பேர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் வாழ்கிற 1,000 பேர்களில் கிட்டத்தட்ட 12 பேர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் 'இன்பண்ட் மார்ட்டாலிட்டி'. அதாவது குழந்தைகள் பிறப்பு விகிதாச்சாரம் கிராமப் புறங்களில் 1,000-க்கு 89.5 சதவீதம்; ஆனால் நகர்ப்புறங்களில் 52.2; அதைப்போல குழந்தைகள் இறப்பு விகிதாச்சாரம் நகர்ப்புறங்களில் 24.9; கிராமப் புறங்களில் 27.1. பிறப்பு விகிதத்தைப் பார்க்கிற போது பேமிலி பிளானிங் அதாவது குடும்பக் கட்டுப்பாடு குறித்த பிரச்சாரங்கள் கிராமப் புறங்களுக்கு இன்னும் சென்று எட்டவில்லை என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இவைகளை எல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால்

Whether there is health for all by 2000 A. D. or not let us atleast aim at having medical care for all irrespective of whether he is an urban man or a village man by 2000 A.D.

நம்முடைய லட்சியங்கள் பற்றி புள்ளி விவரங்கள் ஒன்றைச் சொல்லலாம். ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது இந்த நாட்டிலே, இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் இந்த நாட்டிலே உள்ள மிகச் சிறந்த விஞ்ஞான முறைகள் தத்துவங்கள் ஆராய்ச்சிகள் மூலமாகக் கிடைக்கக்கூடிய அத்தனை சலுகைகளும் கிடைக்க வேண்டும் என்பதை நம்முடைய குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென்று நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களையும் அரசையும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மருத்துவம் என்று சொன்னால் மருத்துவக் கல்வியைத்தான் மிக முக்கியமான ஒன்றாகக் கருத வேண்டியுள்ளது. மருத்துவக் கல்வி என்று சொல்கிறபோது நம்முடைய தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் ஆயிரம் பேர்களும், மருத்துவ முதுநிலைப் பட்டதாரிகள் 979 பேர்களும் உருவாக்கப்படுவதாகக் குறிப்பிட்டு உள்ளார்கள். குறைந்தது 50 சதவீதம் தேறுவார்கள் என்று சொன்னாலும்கூட 400 ஸ்பெஷலிஸ்ட்ஸ் அல்லது போஸ்ட் கிரஜுவேட்ஸ் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்பட்டு மக்களிடத்திலே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவைகளை சிந்தித்துப் பார்க்கிறபோது வந்து கொண்டிருக்கிற அல்லது உருவாக்கப்படுகிற அந்த டாக்டர்கள் எந்த அளவிற்கு மக்களுடைய தேவைகளை மனதிலே வைத்துக் கொண்டு அவைகளை பூர்த்தி செய்ய தகுதி படைத்தவர்களாக இருப்பார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-40.)

நம்முடைய மருத்துவக் கல்வி முறையை ஆங்கில முறை மருத்துவத்தை ஒட்டித்தான் நாம் உருவாக்கியிருக்கிறோம். அந்த ஆங்கிலமுறை மருத்துவம் பிரிட்டனில் உருவாக்கப்பட்ட மருத்துவம். அங்கே அந்த மருத்துவக் கல்வி என்று சொல்கிற போது அவ்வப்போது அந்த அரசாங்கம்-பிரிட்டிஷ் அரசாங்கம் பலமுறை அந்த மருத்துவக் கல்லூரியை அல்லது மருத்துவக் கல்வியை to suit the needs of the people என்ற வகையில், மக்களின் தேவைக்கு ஏற்றவாறு அதன் தரம் குறையாத அளவிற்கு மாற்றிமாற்றி அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. 1942-44-ஆம் ஆண்டிலே அங்கே Goodenough Committe வெள்ளைக்காரர்களால் போடப்பட்டது. பிறகு, 1968-லே Todd Committee என்று அங்கே குழுவை அமைத்து ரிவ்யூசெய்தார்கள். பிறகுகடைசியில் அவர்கள் 1968-லே Royal Commission on medical education என்று சொல்லி ஒரு சட்டத்தையே வெள்ளைக்காரர்கள் ஆங்கில நாட்டில் உருவாக்கியிருக்கிறார்கள்.



இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த மருத்துவக் கல்வி என்பது மாறுபடுகின்ற, வளர்ந்து வருகின்ற, முன்னேறி வருகின்ற சமுதாயத்திற்கு ஏற்றவகையில், அந்த கல்வியைப் பயிலும் டாக்டர்களை உருவாக்கும் பொறுப்பு இங்கேயுள்ள அரசாங்கத்திற்கும், இங்கேயுள்ள மருத்துவத்துறை அதிகாரிகளுக்கும் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

காரணம் என்னவென்று சொன்னால், Medical education is partly an University education and partly vocational. அதாவது கல்வி பெற்றுக் கொண்டு இருக்கிற நேரத்திலே அதற்கான நடைமுறையிலே அந்தக் கல்வியை அமல்படுத்தும் அளவிற்கு பயிற்சியையும் எடுத்துக்கொள்ளும் ஒரு தரமான கல்வியாகும் என்பதை இந்த நேரத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதே நேரத்தில் அந்த மருத்துவக் கல்விக்குத் தேர்வு செய்யப் படுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அங்கே நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

Criteria for the selection of the medical students was considered in some detail.

அதாவது மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு எப்படிப்பட்ட மாணவர்கள் சேர்க்க வேண்டும் என்பதைப் பற்றியும் அங்கே, ஆங்கில நாட்டிலே, ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள்.

Academic ability and powers of concentration to survive a long and demanding couise and to pass the qualifying examination is an essential requirement.

அதாவது கடினமான உழைப்பு, மிகவும் கருத்தாழத்துடனும் கவனத்துடனும், படிக்க வேண்டிய ஒரு மிகப் பெரிய துறையாகும். அதற்கு நல்ல வகையில் படிப்பவர்களாகவும், நல்ல மார்க்குகளை வாங்கும் திறமை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

Other personal qualities looked for such as well rounded personalities with a wide range of interests were looked for ........

அதாவது, அது மாத்திரம் இருந்தால் போதாது. நல்ல திடகாத்திரத்துடனும் கூட உடல் வேண்டும். பல மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அளவிற்குச் சிந்தனை இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

Strong and long standing motivation for a career in medicine was considered important.

ஆதாவது, நான் டாக்டர் ஆகியே தீரவேண்டும், அது என்னுடைய வாழ்க்கை லட்சியம், குறிக்கோள், இந்தச் சமுதாயத்திற்குச் சேவை செய்ய என்னை அர்ப்பணித்துக் கொள்கிறேன் என்று அந்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு பிடிப்பும், லட்சியமும் இருக்க வேண்டும் என்று பல விஷயங்களை எடுத்துரைத்து. அந்த அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதற்கு இந்த ரிப்போர்ட் மூலமாக ஆங்கில நாட்டிலே உருவாக்கியிருக்கிறார்கள் என்ற செய்தியை "A review and Discussion by Max Elstein" நான் படித்து அறிந்து கொண்டேன். இவைகளையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அண்மையில் இந்த மருத்துவக் கல்லூரித் தேர்வு விவகாரம் பற்றி எனக்குப் பின்னால் பலர் பேச இருக்கிறார்கள். குறிப்பாக எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிலே ஏதோ பெரிய ஊழல் நடந்து விட்டதாக முறைகேடுகள் நடந்து விட்டதாக, மிகப் பெரிய தவறுகள் நடந்துவிட்டதாக எடுத்துச் சொல்வார்கள். என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், நான் என்ன நினைக்கிறேன். எங்களுடைய இயக்கம் என்ன நினைக்கிறது என்பதை நான்இங்கே தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மருத்துவக் கல்லூரித் தேர்வில் தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொல்லி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடினார்கள். வழக்காடியது தனிப்பட்ட ஒரு நீதிபதியிடம் அல்ல. It is a Division Bench. ஏனென்றால் தனிப்பட்ட நீதிபதி அல்லது கமிஷன் போட்டால் எதிர்க்கட்சியில் உள்ள நாமெல்லாம் ஊழல் நடந்துவிட்டது என்று சொல்வோம், ஊழல் செய்து விட்டார்கள் என்று சொல்வோம்; குற்றச்சாட்டுக்கள் சொல்வோம். ஆனால்,

The verdict has been given by a Division Bench of the Madras High Court consisting of Mr. Justice S. Natarajan and Mr. Justice K. Venkataswami.

என்ன குற்றச்சாட்டுகள், கிறிஸ்தவ நாடார்களை சாணார் பட்டியலில் சேர்த்துவிட்டதால் எங்களுடைய வாய்ப்புக்களை இழந்துவிட்டோம் என்று குற்றச்சாட்டுச் சொல்லியிருக்கிறார்கள். எந்த நேரத்தில் வேண்டுமென்னாலும் யாரை வேண்டுமானாலும் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் பிற்பட்டவர்கள் என்று சொல்லி அறிவிக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி அந்தக் குற்றச்சாட்டை மறுத்து விட்டார்கள்.



அடுத்தபடியாக இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். பென்சிலில் மார்க் போட்டுவிட்டு, பின்னால் இங்கில் திருத்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பெஞ்சிலே இருந்த அந்த நீதிபதிகள் அதற்கு தீர்ப்புச் சொல்கிறார்கள்.

The bench said that they were unable to accept the sweeping contention that the interviews were done in a haphazard manner and that the award of marks had no relation to the performance of the candidates. Their lordships rejected the contention that there was arbitrary award of marks at the interview.

அதாவது எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இங்கே வழக்குத் தொடர்ந்திருக்கிறீர்கள். வேண்டுமென்றே பல குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறீர்கள். அரசாங்கம் சரியான முறையில், நேர்மையான முறையில் தான் இந்த நேர்முகத் தேர்வை நடத்தியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

We do not find any material in the allegations made by one of the candidates that large sums of money were collected for the nutritious noon meal scheme from some of the candidates and in return they were provided seats in the medical colleges.

இவைகளையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் எதிர்க் கட்சியிலே உட்கார்ந்து கொண்டு அரசாங்கம் என்ன செய்தாலும் குறை சொல்ல வேண்டும் அல்லது குற்றம் சொல்ல வேண்டுமென்று இல்லாமல் நேர்மையாகச் செயல்பட வேண்டும், நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிற தீர்ப்பு என்ன வென்றால் இந்த மருத்துவக் கல்லூரி தேர்வு முறையிலே நேர்மையாகத் தேர்வு நடைபெற்றிருக்கிறது, எந்தவிதமான ஊழலும் நடக்கவில்லை என்று தனிப்பட்ட ஒரு நீதிபதி அல்ல,

The Division Bench of the Madras High Court has given a certificate.

அந்த முறையிலே இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆனாலும் அங்கே என்ன சொல்லியிருக்கிறார்கள்? 86 பேர்களுக்கு இடம் கொடுத்தே தீரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

We are directing provision of medical seats for 86 candidates.

86 பேர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

The Bench held that among the 140 candidates referred to the Experts Committee for revised assessment 86 candidates alone had been found entitled to higher marks at the interview enabling them to reach the cut off mark level.

அதுவும் 'கட் ஆஃப் மார்க் லெவலில். மீண்டும் ஒருமுறை எக்ஸ்பர்ட் கமிட்டி அவர்களுடைய கேள்வியையும் பதிலையும் பார்த்து, விடைத்தாளை சரிபார்த்து, அதிலே 86 பேர்களுக்கு தகுதி இருக்கிறது என்று ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 86 பேர்களையும் மருத்துவக் கல்லூரியில் சேர்க்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

I am very sorry to say that the learned Judge of the Madras High Court has erred in his conclusion.

அவர்கள் கூட இதிலே தவறான முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்று நான் இந்த அவையில் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காரணம் என்றவென்றால், இந்த மருத்துவக் கல்லூரியில் நடைபெறுகின்ற தேர்வுகள் எப்படி நடைபெறுகின்றன என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கிறது. பொதுமக்களுக்கு நிச்சயமாகத் தெரியாது. அதுபற்றி இந்த சட்டமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பயாலஜி, மாக்ஸ ஆகிய4 சப்ஜெக்ட்ஸ் படித்தவர்களும் பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பாட்டனி, ஜுவாலஜி ஆகிய 4 சப்ஜெட்ஸ் படித்தவர்களும் மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். அவர்கள் படித்த நான்கு பாடங்களில் மார்க்குகளையும் அதாவது, பிசிக்ஸ, கெமிஸ்ட்ரி, பயாலஜி, மாத்ஸ் ஆகிய பாடங்களில் வாங்கிய மார்க்குகளை 200 மார்க்குகளுக்கு ரெடியூஸ் செய்கிறார்கள். அதேபோன்று பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பாட்டனி, ஜுவாலஜி ஆகிய நான்கு பாடங்களில் வாங்கிய மார்க்குகளையும் 200 மார்க்குகளுக்கு ரெடியூஸ் செய்கிறார்கள். அதன்பிறகு நேர்முகத் தேர்வுக்கு என்று 30 மார்க்குகள் கொடுக்கிறார்கள். உலகத்தில் உள்ள எல்லா பேராசிரியர்களும், எல்லா பல்கலைக் கழகங்களும் ஒத்துக்கொண்டது என்ன வென்றால் ஒருவர் ஒரு விடைத்தாளை திருத்துகின்றபோது, பல கருத்துக்களை வைத்து, ஒரு வழியாகத் திருத்துவார்.

(முற்பகல் 11-50)

ஆனால் அதே விடைத்தாளை இன்னொரு பேராசிரியரிடம் கொடுத்தால், அவர்கள் அதை வேறு விதியால் திருத்து வார்கள். Percentage of difference இந்த இரண்டு பேராசிரியர்களும், கொடுக்கின்ற மதிப்பெண்கள்



it never exceeds more than 10 percent. அதாவது 10 சத வீதத்திற்கு இந்த இரண்டு பேராசிரியர்களும் ஒரே விடைத்தாளை திருத்துவார்களேயானால், 100-க்கு 10 மார்க்கு வரையில் அங்கே பாரபட்சம் என்ற முறையில் திருத்துகின்ற வாய்ப்பு இருக்கிறது. இது உலகத்திலுள்ள எல்லாப் பேராசிரியர்களும், பல்கலைக்கழகங்களும் ஒத்துக்கொண்டிருக்கின்ற ஒரு உண்மை. ஆகவே 200 என்று சொல்லும்போது, 180-க்கு மேல் வாங்கிய ஒரு மாணாக்கன், அவனுடைய அதிர்ஷ்டம் அவனுடைய விடைத்தாள் ஒரு பேராசிரியரிடம் போய் இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் துரதிருஷ்டம் பிடித்த ஒரு மாணவனுடைய விடைத்தாள் கடினமாக திருத்துகின்ற ஒரு பேராசிரியரிடம் போய் இருந்தால், 10 per cent differentiation அதாவது 20 மார்க்குகளுக்குக் குறைவாக வாங்கியிருக்கலாம். ஆனால், திறமையிலும், கல்வியிலும், தேர்ச்சியிலும், உழைப்பிலும் மிகுந்த ஒரு மாணவன் இந்த 10 சதவீதம் அங்கே இங்கே மாறுபடக்கூடிய சூழ்நிலையில், 180 மார்க் வாங்கிய மாணாக்கனும் 160 வாங்கியவனுக்கு சமமாக இருக்கலாம். 160 மார்க்கு வாங்கிய மாணவனும் 180 வாங்கியவனுக்குக் குறைந்தவன் அல்ல என்ற உணர்வு இருக்க வேண்டும். ஆகவே இவைகளை சரிக்கட்டுவதற்கு, 10 பர்சன்ட் வித்தியாசத்தை எப்படி கண்டுபிடிப்பது என்பதற்குத்தான், இந்த நேர்முகத் தேர்வையே வைத்திருக்கிறார்கள். நேர்முகத் தேர்வுக்கு 30 மார்க்குகள் (குறுக்கீடு) ........(மணியடிக்கப் பெற்றது) I am the opening speaker of this Debate. I belong to the party which is the leading Opposition party here. I will take another 20 minutes. Otherwise I will close my speech. In the begining itself I have told that I must be given more time.

திரு. என். எஸ். வி. சித்தன்: எங்களுடைய கட்சியிலே 2 உறுப்பினர்கள்தான் பேசுகிறோம். ஆகவே பிரதான எதிர்க் கட்சி என்ற முறையிலே நாங்கள் 3 பேர்கள்கூட பேசலாம். ஆகவே இன்னொரு உறுப்பினருக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தை அவருக்குக் கொடுக்கலாம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: ஆகவே இப்படி 10 சதவீதம் அந்த மாணக்கனுடைய விடைத்தாளில் மாறுபட்டிருக்கின்ற காரணத்தால், இதைச் சரிக்கட்ட இந்த நேர்முகத் தேர்வு என்று ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த நேர்முகத் தேர்விலும் கூட, Aptitude for medicine, Extra-curricular activities, personality, general knowledge நான் சொன்னேனே, இங்கிலாந்து நாட்டிலே எப்படி தேர்வு செய்கிறார்கள் என்று அதைப்போல நம்முடைய தமிழக அரசியலும்கூட, Extra-Curricular activities, Aptiude for medicine மாறுபட்ட எல்லாவிதமான உணர்ச்சிகள், அல்லது இன்ட்ரெஸ்டு, அவனுடைய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள, பர்சனாலிட்டி என்பதற்கும், உடல்கூறு அமைப்பு என்பதற்கும், அவனுடைய பொது அறிவு ஜெனரல் நாலட்ஜ் என்பதற்கும் இப்படி பல வழிகள் இருந்தால், அவைகளை

எல்லாம் பிரித்து வைத்து, 30 மார்க்கு என்று வைத்திருக்
கிறார்கள். ஆகவே 160 மார்க்கு, 170 மார்க்கு வாங்கிய
மாணாக்கன், இந்த 10 மார்க்கு குறைவாக வாங்கியிருந்தாலும்
கூட, இந்த நேர்முகத் தேர்வின் மூலமாக அவனிடத்தில்
உள்ள hidden talents, his aptitude for medicine, his knowledge and
interest for medicine

இவைகள் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்ற
அடிப்படையில்தான் இந்த 30 மார்க்கு வைத்திருக்கிறார்கள்.
230 மார்க் வாங்கியவர்கள் எத்தனை பேர் என்று அவர்கள்
வரிசைக் கிரகமாக வைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.
அங்கேதான் ஒரு சிக்கலான பிரச்சினை இருக்கிறது. இங்கே
விகிதாச்சாரப்படி general pool-ல் 32 சதவிகிதம், 50 சதவிதம்
பின்தங்கியவர்களுக்கும், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்
என்று நம்முடைய அரசாங்கம் ஒரு கொள்கையை வைத்திருக்
கிறது. 4,000 இடங்கள் கொண்ட மருத்துவக் கல்லூரிக்கு
கிட்டத்தட்ட 7,000 பேர்கள் விண்ணப்பம் செய்து கொண்டிருக்
கிறார்கள். அவர்களுடைய மார்க்குகளை நாம் எடுத்துப்
பார்க்கிறபோது, இந்த 230 மொத்த மார்க்கிலே,
230 மார்க்குகள் யாரும் வாங்குவதில்லை. ஆரம்பத்திலே general
pool-ல் 229 மார்க்கு, 228 மார்க்கு என்று இப்படி ஆரம்பிக்
கிறார்கள். 220-க்குக் கீழே யாராவது வாங்கியிருக்கிறார்களா
என்று தேர்வாளர்களைக் கேட்கிறார்கள். இல்லை என்று பதில்
வருகிறது. பிறகு 219.5 மார்க் வாங்கியவர்கள் யாராவது இருக்
கிறார்களா என்று கேட்கிறார்கள். 4 பேர்கள் இருப்பதாகச்
சொல்கிறார்கள். 219, 218½, 218, 217½, 217 என்று இப்படி
அரை, அரை மார்க்காகக் குறைத்துக் கொண்டு வந்து
கடைசியில் அந்த அளவிலே 39 சதவிதம், தட் ஈஸ் ஜெனரல்பூல்,
220 பேர்கள் அளவுடன் அதை நிறுத்திவிடுகிறார்கள்.
அதற்குக் கீழே வழங்கியிருப்பவர்களுக்கு அங்கே இடமில்லை.

அதைப்போல அடுத்தது, 50 சதவீதம் பின்தங்கியவர்கள்
பட்டியல், அதிலே ஆரம்பிக்கிறார்கள். 215 வாங்கியவர்கள்.
இப்படி அரை, அரை மார்க்காக குறைத்துக். கொண்டே
வருகிறார்கள். 215-லிருந்து 190 வரை வந்தவுடன், அந்த
520 பேர்களுடைய பட்டியல் முடிந்து விடுகிறது. அந்த
இடத்திலே நிறுத்திவிடுகிறார்கள். அதற்குப் பிறகு, எஸ்.சி.
எஸ். டி. 18 சதவிதம். அதேபோலும் இதுபோல், 180, 170 என்று
இப்படி அரை அரையாகக் குறைத்து வருகிறார்கள். அதிலேயும்
இது நின்றுவிடுகிறது. ஆகவே இதிலிருந்து ஏன் சொல்கிறேன்
என்று சொன்னால், எந்த இடத்திலே நிற்கின்றதோ, அதற்குப்
பெயர்தான் கட்-ஆப் மார்க் என்று சொல்வது. இந்த உயர்நீதி
மன்ற நீதிபதிகள் என்ன தவறு செய்துவிட்டார்கள் என்றால்
தவறான ஒரு முடிவிற்கு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த
நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே,
'கட் ஆப் மார்க்' என்பது ஒரு டெபனைட்



மார்க் அல்ல, அது ஒரு குறிப்பிட்ட இடம் அல்ல. இருக்கின்ற
மாணவர்கள், தேர்விற்குச்செல்லுகின்ற மாணவர்கள் வாங்கி
இருக்கின்ற மார்க்குகளின், அந்த சதவிகிதத்தின் அடிப்படையில்
கொடுக்கின்ற கடைசி மாணவர்க்கு என்ன கிடைக்கின்றதோ
அதுதான் 'கட்-ஆப்-மார்க்'. இப்போது நான் சொன்னேனே,
அதைப்போல, அங்கே நேர்முகத் தேர்வு செய்யச் சொன்னவர்கள்
இப்போது ஒரு மார்க் லிஸ்டைக் கொடுத்திருக்கிறார்கள்.
எனவே மேற்கொண்டு எக்ஸ்பர்ட் கமிட்டி என்று ஹைகோர்ட்
மூலமாக ஒன்று போட்டு 3 டாக்டர்கள் அதைப் பரிசீலனை
செய்து அவர்கள் ஒரு மார்க்கைக் கொடுத்துவிட்டார்கள். நான்
சொன்ன அந்த 10% வேரியெசன் அதிலே வருவதற்கு வாய்ப்பு
உண்டு. ஆகவே அவர்கள் மார்க்கை எடுத்துக்கொண்டு
பார்க்கிறபோது இந்த கட்-ஆப்-மார்க்கை பேசாக வைத்துக்
கொண்டு, அந்த கட்-ஆப்-மார்க்குக்கு மேலே வாங்கியிருப்பவர்
களுக்கு நீங்கள் இடம் காடுங்கள் என்று சொல்வது
நியாயத்திற்கு, லாஜிக்கிற்குச்சரியா என்பது என்னைப் போன்ற
வர்களுக்கு சந்தேகமாக இருக்கிறது. அதற்கு அடுத்து சுப்ரீம்
கோர்ட்டுக்கு போகிறோம், அங்கே அவர்கள் ஒரு கமிட்டியைப்
போடுகிறார்கள், இந்தக் கமிட்டி இன்னும் ஒரு 10% ஏற்றுகிறது
என்று சொன்னால் அதற்கு முடிவே இல்லாமல் போய்விடும்.
ஆகவே அரசாங்கத்தை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். சரியான முறையை, தெளிவான
முறையை மருத்துவக் கல்லூரித் தேர்விலே அவர்கள் பின்பற்றி
யிருக்கிறார்கள். அதற்காக உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை
எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு நீங்கள் போக வேண்டிய கடமை
உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே
எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதை இவ்வளவு விஸ்தாரமாகச் சொல்வதன் காரணம்
விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்ளாமல், ஆதாரங்கள்
இல்லாமல் குற்றச்சாட்டுகளை இங்கே சொல்வது நல்லதல்ல,
என்பதற்காக, எனக்குப் பின்னாலே பேசுபவர்களுக்கு நான்
எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக மருத்துவக் கல்வி என்று வருகின்ற
நேரத்திலே, தமிழகத்தினுடைய நல்ல காலம் அதிருஷ்டம்
இந்தத் துறைக்கு ஒரு பெண் இயக்குநர் அவர்கள் அதிலே
பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் அண்மையிலே நீங்கள்
பத்திரிகையிலே கூட பார்த்து இருப்பீர்கள். இந்த நாட்டிலே
மிகச் சிறந்த ஒரு 'வுமன் அட்மினிஸ்ட்ரேட்டர்' என்றும்,
அவர்களுக்குப் பல விருதுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.
சிறந்த ஆராய்ச்சிகள் செய்து கட்டுரைகளை நூற்றுக்கணக்கான
அளவிலே எழுதியிருக்கிறார்கள் என்பதற்காகப் பல பரிசுகள்
அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல
ஒரு கைதேர்ந்த மருத்துவ அதிகாரி தமிழகத்தில் இருப்பதற்கு
நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும். ஏன் இதைச் சொல்

கிறேன் என்றால் அரசாங்கத்திலே உள்ளவர்கள்நினைக்கிறார்கள்
ஒரு மருத்துவத்துறை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று
சொன்னால், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியால்தான் முடியும் என்று
எண்ணம்அரசுக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் இருந்து கொண்
டிருக்கிறது. அதைப்போலவேதான் என்ஜினியரிங் துறை என்று
சொன்னாலும், ஏன் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டால்
என்ன? என்ற நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது.
அவைகள் எல்லாம் தவறு என்பதற்கு எடுத்துக்காட்டாக
மருத்துவம் படித்தவர்கள் எங்களால் அந்த நிர்வாகத்தை
செம்மையாகச்செய்ய முடியும், என்ற அளவில் சவாலாக
ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைக்கின்றபோது
என்னைப் போன்றவர்கள் உள்ளபடியே பெருமைப்படுகிறோம்
என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லச்
கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

(நண்பகல் 12—00)

அடுத்தபடியாக ரெப்ரஷ்ஷிங் கோர்ஸ் போன்றவைகளை
ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான்
மருத்துவக் கல்லூரியிலே படித்து கிட்டத்தட்ட 30 ஆண்டுகள்
ஆகிவிட்டன. அதிலே வளர்ந்து கொண்டிருக்கிற விஞ்ஞான
அடிப்படை எனக்கு தெரியாமல் போயிருக்கலாம். ஆகவே
தனியாக மருத்துவம் செய்கிறவர்களுக்கு, ரெஃப்ரெஷ்ஷிங்
கோர்ஸ்ஸை ஆரம்பிக்க வேண்டும் என்பது அவசியம். அதே
நேரத்தில் கிராமப்புறங்களில் பணியாற்றக்கூடிய மருத்துவர்
களை டாக்டர்களை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை டீச்சிங்
இன்ஸ்டியூஷன் ஹாஸ்பிட்டல்களிலே கட்டாயமாகபயிற்சி அளிக்க
வேண்டும் என்கிற புதிய முறையையும் ஆரம்பிக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக புதியதாக சில டிபார்ட்மெண்ட்டுகளை உரு
வாக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஜீடியாட்ரிக் டிபார்ட்மெண்ட்
என்று ஒரு பிரிவு. வயதானவர்களுக்கு என்று சில வியாதிகள்
வருகின்றன. அவர்களுக்கு நல்லமுறையிலே வைத்தியம்
செய்ய வேண்டும் என்பதற்காக புதியதாக இதை உருவாக்கிக்
கொண்டிருக்கிறார்கள், அதற்காகப்பாராட்டுகிறேன்,

அடுத்தபடியாக அவசரமும் அவசியமுமான ஒரு விஷயம்.
என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டிலே மது விலக்கு தளர்த்
தப்பட்டு இருக்கிறது. அதனுடைய பயனாக இன்று
ஆல்கஹாலிஸ்ட்ஸ் அதிகமாகி வருகிறார்கள். அதாவது சாராயம்
குடித்தாலொழிய, மது அருந்தினாலொழிய உயிரே வாழ
முடியாது என்று சொல்லக்கூடிய அளவிலே தமிழகத்திலே
ஏராளமானவர்கள் உருவாகிவிட்டார்கள். Alcoholism is defind
as both a chronic disease and a disorder of behaviour,
என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள், மது அருந்துவது என்பது
ஒரு வியாதி. அந்த வியாதியிலிருந்து மீள்வது என்பது மிகக்
கடினமென்பது மாண்புமிகு புரட்சித் தலைவர்



முதல்வர் அவர்களுக்குக் கூட இது நன்றாகத் தெரியும். ஏன்
இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் அவர்களுடைய சில
நண்பர்களுக்கு தன்னுடைய சொந்த செலவில், கே. ஜே.
ஹாஸ்பிடலில் வைத்து 20 ஆயிரம், 30 ஆயிரம் செலவழித்தா
வது, அவர்களுள மது அருந்தும் பழக்கத்திலிருந்து விடுவிக்க
முடியுமா என்பதை செய்து பார்த்திருக்கிறார்கள். ஆனால்
அவர்களுக்கு கிடைத்தது தோல்விதான் என்பதை இந்த நேரத்
திலே சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு மெடிகல் புல்லட்டினில், பிராக்சிவான் டைம்ஸ் என்ற
பெயரில் வரும் பத்திரிகையில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
30 மில்லிகிராம்ஆல்கஹால் ரத்தத்தில் இருக்குமானால்Mild Euph-
oria அதாவது சாதாரணமானமயக்கம்ஏற்படும்.50 மில்லிகிராமுக்கு
மேலே போனால் mild incoordina ion என்ற வகையில் உளர ஆரம்
பித்து விடுவான். 100 மில்லிகிராம் போனால் நடை தடு
மாறும். Ataxia 200 mg. Drowsy and confused என்று சொல்
வார்கள். 200 மில்லிகிராம் போனால் தூங்க ஆரம்பித்து
விடுவான். 300 மில்லிகிராம் போனால் ஏராளமான தூக்கம்
வரும். 400 மில்லிகிராம் போனால் இறந்தே போய்விடுவான்,
என்று சாராயம் குடிப்பது எவ்வளவு விஷம் என்று குறிப்பிட்டுக்
காட்டியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே எத்தனை பேர்கள்
மதுவுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை
எல்லாம் விடுவிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை.
ஆகவே ஜெனரல் ஹாஸ்பிடலிலேயும், மற்றும் உள்ள
மீச்சிஸ் இன்ஸ்டிடியூஷனிலேயும், "How to cure these people who are
affected by diseases becuase of their having drunk liquor." என்ற
வகையில் வகுப்புகளை நடத்தி, இப்படிச் சாராயம் குடித்து
தன்னுடைய உடலை பாழாக்கிக் கொண்டிருக்கிற அனைத்து
வியாதியஸ்தர்களுக்கும், எந்த வழியிலாவது அவர்களுக்கு
மீண்டும் நல்வாழ்வு கொடுக்க வேண்டும் என்பதற்காக,
இதற்கென தனியாக ஒரு பிரிவை உண்டாக்கி அதன் மூலமாக
தன்னையே இழந்து வாழ்ந்து கொண்டிருக்கிற அவர்களை மது
வின் பிடியில் இருந்து விடுவிக்க உதவி செய்ய வேண்டும் என்று
இந்தநேரத்தில்சொல்லிக் கொண்டுகடைசியாகஒரேஒரு வார்த்தை
சொல்லிக் கொள்கிறேன்.

இது வரையில் மருத்துவத்தைப் பற்றித்தான் சொல்லி
வந்தேன், கடைசியாகஒரு வார்த்தை சுகாதாரத்தைப் பற்றி
சொல்லி முடித்துவிடுகிறேன், சென்னை நகரத்திலே மலேரியா
எந்த அளவு பரவியிருக்கிறது என்பதை போன ஆண்டும்
சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டும் சொல்லியிருக்கிறார்கள்.
போன ஆண்டு எந்த அளவுக்கு எத்தனை பேர்களுக்கு இந்த
வியாதி ஏற்பட்டதோ அதே அளவுக்கு இந்த ஆண்டிலும்
அத்தனை பேர்களுக்கும் இந்த நோய் இருப்பதாக கிட்டத்
தட்ட தமிழ்நாட்டிலே உள்ள மொத்த மலேரியா வியாதியஸ்
தர்களில் 60 சதவீதத்தினர் தமிழ் நாட்டிலே இருந்து கொண்
டிருப்பதாக அவர்கள் கொடுத்த புள்ளிவிவரத்திலேயே

எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒரு ஆண்டுகாலமாக அந்த மலேரியாவை கட்டுப்படுத்த வேண்டும் என்று போடப் பட்டிருக்கிற அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார் கள்? ஏன் எந்த வகையிலேயும் அதைக் குறைக்க முயற்சிக்க வில்லை என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கொசுதான் மலேரியாவை பரப்புவதற்கு ஒரு முக்கியக் கருவியாகப் பயன்படுகிறது என்பது நம் எல்லோருக் கும் தெரிந்த உண்மை. ஆனால் சென்னை நகரத்தில் உள்ள கொசுக்கள் எந்த அளவுக்கு ஒழிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், எவ்வளவோ முயற்சிகளை எடுத்தும் சென்னை நகரத்தில் உள்ள கொசுக்களை ஒழிக்க முடியவில்லை. நான் நினைக்கிறேன். சென்னையிலே மதுவிலக்கு தளர்த்தப்பட்டதன் காரணமாக, சாராயம் குடித்தவனை அந்தக் கொசு கடித்தவுடன் சாராயம் கலந்த அந்த ரத்தம் கொசுவின் உள்ளே போன பிறகு They became more fertile and more strong. ஆகவே, கொசுக்கள் அந்த வகையில் இன்னும் அதிகமாக உற்பத்தி ஆகிக் கொண்டிருக்கிறதோ, பரவிக் கொண்டிருக் கிறதோ என்ற அந்த ஒரு சந்தேகம் கூட எனக்கு எழுந்துக் கொண் டிருக்கிறது. சாராயத்தை குடித்தவனுடைய ரத்தத்தை கொசு குடித்துவிட்டு, நாம் பள்ளிகளிலே குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கிறோமே, அங்கே வந்து, அந்தக் குழந்தைகளையும் கடித்து, வியாதியை மிக விரைவாக பரப்புகிறது. ஆகவே, குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுத்து, அவர்களை எந்த அளவுக்கு அறிவோடும், ஆரோக்கியத்தோடும் வளர்க்க வேண்டும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, அதுவும் அறவே நிறைவேறாது. அந்தக் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக நாம் போட்டுக் கொண்டிருக்கும் திட்டங் கள் எல்லாம் பாழாகப்போய்விடும் என்பதை எடுத்துச் சொல்லிக் கொண்டு நீண்ட நேரம் அனுமதி அளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டிற்கான மருத்துவத்துறை, பொதுச்சுகாதாரம், மருத்துவக்கல்வி, சுற்றுப்புறச்சூழல் ஆகிய இத்தனை மானியக் கோரிக்கைகளுக்காக 263 கோடியே 65 லட்சத்திற்கு மிகைப்படாத தொகை கோருகின்ற இந்தகோரிக்கை களின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். 2,000 ஆண்டுக்குள் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வு என்ற அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது நம்முடைய அரசுதான். அதுவும் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழக அரசு ஒரு முன்னோடியாக இருப்பதற்கு அத்தாட்சி தான் அது. இந்திய துணைக் கண்டத் திலேயே இறப்பவர்களுடைய எண்ணிக்கை 1,000க்கு 13 பேர்கள் என்றால் தமிழகத்திலே 1,000க்கு 10 பேர்கள் தான் என்ற புள்ளிவிவரம் தரப்படுகிறது. அதைப்போலவே குழந்தைகள் நோய்களினால் பாதிக்கப்பட்டு இறக்கின்றவர்களின் அளவு



இந்திய துணைக் கண்டத்திலே 1,000க்கு 110 பேர்கள் என்றால் தமிழகத்திலே என்று புள்ளிவிவரம் இருக்கிறது. அது மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்லாமல் அகில உலகத் திலேயே தமிழகத்திலேதான் 2 வயதிலிருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு தருகின்ற திட்டத்தை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அறிவித்திருந்தாலும் அந்தத் திட்டத்தினுடைய ஊடு திட்டமாக வளர்ச்சித் திட்டமாக அந்தக் குழந்தைகளுக்கு நல்வாழ்வு என்ற அடிப்படையில் தடுப்பு ஊசிகள் போடுகிற அடிப்படையில் என்ன என்ன ஊசிகள் எவ்வப்போது போடப்படுகின்றன என்பதை தெரிவிப்பதற்கு ஹெல்த் கார்டு என்ற அடிப்படையில் நல்வாழ்வு அட்டைகள் வழங்கும் திட்டத்தை கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியது. இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழக அரசின் மருத்துவத் துறையில் குடும்பக் கட்டுப்பாடு பொறுத்தவரையில் முன்னோடி யாக முதன்மையாக விளங்குகிறது. இந்தியத் துணைக் கண்டத் திலேயே அவர்கள் எந்தக் குறியீடு தந்திருக்கிறார்களோ, அந்தக் குறியீட்டைத் தாண்டி மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிற முறையில் செயல்படுகிறது. இந்தியப் பேரரசே அதைப் பாராட்டினாலும் சில சிக்கல்கள் காரணமாக 2-வது முறை வந்திருக்கிறது, 3-வது முறை வந்திருக்கிறது என்று சொன் னாலும் அளவு என்ற முறையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழக அரசு குறியீட்டைத் தாண்டி நல்லமுன்னேற்றத்தைக் கண்டு வந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே குடும்பக் கட்டுப்பாடு துறையில் சிறந்து விளங் கிற முறையில் மற்ற அரசுகள் எல்லாம் நம்மைப் பாராட்டுகிற அளவிலே இருந்தாலும் அதனால் பெரிய இழப்பிற்கும் ஆளாகி யிருக்கிறோம். 41 நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொண் டிருந்த தமிழகத்தில் இன்றைக்கு 39 தொகுதிகளாக குறைக்கப் பட்டிருக்கிறது. காரணம் ஜனத்தொகை அடிப்படையை வைத்துக் கொண்டு. அதே நேரத்திலே இந்தியத் துணைக் கண்டத்தினுடைய மைய அரசு குடும்பக் கட்டுப்பாடு துறையில் தீவிரமாக செயல்படுத்துகின்ற ஆணையை நமக்கு பிறப்பிக் கிறார்கள். தீவிரமாக செயல்படுத்துகின்ற அரசு, நாடு இழிவு படுத்தப்படுகின்ற நிலையில் தரம் தாழ்த்தப்படுகின்ற முறையில் 41லிருந்து 39 ஆக நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைத்து தமிழகத்தைச் சேர்ந்த 2 பேர்கள் நாடாளுமன்றத்திலே பணி யாற்றக்கூடிய வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். எனவே இந்த முறை மாற்றப்பட்டாக வேண்டும். இந்தியத் துணைக் கண்டத் திலே எவ்வளவுதான் பொருளாதார வளர்ச்சி இருந்தாலும் விஞ்ஞான வளர்ச்சி இருந்தாலும் ஜனத்தொகை அடிப்படையில் வேகமாக வளர்ந்து வருகிற ஜனத்தொகையைக் கட்டுப்படுத்து கிற காரணத்தினால் மற்ற அரசுகளை விட மற்ற மாநிலங் களை விட வேகமாக முனைப்பாக முன்னேறுகின்ற சூழ்நிலை பாழ்ப்பட்டுக் கொண்டு வருகிறது. அதைத் தடுப்பதற்கு மைய அரசு ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டு வருவதில் தவறில்லை. இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறக்கூடாது. 3-வது குழந்தை பிறந்தால் அதற்கு அரசாங்கம் அளிக்கிற

அத்தனை சலுகைகளும் ரத்து செய்யப்பட வேண்டுமென்ற முறையிலே மத்திய அரசு, ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மைய அரசு புதிய சட்டமொன்றைக் கொண்டு வந்தாக வேண்டும். வீடுகள் வழங்குவதாக இருந்தாலும் கல்லூரிகள், பள்ளிகள் இவைகளிலே கொடுக்கப்படுகிற சலுகைகளாக யிருந்தாலும் 3-வது குழந்தைக்கு கட்டணம் கட்டியாக வேண்டும், அவர்களுக்கு அந்தச் சலுகைகள் கிடையாது. பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் இவர்களுக்கு பல் வறு வகைகளில் அளிக்கப்படுகின்ற உதவிகள் அனைத்தும் 3வது குழந்தைக்கு அளிக்கப்படமாட்டாது என்ற வேகமான சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டுவருகிற போது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பல்வேறு எதிர்க்கட்சிகளால் அதற்கு பங்கம் உருவானாலும் அதைப்பற்றி எண்ணாமல் அடுத்த தேர்தலைப் பற்றி எண்ணாமல் வருங்கால சமுதாயத்தின் நலன் கருதி நவீன இந்தியாவை உருவாக்க வேண்டுமென்ற முறையிலே அதை பாரதப் பிரதமர்தான் செயல்படுத்த வேண்டும். அவ்வளவு வேகமாக அவ்வளவு திறமையாக இன்னும் சொல்லப்போனால் போல்ட்னஸ் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் இருக்கிறார்கள், தைரியசாலியாக உள்ள பாரதப் பிரதமர் அவர்களால் தான் அதைக் கொண்டுவரமுடியும். இரண்டு குழந்தைகளுக்கு மேல் 3-வது குழந்தை பிறந்தால், 3வது குழந்தைக்கு அந்தச் சலுகைகள் இல்லை என்று திட்டத்தைக் கொண்டு வந்தால்தான் அனைத்து மாநிலங்களும் இந்தத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—10)

இன்றைக்கு பல இன்னல்களுக்கு இடையே இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இன்றைக்கு தமிழகத்தில் மிகவும்-இந்திய துணைக் கண்டத்திலேயே-சிறப்பாக செயல்பட முடிந்தது என்றால் இதற்கு உள்ளாட்சித்துறை அதிகாரிகள் முனைப்பாக ஆதரவு அளித்து இருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ நான் சொல்வதை யாரும் தவறாக எண்ணிக் கொள்ள வேண்டாம். ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றக் கூடியவர்கள் அதிகமாக அக்கறை செலுத்தவில்லை, இதை நான் சொல்வதால் இதில் களுக்கு வருத்தமாக இருக்கும்; மற்றத்துறையில் அவர்கள் இந்தக் குறியீட்டை எட்ட. வேண்டும் என்று இருப்பவா செயல்பட்டாலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்கள் இதில் அதிகமாக ஈடுபடவில்லை. தமிழக அரசு அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றக்கூடிய மருத்துவர்களுக்கு மேலும் நல்ல ஊக்கம் தந்து இதை வேகமாக செயல்படுத்துவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



அதே போல் கிராமப்புறத்தில் இருக்கும் மக்களுக்கு மருத்துவ வசதி செய்யும் பொருட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் அப்கிரடேஷன், தகுதி உயர்த்தப்பட்டு அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் எக்ஸ்ரே கருவிகள், படுக்கை வசதிகள் செய்து அங்கே ஓரளவுக்கு பொது மருத்துவமனை மாதிரி ஆக்குகின்ற ஒரு திட்டத்தை நம்முடைய அரசு அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அது நல்ல முறையில் செயல்பட வேண்டும். கிராமப்புற மக்களுக்கு நல்ல முறையில் வசதி செய்து கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த ஆண்டு 10 ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும் தான் ஆரம்பிக்கப்படும் என்று நம்முடைய கொள்கை குறிப்பில் கூறப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ 5½ கோடி 6 கோடி மக்கள் ஜனத்தொகை இருக்கின்ற தமிழகத்தில், அதில் 70 சதவீதத்திற்கு மேல் கிராமப்புறங்களில் மக்கள் வாழ்கின்ற காரணத்தால் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்பது மிகவும் குறைவானது. ஆகவே ஏறத்தாழ 25 ஆரம்ப சுகாதார நிலையங்களையாவது ஆரம்பித்தால் நல்லது. ஆண்டு ஒன்றுக்கு 25 என்று ஆரம்பித்தால் இன்னும் 10 ஆண்டுகளில், 15 ஆண்டுகளில் நல்ல ஒரு மாற்றத்தை நம்மால் காணமுடியும். 10 என்பதை 25 ஆக உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் இருக்கின்ற வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் கூட பழுதுபட்டு அவைகள் ரிப்பேர் செய்து திரும்பி வருவதற்கு பல நாட்கள் ஆகிவிடுகின்றன. அரசாங்கத்தின் பணிமனைகளுக்கு அவைகள் கொண்டு செல்லப்பட்டால் அவர்கள் மற்ற வண்டிகளை ரிப்பேர் செய்வதைப் போலவே வரிசைக்கிரமமாக மருத்துவத்துறை வாகனங்களையும் எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே அதை வேகமாக பழுது

பார்த்து திருப்பி மருத்துவமனைக்கு தருவதற்கு கால தாமதம் ஏற்பட்டு விடுகிறது. அதைப் போக்குவதற்கு மருத்துவத் துறை வாகனங்களை பராமரிப்பதற்கு என்று தனியாக ஒரு பணிமனை வைத்தாகவேண்டும். அப்படி இல்லை என்றால் அரசு பணிமனையில் அதற்கு என்று தனியாக ஒரு செக்ஷன் பகுதி உருவாக்கி அதன் மூலமாக இந்த மருத்துவத்துறை வாகனங்களை பழுது பார்க்க வேண்டும். சிறிய பழுதுகளாக இருந்தால் 3 நாட்களுக்குள்ளும் மிகப்பெரிய அளவில் பழுதுபட்டு இருந்தால் அவைகளை 10 நாள், 15 நாட்களுக்குள்ளும் திருப்பி அளிப்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் இன்றைக்கு விபத்து ஏற்படும் போதும் சாலை விபத்து ஆனாலும் சரி, ஆக்ஸிடெண்டு மற்றும் பல்வேறு விபத்து ஏற்படும் போதும் இரவு நேரங்களில் அவர்களுக்கு ஸ்கேனிங் வசதி கிடையாது. பொது மருத்துவமனைக்கு கொண்டு வந்து மண்டைப் பகுதி மற்றும் உடலில் எந்த எந்தப் பகுதியில் அடிப்பட்டு பாதிக்

கப்பட்டு இருக்கிறது என்பதை ஆராய்வதற்கு இரவு நேரங்களில் அரசு பொது மருத்துவ மனைகளில் வாய்ப்பு இல்லை. பகல் நேரங்களில் மட்டும்தான் அதைச்செய்கிறார்கள். இரவு நேரங்களில் செய்வது இல்லை. ஸ்கேனிங் செய்வதற்கு வழி வகைகளை இரவு நேரங்களில் இருப்பதற்கு ஒரு முன் எச்சரிக்கையாக நடவடிக்கையை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு ஊருக்குப் பக்கத்திலே, ஐந்து மைல், பத்து மைல் தொலைவில் சாலையில் ஒருவர் அடிபட்டிருந்தால், அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு ஆம்புலன்ஸ்க்குத் தகவல் தருவதற்குப் போதுமான தகவல் தொடர்பு வசதிகளுக்கு வழிவகை இல்லை. ஆகவே, காவல் துறையினர் அந்த விபத்தைப் பார்த்தவுடன் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு வழிவகை செய்யவும், ஆம்புலன்ஸ்ஸை வரவழைக்கவும், மருத்துவர்கள் தயார் நிலையில் இருப்பதற்கும் வழிவகைகளைச் செய்யும்பொருட்டு காவல் துறையின் மூலம் கேஷுவலிட்டிவார்டு என்ற அவசரப்பிரிவுக்கு ஒயர்லெஸ் வைக்க வேண்டும். இதன்மூலம் ஆம்புலன்ஸ் எடுத்துச் செல்லவும் மருத்துவர்களைத் தயார் நிலையில் இருக்கச் செய்வதற்கும் இது பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நவீன விஞ்ஞான முறைப்படி, இன்றைக்குப் பல்வேறு வெளி நாடுகளிலேயிருந்து புதிய கருவிகளெல்லாம் தருவிக்கப்பட்டு, பொது மருத்துவமனையிலும், தாலுக்கா மருத்துவமனைகளிலேயும் வைக்கப்பட்டிருக்கின்றன. பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அந்தக் கருவிகள் சில நேரங்களில் பழுதுபடுகின்ற பொழுது அவைகளைப் பழுதுபார்ப்பதற்கு, தனியார் அல்லது தனிப்பட்ட ஆட்களை அதற்கான பணியில் அமர்த்தி வேலைபார்க்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. அவர்கள் பழுதுபார்த்து என்றைக்குத் தருகிறார்களோ அப்பொழுதுதான் அந்தக் கருவிகள் உபயோகத்திற்கு வர முடியும்.

எனவே, அந்த நிலைமை மாற்றப்பட்டு அதற்காக என்றே எஞ்ஜினீயரிங் செக்ஷனை ஏற்படுத்தி, பொறியாளர்களைக் கொண்ட குழுவை உருவாக்கி அவர்களுக்கு இந்த நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவதைப் பற்றியும், பழுதுபார்ப்பதைப் பற்றியும் உள்ள அத்தனை பயிற்சிகளையும் தந்து, அவர்களை வைத்து இந்த இயந்திரங்களைப் பாதுகாக்கின்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, மருத்துவக் கல்லூரி தேர்வைப் பொறுத்தவரையில் அது எப்படி முறைப்படுத்தப்படுகிறது, எந்தெந்த வகைகளில் நியாயப்படுத்தப்படுகிறது என்பவைகளையெல்லாம் குறித்து அடுத்து துரைமுருகன் அவர்கள் பேச இருக்கின்ற பேச்சுக்கள் அத்தனைக்குமான பதில்களை எனக்கு முன்னால் பேசிய டாக்டர் சௌரிராஜன் அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்தில் ஒரே ஒரு சின்ன கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1969 ஆம் ஆண்டுக்குப் பிறகு 1976 ஆம் ஆண்டு வரையில் இந்த நாட்டிலே யார் ஆட்சியிலே இருந்தார்கள் என்பது இங்கே இருப்பவர்களுக்கும் வெளியிலே இருக்கின்ற பொது மக்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்த ஏழாண்டுக்கால கட்டத்தில், கால்நடை மருத்துவக் கல்லூரியானாலும் சரி, வேளாண்மைக் கல்லூரியானாலும் சரி, பொறியியல் கல்லூரியானாலும் சரி, அந்தக் கல்லூரிகளில் சேர்ப்பதற்கான தேர்வுகள் நடத்தப்பட்டு நுழைவுத் தேர்வுகளை நடத்துவதற்கு இன்டர்வியூ என்று சொல்லப்படுகின்ற நேர்முகத் தேர்வினை நடத்தியவர்கள் யார் என்றால் இந்த மன்றத்தில் பணியாற்றிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை வைத்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்படி ஏழாண்டுக் காலம் நடத்தியவர்கள்தான், இன்றைக்கு வெளியிலே போய், மக்கள் மத்தியிலே சென்று தவறான கருத்துக்களை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே பல்வேறு துர்ப்பிரச்சாரங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவரையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற மாணவர்களின் பட்டியலைப் பார்த்து தேர்வு செய்யப் பெற்றிருக்கின்றவர்கள் வாங்கியிருக்கின்ற மதிப்பெண்களையும், 1969 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாணவர்களின் . . . .

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, அன்றைக்கு குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டு தேர்வு நடத்தியதாக நம்முடைய உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருக்கின்ற திரு. காளிமுத்து அவர்கள் வெட்டனரி காலேஜ் சம்பந்தப்பட்ட குழுவிலே உறுப்பினராக இருந்தார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—20)

டாக்டர். கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு காளிமுத்து அண்ணன் உறுப்பினராக இருந்ததாகச் சொன்னார்கள். அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். நானும் தேர்ந்தெடுக்கப்பெற்றேன். அதை மறுக்கவில்லை. ஆனால், சட்ட மன்ற உறுப்பினர்களை, இந்தத் துறைக்குச் சம்பந்தமில்லா

தவர்களை அன்றைக்குத் தேர்வுக் குழுவிலே போட்டு, அவர்கள் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் அந்தக் கல்லூரி அமைப்புகளை உருவாக்கியிருந்தார்கள். அப்படிச் செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம். ஆகவே நான் கேட்பதெல்லாம், பல்வேறு புள்ளி விவரங்க ளத் தருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், 1969 ஆம் ஆண்டிலேயிருந்து 1977 ஆம் ஆண்டு வரையில் புரஃபஷனல் காலேஜ் என்று சொல்லப் படுகின்ற இந்தத் தொழில் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர் களின் பட்டியலையும், அவர்கள் வாங்கிய மதிப்பெண்களையும் கொண்ட பட்டியலையும் தாருங்கள். அதேபோல் 1977 ஆம் ஆண்டிலே தமிழகத்தின் புண்ணியவான், இதயதெய்வம் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டது தவிர மற்றைய ஆண்டுகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததைப் பொறுத்தவரையில் உள்ள பட்டியல்களைப் போட்டுப் பாருங்கள்; அப்போது உண்மை புரியும்; அப்போது நியாயம் தெரியும். அப்படி வந்துவிட்டு மற்றவர்களைப் பற்றிச் சொன்னால் உங்களுடைய முகமூடிகள் கிழித்தெறியப்படும். வேஷங்கள் வெளியாகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திலே சொன்னார்கள். அப்போது நாங்கள் எல்லாம்கூட கேட்டோம், இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படுமா என்று. அப்போது அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு மருத்துவக் கல்லூரியை இந்த ஆண்டு ஆரம்பிப்பதற்கான ஆணைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாண்டுகள் மருந்தாளுநர் பயிற்சி அதாவது டிப்ளமோ இன் ஃபார்மஸி கோர்ஸ் அரசாங்கத்தின் துறையிலே மதுரை மருத்துவக் கல்லூரியிலே நடத்தப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அதை அரசு நிறுத்திவிட்டது. இன்றைக்குத் தனியார்கள் நடத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. 10-வது வரை படித்த ஏழை எளிய மாணவர்கள் அதிலே சேர்ந்து படிப்பதற்கு அது ஒரு வாய்ப்பாக இருந்தது. ஆகவே அந்த முறையினை மீண்டும் அந்த மதுரை மருத்துவக் கல்லூரியிலே மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பேரூராட்சிக்கு ஒரு மருத்துவமனை என்ற அடிப்படையில் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை பேரூராட்சி களிலும் மருத்துமனைகளை ஏற்படுத்த வேண்டும். அதன்படி மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படாத பேரூராட்சி ஏதேனும் இருந்தால் உடனடியாக இந்த ஆண்டே அதை ஏற்படுத்துவதற்



கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும் என்றால் 5 ஏக்கர் நிலம் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். சில இடங்களில் போதுமான இடவசதி இல்லாமல் இரண்டு ஏக்கர் அல்லது 3 ஏக்கர் நிலம்தான் கிடைக்கின்றது. நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் அப்படி 5 ஏக்கர் நிலம் என்பது கிடைக்காத சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் அதற்கென்று நாம் ஒரு விதிவிலக்கினை அளித்து 3 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்ற ஒரு முறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்று நான் விடைபெறுகிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையில் பணியாற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஹண்டே அவர்களால் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கை யின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் என்ன பேசப்போகிறேன் என்று உணர்ந்தோ அல்லது இதுதான் வரும் என்று தெரிந்தோ ஆளும் கட்சியிலே இல்லாவிட்டாலும் அவர்களுக்கு அனுசரணையாக நம்முடைய திரு. சௌரிராஜன்— அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் பேசினார்கள். ஏதோ எதிர்க்கட்சியிலே இருந்து பேசுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இவர் ஆளும் கட்சியாகவே ஆகிவிட்டதுபோல் ஒரு கனவு; பரவாயில்லை. அதுமட்டுமல்ல, நீதிமன்றத்திலே நீதிபதிகள் அளித்த தீர்ப் பினையே விமர்சனம் செய்திருக்கிறார்கள். அப்படி நீதிமன்றத் தினுடைய தீர்ப்பையே இங்கே விமர்சனம் செய்தார்கள்; இந்த அவை அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. வருங்காலத்திலே இது எல்லோருக்கும் பயன்படும் என்பதால் நானும் அதில் குறுக்கிடவில்லை.

இங்கே பேசவேண்டிய துறைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை என்று பெயரிட்டிருக்கிறார்கள். மக்களுக்கு நல்வாழ்வை அளிப்பதன் மூலம் இந்தத் துறைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆட்சியிலே இந்தத் துறை நல்வாழ்வினை மக்களுக்கு அளிக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக அந்தத் துறையே இன்றைக்குச் சீர்கெட்டு ஈளை கெட்டு இருமல் வந்து இன்றோ நாளையோ என்ற நிலை வந்திருக்கின்றது. காரணம் பப்ளிக் ஹெல்த்தை மக்களுக்குத் தருவதற்குப் பதிலாக இந்த அமைச்சரவை பப்ளிக் வெல்த்தை எப்படி எடுப்பது என்பதிலே மும்முரமாக ஈடுபட்டதன் விளைவாக இந்தத் துறை அழிந்துகொண்டிருக்

கின்றது. இலட்சியங்களை மறந்து இலட்சங்களை நினைத்த காரணத்தால் இன்றைக்குத் தமிழகத்திலேயே அவலட்சணமாக இந்தத் துறை பிரசுரிக்கப்படுகிறது என்பதுதான் என்னுடைய மூன்றாவது குற்றச்சாட்டாகும். இதிலே காலதாமதம் செய்யக் கூடாது. குறிப்பாக மருத்துவத் துறையிலே செய்யக்கூடாது. உடம்பிலே வியாதி வந்தவுடனே காலாகாலத்திலே கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் வியாதி பெருகும். ஆனால் இந்தத் துறையிலே இருப்பவர்கள் எல்லாம் காலதாமதம் பண்ணினால் பணம் பெருகுகின்றது. இதுவரையில், இந்த அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஒரு நாளாவது இந்தத் துறையில் குறிப்பிட்ட நேரத்திலே எதுவும் நடந்தது கிடையாது. டாக்டர்கள் நேரம் தவறாமல் மருந்து சாப்பிடவேண்டும் என்கிறார்கள். ஆனால் நேரம் தவறாமல் வகுப்புகளை நீங்கள் ஆரம்பித்தது உண்டோ? எம்.எஸ். செலக்‌ஷன் இப்போது நடக்கின்றது. ஆனால் ஏப்ரல் மாதம், இன்றைக்கு வகுப்புகள் நடக்க வேண்டும். இன்டர்வியூ இப்பொழுதுதான் நடக்கிறது. இந்த மாதிரி ஊழல் எல்லாம் களைவதற்கு நுழைவு வரியைப் போல, நுழைவுத் தேர்வை வைக்கிறேன் என்றார் நம்முடைய கல்வி அமைச்சர். ஆனால் எம்.டி.எம்.எஸ்ஸுக்கு மட்டும் ஏனோ நுழைவுத் தேர்வை வைக்காமல் நேரடியாகத் தேர்வை நடத்து கிறார்கள். இப்பொழுதுதான் இன்டர்வியூ நடக்கிறது. அதுவும் ஏப்ரலில். மே, ஜூன், ஜூலை—ஆகஸ்ட் செப்டம்பரிலே எம்.டி. கிளாஸ் ஓப்பன் ஆகும். ஆகையினாலே 9—வது மாதம். என்றைக்கு இந்த ஆட்சி வந்ததோ அன்றிலிருந்து எம்.பி.பி.எஸ்.—க்குக் குறிப்பிட்ட காலத்திலே தேர்வை நடத்தவில்லை.........(குறுக்கீடு) ஐ ஆம் நாட் யீல்டிங்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: நுழைவுத் தேர்வு வைப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்கிறதா என்பதைத் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் விளக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தவறாக நினைக்கவேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும். அதற்கு நான் தேவைப் பட்டால் உடனடியாகப் பதில் கொடுக்கிறேன். இல்லா விட்டால் பிறகு தருகிறேன்.

திரு. துரைமுருகன்: அ.தி.மு.க. ஆட்சி என்றைக்கு வந்ததோ அன்றிலிருந்து இன்றுவரையில் தேர்தல்கள் அல்லது எம்.பி.பி.எஸ். அட்மிஷன் உடனடியாக நடைபெற்றத என்றால் கிடையாது. தேர்வு முடியும், 4 மாதம் கனியும். கனிந்ததிலே பழுத்ததை எடுத்துக்கொண்டு காயைத் தள்ளி விடுகிறார்கள். அதனாலே விளைவு என்ன என்று கேட்டால் மற்ற மாநிலங்களோடு நாம் 4 மாதங்கள் பின்னோக்கிப் போகிறோம். ஹவுஸ் சர்ஜன் கோர்ஸ் 4 மாதம் பின்னால் ஆகிறது. பிறகு போஸ்ட்



கிராஜுவேட் கோர்ஸ்ஸுக்கு, மற்ற மாநிலங்களுக்கு, சண்டிகார் போன்ற இடத்திற்குப் போகிறவர்களெல்லாம். உடனடியாகப் போய்ச் சேர முடியவில்லை. ஜூலையிலே அங்கே வகுப்பு ஆரம்பிக்கிறது என்றால், செப்டம்பரிலேதான் இங்கே முடிகிறது. 4 மாத வித்தியாசத்தாலே ஒரு ஆண்டை வீணடித்து கொண்டிருக்கிறீர்கள். இந்தக் காலதாமதம் எதற்காகச் செய்கிறார்கள் என்று சொன்னால், கனியைப் பறிப்பதற்காகச் செய்கிறார்கள். அதனுடைய விளைவுதான் இன்றைக்கு 22 மாநிலங்களிலே எந்த மாநிலத்திலும் கிட்டத்தட்ட 400 பேர்கள் நீதிமன்றத்திற்குப் போனது கிடையாது. எம்.பி.பி.எஸ். தேர்வு நடந்திருக்கிறது, இதுவரையிலே; காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே யாராவது ஒருவர் பாதிக்கப்பட்டவர் வழக்குமன்றத்திற்குப் போவார். தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் அப்படி ஏதாவது ஓரிருவர் நீதிமன்றத்திற்குப் போவதுண்டு, நீதி கிடைப்பதுண்டு. ஆனால் இன்றைக்கு இன்டர்வியூ முடிந்த பிறகு ரிசல்ட்டைப் பார்க்கிறான். போர்டிலே எவன் பெயரெல்லாம் இல்லையோ அத்தனைபேரும் ஹைகோர்ட்டுக்குப் போகிறார்கள். கிட்டத் தட்ட 240 பேர்களுடைய வழக்கை நீதிமன்றத்திலே:—இங்கே டாக்டர் சௌரிராஜன் சொன்னாரே, விசாரிக்கிறார்கள். விசாரித்ததற்குப் பிறகு 100 பேரைச் சேர்க்கவேண்டுமென் கிறார்கள். நான் கேட்கிறேன், இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களிலே, எந்த மாநிலத்திலாவது இப்படிப்பட்ட தேர்வு முறையிலே ஊழல் இருக்கிறது, அநீதி இழைக்கப்பட்டது, இங்கே இவர்களுக்கு கிடைக்க வேண்டிய சீட் கிடைக்கவில்லை யென்று சொல்லி இவ்வளவு பேர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போனதுண்டா? அந்த மகத்தான காரியத்தைச் செய்து அழியாத புகழைப் பெற்றவர்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சி என்று கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நான் அவரை ஒரு கேள்வி கேட்கிறேன். இந்தியாவிலே எந்த மாநிலத்தில் இப்படி இன்டர்வியூ முறை இருந்துகொண்டு வருகிறது என்பதை, அந்த இன்டர்வியூ முறை எந்த மாநிலங்களிலே இருக்கிறதோ அந்த மாநிலத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினருடைய வாதமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன்: இன்டர்வியூ வைத்த முறையிலேயே இவ்வளவு குளறுபடி என்றால் அதுவும் இல்லாவிட்டால் எக்கச் சக்கம். ஏகபோகமாக இருப்பீர்கள். பரவாயில்லை. இங்கே நம்முடைய பத்திரிகையிலே போட்டிருக்கிறீர்கள். Selections were unbiassed. ஒரு கட்டம் கட்டிப் போட்டிருக்கிறது. அதைப் பார்த்த நம்முடைய டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பென்சிலாலே மார்க் போடவில்லையென்று சொன்னார்கள். ஆல் ரைட். பேனாவிலேதான் போடுகிறார்கள். போட்ட சீட்டைக் கிழித்துப் போட்டுவிட்டு வேறு ஒரு சீட் எழுதுகிறார்

கள். இந்த விசித்திரம் தெரியாதா? இதிலே ஒன்றைச் சொல்கிறீர்கள், நேர்மையாக நடந்துகொண்டீர்கள் என்று. நான் கேட்கிறேன், இதிலே சொல்கிறார்கள், "S l ctions w r unbiassed exc pt for th casts m ntioned by the Review C mmittee." இதுவரையிலே ஹண்டே அவர்கள் சிரிக்கிறார்கள். இந்த ரெவியூ கமிட்டி யார் யாரைத் தேர்ந்தெடுத்ததோ, அந்த 86 பேர்களைத் தவிர மற்றவர்களிடம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறதாம், அப்படியென்றால் அந்த 86 பேர்களிடம் பையசாக நடந்து இருக்கிறார்கள் என்று அர்த்தம். அப்படியென்றால் விலை பேசி இருக்கிறார்கள் என்று அர்த்தம். பகைனிங்சாக நடந்து இருக்கின்றார்கள் என்று அர்த்தம்; வேண்டுமென்றே பழி தீர்த்திருக்கிறார்கள் என்று அர்த்தம். ஆகவே நான் உயர் நீதிமன்றத்திலே ஒரு ரெவியூ கமிட்டி போட்டு, 100 பேர்களை உள்ளே சேருங்கள் என்று சொல்லியிருக்கிறது. இன்றைக்கு நான்

(முற்பகல் 12-30)

கேட்கிறேன் இவ்வளவு பெரிய தவறைச் செய்த அந்த செலக்ட் கமிட்டி மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? ஹண்டே அவர்கள் மாலையில் சொல்வார்கள். நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இது எங்களுக்கு கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன வசனம். காரணம் ஏற்கெனவே ஒரு முறை எம்.பி.பி.எஸ். ரெக்கார்டுகளை ஒரு செகரட்டரி திருத்தினார் என்று சொல்லி, ஹை-கோர்ட்டிலே ஸ்ட்ரிக்சர்ஸ் பாஸ் செய்து, இதே மன்றத்தில்கூட கேட்ட பொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உட்பட நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். இதுவரையில் நடவடிக்கை எடுத்ததுண்டா? 86 பேர்கள் நியாயமாகப் படித்து இன்டர்வியூவிற்குச் சென்றவர்களுக்கு சீட்டு கிடைக்கவில்லை என்றால் அவர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டிருக்கிறது; *** ஏறக்குறைய 90 பெர்சன்ட் எடுத்திருக்கிறார். திருச்சியிலே பார்பர் ஷாப் ஒருவர் நடத்துகிறார். அவருடைய பையன் நன்றாகப் படிக்கக் கூடியவன்; இன்டர்வியூ விலும் நன்றாகச் செய்திருக்கிறான்; பாஸ் செய்து இருக்கிறான்; ஒரு வருடம் கூட பெயில் ஆகவில்லை. அவனுக்கு நீங்கள் கொடுக்கவில்லை. ஹை-கோர்ட் மூலம் உள்ளேவரப் போகிறான். இங்கே நம்முடைய நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மகள் வன்னிய சமுதாயத்தில் படிப்பதே ரொம்பவும் அரிது; மிகவும் பிற்பட்ட ஒரு ஜாதி. அந்தச் சமுதாயத்திலே 86 பெர்சன்ட் வாங்கி இருக்கிறார். அந்தப் பெண் இன்டர்வியூவிலும் நன்றாகச் செய்திருக்கிறார். உங்கள் கமிட்டி அல்ல, ஹை-கோர்ட் போட்ட எக்ஸ்பெர்ட் கமிட்டி சொல்கிறது; அந்தப் பெண் நன்றாக பெர்பார்மன்ஸ் செய்திருக்கிறார் என்று. இன்றைக்கு அந்தப் பெண்ணிற்கு சீட் கிடைக்கிறது.***



இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே போய் இத்தகைய நிலைமைகளைப் பெற வேண்டுமென்ற நிலைமைகள் இருக்குமானால் நான் கேட்கிறேன், இந்த அமைச்சரவை ஏன் என்று அரியலூரில் மழை பொழிந்தது; வெள்ளம் வந்தது; பிரிட்ஜ் உடைந்தது; அதனால் ரெயில் கவிழ்ந்தது; பலபேர்கள் செத்தார்கள்; அன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்: அரியலூர் அழகேசா ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா? என்று; ஜனநாயகத்தின் பெயரில் நம்பிக்கை வைத்து அழகேசனும், மறைந்துவிட்ட பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு இராஜினாமா செய்தார்கள். எனக்குத் தெரியும். ஹண்டே அவர்கள் எதிர்க் கட்சியில் உட்கார்ந்திருந்த போது நான் ஆளுங்கட்சியிலே இருந்தேன். இப்படிப்பட்ட செய்தி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வந்திருக்குமானால் "திஸ் இஸ் வெரி வெரி சீரியஸ் அலிகேஷன்" என்று ஹண்டே அவர்கள் கதறி இருப்பார்கள், கர்ஜித்து இருப்பார்கள், துவண்டு இருப்பார்கள், ஜனநாயகத்தின் அடிப்படையில். பொலிடிக்கல் டீசென்சி அடிப்படையில் கேட்கிறேன். இந்த அமைச்சரவையே இராஜினாமா செய்ய வேண்டும், அவர்கள் செய்யமாட்டார்கள். முடிந்தால் நீங்களாவது இராஜினாமா செய்ய வேண்டாமா? படித்த படிப்பின் மீது நம்பிக்கை வைத்து கேட்கிறேன். 100 மாணவர்களுடைய வாழ்வை பாழடித்த ஒரு அமைச்சர் இங்கே தேவைதானா? * * *

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த செய்திகளைப் படிக்கட்டும். நீதிமன்றத்திலே கொடுத்த தீர்ப்பை அவர் படிக்கட்டும். இதிலே தவறு நடந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டட்டும் ** என்று அவர் பேசிய பேச்சுக்களை நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம். ஆகவே அவற்றை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ** பொத்தாம் பொதுவில் இப்படி குற்றம் சாட்டுவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே இந்த அவையில் நாம் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். எந்தக் குற்றச் சாட்டு சொன்னாலும் எழுதிக் கொடுக்க வேண்டும், நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதற்கு ஏதாவது ஆதாரம் கொடுக்க வேண்டும்; இந்த மூன்றையும் நீங்கள் பின்பற்றவில்லை என்பதால் அவற்றையெல்லாம் நான் சபைக் குறிப்பிலே இருந்து நீக்க உத்தரவிடுகிறேன். (கூச்சல், குழப்பம்)

திரு. துரைமுருகன்: நான் சொல்லிய அலிகேஷனுக்கு பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அலிகேஷன் சொல்வது என்றால் முறைப்படி எழுதிக் கொடுத்தபின் தான் சொல்லவேண்டும்.

திரு. துரைமுருகன்; நான் அதைச் சேலஞ் செய்கிறேன். பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சேலஞ் செய்யலாம்! பொறுப்பேற்றுக் கொள்ளலாம். ஆனால் அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. முறைப்படி எழுதிக் காடுத்த பின் தான் அலிகேஷன் சொல்ல வேண்டும் (குறுக்கீடு) அவையில் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னதை வைத்துக்கொண்டு' உங்கள் அலிகேஷனை சொல்ல அனுமதிக்க முடியாது. அதை நிரூபிக்க முடியவில்லையென்றால், உங்கள் மீது எந்த வகையில் நாம் நடவடிக்கை எடுக்க முடியும்? ஆகவே; அலிகேஷன் குறித்து எழுதிக் கொடுத்த பின்தான் இங்கே அவையில் சொல்ல வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: ஜட்ஜ்மென்டை அடிப்படையாகக் கொண்டுதான் அவர் பேசிக் கொண்டு இருக்கிறார். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஜட்ஜ்மென்டைப் பற்றி நான் சொல்லவில்லை. (குறுக்கீடு.) மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நேருக்கு நேராகப் பேசிக் கொள்வது முறையல்ல. ஒரு அலிகேஷன் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அது குறித்து எழுதிக் கொடுக்கவேண்டும். அதற்கான ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும். அப்படி எழுதிக் கொடுத்து, ஆதாரமும் கொடுத்தால் அதைப்பற்றி விவாதிக்க தனியாக நேரம் கூட ஒதுக்கிக் கொடுக்கலாம். ஆகவே, ப்ரொசீஜர்படி இல்லாமல், திடீர் திடீரென்று அலிகேஷன் சொல்லக்கூடாது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு; துணைத் தலைவர் அவர்களே, * * (கூச்சல், குழப்பம்.)

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, நான் மிகப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். நான் சொன்ன குற்றச் சாட்டுகளும் அவைக் குறிப்பில் இருக்கட்டும் மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்ன குற்றச்சாட்டும் இருக்கட்டும் (குறுக்கீடுகள்.)

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஒரு ப்ரொசீஜரைச் சொன்னேன். அமைச்சர் சொல்லிவிட்டார் என்பதற்காக ப்ரொசீஜரை மாற்றிவிட முடியாது. ப்ரொசீஜர்படி பார்க்கும் போது, இரண்டு பேர் சொன்னதையும் அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும். ஆகவே, அவை இரண்டையும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன் (குறுக்கீடு).

திரு. துரைமுருகன்; மை ஹம்பிள் சப்மிஷன் டெபுடி ஸ்பீக்கர் சார், 86 கேன்டிடேட்ஸ்ஸுக்கு நியாயமாகச் செலக்ஷன் கிடைத்து இருக்க வேண்டும். ஆனால் ஏன் அவர்கள் செலக்ட் செய்யப்படவில்லை? * * * *

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தால் போடப்பட்ட அந்தக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 100 பேரை நீக்கி விட்டு புதிதாக 100 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி சொல்லாமல் இருப்பதால் புதிதாக 100 பேருக்கு இடம் தரவேண்டும் என்ற முடிவாகத்தான் உயர்நீதிமன்றம் முடிவு இருக்க முடியுமே தவிர ஏற்கனவே நடந்து முடிந்து இருக்கும் தேர்வில் எந்தத் தவறும் இல்லை என்பதுதான் அதனுடைய பொருளாகும்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மார்க்கை வைத்து அவனுடைய பர்பார்மென்ஸை கோர்ட் பார்க்கவில்லை. எங்களைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று கோர்ட்டுக்குப் போனவர்களின் மார்க் பெர்பார்மென்ஸை மட்டும் தான் அவர்கள் பார்த்தார்கள்.

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம்: கோர்ட்டுக்குப் போகிறவர்கள் ஏழை பாழைகள் அல்ல. கையிலே காசு இருக்கிறவர்கள் தான் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்; ஹைகோர்ட்டில் ரிட் போடுவது என்று சொன்னால், நானும் வக்கீல், துணைத் தலைவர் அவர்களும் வக்கீல், இந்த மாதிரி தர்ம கேஸ் என்றால் ரூ. 200, ரூ. 300 பெற்றுக் கொண்டு கூட ரிட் போடலாம். அது ஒன்றும் பெரிய பிரமாதம் அல்ல. (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மெடிக்கல் காலேஜ் அட்மிஷன் கேஸ் எதுவும் தர்ம கேஸ் இல்லை.

திரு. துரைமுருகன்; இன்றைக்கு சொல்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கூட நியாயமானவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறோம் என்று சொல்கிறார்கள் (குறுக்கீடு).

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் சொல்வது என்னவென்றால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 100 பேர் தவறாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று உயர்நீதிமன்றம் சொல்லவில்லை.

திரு. துரைமுருகன்: அந்தமாதிரி உயர்நீதிமன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கூப்பிட்டு கேட்கமாட்டார்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம் கரக்டா என்று பார்க்கமாட்டார்கள். யார் கோர்ட்டுக்குப் போனார்களோ, யார் வழக்கு மன்றத்திற்கு போனார்களோ அவர்களுடைய கோரிக்கைகளைத்தான் வழக்கு மன்றம் விசாரிக்குமே தவிர மற்றவர்கள் கோரிக்கையை நீதிமன்றம் விசாரிக்காது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதிலே நான் ஒரு குறிப்பிட்ட ஆதாரத்தைக் கொடுத்து விட்டால், மீண்டும் ஒரு விவாதத்திற்கு இடமில்லாமல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். I am Quoti g from the judgement .

"For all the reasons afore said, we are of opinion that the g ievance of the petitioners, whose ca es had not been referred to Exrerts Commitee that there has been wanton reduction of academic marks or that the e has been an arbitrary award of marks at the interview or that there has been manipulation of marks, cannot be accepted."

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். அப்படி அந்த நீதிமன்றம் ஏன் சொல்கிறது என்றால் குறைவான மார்க் பெற்றவரை சேர்த்த தற்கு நீங்கள் ஜீ.ஓ. மூலம் அந்தப் பள்ளத்தை அடைக்கிறீர்கள். ரங்கபாஷ்யம் என்ற டாக்டர் மகன் தேர்வு செய்யப்பட்டிருக் கிறார். 60 சதவீதம் மார்க் இருந்தால்தான் அட்மிஷனுக்கு அப்ளிகேஷன் போடலாம் என்று இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர் களே, ஒரே ஒரு வேண்டுகோள். Pleas have confidence in my ability to cou ter the rguments of my belov d friend Duraimurug n ஆகவே, அந்த நம்பிக்கையை வைத்துக்கொண்டு (குறுக்கீடு)— என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள், நான் விளக்கம் தருகிறேன்.

I am Quoting from the judgement ;

"On a consideration of the matter, we find that the contentions of the five petition rs do not have any merit in t em. In the first place, th seats have b en reserved for eminent spor smen and not merely for candidates having some proficiency in sports. The word 'eminent' means 'rising above others; conspicuous, distinguished.' (Interruption)



et us calmly argue. He is also a very good arguing person and I am also qui e an experienced person.

'The sea s have b en reserved for eminent sportsmen and not merely for can idates having some proficiency in sports. The word 'eminent' means 'rising above others; conspicuous, distinguish d. Therefore, if stands o reason that it is not mere sportsmanship, but eminence in sportsmanship that has to be the guiding principle on which the selection is to be made and the touch-stone on which the selection has to be tested."

Sinc eminence in sports actiivties cannot be achived by a flourish of the magic wand or by easy methods, bu can be achieved only by long, constant and hard work in the sports field of gymnasium, it goes without saying that the condidate will have to sacrific a good portion of his study time for attaining eminence in sports activities. It is to off set the sacrifice made by the candidate of his academic activities, the Government has deemed it fit to prescribe lesser marks of eligibility for applying for M.B.B.S. Course.'

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, இதை எதன் அடிப்படையில் சொல்லியிருக்கிறார்கள்? நீங்கள் ஜீ.ஓ. போடுகிறீர்கள். ஸ்போர்ட்ஸ்மென், எக்ஸ்ட்ராடினரி என்று. டாக்டர் ரங்கபாஷயம் மகன் அப்படி என்ன பெரிய ஸ்போர்ட்ஸ் மென் என்பது எனக்குத் தெரியும். அப்ளிகேஷன் போடுவதற்கே மினிமம் குவாலிபிகேஷன் இருக்கிறது. அந்த மினிமம் குவாலிபிகேஷன் கூட இல்லாமல் 49 மார்க்குக்கும் கீழே வாங்கியிருக்கிற அன்ஃபிட் பர்சன்.

என்னதான் பிரில்லியன்ட் ஆக இருந்தாலும், ஸ்போர்ட்ஸ்மேன் ஆக இருந்தாலும், அறு அறு என்று வயிற்றை அறுத்து விடுவான். இது மெடிகல் சீட் விவகாரம். உயிரோடு விளையாடுகின்ற விஷயம். இந்த இடத்தில் போய் ஸ்போர்ட்ஸ் மேன் என்ற ஒரு ஜி.ஓ. போட்டு "Sport man eXra ordinarily brillian " என்று சொல்லி, உயிரைக் கொலை செய்யப் பார்ப்பதற் காக அவனிடத்தில் கொடுத்து இருக்கிறார்களே, இரயில்வேயில் வேலை செய்பவன் கூட சுத்தியால் தட்டிப் பார்ப்பான். அவன் ஸ்போர்ட்ஸ்மேன் ஆக இருந்தால் அவனுக்குக் கொடுக்கலாம். ஆனால் இது வயிற்றைத் தட்டிப்பார்க்க வேண்டிய விஷயம். இதிலே ஸ்போர்ட்ஸ்மேன் என்றா பார்க்கமுடியும்? மினிமம் க்வாலிபிகேஷன் வேண்டாமா? ஷெட்யூல்டு கேஸ்ட், ஷெட்யூல்டு டிரைப், பேக்வார்டு கிளாசிற்குக் கூட மினிமம் மார்க் என்று வைத்திருக்கிறீர்கள். ஒரு ஜமீன்தார் வீட்டுப்பிள்ளை. அப்படிப் பட்டவனைச் சேர்க்கவேண்டும் என்பதற்காக இப்படிச் சட்டத்தையும் மீறி, ஒரு ஜி.ஓ.வைப் போட்டு......(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மற்றவர்கள் எல்லாம் குறுக்கிடவேண்டாம் என்று வாதாடியதற்குக் காரணமே உறுப்பினர் துரைமுருகனுக்காகத்தான். அவருக்கு நான் சொல்வது, 'பிகாஸ் ஐ ஆம் அஃப்ரெய்டு'. திரு துரைமுருகன் எக்சைட் ஆவதைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது; எக்சைட் ஆகும்போது பி.பி. அளவுக்கு மீறி ஏறிப்போகும் 'ஐ ஆம் ஹிஸ் எல்டர் பிரதர்' மாதிரி என்பதால் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். The entire discussicn is bassed on th: High Court judgement.

ஹைகோர்ட்டில் போடப்பட்டு, கொண்டுவரப்பட்ட ஜட்ஜ்மெண்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு தான் 'The epicentre of the entire discussions is b s'd on the High Court judg mcn'. What I am doing is I am quoting only some extracts from the judgem nt.' அந்த ஜட்ஜ்மெண்டிலிருந்து படித்தேன். இந்த ஜட்ஜ்மெண்ட் எமினெண்ட் ஸ்போர்ட்ஸ்மேனுக்குக் கொடுத்திருக்கக் கூடாது என்று வாதாடப் பட்டிருக்கக் கூடிய அந்த வழக்கறிஞருடைய வாதத்திற்குப் பதிலாக, நீதிமன்றத்தில் இருக்கக் கூடிய டிவிஷன் பெஞ்ச் கொடுத்த தீர்ப்பைத் தான் நான் படித்தேன். மேலும், ஷெட்யூல்டு காஸ்டுக்கு மினிமம் மார்க் வைத்திருப்பதாகச் சொன்னார்கள் அது தவறு; அவர்களுக்கு மினிமம் மார்க் என்று கொண்டுவரவில்லை. இது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும் என்று நினைக்கிறேன் இருந்தும் அவர்களுக்கும் இருப்பதாகச் சொல்லி, ஸ்டேட்மெண்டு ராங்காகப் போக வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். To keep the records straight, it is only a small point.

திரு. துரைமுருகன்: அரசாங்கம் ஜீ.ஓ. போட்டிருக்கிறது. அரசாங்கம் போட்ட ஜி.ஓ.வை வைத்துக்கொண்டு கோர்ட்டிலே சொல்லலாமே தவிர, அந்த ஜி.ஓ இல்லாமல் ரங்கபாஷ்யத்தின் பிள்ளை உள்ளே போய் இருந்தால், இப்போது வெளியே தான் வந்திருக்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது நீங்கள் இந்த பர்ஃபாமன்ஸ் பட்ஜெட்டிலே என்ன கொடுத்திருக்கிறீர்கள்? எல்லாவற்றையும் முடித்து, மூன்று மாதம் கழித்து, M.D., M.S. M.D. (O.G)., இந்த மாதிரி போஸ்டுகளுக்கு எல்லாம் முடிந்து, 3 மாதம் கழித்து, 2,3 பேரைச் சேர்த்திருக்கிறார்கள்.

'Four addition l seats (on seat in D.M. Nephrology, one seat in D.M. Gastro Enterology and two seats in D.M. (Cardiclogy) have been sanc ioned in G.O.Ms.No. 1634, Health, dated 29th September 1983.'

ஏற்கனவே இந்த கோர்சிற்கு செலக்ட் ஆகியிருந்தவர்கள் போய் படித்துக்கொண்டிருக்கிறார்கள். சந்தடி சாக்கில் அந்த நேரம் பார்த்து, யாரும் கவனிக்காத நேரத்தில், சீட்டைப் போட்டிருக்கிறீர்கள். இந்த ஜி.ஓ.வைப் போட்டிருக்கிறீர்கள். இப்படி ஜி.ஓ. என்ற கவசம் அவனுக்கு மாட்டப்படுகின்ற காரணத்தினால், நீதிமன்றத்தின் அடியிலிருந்து அவன் தப்பிக்கப்



படுகிறான். ஆகவே நான் கேட்பது, 100 இடங்களும், இன்றைக்கு நியாயமாக கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுக்காமல், தட்டிக் கழிப்பதன் காரணத்தால், நீதியிலிருந்து, நேர்மையிலிருந்து இந்த அமைச்சரவை தவறியிருக்கிறது என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கு ஒரு காரணம் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொன்றையும் சொன்னால், உடனடியாக நேரடியாக பாயக்கூடும். மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றை திறக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். திறங்கள். நல்ல ரிஜிஸ்ட்ராரைப் போடுங்கள். புதிய கட்டிடங்கள் கட்டுவதால் சிமெண்ட் எல்லாம் வரும். அதற்கு ஒரு நல்ல ரிஜிஸ்ட்ராரையும் வைஸ்-சேன்சலரையும் போடுங்கள். ஆனால் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று பார்த்தால், நாமினலாக, ரூ. 1 இலட்சம் தான். டாக்டர் ஹண்டே அவர்களுக்கு என்னைப் போல் 'ஆப்போசிஷனில்: இருந்த பழக்கம் உண்டு. நாமினல் என்றால் என்னவாகும் என்பது அவர்களுக்கே தெரியும்.

(பிற்பகல் 12–50)

இன்னொன்று. போன வருஷம் இதே டிமாண்டிலே ரகுமான்கான் அவர்கள் பேசினார்கள். அப்படிப் பேசுகிறபோது என்ன சொன்னார்கள். சரஸ்வதி என்று ஒரு அதிகாரி இருந்தார்கள். அவருடைய பையனுக்கு குறைவான மார்க். அந்தப் பையனைக் கொண்டு போய் மற்ற மாநிலங்களோடு உள்ள பரிவர்த்தனையின் அடிப்படையிலே போடுகிற சீட்டிலே கொண்டு போய் போட்டீர்கள். கர்நாடகாவிலே போட்டு இரண்டு வருடம் கழித்து வாடா தம்பி என்று சொல்லி, பிறகு இங்கே கூட்டிக்கொண்டு வந்து விட்டீர்கள். அந்த வேலையைச் செய்தார்கள் என்று சொன்னார்கள் ரகுமான்கான் அவர்கள். அதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். என்ன நடவடிக்கை. அந்த சரஸ்வதி அம்மாளுக்குப் புரமோஷன் கிடைத்துவிட்டது. நான் என்ன சொல்கிறேன். இப்படி யார் இந்த ராஜதந்திரத்திற்கு கவசம் பூட்டுகிற வேலைக்குக்கூட லாயக்கு இல்லாமல் இருக்கிறார்களோ, அவர்களை நீங்கள் மற்ற மாநிலத்திற்கு எக்ஸ்போர்ட் பண்ணுகிறீர்கள். அப்படிப் பண்ணியதில் நான் கேட்கிறேன். 2 வருடம் கர்நாடகாவில் படித்துவிட்டு மறுபடியும், எம்.எம்.சி. அல்லது ஸ்டான்லிக்குக் கொண்டு வருகிறீர்கள்.

* * **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையிலே இல்லாதவரைப் பற்றிப் பேசக் கூடாது என முன்பே தீர்ப்பளிக்கப் பெற்றுள்ளது. எனவே தற்போது உறுப்பினர் கூறியதும் நீக்கப் படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்குத் தெரிந்து இருக்குமோ, இருக்காதோ, தெரியாது. இது ரெசிப்புரோக்கல் சிஸ்டம், அதிலே வந்து டாக்டர் சரஸ்வதி. என்று சொன்னார்கள். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீசாக இருந்தவர்கள். செட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்த ஒரு லேடி. ஆகவே கொடுக்கப்பட்டது. இதை எல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், முன்பு பல ஆண்டுகளாக இருந்து வருகிற சிஸ்டம். இந்த ஓல்டு சிஸ்டத்தின் கீழ் அவர்கள் யார் யாருக்கெல்லாம் கொடுத்தார்கள் என்பதையும் சொல்ல வேண்டி வரும். நாங்கள் வந்து கொண்டு வந்த முறை அல்ல இது.

'This is an old system and that is being follow d.' இன்னும் நான் சொல்லவேண்டுமென்றால். அவர்கள் காலத்திலே-யெல்லாம் ஓரல் இன்டர்வியூவிற்கு 75 மார்க் என்று இருந்தது.

'Human element variation or the human whims and fancies, அதற்கு எந்த அளவிற்கு அன்றையதினம் வாய்ப்பு இருந்தது. அதை நாங்கள் 30 ஆக குறைத்திருக்கிறோம். பரிவர்த்தனை என்ற முறையில் நடைபெற்ற ஒன்றை தவறு என்று சொல்வது அவ்வளவு நன்றாக இருக்குமா? என்பதை திரு. துரைமுருகன் அவர்களே சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஆட்சியில் பயங்கரமான அளவிலே....

திரு. துரைமுருகன்: நான் சேலஞ்ச் பண்ணுகிறேன். (கூச்சல் குழப்பம்).

(திரு. இரா. தாமரைக்கனி, மற்றும் சில உறுப்பினர்கள் எழுந்து ஆட்சேபித்தனர்).

திரு. துரைமுருகன்: * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நேரிடையாகப் பேசிக்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஒரே ஒரு விஷயம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பக்கத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாம் எக்சைட் ஆகிவிடக்கூடாது. நம்மை உணர்ச்சிவசப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடேயேதான். திரு. துரைமுருகன் பேசுகிறார்கள். Mr. Duraimurugan wants us to get excited. We should not fall into the trap of Duraimurugan என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அது அவருடைய பழைய டெக்னிக். Let us not fall into his trap. நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லதாக இருக்கும்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



In the High Court of Judicature, Madras, Friday, the Seventh day of November, one thousand nine hundred and seventy five, a Writ was filed.

அந்த ரிட் மனுவை அப்போது 75-லே போட்டார்கள். யார் போட்டார்கள். அப்போதிருந்த சில அரசியல்வாதிகள் எல்லாம் போட்டிருந்தார்கள். நான் இங்கே என்னிடத்தில் தேவையான எல்லாக் குறிப்புகளும் வைத்திருக்கிறேன். நான் பதில் சொல்லும் நேரத்தில் எனக்கு பயன்படும் என்று. அதிலே அந்த ஜட்ஜ்மெண்ட்டிலே ஜஸ்டிஸ் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் ஜஸ்டிஸ் யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை— (குறுக்கீடு) ஏனென்றால் நீங்கள் அப்படி நடந்திருக்கிறதா என்று கேட்டதற்காகச் சொல்லவிரும்புகிறேன். அவர்கள் சொன்னார்கள். 'நான் எதற்குள்ளேயும் போவதற்கில்லை' என்று.

அப்போது இன்டர்வியூ மார்க் 75 என்று வைத்திருந்தார்கள், தவறு நடந்திருக்கிறது என்று சொன்னபோது, மார்க்குகளை கூட்டுவதிலே தவறு இருந்தால் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது நான் சொல்ல விரும்புகிறேன், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலேதான், இன்டர்வியூ மார்க்கையும் குறைத்துள்ளோம், இன்டர்வியூ பண்ணும்போது டேப் ரிக்கார்ட் செய்து எடுத்து வைக்கச் செய்தோம். நாங்கள் தவறு செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தால் ஏன் டேப்ரிக்கார்ட்டரை வைக்க வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் டேப் ரிக்கார்ட்டரை வைத்துக் கொள்ளாமல், 75 மார்க்குகள் வைத்துக்கொண்டு, அன்றைக்கு இன்டர்வியூ நடத்தியதில் எவ்வளவோ பேர்கள் ஹைகோர்ட்டுக்கு கேஸ் கொண்டுபோன அந்த நாட்கள் எங்கே, துணிவுடன் தைரியமாக டேப்ரிக்கார்ட்டரை வைத்துக்கொண்டு இன்டர்வியு செய்யுங்கள்,

Let us keep our cards open. Let us throw all our cards open என்று சொல்கிற இன்றைய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி எங்கே என்பதை மட்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, இதைக் கொண்டு யாரும் எக்ஸைட்டாகி, யாரும் இந்த விவாதத்தை சூடாக்க வேண்டிய தேவையில்லை; அமைதியாக பேசலாம். அமைதியாகப் பேசினால் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரைமுருகன் அவர்களுக்கு 20 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப் பெற்ற நேரத்திற்கும் அதிகமாகப் பேசிவிட்டார்கள். எனவே, இன்னும் 3 நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. துரைமுருகன்: அதற்கு நான் என்ன பண்ணுவது? உங்களுக்கே தெரியும் எவ்வளவு குறுக்கீடுகள்.

இந்தப் பிரச்னையில் நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், நாங்கள் தவறு செய்தோம் என்று சொல்கிறார்கள்.

* * *

நான் இப்பொழுதும் சொல்கிறேன் இங்கே. எல்லா ஆட்சிக் காலத்திலும் சில நேரங்களில் தவறுகள் நடக்கலாம். நடக்க்ாமலும் இருக்கலாம். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை தயவுசெய்து கேளுங்கள். நான் சொல்கிறேல் வறு நடக்கவில்லை என்று, நீங்கள் சொல்கிறீர்கள் தவறு நடந்திருக்கிறது என்று.

ஆனால் நான் ஒன்றைக் கேட்கிறேன், நீங்கள் சொல்வது போல் தவறு நடந்திருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், அந்த சிறிய தவறுகூட இல்லாமல் ஆட்சி நடத்தத்தானே, மக்கள் உங்களை தேர்ந்தெடுத்து ஓட்டு போட்டார்கள். நீங்கள் சிறிய தவறு செய்தால் நாங்கள் பெரிய தவறு செய்வோம் என்று சொல்வது எப்படி முறையாகும்? * *

ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்களைக் கேட்கிறேன், தைரியம் இருந்தால் நீங்கள் மேற்சொண்டு எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள், எங்களுக்கு கவலை இல்லை.. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளியே பேசும் விஷயங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டு பேசக் கூடாது. இது போன்ற நடைமுறைகளை தவிர்க்க வேண்டும். இது போன்ற முறை அனுமதிக்கப் பெற்றால், பேப்பர்களில் வந்த செய்திகளை வைத்துக் கொண்டு, இங்கே ஒருவருக்கொருவர் வாதிட்டுக் கொள்ளத்தான் நேரம் சரியாக இருக்கும். ஆகவே அதை நீக்குகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, * * * *

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது சரியா?

திரு. கு. ரமணி: நீங்கள் ஏற்கெனவே நீக்கிய பகுதிகளை மறுபடியும் எடுத்துச் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே நீக்கப் பட்ட விஷயம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதால், அதையும் நீக்குகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இதுவரை 37 நிமிடங்கள் பேசி இருக்கிறார்கள் (குறுக்கீடு) அவருக்கு ஒதுக்கப் பட்டது 20 நிமிடங்கள் தான். எனவே நான் அடுத்த உறுப்பினர் சி. கோபால் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(பிற்பகல் 1-00).

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் முடிக்கவில்லை, தயவுசெய்து முடிக்கவிடுங்கள், இண்டரப்ஷனாக இருந்தால் நான் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இண்டரப்ஷன் வரும்படி நீங்கள்தான் பேசுகிறீர்கள். இண்டரப்ஷன் 10 நிமிடம் இருந்திருக்கும், என்றாலும் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கும் அதிகமாகப் பேசிவிட்டீர்கள். அதிக நேரம் அனுமதிக்கிற போது முடித்துக்கொள்ள வேண்டுமென்ற நினைவே இல்லாமல் நீங்கள் நிம்மதியாக சிரித்துக்கொண்டே பேசிக்கொண்டிருக்கிறீர்கள். முடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும்போதுதான் கோபம் வருகிறது, வம்பு வருகிறது, இது உங்களுக்கு வழக்கமாகப் போய்விட்டது. 35 நிமிடங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள்; போதும், தயவுசெய்து அமருங்கள்.

திரு. துரை முருகன்: இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள். முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து வம்பு செய்யாதீர்கள். இன்னும் பல பேர் பேச இருக்கிறார்கள். நான் சொல்வதை நீங்கள் கேட்பதில்லை என்றால் நான் என்ன செய்வது?

THIRU DURAI MURUGAN: No please. It is not possible. I am always ready to obey you Sir. But it is not fair. So much of my time has been consumed in interruption. More than 25 minuies was lost in interruption,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்களே கணக்கு எடுத்துப் பார்த்தால் உங்களுக்கு அதிகமாக டைம் கொடுத் திருப்பது தெரியும். தயவுசெய்து அமரவேண்டும். (கூச்சல்-குழப்பம)

திரு. துரை முருகன்: வேகம் வேகமாகப் பேசிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கு மெடிக்கல் பீல்டிலே இன்னொன்று. முக்கியமாக 60 வயதானவர்களுக்கு எல்லாம் கூட எக்ஸ்டன்ஷன் கொடுக்கிற நிலை இருக்கிறது. சில நேரங்களிலே இளைஞர் களுக்கு வழிவிடாமல் இளைஞர்களுக்கு வாய்ப்புத் தராமலே

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பறிக்கிறார்கள். 60 வயதானவர்களுக்கு சர்வீஸ் நீட்டிப்புக் கொடுக்கிறார்கள். அதிலே ஒன்று டாக்டர் நரேந்திரன். இதுகுறித்து எல்லா ஹவுஸ் சர்ஜன்களும்கூட பெரிய ஸ்டிரைக் செய்தார்கள். ஆனால் அவருக்கு நீங்கள் எக்ஸ்டென்ஷன் கொடுத்திருகிறீர்கள். ஆனால் அதேபிரிவில் இருந்த டாக்டர் இராமமூர்த்திக்கு நீங்கள் தரவில்லை.

அதுமட்டுமல்ல, டாக்டர் யு. முகமது, காயிதே மில்லத்திற்கும் கோயாவிற்கும்——சர்க்கரை வியாதியிலே கரைகண்ட நிபுணர்——அந்த டாக்டருக்கும் கொடுக்கவில்லை. இது நியாயந்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்று, பல பேர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே தேர்ச்சி பெற்று ஜி. எச். இல் ஒர்க் செய்து கொண்டிருக்கிறார்கள். எம். எஸ். படித்த 1,200 பேர்களை வெளியே போகச் சொன்னால் என்ன அர்த்தம்? இது நியாயந்தானா?

திருவள்ளூருக்குப் பக்கத்திலே 16 கிலோமீட்டர் தூரத்திலே மெய்க்குப்பம் என்ற இடத்தில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் 60 குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். அதிலே 26 குழந்தைகளுக்கு பிட்ஸ் வந்திருக்கிறது. ஒரு டீம் ஆப் டாக்டர்ஸ் இங்கிருந்து அனுப்பினார்கள். என்ன என்று அவர்கள் கண்டு பிடித்ததில் ஏற்கெனவே அந்தப்பொறுப்பாளராக இருக்கிறவருக்கு 17 வருஷமாக பிட்ஸ் இருக்கிறது என்றும் அங்கே பணிபுரியும் ஆயாவிற்கு மென்டல் டிஸ்ஸார்டர் இருக்கிறது என்றும் அதனால் சைக்கலாஜிக்கலாக அங்குள்ள குழந்தைகளுக்கு பிட்ஸ் வருகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல்.... (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது மட்டுமல்ல, அது மட்டுமல்ல, என்று திரு. துரைமுருகன் தொடர்ந்து பேசிக் கொண்டே போவது சரியல்ல. அவருக்கு கொடுத்த நேரம் முடிந்து விட்டது. தயவுசெய்து திரு. துரைமுருகன் அமர வேண்டும். அடுத்து திரு. சி. கோபால் பேசுவார். (கூச்சல்—குழப்பம்.)

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, .... (கூச்சல்—குழப்பம்)

திரு. துரைமுருகன்: (துணைத் தலைவரைப் பார்த்து) *....

(கூச்சல்—குழப்பம்)

(திரு. துரைமுருகன் தம் கையில் இருந்த தாள்களை மசையின் மீது தூக்கி எறிந்து கொண்டே பேசியபோது ஆளுங் கட்சித் தரப்பிலிருந்து பலர் எழுந்து நின்று ஆட்சேபணைக் குரல் கொடுத்தனர். தி.மு.க. வரிசையில் இருந்தும் பலத்த எதிர்ப்புக் குரல் ஆளுங்கட்சியை நோக்கி எழுப்பப்பட்டது.)





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரைமுருகன் உட்காருங்க.... அவை மரபுகளை மீறிப் பேசவேண்டாம். நீங்கள் பேசுவது போல மற்றவர்களாலும் பேச முடியும். என் அனுமதியின்றி யார் பேசினாலும் அவைக் குறிப்பில் எதுவும் ஏறாது. (கூச்சல்—குழப்பம்)

(திரு. தாமரைக்கனி தம் இருக்கையில் இருந்து எழுந்து பேரவையின் நடுவில் உள்ள மேசையைத் தாண்டிப்போய் திரு. துரைமுருகன் சட்டையைப் பிடித்தார்) (கூச்சல்—குழப்பம்)

திரு. தாமரைக்கனி தம்முடைய இடத்திற்குப் போக வேண்டும். உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்கள் இடத்தில் அமருங்கள், உட்காருங்கள். அமைதியாக இருங்கள். (கூச்சல்—குழப்பம்) இதெல்லாம் அவைக் குறிப்பில் வேண்டாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். திரு. துரைமுருகன் பேசும்போது தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தியதாகவும், அதனால் திரு. தாமரைக்கனி இந்தப் பக்கம் வந்து திரு. துரைமுருகன் சட்டையைப் பிடித்தார் என்றும் எனக்குத் தகவல் சொல்லப்படுகிறது. (கூச்சல்—குழப்பம்). எல்லோரும் தயவுசெய்து அமைதியாக இருங்கள். நடந்தது என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ளலாம். (கூச்சல்—குழப்பம்)

(பிற்பகல் 1-10)

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்திற்குக் காரணமே உறுப்பினருடைய உரிமைகளைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு இங்கே அவைக்குறிப்பில் இடம் பெறத் தகாத வார்த்தைகளை திரு. துரைமுருகன் வெளியிட்டது தானே தவிர வேறு அல்ல. மிகக் கேவலமாக, சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனியின் மீது புழுதி வாரித் தூற்றும் அளவிற்குக் கேவலமான வார்த்தைகளை, இங்கே குறிப்பிட முடியாத அளவிற்கு உள்ள வார்த்தைகளை, அசிங்கமான வார்த்தைகளை, அருவருக்கத்தக்க வார்த்தைகளை, நாகரீகமற்ற வார்த்தைகளைச் இங்கே சொல்லியிருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவரவர்களே, நான் பேசி, அமைச்சர்திரு. ஹண்டே அவர்கள் எனக்குப் பதில் அளித்து, ஒருவருக்கொருவர் பேசி முடித்ததற்குப் பிறகு, நேரம் அந்த வாக்கு வாதத்தில் போய்விட்ட நேரத்தில், பேச வேண்டிய நேரம் குறைந்து போய்விட்டதால், எனக்கு இன்னும் கொஞ்சம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நேரம் கொடுக்கும்படி டெப்டி ஸ்பீக்கர் அவர்களிடத்தில்
மன்றாடிக் கேட்டேன். ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்
என்று சொல்லி, வேகம் வேகமாகப் பாயிண்டுகளைப் பேசி,
இரண்டு நிமிடங்களில் பெல் அடிக்கும்பொழுது, நான்
சொன்னேன்**...... எனவே, நான் வெளிநடப்புச் செய்கிறேன்
என்று கோபமாக கையிலிருந்த புத்தகத்தைப் போட்டுவிட்டு
வெளியேற ஆரம்பித்தேன். அப்பொழுது பலர் கூச்சல்
போட்டார்கள். அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால்*
என்று சொல்லிக் கொண்டே வெளியே போனேன். ஆனால்
திரு. தாமரைக்கனி அவர்கள் அந்தப் பக்கத்திலிருந்து ஓடி வந்து,
இங்கே எகிறி என்னுடைய நெஞ்சிலே கை வைத்து, என்னைக்
கீழே தள்ளப் பார்த்தார்கள்.

நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
திரு. மணிமாறன் அவர்கள்மீது நான் மதிப்பு உள்ளவன். நான்
அருவருக்கத்தக்க வார்த்தைகளையோ அல்லது ஆபாசமான
வார்த்தைகளையோ அல்லது சொல்லக்கூடாத வார்த்தை
களையோ பிரயோகப்படுத்தவில்லை. நான் சொன்னதெல்லாம்,
* * * * * என்று சொல்லிவிட்டு நான் வெளிநடப்பு செய்ய
ஆரம்பித்தேன். அப்படிப் போனேனே தவிர, யாரைப் பற்றியும்
நான் தவறாகச் சொல்லவில்லை.

இன்னும் சொல்லப்போனால், திரு. தாமரைக்கனியைப்
பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. எனக்கு
நேரம் கொடுக்கவில்லை என்பதற்காகக்கோபம் வந்தால், டெப்டி
ஸ்பீக்கர் மேல்தான் வரவேண்டும். அவரைக்கூடத் தனிப்பட்ட
முறையில் சொல்லாமல், நான் படித்தபுத்தகத்தைக் கீழே
போட்டுவிட்டு வேகமாகப் போனேன்.

நான் இப்பொழுதும் சொல்கிறேன். மாண்புமிகு கல்வி
அமைச்சரவர்கள், திரு. எஸ்.டி.எஸ். அவர்கள், திரு. ஹண்டே
அவர்கள், திரு. திருநாவுக்கரசு அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்
நாவலர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சரவர்களும்
அப்பொழுது இல்லை. எதிர்க்கட்சித் தலைவரவர்களும்
உட்கார்ந்திருந்தார்கள். திரு. மணிமாறன் அவர்கள்
சொன்னதுப் போல் எந்த அருவருக்கத்தக்க வார்த்தைகளையும்
நான் சொல்லவில்லை. திரு. தாமரைக்கனி அவர்கள் அந்தப்
பகுதியிலேயிருந்து தாவி, எகிறி இந்தப் பகுதிக்கு வந்து,
திரு. ரமணி அவர்களின் பக்கத்தில் நின்று கொண்டு என்னுடைய
மார்பிலே கையை வைத்துத் தள்ளப் பார்த்தார். நண்பர்கள்
என்னைப் பிடித்துக்கொண்ட காரணத்தினாலே, நான் கீழே
விழாமல் நின்றேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



13258
சென்னை-600 008

நான் தலைவரிடத்தில் சொல்லிக் கொள்கிறேன். எதிர்க்
கட்சியினர் குற்றம் குறைகளைச் சொல்லும் வாய்ப்பு கிடைக்க
வில்லை என்ற கோபத்தின் காரணமாக வெளியே போவது
ஜனநாயக மரபு. அதற்காக ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் எகிறி
இங்கே வந்து இந்தப் பக்கத்தில் உள்ள எங்கள் மீது கை வைப்பது
என்றால், நான் ஒன்றைச் சொல்கிறேன், எங்களை அவர்கள்
அடித்து விடுவார்கள் என்றோ அல்லது கொன்று விடுவார்கள்
என்றோ பயத்தில் சொல்லவில்லை, ஒன்றைப் பணிவோடு
தெரிவித்துக்கொள்கிறேன். சாவதற்குத் துணிந்த பிறகுதான்
இந்தக் கட்சியிலே நாங்கள் இருக்கிறோம். ஒவ்வொரு கட்சி
யிலேயும் இப்படிச் சொல்லுகின்ற உரிமை இருக்கலாம். ஆனால்
அப்படிச் செய்யும்பொழுது, நாங்களும் எங்களால் முடிந்த
அளவிற்கு அதேவிதத்தில் ஈடுபட முடியும். தலைவர் அவர்களிடம்
நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இவ்வளவு
பேர்களுக்கு மத்தியில் இப்படி நடந்திருப்பது குறித்து தங்களுடைய
தீர்ப்பு என்ன என்பதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்.

ஒன்றை மட்டும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களைக்
குறை சொல்லத்தான் சொல்வார்கள்; குற்றங்குறை எதுவுமே
சொல்லக்கூடாதா? "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை
வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு" என்பதை நாவலர்
அவர்கள் சொல்வார்களே, கடுமையான வார்த்தைகளைச்
சொல்லும்பொழுது அதைத் தாங்கிக்கொள்ள வேண்டிய தன்மை
ஆளுங்கட்சியினருக்கு இருக்க வேண்டும். இத்தனை பேர்களுக்கு
மத்தியில் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் இந்தப் பக்கம் வந்து
என்னுடைய மார்பில் கையை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்
என்றால், நான் அதை எனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருத
வில்லை; ஜனநாயகத்தில் எங்களுக்கு ஏற்பட்ட விழுப்புண்ணாகத்
தான் நான் அதைக் கருதுகிறேன். ஆனால், இந்த நிலைமை
குறித்துத் தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதை அறிந்துகொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. தாமரைக்கனி
என்ன சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.
(கூச்சல்—குழப்பம்) எல்லோரும் கொஞ்சம் அமைதியாக
இருங்கள்; நான் இதுபற்றி முடிவு எடுக்கும்முன் எல்லாத் தரப்
பினரையும் கேட்டுத்தான் ஆகவேண்டும். (கூச்சல், குழப்பம்)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே,
திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசியது பற்றி எனக்கு
வருத்தம் இல்லை. ஆளுங் கட்சியினை விமர்சனம் செய்து
பேசுவது அவர் கடமை. ஆனால் அவர் பேசிக்கொண்டிருக்கும்

போது நான் குறுக்கிட்டேன். அப்போது என்னைக் ** என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல. அவர் பேசி முடித்துப் போகும்போது எல்லா அமைச்சர்களையுப் குரக்குறைவாகப் பேசி பேப்பர்களை எடுத்து கிழித்துக் கொண்டு போனார். மேலும் என்னைப் பார்த்து ** என்று சொன்னார்கள். என்னைப் பற்றிப் பேசினால் பரவாயில்லை; **
(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த நிகழ்ச்சியினைப் பார்த்துக் கொண்டிருந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இதுபற்றி தம் கருத்துக்களைச் சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

*திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் தன்னுடைய பேச்சுக்களை முடிக்கின்ற சந்தர்ப்பத்தில் இன்னும் கொஞ்சம் அவகாசம் வேண்டும் என்று துணைத் தலைவரிடத்திலே கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஏற்கெனவே திரு. துரைமுருகன் அவருக்குக் கொடுத்த நேரத்திற்கு மேல் பேசியாகிவிட்டது என்றுசொல்லி அடுத்த உறுப்பினரைத் துணைத் தலைவர் அவர்கள் பெல் அடித்துக் கூப்பிட்டார்கள். மறுபடியும் திரு. துரைமுருகன் கெஞ்சிக் கேட்டார்; அப்போது வேறு ஒரு உறுப்பினர் பேச ஆரம்பித்துவிட்டார் என்று சொன்னவுடனே இவர் கொஞ்சம் ஆத்திரத்தோடு இருந்தார். அந்த ஆத்திர மிகுதியால் புத்தகங்களை எல்லாம் தூக்கிப் போட்டு துணைத் தலைவரைப் பார்த்து ** என்று கேட்டு, ஆகவே நான் வெளியிலே போகிறேன், இங்கே இருக்கவில்லை என்று சொன்னார்கள். அப்போது எல்லாம் அவர் ஆவேசத்தோடுதான் பேசினார்கள். அப்போது அங்கே எதிர்பக்கத்தில் இருந்து பல எதிரான வார்த்தைகள் வந்தன. இவர்களும் திருப்பிப் பதில் சொன்னார்கள். அப்படிப் பரிமாறிக்கொள்ளப்பட்ட வார்த்தைகள் இங்கே ரெக்கார்ட் பண்ணக்கூடிய வார்த்தைகள் அல்ல; அவையிலே உபயோகப்படுத்தக்கூடிய வார்த்தைகள் அல்ல. அவர்கள் கோபத்தில் சொன்னார்கள். அப்படி சொல்லிக்கொண்டிருந்த திரு. துரைமுருகன் கையைப் பிடித்து வெளியே போங்கள் என்று நான் இழுத்துவிட்டேன். அப்படி இழுத்துவிட்டுக்கொண்டிருக்கும் போது அங்கே எதிர்ப்பக்கத்தில் இருந்து பேசிக் கொண்டிருந் தவர்கள் மூன்று, நான்கு பேர் கும்பலாக எழுந்தார்கள். திரு. தாமரைக்கனி மேசை மீது ஏறி இந்தப் பக்கம் தாவிக் குதித்து வந்து திரு. துரைமுருகன் அவர்களைக் கையை நீட்டி அடித்தார்—நெஞ்சில் பிடித்ததாக இருக்கலாம்—ஆனால் எங்களுக்கு அப்படிப் பிடித்தது அடித்தது போல் தோன்றியது. அப்போது மற்றவர்களோடு சேர்ந்து நானும் திரு. துரைமுருகன் அவர்களைப் பிடித்து நிறுத்திவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு உணர்ச்சியும் வருவதற்கு என்ன காரணம்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற பெற்றது.





திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, காரணம் என்று எடுத்துக்கொண்டால் இந்தப் பக்கத்தில் அவர் பேசக்கூடிய வார்த்தைகளில் ** ** என்று தொடர்ந்து சொல்கிறார். இல்லை என்று மாண்புமிகு அமைச்சரும் பதில் சொல்லிக் கொண்டிருக் கிறார். திரு. துரைமுருகன் சொன்னதற்கு ரியாக்ஷனாக அந்தப் பக்கத்திலே இருந்து ** ** என்ற வார்த்தைகள் வருகின்றன. இப்படி ஒருவருக்கொருவர் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லோரும் ஆத்திரப் படும்படியான நிலை உருவாகி இரண்டு பக்கமும் நடக்கின்றது. இவர் பேசும்போது சொல்வதற்கெல்லாம் அவர்களும் பதில் சொல்கிறார்கள். அப்படித்தான் வந்துகொண்டிருக்கின்றது. பரிபூரணமாக இதற்குக் காரணம் என்ன என்பதையும், அதற்கு யார் பொறுப்பாளி என்பதையும் சொல்லி குற்றத்தை ஃபிக்ஸ் பண்ணவேண்டும் என்றால் பெரிய என்கொயரி வைத்து 50, 60 பேர்களிடம் நீங்கள் சாட்சியம் வாங்கவேண்டும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் நடந்த விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே உணர்ச்சிவசப் பட்டுவிட்டார்கள் என்று சொல்வதைக் காட்டிலும் உணர்ச்சிகளை உண்டாக்கிக் கொண்டு நடைபெறக்கூடிய சம்பவங்கள்தான் அதிகம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கடைசியாக அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை என்ற முறையிலே பேப்பர்களை எடுத்துக்கொண்டு தன்னுடைய ஆசனத்தைவிட்டு வெளியே வரக் கூடிய நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு ** ** ** என்ற முறையில் பேசிவிட்டு வேகத்தோடு வருகிறார்.

(பிற்பகல் 1-20)

அதே நேரத்தில் ஆளும் தரப்பு வரிசையிலே இருக்கிற உறுப் பினர்கள் எழுந்து கூச்சலிடுகின்றார்கள். திரு. தாமரைக்கனி அவர்கள் அங்கிருந்து எழுந்து இந்த மேசை மீது உட்கார்ந்து தாவி வந்து அவர் கையைப் பிடிக்கிறார், தள்ளுகிறார். இந்த அளவுக்குச் சபையிலே நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. நம்முடைய திரு. சித்தன் அவர்களும் மாண்புமிகு திரு. இஸ்மாயில் அவர்களும் வந்து தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். ஓரளவு தாமரைக்கனியைத் தடுத்துத் தள்ளி இருக்கிறார்கள் ஆகவே, அந்த அளவிற்குச் சபையிலே சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதை நான் குறிப்பிடுவதோடு, ஆளும் கட்சி வரிசையிலே இருப்பவர்கள் பலம் இருக்கிறது என்ற காரணத்தாலே, இம்மாதிரியான முறையிலே ஈடுபட்டால் எவ்வாறு பாதுகாப்பு என்பதைத் தலைவர் அவர்கள் தீர்மானிக்க வேண்டுமென்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி இனி இந்தப் பக்கம், அந்தப் பக்கம் குதித்து ஓடி ஒருவருக்கொருவர் நேரடியாக மோதுவது என்கின்ற நிகழ்ச்சி நடைபெறாமல் தடுக்க தாங்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம போலீஸ் பணியை மேற்கொள்கின்ற துர்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டதற்காக நான் வருந்துகிறேன். நடந்து விட்ட நிகழ்ச்சிகள் குறித்து, பரிமாற்றம் பற்றி எனக்கு முன்பேசிய அருமை அன்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். நண்பர் திரு. துரைமுருகன் பேசிய பேச்சு, கால அவகாசம் கிடைக்காததைக் குறித்து ஆத்திரப்பட்டு சில வார்த்தைகள் சொன்னதுண்டு. அந்த வார்த்தைகள் மிகக் கீழ்த்தரமான வார்த்தைகள் என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒருமைப்படியாக சில வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அந்தப் பகுதியிலிருந்தும் அந்தச் சில வார்த்தைகள் பரிமாற்றம் செய்யப் பட்டன. எனவே உணர்ச்சி மேலோங்கி அருமை சகோதரர் இந்த மேசையைத் தாண்டி இங்கே வரவேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய கருத்து. இங்கே இதுபோன்ற சம்பவம் நிகழ்ந்ததே கிடையாது, அப்படி வரலாறு கிடையாது. சாதாரணமாக பயன்படுத்துகின்ற வார்த்தைகள், பார்லிமென்டரியாகஇல்லாமல் இருந்தால்,அவற்றை சபைக் குறிப்பிலிருந்துநீக்கி விடுகின்ற வழியை நாம் கொண்டிருக்கிறோம். எனவே, இங்கே வேண்டாத சில வார்த்தைகள் வந்தாலுங்கூட அவற்றிற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு முடியும். இதையெல்லாம் விட்டுவிட்டு உடல் வலிமையைக் காட்டுவதற்கு இந்த மன்றத்திற்கு வரத் தேவையில்லை. இதையெல்லாம் தீர்த்துக் கொள்வதற்கு வேறு மன்றங்கள் இருக்கின்றன. வெளி மைதானங்கள் இருக்கின்றன. அங்கே சென்று தீர்க்க வேண்டிய வழிமுறைகள் இருக்கின்றன. இந்த மன்றத்தில் இன்றையதினம் இம்மாதிரி முறை கையாளப் பட்டதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, இதற்காக ஆய்வு நடத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தாங்கள் தள்ளப்பட்டிருக்கிறீர்கள் என்பதைச் சொல்லி, ஆய்வு தேவை என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நாளுக்கு நாள் இந்தச் சபையில் மிகவும் துர்பாக்கியமான நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்ற வாரம் ஒரு இன்சிடன்ட், அதற்கு மேலாக இந்த வாரம் இது நடந்திருப்பதைப் பற்றி நான் மிகவும் வருத்தமும் கவலையும் படுகிறேன். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் ஆளுங்கட்சியைப் பார்த்து சில குறைகள்



கூறுவது வழக்கம்—சட்டபூர்வம் என்று நான் நினைக்கிறேன். தவறு செய்கிறார்கள், தவறு செய்து விட்டார்கள் என்றெல்லாம் திரு. துரைமுருகன் குற்றம் சாட்டிப் பேசி வருகிறார்; என்றாலும் அமைச்சர் அவர்களே சொல்கிறார்கள், I have got capacity leave it to me. I will certainly give suitable reply to the Members. யாரும் உணர்ச்சி வசப்பட வேண்டாம் என்று அடிக்கடி சொன்னார். திரு. துரைமுருகன் அவகாசம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார். டெப்புட்டி ஸ்பீக்கர் நேரம் ஆகி விட்டது என்று சொன்னார். கடைசியில் டெப்புட்டி ஸ்பீக்கர் அவகாசம் கொடுக்காதது தவறு என்று சொல்லி திரு. துரைமுருகன் கோபப்பட்டு வெளியே போகிறார். அப்பொழுது ஏதோ சில வார்த்தைகள் சொன்னதாக இங்கே சொன்னார்கள் கேவலமான வார்த்தைகள் சொல்லி, நான் கேட்கவில்லை. அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்ற வார்த்தைகளாகவும் இல்லையென்று நான் கருதுகிறேன். அப்பொழுது வேகமாகவும், ஆத்திரமாகவும் அவர்கள் பேசிவிட்டுப் போனதன் காரணமாக, ஆளுங்கட்சியிலேயிருந்து இரண்டு மூன்று நண்பர்கள் தாவி வந்து, அவரைத் தாக்க முற்பட்டது மிகவும் வருந்தத் தக்கது. இம்மாதிரியான நிலை இனிமேல் இங்கே உருவாகக் கூடாது என்ற ஒரு தீர்ப்பை நீங்கள் வழங்க வேண்டும். எதிர்க் கட்சிக்காரர்களுக்கு என்ன பாதுகாப்பு நீங்கள் கொடுக்கப் போகிறீர்கள் என்பதையும் நீங்கள் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். நாளுக்கு நாள் இது மிகுதியாகிக் கொண்டே போகிறது. இதுபோல. சட்டசபையில் நடக்க அனுமதிப்பது சரியல்ல; இது சட்டம் செய்யவேண்டிய சட்ட சபை. இங்கே நடந்திருக்கிற துர்பாக்கியமான நிலை மிகவும் வருந்தத் தக்கதாகும்; எல்லோரும் கவலைப்பட வேண்டிய நிகழ்ச்சியாக இருக்கிறது. இதற்குத் தகுந்த தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் உள்ளபடியே அனைவருக்கும் வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கக் கூடியனவாகும். இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்ற மையத்திற்கு அருகிலே இருந்தபடியால் அவர்கள் அங்கு என்ன நடைபெற்றன என்பதை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஒரு அரசைப் பற்றி குற்றங்களைச் சுமத்துவதோ, அல்லது குறைகளைச் சொல்வதோ கூடாது என்பதல்ல; எதிர்க்கட்சிகள் சார்பிலே உள்ள உறுப்பினர்கள் அப்படித்தான் சொல்வார்கள். எனினும், அதற்கும் வரைமுறைகளும், மற்றவைகளும் இருக்கின்றன. மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் சொல்வதிலிருந்தும், மாண்புமிகு திரு. கருப்பையா அவர்கள் மாண்புமிகு திரு. துரைமுருகன் சொல்லக்கூடாத ஒரு சொல்லைச் சொன்னார்

என்றும், மாண்புமிகு திரு. தாமரைக்கனி செய்யக்கூடாத செயலைச் செய்தார் என்றும் எடுத்துச் சொல்லி இருப்பதிலிருந்து, சொல்லக்கூடாத சொற்களைச் சொல்லி இருப்பதும், செய்யக் கூடாத செயலைச் செய்திருப்பதும் இந்த அவைச்குச் சொந்தக் காரர்களாக இருக்கிற நம் அனைவருக்கும் வருத்தத்தையும் வேதனையையும், தலைக்குனிவையும் உண்டாக்குவதாகும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்ற சொற்போர் இரண்டு பக்கத்திலும் நடந்தது. இவர் பேசினதும் அந்தப் பக்கத்திலிருந்து பதில் கிடைத்தது. சாதாரணமாக இந்தச் சட்டமன்றத்தில் உபயோகப்படுத்துகிற, ரெக்கார்டுகளில் வைத்திருக்கிற வார்த்தைகள் அல்ல என்று நான் சொல்லி இருக் கிறேன். என்னென்ன வார்த்தைகள் என்று பரிசீலனை செய்ய ஆரம்பித்தால் பெரிய பிரச்னையில் அது முடியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஐயப்பாட்டின் அடிப்படையில் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் திட்டவட்டமாகச் சொன்னார்கள். சொல்லக் கூடாத வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும், இரண்டு பக்கத்திலிருந்தும் அவை வந்தன என்றும் பொதுவாகவே திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். செய்யக்கூடாத ஒரு செயல். ஆளும் கட்சிப் பகுதியிலிருந்து மேசையைத் தாண்டி மற்றொரு பக்கம் போய் ஒருவரைத் தாக்குவது என்பது நடக்கக்கூடாத செயல், நடைபெறக் கூடாத செயல்தான். இதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டும். இங்கே இருக்கின்ற அத்தனைக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் இந்த அவையினுடைய கண்ணியத்தையும், கௌரவத்தையும் மற்றவைகளையும் காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத் தினுடைய அடிப்படையில், எல்லாக் கட்சித் தலைவர்களும் இங்கே எடுத்துச் சொல்லி இருப்பதன் அடிப்படையில், இங்கே இருக்கிற அத்தனை பேர்களும் நடந்து கொள்ள வேண்டியவர் களாக இருக்கிறோம். ஆகவே இந்த அவைக்கு ஒரு இழுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால் அது அத்தனை பேர்களுக்கும் ஏற்பட்டிருக்கிற ஒரு இழுக்கு தான். இந்த அவை சிறப்பாக, செம்மையாக நடக்கிறது என்றால் அத்தனை பேர்களுக்கும் புகழும், பெருமையும் தருகிற ஒன்றுதான்.

ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு முடிவிற்கு வரவேண்டும். இதுவரையில் பேசிய பேச்சுக்கள், மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் எதிர்க்கட்சியில் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக் களுடைய அடிப்படையில், அந்தக் கருத்துக்கள் ஒவ்வொரு



வருக்கும் அறிவுரையாக இருந்தது என்பது மட்டுமல்லாமல், குற்றம் செய்தவர்களை எல்லாம் அவர்களுடைய நெஞ்சை உறுத்துகிற அளவிற்கு இருந்தன. ஆகவே அவையினுடைய இந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை இதோடு இதை நிறுத்தி விடலாம் என்பது ஒன்று. அல்லது இந்த அவையின் எதிர்கால நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இனிமேல் நடைபெறாது என்று எடுத்துக்காட்டுகிற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் நடந்த நிகழ்ச்சிக்காக வருந்துகிறேன் என்று வருத்தம் தெரிவித்துக் கொள்வதும்..

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு, அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் 'நான் நடந்த நிகழ்ச்சிக்கு வருந்துகிறேன்' என்று சொல்வதன் மூலமும் ஒரு முடிவு ஏற்படுத் தலாமா என்று யோசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் கேட்டுத் தீரவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. இல்லையென்றால், அவையை ஒத்தி வைத்து விட்டு, கட்சித் தலைவர்கள் அத்தனை பேரையும் கூப்பிட்டு வைத்து, இதற்கு என்ன முடிவு காணலாம் என்று கேட்டு, அவர்களது கருத்தின் அடிப்படையில் இதற்குத் தங்கள் ஒரு முடிவு எடுப் பதும் சரியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நான் முதலில் பேக்ட்ஸ்ஸை மட்டும் சொன்னேன். எங்கள் கட்சியின் சார்பில் கருத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. அது என்ன என்று கேட்டால், இந்த மாதிரி நிலைமை இங்கே எதிர்காலத்தில் நிச்சயமாக ஏற்படக்கூடாது. இதற்கு நேரடியாக தாங்களே எப்படி பதில் சொல்லிவிட முடியும் என்று எனக்குத் தெரிய வில்லை. நீங்கள் பிசினெஸ் அட்வைசரி கமிட்டியைக் கூட்டி கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு வைத்து, இதைப் பற்றி கொஞ்சம் சாங்கோபாங்கமாக பரிசீலனை செய்து ஒரு சீரான முடிவுக்கு வரவேண்டும்.

இந்த நிகழ்ச்சி, இப்படித் தாக்குகிற நிகழ்ச்சி முதல் நிகழ்ச்சி அல்ல. இது இரண்டாவது நிகழ்ச்சி. முன்பு ஒரு தரம் இந்த மாதிரி நடந்து இருக்கிறது. இப்போது முன்னால் இருக்கும் டேபிளையும் தாண்டி இந்தப் பக்கத்திற்கே வந்து தாக்கும் நிலை இருக்கிறது. முன்பு ஒரு முறை இதுபோல நடந்தது. அதிலே விசாரணை நடைபெற்று, அதோடு பிரச்சினை முடிந்து விட்டது. ஆகவே, கோபதாபத்தோடு பேசும் வார்த்தைகளைச் சமாளித்து, இது சட்டமன்றம், இதற்கு உண்டான மரபுகளைக் காத்து, அந்த

வகையில் ஒரு சரியான நடவடிக்கையை எடுக்கவேண்டியுள்ளது. அந்த வகையில் தீர்வு காண வேண்டும், ஒரு வரையறை வகுக்க வேண்டும். அந்த முறையில் இதிலே சமாதானம் காண வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்கிற கருத்து சரி என்று எனக்குப் படுகிறது. ஆகவே, இங்கேயுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தையும் மாலை 4 மணிக்குக் கூட்டுகிறேன். அதிலே எடுக்கப்படும் முடிவை, இங்கே மாலை அவை நடந்து கொண்டு இருக்கிற போது, அவைக்கு அறிவிக்கிறேன். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: முடிவை இப்போதே தெரிவிக்க வேண்டும். முடிவு தெரிகிறவரையில் சபையை நடத்தக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மாதிரி டிக்டேட் செய்கிற முறையில் பேசுவதால் தான் சபையில் இந்த மாதிரி நிலைமை வருகிறது... (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே ஒரு முறை, வேறு எதற்காகவே அல்ல, நான் மைக்கைப் பிடித்து உடைத்தேன் என்றும், திரு. ரகுமான்கான் செருப்பைக் காட்டினார் என்றும், சும்மா இருந்தார் திரு. சுப்பு என்றும், எங்கள் மூவரையும் சபையை விட்டு வெளியேற்றி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழைய விவரங்களை எல்லாம் இப்போது சொல்ல வேண்டாம். என்னுடைய காலத்தில் அவை, எல்லாம் நடக்கவில்லை.

திரு. துரைமுருகன்: இந்தச் சபையில் நடந்ததைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எல்லாம் இப்போது தெரிவிக்க வேண்டியது இல்லை. எனக்குத் தெரியும். மாலை நான்கு மணிக்கு தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன். ஆகவே, இப்போது அந்தப் பிரச்னை பற்றி மீண்டும் பேசவேண்டாம். இது குறித்து நான் முடிவு அறிவிக்கிற வரையில், இது பற்றிய எந்தச் செய்தியோ அல்லது குறிப்போ பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது என்று உத்தரவிடுகிறேன். மாலை 4 மணிக்குத் தலைவர்களைச் சந்தித்து கலந்து பேசிய பிறகு, என்னுடைய தீர்ப்பை அவைக்கு அறிவிக்கிறேன்.

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



(மாலை 4—00)

மாலை 4—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்னும் முடிவுறாத காரணத்தால் பேரவை மாலை 4-30 மணி வரை ஒத்திவைக்கப் பெறுகிறது.

மாலை 4—30 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 4-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 4—30)

மீண்டும் பேரவை மாலை 4—30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையில் நடைபெற்ற நிகழ்ச்சி குறித்து பேரவைத் தலைவர் அவர்களின் அறையில் நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்னும் முடிவுபெறவில்லை. எனவே பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 18-4-1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 4-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

162. தமிழ்நாடு சருப்புப் பண்ணைக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

163. சோழன் பொறியியற் கழகத்தின் 1982 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619--ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்).

164. சோழன் பொறியியற் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956, ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

130. கோரிக்கை எண். 18 — மருத்துவம் பற்றிய மானியக் கோரிக்கை மற்றும் கோரிக்கை எண். 19 — பொதுச் சுகாதாரம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் உரைகள் — 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

131. இந்திய முறை மருத்துவம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

132. கோரிக்கை எண். 18 — தொழு நோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

133. கோரிக்கை எண். 19-க்கான துணைக் குறிப்பு — கழிவுநீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல், 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

134. கோரிக்கை எண். 19 — காற்று—நீர் மாசு கட்டுப்படுத்தல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

135. 1984-85 ஆம் ஆண்டில் மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

136. 1984-85 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வி பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

137. 1984-85 ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

138. 1984-85 ஆம் ஆண்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து மற்றும் மருந்து பொருட்களை கட்டுப்பாட்டு நிர்வாகம் பற்றிய செயல் வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

139. 'சென்னை குடிநீர் 1984' என்ற புத்தகம் (தமிழ்).

140. 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், 1984' என்ற புத்தகம் (தமிழ்).





## இணைப்பு I

(60-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை 18—மருத்துவம், 1984–85

### முன்னுரை.

இவ்வரசின் முக்கிய நோக்கம் சுகாதார நலப் பணிகளை மேம்படுத்தல், நோய்வராமல் தடுத்தல், நோய் தீர்த்தல், புது வாழ்வு அளித்தல் ஆகிய பணிகளை விரிவுபடுத்துவதன் மூலம் கிராம மக்களின் நலனை தீவிரமாக மேம்படுத்துவதாகும். இந்நோக்கத்தைத் தொடர்ந்து, அதிக படுக்கை வசதிகளுக்கு வகை செய்வதற்காகக் கட்டிடங்கள் கட்டுதல், நவீன சாதனங்களை வழங்குதல், சிறப்புப் பணி புரிதல், மருத்துவ துணை மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், அளிக்கப்படும் பணியின் தரத்தை மேம்படுத்தல் ஆகிய வசதிகளை சமூகத்தில் மிக வறிய மக்களும் பெறும் வகையில் சுகாதாரப் பணி அளிக்கப்படும் முறையை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. கிராமத்திலுள்ள ஏழை மக்களும் பயனடையும் வகையில் நவீன மருத்துவப் பணிகளை அளிக்கும் பொருட்டு மாவட்டத்திலும் வட்டத்திலும் உள்ள மருத்துவ மனைகளையும், வட்டத் தலைமை இடங்களில்லாத மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் மேம்படுத்த அரசு கருதியுள்ளது. மருத்துவ பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. அரசு நியமித்த வல்லுநர் குழு இம்மாநிலத்தில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்காகத் தனது அறிக்கையை அனுப்பியுள்ளது. இதற்கான சட்டம் இயற்றப் பட்டு வருகிறது. வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் எவ்வித வற்புறுத்தலும் வலுக்கட்டாயமும், இல்லாமல், தானாகவே அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அடிப்படையில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் இம் மாநிலம் இந்நாட்டிலேயே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முதலிடம் வகிக்கிறது.

### மருத்துவக் கல்வித்துறை.

மருத்துவ கல்வி மேம்பாட்டில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும் இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்வி நிலையங்களை நன்கு மேற்பார்வையிட வேண்டுமென்ற நோக்கங்களுடன் 1966 ஆம் ஆண்டு மருத்துவக் கல்வி இயக்கம் அமைக்கப்பட்டது. தற்போது இம்மாநிலத்தில் 8 மருத்துவக் கல்லூரிகளும், பல் மருத்துவக் கல்லூரி ஒன்றும் உள்ளன. இவற்றுள், மூன்று மருத்துவக் கல்லூரிகளும், பல் மருத்துவக் கல்லூரியும் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சியுள்ள ஐந்து கல்லூரிகள் மாவட்டங்களில் உள்ளன. இக் கல்லூரிகள்

ஆண்டுதோறும் ஓராயிரத்திற்கு மேற்பட்ட மருத்துவப் பட்டதாரிகளையும், 979 மருத்துவ முதுநிலைப் பட்டதாரிகளையும் மருத்துவ பட்ட மேற்படிப்பு, மருத்துவ பட்டய மேற்படிப்பு, உயர் சிறப்புப் படிப்புகளை உருவாக்குகின்றன. இத்துடன் துணை மருத்துவப் பணியாளர்களுக்கானப் பயிற்சியும் அளித்து வருகின்றன. பல்வேறு பட்டப்படிப்புக்கள், பட்ட மேற்படிப்பு, தனிச்சிறப்புப் படிப்பு ஆகியவற்றை பயிலுவதற்கு அனுமதி அளிக்கப்பட்ட இடங்கள் குறித்த விவரம் இணைப்பு-I மற்றும் II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட துறைகளில் ஏற்பட்டுள்ள மருத்துவ மனித ஆற்றலின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அரசு புதிய படிப்புகளை ஏற்படுத்தியும் மற்றும் இருக்கின்ற படிப்புகளில் உள்ள இடங்களை அதிகரித்தும் உள்ளது, அவை பின்வருமாறு:—

மருத்துவ பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்புகள்

(1) எம்.டி. (பொது மருத்துவம்)

(2) எம்.டி. காசநோய், மார்பு சம்பந்தப்பட்ட நோய்கள்.

(3) எம்.டி. மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல்.

(4) எம்.எஸ். பொது அறுவைச் சிகிச்சை.

(5) டி.எம். நரம்பியல்.

(6) டி.எம். குடல் நோயியல்.

(7) டி.எம். இதய நோயியல்.

(8) மகப்பேறு மருத்துவம் மற்றும் மகளிர் நோயியல் பட்டய படிப்பு.

(9) கண் அறுவை பட்டப் படிப்பு.

(10) குழந்தை மருத்துவத்தில் பட்டயப் படிப்பு.

1983-84 ஆம் ஆண்டில் சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் பட்ட மேற்படிப்பு (எம்.டி.) தொடங்கப்பட்டுள்ளது. இதில் மூன்று பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

பின்வரும் மருத்துவ பட்ட மேற்படிப்புகளையும் பட்டய மேற்படிப்புகளையும் 1984—85 ஆம் ஆண்டில் இருந்து சில மருத்துவக் கல்லூரிகளில் புதிதாக தொடங்க அரசு கருதி வருகிறது.

(அ) தொழுநோய் இயலில் பட்டயப் படிப்பு.

(ஆ) எம்.டி. தொழு நோயியல்



(இ) எம். பார்மசி

(ஈ) எம்.டி. சத்துணவு, நீரிழிவு நோயியல்

(உ) எம்.சி.எச். குடல் நோயியல்

(ஊ) எம்.சி.எச். (நாள் அறுவை மருத்துவம்)

(எ) எம்.டி. நோய் குறியியல்

(ஏ) எம்.டி. மேக நோய் மருத்துவம்

(ஐ) மேக நோய் மருத்துவத்தில் பட்டயப் படிப்பு

(ஒ) நீரிழிவு நோயியலில் பட்டயப் படிப்பு

(ஓ) எம்.சி.எச். (இதய அறுவை சிகிச்சை மருத்துவம்)

(அஅ) எலும்பு முறிவு நோயியலில் பட்டயப் படிப்பு

(ஆஆ) எம்.டி.எஸ். (மருந்து கொடுத்தல், நோய் அறிதல் கதிர் வீச்சியல்)

பட்ட மேற்படிப்பு/பட்டயப் படிப்புகளில் இடங்களின் எண்ணிக்கையை பின்வருமாறு அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | எம்.டி. மயக்க மருந்தியல் | 2 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். |
| 2. | டி.ஏ. | | ,, |
| 3. | டி.ஏ. | 2 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர். |

(பி) மருத்துவ அதிகாரிகளுக்கான நினைவுகூர் பயிற்சி வகுப்பு

வட்ட மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் பணியின் தரத்தை மேம்படுத்தவும் மருத்துவத் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சிகளை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனும் மருத்துவ அதிகாரிகளுக்காக தொடங்கப்பட்ட நினைவு கூர் பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

(சி) மருத்துவத் துணைப் படிப்புகள்.

(1) பி.எஸ்.சி. செவிலியர் படிப்பு;

(1) 4 ஆண்டு படிப்புக் கால அளவுள்ள அடிப்படை பி.எஸ்.சி. (செவிலியர்) படிப்பு சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் கல்லூரியில் நடத்தப்படுகிறது. அடிப்படை பி.எஸ்.சி. (செவிலியர்) பட்ட வகுப்பில் சேர்த்து கொள்ளப்படும் மாணவிகளின் எண்ணிக்கை 1983 ஆம் ஆண்டில் 25லிருந்து 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(ii) சென்னை, மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள செவிலியர் கல்லூரியில் பி.எஸ் சி. (செவிலியர்) படிப்பு நடத்தப்படுகிறது. இதில் ஒவ்வோராண்டும் பணியிலுள்ளவர்கள் 20 பேரும், தனிப்பட்டவர்கள் 10 பேரும் சேர்த்து கொள்ளப்படுகின்றனர். இப்படிப்பின் கால அளவு 2½ ஆண்டுகளாகும் இப்படிப்பு அடிப்படைப் படிப்பிற்கு மேற்பட்ட ஒன்றாகும்.

(2) மருத்துவ அறிவியல் ஆவணப்படிப்பு

மருத்துவ அறிவியல் ஆவணத்தில் பட்டப்படிப்பு சென்னை மருத்துவக் கல்லூரியில் 1983-ஆம் அண்டு ஜூலை முதல் நடத்தப்படுகிறது. இதில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். (பணியிலுள்ளவர்கள் மூவர் தனிப்பட்டவர்கள் மூவர்).

(3) மருந்தாக்கியல் பட்டயப் படிப்பு.—

பின்வரும் அரசினர் மருத்துவக் கல்லூரிகளில் தற்போது மருந்தாக்கியலில் பட்டயப் படிப்பு நடத்தப்படுகிறது. இதில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு.

1. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை 125 இடங்கள்
2. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் 60 இடங்கள்
3. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் 60 இடங்கள்

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலும் மருந்தாக்கியல படிப்பில் பட்டய வகுப்புகளைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஏனைய பயிற்சிப் படிப்புகள்;

(எ) செவிலியர் பயிற்சி.

மொத்தம் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் எட்டு உள்ளன. இவற்றில் ஆண்டு தோறும் மொத்தம் 740 பேர் (பயிற்சி உதவித் தொகை பெறாதவர்கள் 50 பேர் உட்பட) சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்படிப்பு ஓராண்டில் இரண்டு பருவங்களில் நடத்தப்படுகிறது. (பயிற்சி உதவித் தொகை பெறுவோர் 345 பேரும், பயிற்சி உதவித் தொகை பெறாதவர்கள் 25 பேரும் உள்ளனர்), செவிலியர் பயிற்சிப் படிப்பின் கால அளவு 3½ ஆண்டுகள் ஆகும், பொது செவிலியர் படிப்பும் பேறுகால மருத்துவ படிப்பின் காலமும் இதில் அடங்கும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் காலி இடங்கள் ஏற்பட்டவுடன் பயிற்சி உதவித் தொகை பெற்று பயின்று வந்த அனைவரும் அரசுப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.



(பி) இயன் மருத்துவம்.

ஆண்டு தோறும் இயன் மருத்துவத்தில் (பி.பி.டி.) பட்டப் படிப்பு, கே.கே. நகரிலுள்ள மறுவாழ்வு மற்றும் செயற்கை அவயங்கள் பொருத்தும் நிறுவனத்தில் நடத்தப்படுகிறது. இப்பட்டப் படிப்பின் கால அளவு 3 ஆண்டுகள் ஆகும். இதில், மருத்துவமனை பயிற்சி ஆறு மாதமும் அடங்கும், 1983-84ஆம் ஆண்டில், பயிற்சி உதவித் தொகை பெறாத மாணவர்களின் எண்ணிக்கை 20லிருந்து 25—ஆக உயர்ந்துள்ளது.

(சி) பொது உடல் நலச் செவிலியர் பட்டயப்படிப்பு.

பொது உடல்நலச் செவிலியர் பட்டயப்படிப்பு 10 திங்கள் கால அளவு கொண்டது. சென்னை, மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் கல்லூரியில் நடத்தப்படுகிறது. இதில் 20 பணியிலிருக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்

(டி) ஏனைய படிப்புகள்.

மேற்குறிப்பிட்ட படிப்புகளைத் தவிர, அனேக பயிற்சிமுறை படிப்புகளும் அதாவது துப்புரவு ஆய்வாளர் படிப்பு, கண்வரைவாளர் படிப்பு, சான்றளிக்கப்பட்ட கதிர்வீச்சு உதவியாளர் படிப்பு, இருட்டறை உதவியாளர் படிப்பு, ஆய்வுக்கூட தொழில் நுட்பர் படிப்பு, எலும்பு முறிவு நோயியல் வல்லுநர் படிப்பு, ஆய்வுக் கூடத் தொழில் நுட்பவியல் (நிலை 2) படிப்பு கண் சிகிச்சை உதவியாளர் படிப்பு, செயற்கை உறுப்பு எலும்பு முறிவு சிகிச்சை தொழில் நுட்பப் படிப்பு, பல் கட்டும் படிப்பு, பல் பாதுகாப்பு படிப்பு ஆகியவை பல்வேறு மருத்துவக் கல்லூரிகளிலும் கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளிலும், சென்னை, கிண்டியிலுள்ள தடுப்பு மருத்துவ நிலையத்திலும் நடத்தப்படுகின்றன

மருத்துவ பல்கலைக் கழகம்.

மருத்துவப் பல்கலைக் கழகத்தின் குழு தனது அறிக்கையை அரசுக்கு கொடுத்துள்ளது. சுகாதார அறிவியலுக்காக தனி பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இப்பல்கலைக்கழகம் அமைப்பதில் ஏற்படும் தொடர் மற்றும் தொடரா இனச் செலவு குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்துள்ளது.

| | | |
|---|---|---|
| தொடரா இனச் செலவு— | | |
| மூலதனம் | .. .. | ரூ. 531.51 இலட்சம். |
| வருவாய் | .. .. | ரூ. 28.00 இலட்சம். |
| மொத்தம் | .. | ரூ. 559,51 இலட்சம். |

தொடரினச் செலவு ஆண்டொன்டிற்கு ரூ. 111.85 இலட்சமாகும்

1984—85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.01 இலட்சம் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரிகள், கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகள் மேம்பாட்டுப் பணிகள்.

1983—84 ஆம் ஆண்டில், சில துறைகளின் நிலை உயர்த்தவும் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் புதிய பதவிகள் ஏற்படுத்தப்படுவதன் மூலமும், சில் சிறப்புப் பிரிவுகளை வலுப்படுத்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் விவரம் வருமாறு;—

| | | |
|---|---|---|
| 1. | மதுரை இராஜாஜி அரசினர் மருத்துவமனை. | இதய அறுவை சிகிச்சைப் பிரிவு ஒன்றை புதிதாகத் தொடங்குதல். |
| 2. | சென்னை, குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை. | குழந்தைகள் இதய நோய் புதிய சிகிச்சைப் பிரிவு ஒன்றை புதிதாகத் தொடங்குதல். |
| | குழந்தைகள் மருத்துவமனை. | நிலைய மருத்துவ அதிகாரி பதவி ஒன்றை ஏற்படுத்துதல். |
| | | குழந்தை மருத்துவ (இரத்த அணுவியல் பிரிவு) உதவிப் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்படுத்துதல். |
| 3. | கோயம்புத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை. | 28 படுக்கை வசதியுடன் கூடிய மகப்பேறு வார்டு ஒன்றைத் தொடங்குதல். |
| 4. | தஞ்சாவூர், இராஜா மிராசுதாரர் அரசினர் மருத்துவமனை, | மகப்பேறு—மகளிர் நோயியல் துறைக்கு பணியாளர்களுக்கும் மருத்துவக் கருவிகளுக்கும் ஒப்புதலளித்தல் |
| 5. | சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை. | தலைக் காயங்களுக்கு சிகிச்சை பிரிவு ஒன்றைப் புதிதாக தொடங்குதல். |





1984..85 ஆம் ஆண்டில் புதிய பிரிவுகளைத் தொடங்கவும் இருக்கும் துறைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் மூலம் வலுப்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு;—

| | | |
|---|---|---|
| 1. | செங்கற்பட்டு, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு. | செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்குழந்தை நல அறுவை சிகிச்சைப் பணிகளுக்கு வகை செய்தல். |
| 2. | சென்னை, குழந்தைகள் நல நிறுவனம். | (எ) 24 மணி நேர உயிர் வேதியியல் ஆய்வுக் கூடத்தை தொடங்குதல். |
| | | (பி) ஊட்டச் சத்து மிகுந்த மருந்துகளைக் கொண்ட தனியான துறைகளைத் தொடங்குதல். |
| 3. | மதுரை, இராஜாஜி அரசினர் மருத்துவ மனை. | (எ) குழந்தை நல சிகிச்சை துறைக்கு கூடுதல் பணியாளர்கள். |
| | | (பி) தீவிர மருத்துவச் சிகிச்சைப் பிரிவிற்கு கூடுதல் பணியாளர்கள். |
| | | (சி) இதய நோய் சிகிச்சைத் துறைக்கு கூடுதல் பணியாளர்களையும், கருவிகளையும்வழங்குதல். |
| | | (டி) சுவாசநோய் மருந்தகத்திற்கு கூடுதல் பணியாளர்கள். |
| 4. | சென்னை, இராஜா சர் இராமசுவாமி முதலியார் மகப்பேறு மருத்துவ மனை. | உயிர்வேதியல் ஆய்வுக்கூடத்தை மேம்படுத்துவதற்காக பணியாளர்கள் அமைத்தல். |
| 5. | சென்னை அரசினர் பொது மருத்துவமனை | (அ) மருந்தாக்கியல் துறையை வலுப்படுத்தல். |
| | | (ஆ) மருத்துவ வேதியல் ஆராய்ச்சி நிலையத்திற்கு கூடுதல் பணியாளர்கள். |

| | | |
|---|---|---|
| | | (இ) நுண் படமெடுக்கும் (மருத்துவம்) போட்டோ பிரிவு ஒன்றை அமைத்தல். |
| 6. | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி. | தொண்டை, காது மூக்கு மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சை மருத்துவர் பதவியை ஏற்படுத்தல். |
| 7. | சென்னை, மருத்துவக் கல்லூரி. | மரபு வழிப் பண்பியல் துறையை தொடங்குதல். |
| 8. | சென்னை, கிண்டியிலுள்ள கிங்நிறுவனம் | ரிஹைட்ரேஷன் பொட்டலங்களை தயாரித்தல். |

புதிய கட்டிடங்களுக்கான கருவிகளும், பணியாளர்களும்.

கடந்த 5 ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 11 கட்டிட திட்டங்களில், சில தற்போது முடிவடைந்துள்ளன. சில முடிவடையும் தருவாயிலுள்ளன. 1984—85 ஆம் ஆண்டில், (கீழே கொடுக்கப்பட்டுள்ளது) இந்த புதியக் கட்டிடங்களுக்குத் தேவையான பணியாளர்கள் (ரூ. 12.76 இலட்சம்) மற்றும் கருவிகள் (ரூ. 70.48 இலட்சம்), மேசை நாற்காலிகள் (ரூ. 3.32 இலட்சம்) வாங்கவும் கருதப்பட்டுள்ளது.

1. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள மத்திய கருத்தடை அறுவை சிகிச்சை பிரிவிற்கு பணியாளர்களை நியமித்தல், மேசை, நாற்காலிகளை வழங்குதல்.

2. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள அவசரச் சிகிச்சை பிரிவிற்கும், விபத்துப் பணி பிரிவிற்கும் பணியாளர்களை நியமித்தல்.

3. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி—மருத்துவ மனையிலுள்ள 16 படுக்கை வசதி கொண்ட குழந்தை நல அறுவை சிகிச்சை வார்டிற்கு பணியாளர்கள் நியமித்தல், கருவிகளை வழங்குதல்.

4. திருச்சிராப்பள்ளி, அரசுத் தலைமையிட மருத்துவ மனையில், தொடங்கப்படவிருக்கும் புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிக்குப் பணியாளர்களை நியமித்தல், கருவிகளையும், மேசை நாற்காலிகளையும் வழங்குதல்.

5. மதுரை, இராஜாஜி அரசினர் மருத்துவ மனையிலுள்ள (தலைக் காயங்கள் மருத்துவ வார்டுக்கு) 20 படுக்கை வசதி கொண்ட வார்டிற்கு பணியாளாகளை நியமித்தல், கருவிகளையும் மேசை—நாற்காலிகளையும் வழங்குதல்.

6. சென்னை, அரசினர் ஸ்டேன்லி மருத்துவ மனையிலுள்ள கோபால்ட் சிகிச்சைப் பிரிவிற்கு பணியாளர்களை நியமித்தல்.



7. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் எலும்பு சிகிச்சைப் பிரிவிற்கு பணியாளர்களை நியமித்தல், கருவிகள்-மேசை நாற்காலிகள் வழங்குதல்.

8. சென்னை கீழ்ப்பாக்கம், அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் நீரிழிவு நோய் ஆராய்ச்சி பிரிவிற்கு கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.

9. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 20 படுக்கை வசதியுடன் கூடிய குழந்தை நல வார்டிற்கு பணியாளர்களை நியமித்தல், கருவிகள்-மேசை, நாற்காலிகள் வழங்குதல்.

10. தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட தீப்புண் சிகிச்சைப் பிரிவிற்குப் பணியாளர்களை நியமித்தல், மேஜை, நாற்காலி, வாங்குதல்.

11. தாம்பரம் சாசநோய் நலம் பேண் மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம், புற நோய் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றிற்குக் கூடுதல் பணியாளர்கள் நியமித்தல், மேசை, நாற்காலிகள், வாங்குதல்.

சென்னையில் உள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் சமூகநோய்த் தடுப்பு மருத்துவத் துறையின் நிலையை உயர்த்துதல்—

1984-85-ஆம் ஆண்டில், சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள சமூக நோய்த்தடுப்பு மருத்துவத் துறையில் சில பதவிகளின் நிலையை உயர்த்தவும் புதிய பதவிகளை செயற் படுத்தவும் வகை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

அரசினர் பொது மருத்துவமனையில் மூப்பியல் மருத்துவத் துறையும் மாநகரில் உள்ள 8 புறநகர் மருத்துவ மனைகளில் மூப்பியல் மருத்துவப் பிரிவுகளும் தொடங்குதல்—

நமது நாட்டில் முதியோரின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது 1931-இல் 60 வயதிக்குமேல் வாழ்ந்த முதியோர்களின் எண்ணிக்கை 2 சதவீதமாகும். ஆனால் 1981—இல் இவர்களின் எண்ணிக்கை 12 சதவீதமாக இருந்தது. இனிமேலும் இது அதிகரிக்கும். எனவே நமது மாநிலத்தில் முதியோருக்குப் போதுமான மூப்பியல் மருத்துவ வசதி அளிப்பது அவசியமாகும் எனவே, சென்னை பொது மருத்துவமனையிலும், மாநகரில் உள்ள 3 புறநகர் மருத்துவமனைகளிலும் (கே. கே. நகர், அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசினர் புறநகர் மருத்துவமனைகள்) மூப்பியல் சார்ந்த மருத்துவத்துறை தொடங்க கருதப்பட்டுள்ளது. இத்திட்டத் திற்கு ரூ. 2.59 இலட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1984 ஏப்ரல் 17

## புற்றுநோய்க் சட்டுப்பாடு.

1984–85–ஆம் ஆண்டில் காஞ்சீபரம், காரப்பேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு கூடுதலாக இரண்டு சிவில் அறுவை மருத்துவர்களையும், ஆறு உதவி அறுவை மருத்துவர்களையும், நியமனம் செய்ய அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

## சாதனங்கள்.

1983–84–ஆம் ஆண்டில் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் நவீன உட்கோள்,இதய மருத்துவ சோதனைக் கூடம் செயற்கை கணைய சிகிச்சைக்கருவி அமைக்கவும், குளிரூட்ட மிகை வேக மையப்போக்குச் சுழற்சிக் கருவி, மருத்துவலேசர் ஒளிக்கற்றைக் கருவி, ஆகியவற்றை வாங்கவும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், பல்வேறு நவீன மருத்துவக்கருவிகளான, செயற்கைச் சிறுநீரகக் கருவிகள், உயர் அழுத்தக் கிருமி நீக்குக் கருவிகள், நுண்ஒளி உடற்புகுப்பாய்வுக் கருவி ஒளிவய உருப்பெருக்கி, வாயுமயநிறப் பகுப்பாய்வுக் கருவி ஆகிய மருத்துவக் கருவிகளை வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது. இவை மருத்துவக் கல்லூரிகள், கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள், கிண்டியில் உள்ள கிங் நிறுவனம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும். திருநெல்வேலி அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை கீழ்ப்பாக்கம் அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை ஆகியவற்றில் உள்ள இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் ஆக்சிஜன் சேமிப்புக்கு மைய ஏற்பாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 117.92 இலட்சம்நிதி ஒதுக்கிடப் பட்டுள்ளது.

## சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் நவீன உட்கோள் இதய மருத்துவச் சோதனைக்கூடம் ஏற்படுத்தல்.

சென்னை, பொது மருத்துவமனையில் அமைக்கப்படவிருக்கும் நவீன உட்கோள் இதய மருத்துவ சோதனைக் கூடத்தின் சூரிய கருவிகளும் உயர் ஆற்றல் மின் ஆக்கியுடன் அனைத்து துணைக் கருவிகளும் ரூ. 73.55 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. அவை விரைவில் நிறுவப்படும். 1984-85 ஆம் ஆண்டில், ரூ. 78,45 இலட்சம் செலவில், நவீன மருத்துவக் கருவிகளான இதய மீளொலி வரை கருவி, நலநிலைக்காட்சிக் கருவி, வாயுமய நிறப்பகுப்பாய்வுக் கருவி, டிவரைபடக் கருவி, சிறுநீர்ப்பை தாரரை நோக்கி, சோடியம், பொட்டாசியம் ஆகிய தனிமங்கள் கணி மின்கருவி, கீற்றொலி விளக்கு ஆகியவற்றை, மருத்துவக் கல்லூரிகள், கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள், சென்னை பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுக்கு வழங்கக் கருதப்பட்டுள்ளது.



1984 ஏப்ரல் 17]

## மருத்துவக் கருவிகள் பராமரிப்புப் பட்டறை.

மருத்துவக் கல்லூரி, கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவக் கருவிகளை நல்ல நிலையில் வைத்து வரும் பொருட்டு, மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் இணைந்த பெரிய மருத்துவமனைகள் மூன்றிலும் மாநகரில் உள்ள கல்லூரி இணைந்த பெரிய மருத்துவமனை ஒன்றிலும் சிறு பணிப் பட்டறைகள் அமைக்க ஏற்பாடு செய்யும் திட்டம் 1984–85ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கட்டிடங்கள்.

1983–84 இல் கல்லூரி இணைந்த மருத்துவமனைகள், மாணவ மாணவியர் இல்லங்கள் ஆகியவற்றின் வசதிகளைப் பெருக்கும் வகையில் கட்டிடம் கட்டும் பல்வேறு திட்டங்களுக்கு ரூ. 197.90 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. 1984–85இல் கட்டிடம் கட்டும் திட்டத்திற்கு ரூ. 69 03 இலட்சம் அனுமதிக்கக் கருதப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமான திட்டங்கள் சில வருமாறு:—

1. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மகப்பேறு வார்டின் மீது ரூ. 20.00 இலட்சம் செலவில் முதல் மாடி கட்டுதல்.

2. சிசு நல நிலையம்:—குழந்தைகள் மருத்துவமனையில் ரூ. 12.60 இலட்சம் செலவில் நவீன சமையற்கூடம் கட்டுதல.

## மாணவர்களுக்கு அதிக வசதிகள் செய்து கொடுத்தல்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சிற்றுண்டியகம் இருக்கும் முதல் மாடிக்குமேலே, வெளியிலிருந்து வந்து படிக்கும் மாணவர்களுக்கு (ஆண்கள்) நண்பகல் உணவறை கட்டுதல்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவியர் இல்லத்தில் கூடுதல் இடவசதிகள் செய்து கொடுத்தல்.

சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் கட்டாயச் சுழல்முறை ஏற்பாட்டின்படி தங்கியிருக்கும் மருத்துவர்களுக்கு தற்போதுள்ள வசதிகளை நவீனப்படுத்தல்.

## 4. குளுமைசாதன வசதிகள்.

1984-85ஆம் ஆண்டில் பின்வருவனவற்றிற்கு குளுமை சாதன வசதிகள் செய்து கொடுக்கக் கருதப்பட்டுள்ளது:—

கோயம்புத்தூரில் உள்ள கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரட்டை அறுவை சிகிச்சைக் கூடங்கள் இரண்டில் குளுமை வசதி செய்து கொடுத்தல்.

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தீவிர இதய நோய் சிகிச்சைப் பிரிவுக்குக் குளுமை வசதி செய்து கொடுத்தல்.

## பிணவறைக் கட்டிடம்.

சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் குளுமை வசதி கொண்ட பிணவறைக் கட்டிடம் கட்டக் கருதப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல்.

1984-85இல் ரூ. 4.40 இலட்சம் செலவில் பின்வரும் நிறுவனங்களுக்குக் குடிநீர் வழங்கும் வசதியை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது:—

சென்னை மங் நிலையத்தில் குடிநீர் வழங்கும் வசதியை மேம்படுத்தல்.

சென்னையில் உள்ள அரசினர் கஸ்தூரிபாய் மகளிர்-சிறார் மருத்துவமனையில் 5 மீட்டர் விட்டமுடைய கிணறுதோண்டுதல்.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு மானியங்கள்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உள்ள திசுக்கள் தட்டச்சு வசதியை மேலும் பெருக்கிக்கொள்ள நிதி உதவி அளிக்கும்படி அப்பல்கலைக்கழகம் அரசினைக்கேட்டுக்கொண்டது. தற்போது இந்தியாவில் 4 மைய இடங்களில் டிஸ்யு தட்டச்சு வசதி உள்ளது. இந்த நான்கு மையங்களில் தென்னிந்தியாவில் உள்ள காமராசர் பல்கலைக்கழகத்தில் மட்டும்தான் இந்த வசதி உள்ளது. அப்பல்கலைக்கழகத்திலுள்ள ஆய்வு கூடத்திற்குக் கட்டிடங்கள் கட்டவும், சாதனம், தாரசாக்கி, திசுக்கள் தட்டச்சுத் தட்டுகள் வாங்கவும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும் ரூ. 6.42 இலட்சம் மானியம் வழங்க கருதப் பட்டுள்ளது. இதில் ரூ. 4.55 இலட்சம் 1984-85 ஆம் ஆண்டிற்கு வழங்க கருதப்பட்டுள்ளது.

## செவிலியர் பயிற்சிக்காக ஆசிரியர் பதவிகள் மேலும் கூடுதலாக்குதல்.

1984-85 இல் மருத்துவச்சி பயிற்சிக்காக கூடுதலாக இரண்டு சிற்றாசிரியர் (நிலை 2) பதவிகளையும் (கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஒரு பதவி மகப்பேறு மகளிர்நோய் இயல் மருத்துவ நிலையம் சென்னை, தாய்சேய் நல மருத்துவ மனைக்கு ஒரு பதவி), சென்னை மருத்துவக் கல்லூரி செவிலியர் கல்லூரியில் 6 பொது சுகாதார செவிலியர் பதவிகளையும், 2 மருத்துவப் பயிற்சி நிலைய போதகர் பதவி களையும் உருவாக்குவதன் மூலம் செவிலியருக்குப் பயிற்சி யளிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தக் கருதப்படுகிறது.





சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் உதவி பேறுகால மருத்துவச்செவிலியர்—சுகாதார மேற் பார்வையாளர்கள் ஆகியோருக்கு குறுகிய காலப்பயிற்சி தொடங்குதல்.

சென்னை, இராயப்பேட்டை, அரசினர் மருத்துவமனையில் செவிலியர் —மருத்துவச்சி, சுகாதார துணைச் துணைச் செவிலியர் மேற்பார்வையாளர் ஆகியோருக்குப் பொது செவிலிப் செவிலியர் மேற்பார்வையாளர் ஆகியோருக்குப் பொது செவிலிப் பணியில் குறுகியகாலம் பயிற்சி வகுப்பினைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மேற்கண்ட வகுப்புகளில் ஒவ்வொரு தடவையும் 25 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும்.

## மருந்தாக்கியல் குழு அமைத்தலும் துணை மருத்துவ தேர்வு நடத்துவதற்கென்று பிரிவு ஒன்றை ஏற்படுத்தலும்.

தமிழ்நாட்டில் 3 அரசினர் கல்லூரிகள் மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு வகுப்பு நடத்துகின்றன. இத்துடன் 10 தனியார் கல்லூரிகளிலும் மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு வகுப்பு நடத்தப்படுகிறது. தனியார் கல்லூரிகள் செயல்படுவதைச் சீரமைக்குமபொருட்டு, அவற்றை ஆய்வு செய்யவும், மேற் பார்வையிடவும், தேவையான பணியாளர்களுடன் மருந்தாக்கியல் மேற்பார்வைக்குழுவை அமைக்க வேண்டுமென்று மருத்துவக் கல்லூரி இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மருத்துவ இயல் மருந்தாக்கியல் முதலியவற்றில் பட்டயப் படிப்பு பட்ட மேற்படிப்பு வகுப்புகள் நடத்துவதுடன், மருத்துவக்கல்வி இயக்குநர் அலுவலகம் 13 துணை மருத்துவப் பயிற்சி வகுப்புகளையும் (பட்டயம், சான்றிதழ்) நடத்துகிறது. நல்ல திறமையுள்ள துணை மருத்துவப்பணியாளர்களை உருவாக்க வேண்டுமெனில், தொடர்ந்து தரமான பயிற்சி அளிக்க வேண்டியதும், தேர்வு நடத்த வேண்டியதும் மிகவும் முக்கிய மானதாகும். எனவே, துணை மருத்துவப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கென்று தனிப்பிரிவு இருப்பது இன்றியமையாத தாகும் தேர்வுகள் கட்டுப்பாட்டாளருடன், தேவையான பணி யாளர்களையும் கொண்ட தனிப்பிரிவு ஒன்றை அமைக்க மருத்துவக் கல்வி இயக்குநர் கொடுத்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## கிராமப்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டம்.

குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கும் பல்வேறு மையங்கள் மூலம் கிராமப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டத்திற்கு அரசு 1982 ஆகஸ்டில் அனுமதி அளித்தது.

குழந்தைகளுக்கான முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு பெறும் சுமார் 60 இலட்சம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் இலவசமாக 30 கிராம் பற்பொடி வழங்கப்படுகிறது.

1982-83 இல் இதற்கான செலவு ரூ. 1,21,58,000. 1983–84 ஆம் ஆண்டிற்கான திருந்த மதிப்பீட்டில் ரூ. 2,44,33,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் பொருட்டு 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 2,42,48,000 ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

இப்பற்பொடி, அரசு வரையறுத்துள்ள மருத்துவப் பொருள் கலவை அளவிலேயே தயாரிக்கப்படுகிறது. சிறைகோளாத் துறை, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பற்பொடி வழங்குகிறது. தமிழகமெங்கிலும் உள்ள, 38 சிறு தொழிற் பிரிவுகள் பற்பொடி தயாரித்து, அவற்றை, சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக மற்ற மாவட்டங்களுக்கு வழங்குகின்றன.

பால்வினை நோய்க்கட்டுப்பாட்டுத் திட்டம் :

பால்வினை நோயைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தைச் செயலாக்க அரசு 1983-84-ல் அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள பால்வினை நோய் சிகிச்சை நிலையம் பால்வினை நோய் சிகிச்சை கல்வி பயிற்சி வட்டார நிலையமாகவும் தென் மண்டலத்திற்கென்று, பால்வினை நோய் வட்டார ஆய்வுக் கூடமாகவும் செயல்படும், தமிழக அரசின் பொறுப்பில் மேற்படி நிலையத்தில் ஆய்வு இயங்கும் பிரிவு அமைக்கப்படும்.

கல்விப் பயிற்சி வட்டார நிலையமானது மாவட்ட அல்லது சிவில் மருத்துவமனைகள், தொடக்கச் சுகாதார நிலையங்கள் முதலியவற்றில் பணிபுரிகின்ற அல்லது பணிபுரியவிருக்கும் மருத்துவப் பணியாளர்களுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் நினைவுகூர் பயிற்சி வகுப்புகள் நடத்தும்.

பால்வினை நோய் வட்டார ஆய்வுக்கூட சோதனையை நல்ல முறையில் நடத்தி மதிப்பிட மாவட்ட மருத்துவ மனைகள், அரசினர் பொதுச் சுகாதார ஆய்வுக்கூடங்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் செயல்பட்டுவரும் பல்வேறு ஆய்வுக்கூடங்களுடன், வட்டார ஆய்வுக்கூடம் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன் ஒத்துழைப்பும் நல்கும். வட்டார ஆய்வுக்கூடம் பால்வினை நோய் தொடர்பான ஆராய்ச்சிப்பணிகளை மேற்கொள்ளும்; ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப்பணியாளர்களுக்கு இது தொடர்பாக பயிற்றுவிப்பதுடன் பயிற்சி வகுப்புகளையும் நடத்தும்.



பால்வினை நோய் சிகிச்சை வட்டார ஆய்வு ஊர்திப் பிரிவு இந்நோய் தொற்றும் கூறுகள் பற்றி ஆய்வு செய்யும். இந்நோய் எளிதில் பரவுவதற்குப் பெரிதும் வாய்ப்புள்ள பகுதியையும் ஆய்வு செய்யும்.

பார்வை இழப்பைக் கட்டுப்படுத்துதல் :—

(அ) பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்தின் கீழ் அரசு மருத்துவ மனைகளிலுள்ள மாநில கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள் (ஆ) மத்திய அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள், (இ) கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப் ஆகியவற்றின் மூலம் படுகின்றன.

(எ) மாநில கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள் :—

(i) சென்னை அரசினர் கண் மருத்துவமனையில் உள்ள இரண்டு கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள்.

(ii) மதுரை இராஜாஜி அரசினர் மருத்துவ மனையில் உள்ள கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(iii) தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் உள்ள கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(iv) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(பி) மத்திய கண் சிகிச்சை இயல் ஊர்திப் பிரிவுகள் :—

பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டத்தின் கீழ் இயங்கும் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள்.

(i) மதுரை, இராஜாஜி அரசினர் மருத்துவ மனையில் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(ii) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கண் சிகிச்சை ஊர்திப் பிரிவு.

(iii) 1983—84 ல் தஞ்சாவூரில் இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் தேசியத் திட்டத்தின் கீழ் கண் சிகிச்சை ஊர்திப்பிரிவை ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(சி) பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டத்தின் கீழ், பின்வரும் நிலையங்களில் உள்ள கண் சிகிச்சைத் துறைகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

(1) 1980 நவம்பர் திங்களில், மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரி.

(2) 1982—83 ல். திருநெல்வேலியிலுள்ள மருத்துவக் கல்லூரி.

(3) 1983—84 ல் தஞ்சாவூரிலுள்ள தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.

(டி) பார்வை இழப்பைக் கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்தின் கீழ் மாவட்ட மருத்துவ மனைகளைத் தெரிந்தெடுத்தல்.

பின்வரும் மருத்துவ மனைகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :—

(i) 1982—83 —

1. அரசு மருத்துவமனை, பழனி, மதுரை மாவட்டம்.

2. அரசு மருத்துவமனை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

3. அரசு மருத்துவமனை, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

4. அரசு மருத்துவமனை, கானாடுகாத்தான், இராமநாதபுரம் மாவட்டம்.

5. அரசு மருத்துவமனை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்.

6. அரசு மருத்துவமனை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

7. அரசு மருத்துவமனை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

8. அரசு மருத்துவமனை, மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.

9. அரசு மருத்துவமனை, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம்.

10. அரசு மருத்துவமனை, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

11. அரசு மருத்துவமனை, திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம்.

12. அரசு மருத்துவமனை, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.



(ii) 1983—84 :—

(1) அரசு மருத்துவமனை, கோபிச்செட்டிபாளையம்.

(2) அரசு மருத்துவமனை, கும்பகோணம்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் :—

இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களிலுள்ள 45 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 1980—81—82 இல் பார்வையின்மை கட்டுப்பாடு குறித்த தேசியத் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டன. இதுவரை அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களிலுள்ள மருத்துவ அதிகாரிகளுக்கு கண்நோய் மருத்துவத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கண் நோய்ச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் பணியில் அமர்த்தப்படுவர்.

1983—84 இல் தேசியத் திட்டத்தின் கீழ் மேலும் 80 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தெரிந்தெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் :—

மருந்துப்பொருட்கள், உணவுப் பொருட்கள், ஏனைய வகைப் பொருட்கள் திருடு போவதைத் தடுக்கும் பொருட்டும், மருத்துவ மனைகளின் வளாகத்திற்குள் தேவையில்லாதவர்கள் நுழைவதை முறைப்படுத்தும் பொருட்டும், பின்வரும் மருத்துவ மனைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த, கூடுதல் பணியாளருக்கு (காவல்துறை பணியாளர்) அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.

2. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

3. அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

4. அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை, சென்னை.

'கிங்' நிறுவனம், கிண்டி :—

கிண்டி 'கிங்' நிறுவனம், நோய்த்தடுப்பு மருந்துகள் நிணநீர் போன்றவற்றைத் தயாரிக்கும் ஓர் பெரிய பொதுச்சுகாதார ஆய்வுக்கூடமாக மட்டுமின்றி கல்வி ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனம் இம்மாநிலத்தின் தேவைகளை நிறைவுசெய்வதுடன், பல்வேறு மாநிலங்களுக்கும் காலரா நோய்

தடுப்பு ஏனைய நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்களை வழங்கி வருகிறது. வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு மருந்துக்கு அதிகத் தேவையிருப்பதால் இந்நிறுவனம் வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு மருந்து தயாரிக்கும் பணியினைத் தொடங்கியுள்ளது.

2. முத்தடுப்பு ஊசி மருந்து தயாரிப்பை அதிகரிக்கவும், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு மருந்து தயாரிக்கவும் சாதனப் இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கும் வகையில் ரூ. 7.91 இலட்சம் செலவிட அரசு 1983—84 இல் அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவப் பணிகள்—குடும்பநலத் துறை.

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள் :—

இம்மாநிலத்தில் தற்போது 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன. 1983—84 இல் இம்மாநிலத்திலுள்ள 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்காக அதிக படுக்கை எண்ணிக்கை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் (பேறு காலத்திற்குப்பிந்திய சிகிச்சைக்காக, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 25 படுக்கைகள் என்கிற அளவில்). | 375 |
| 2. | மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம். | 8 |

கூடுதல் வார்டுகள் கட்டுதல் ஏனைய வசதிகள் செய்து தருதல் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அரசு 1983—1984ல் அனுமதி வழங்கியது; அவற்றின் விவரம் வருமாறு :—

1. திண்டுக்கல் அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் நிர்வாகக் கட்டிடம் ஒன்று கட்டுதல்.

2. திண்டுக்கல், ஈரோடு, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளின் தீவிர மருத்துவக் கவனிப்பு பிரிவுகளில் குளுமை வசதிகள் செய்துகொடுத்தல்.

3. நாகப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு உயர் அழுத்த மின் வழங்கல்.

4. திருப்பூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்குதல்.



1984-85-ல் செய்ய உத்தேசிக்கப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் :—

1. கடலூர் அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடத்திற்குக் குளுமை வசதி செய்தல்.

2. தூத்துக்குடி, நாகர்கோயில், திருப்பூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளின் தீவிர மருத்துவக் கவனிப்பு பிரிவுகளுக்கு குளுமை வசதிகள் செய்தல்.

3. தற்போதுள்ள அறுவை சிகிச்சை உதவி மருத்துவர்கள் பதவிகளை அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பதவிகளாக மாற்றுவதன் மூலம் அரசினர் தலைமையிட மருத்துவமனைகளில் மருத்துவ வல்லுநர் பணிக்கு வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. உதகமண்டலம் சேட் மருத்துவமனைக்கும், புதுக்கோட்டை மாவட்டம் ராணிஸ் மருத்துவமனைக்கும் மின்உற்பத்தி இயந்திரங்கள் வழங்குதல்.

வட்டத்தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள் :—

இம்மாநிலத்தில் 122 வட்டத்தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன.

கீழ்க்காணும் வட்டத்தலைமையிட மருத்துவ மனைகளின் படுக்கை எண்ணிக்கை 1983-84-ல் உயர்த்தப்பட்டிருக்கிறது.

1. அரசினர் வட்டத்தலைமையிட மருத்துவமனை—

| | |
|---|---|
| கும்பகோணம் .. .. .. | 50 படுக்கைகள். |

2. அரசினர் வட்ட மருத்துவமனை—

| | |
|---|---|
| அறந்தாங்கி .. .. .. .. | 24 படுக்கைகள். |

1983—84-ல் கூடுதல் வார்டு கட்டுதல், ஏனைய வசதிகள் செய்தல் முதலியவற்றிற்கு அனுமதி வழங்கிய பல்வேறு திட்டங்கள் பின்வருமாறு :—

1. கோபிச்செட்டிபாளையம், அரசினர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை இரட்டைக்கூடம் கட்டுதல்.

2. தேனி, அரசினர் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

3. நத்தத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக மாற்றுதல்.

4. பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்தில் 50 படுக்கை வசதி கொண்ட அரசினர் மருத்துவமனை ஒன்றைப் புதிதாகக் கட்டுதல்.

5. தென்னார்க்காடு மாவட்டம், பண்ருட்டியில் முதல் கட்டமாக 25 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்றைப் புதிதாகக் கட்டுதல்.

6. திருநெல்வேலி மாவட்டம் காயல்பட்டினம் அரசினர் மருத்துவ மனையில் 24 படுக்கை வசதி கொண்ட வார்டு ஒன்று எக்ஸ்-கதிர் பிரிவுக்கட்டிடம், ஆய்வுக்கூடம், வளாகச்சுவர் ஆகியவை கட்டுதல்,

7. தென்னார்க்காடு மாவட்டம், சேத்தியா தோப்பில் 16 படுக்கை வசதிகள், அறுவைசிகிச்சை கூடம், புறநோயாளிகள் பிரிவு ஆகியவற்றுடன் கூடிய ஒரு புதிய அரசு மருத்துவமனை கட்டுதல்,

1984–85 ஆம் ஆண்டில் வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் செய்யக் கருதியுள்ள மேம்பாடுகள்:—

1. வட்டத்தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் குறைந்த அளவு 50 படுக்கை எண்ணிக்கைகள் உயர்த்துவதற்காக கூடுதல் வார்டுகள் கட்டுதல்.

2. சில வட்டத்தலைமையிட மருத்துவமனைகளில் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய மின் உற்பத்தி இயந்திரங்களை வழங்குதல்.

3, 10 வட்டத்தலைமையிட மருத்துவமனைகளில் பேறு காலத்திற்குப் பிந்திய சிகிச்சைக்காக 10 படுக்கைகளுக்கு அனுமதி அளித்தல்.

வட்டத்தலைமையிட மருத்துவமனை அல்லாத பிற மருத்துவ மனைகளை மேம்படுத்தல்:—

தற்போது இம்மாநிலத்தில் வட்டத்தலைமையிடம் மருத்துவ மனைகள் அல்லாத 121 மருத்துவமனைகள் செயல்படுகின்றன.



1983-84 ஆம் ஆண்டில் அதிக நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக, பின்வரும் மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | அரசு மருத்துவமனை, கொடுமுடி .. | 6 |
| 2. | அரசு மருத்துவமனை, சித்தமல்லி .. | 10 |
| 3. | அரசு மருத்துவமனை, மணல்மேல்குடி .. | 20 |
| 4. | அரசு மருத்துவமனை, எட்டயபுரம் .. | 10 |
| 5. | அரசு மருத்துவமனை, மங்கநல்லூர் .. | 10 |

கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் தாலுகா அல்லாத மருத்துவமனைகளில் எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள்:—

1. செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அரசு மருத்துவ மனையில் புற நோயாளிப் பிரிவைக் கட்டுதல்.

2. கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் மகப்பேறு சிகிச்சை, அறுவை சிகிச்சைக்கூடம் கட்டுதல்.

3. தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் எக்ஸ்-கதிர் பிரிவு கட்டுதல்.

4. பெரியார் மாவட்டம், திங்களூரில் அவசர சிகிச்சைக் கான படுக்கைகளுடன் கூடிய ஒரு அறையுடன் புதிய அரசு மருந்தகக் கட்டிடம் கட்டுதல்.

1983–84 ஆம் ஆண்டில் மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகள் வட்ட, வட்டமல்லாத மருத்துவமனைகளிலும் 513 படுக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன; கிராமங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உள்ள மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 14,247 ஆகும் (மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகள் நீங்கலாக). இது தவிர 712 படுக்கைகள், காசநோய் மருத்துவமனைகளிலும் உள்ளன.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக்குதல் —புதிதாக மருந்தகங்களைத் திறத்தல்:—

1. நல்ல வசதிகளுடன் செயல்படச் செய்வதற்காக ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஒவ்வொரு கட்டமாக அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டு வந்துள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக்கும் கொள்கையை மறு

ஆய்வு செய்ய வேண்டும் என்ற குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருங்காலத்தில் கிராமப்புறப் பகுதிகளில் புதிதாக அரசு மருந்தகங்கள் எதுவும் தொடங்கப்படமாட்டாது என்று அரசு 1983 ஆம் ஆண்டில் கொள்கை அளவில் ஒரு முடிவு எடுத்துள்ளது. தற்போதுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை இனி அரசு எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்குப்பதிலாக, கிராமப்புறப் பகுதிகளில் நவீன (ஆங்கில மருத்துவம்) மருந்தகங்களை தொடங்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி அளிக்கப்படவேண்டும். இது போன்ற மருந்தகங்களின் பராமரிப்புக்காக சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைகளைப் பொறுத்து மாநில நிதியிலிருந்து 100 சதவீதம் வரை நிதி உதவி அளிக்கப்படும்.

2. இந்தக் கொள்கையின்படி, 1983ஆம் ஆண்டில் பின் வரும் இடங்களில் மாநில அரசு உதவியுடன் ஏழு ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தொடங்குவதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பித்தது. ஏழு ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தொடங்குமாறும் அவற்றிற்குத் தேவையான நிதி உதவிக்கு அரசினிடம் விண்ணப்பம் செய்துகொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு உத்தரவிடுமாறு கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

1. கொத்தமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம்.

2. கிரனூர் (ஒட்டன்சத்திரம் தொகுதி) மதுரை மாவட்டம்.

3. கிழப்புலியூர்-புதூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4. கத்திரிப்புலம், வேதாரண்யம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

5. கொம்பனைபுதூர், பெரியார் மாவட்டம்.

6. ஏலூர், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம்.

7. மட்டப்பாறை, மதுரை மாவட்டம்.

3. ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, அரசு எந்த அளவிற்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்வதற்கு மாவட்ட ஆட்சியர்களுடனும், மருத்துவப் பணிகள்—குடும்ப நலத்துறை இயக்குநருடனும் கலந்தாலோசித்து, புதிய ஊராட்சி ஒன்றிய (ஆங்கில மருத்துவம்) மருந்தகங்களை தொடங்குவதற்கான இடங்களின் முன்னுரிமைப் பட்டியலைத் தயாரிக்குமாறு கிராம வளர்ச்சி இயக்குநருக்கு 1984 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் உத்தரவிட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.





சிறப்புச் சிகிச்சைத் துறைகளைத் தொடங்குதல்—

மேலும், அதிகமான கிராமப் பகுதிகளுக்கு சிறப்பு மருத்துவப் பணிகளை அளிக்கும் பொருட்டு 1983-84 ஆம் ஆண்டில் பல்வேறு சிறப்புத் துறைகள் தொடங்கப்பட்டன. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) அரக்கோணம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் கண் மருத்துவப் பிரிவுகள்.

(2) நாமக்கல், கும்பகோணம், முதுகுளத்தூர், கூனூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுகள்.

(3) இராசிபுரம், கொளச்சல் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு.

1984-85 ஆம் ஆண்டில், வட்ட மருத்துவமனைகளிலும் வட்ட தலைமையிடமல்லாத மற்ற மருத்துவமனைகளிலும் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

பரிசோதனை ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தல்:—

பரிசோதனைக் கூடங்கள் இல்லாமல் சுமார் 86 மருத்துவமனைகள் உள்ளன. வட்டத் தலைமையிடங்களிலுள்ள மருத்துவமனைகள் அனைத்திலும் அவற்றில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையைக் கருதிப் பாராது நோய் கண்டறியும் அடிப்படை வசதிக்கு வகை செய்யும் பொருட்டு பரிசோதனை ஆய்வுக்கூடங்களை அமைப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது.

அதன்படி 1983-84-ம் ஆண்டில் 35 மருத்துவமனைகளில் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டில் மேலும் 17 மருத்துவமனைகளில் பரிசோதனை ஆய்வுக் கூடங்களைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விபத்து அவசரகால சிகிச்சை:—

தற்பொழுது சாலை விபத்துக்களும், ஏனைய விபத்துக்களும் அதிக எண்ணிக்கையில் ஏற்பட்டு வருகின்றன. விபத்துக்குள்ளானவர்களுக்கு போக்குவரத்து வசதி, அவசர மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதற்கு 1979 ஆம் ஆண்டில் அரசு விபத்து மற்றும் அவசர காலச் சிகிச்சைத் திட்டத்தைச் செயல்படுத்தியது. 1983-84 ஆம் ஆண்டு வரை 10 மாவட்டங்களில் இத் திட்டம் நீட்டிக்கப்பட்டது.

1983—84 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. அதாவது செங்கற்பட்டு மாவட்டத்தில், மதுராந்தகம், திருத்தணி ஆகிய இரண்டு இடங்களிலும் தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இரண்டு இடங்களிலும் செயல்படுத்தப்பட்டன.

1984–85 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில், ஒரு அரசு மருத்துவமனையில் இத் திட்டத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எக்ஸ்–கதிர் சாதனங்கள் :—கதிர் வீச்சு முறை பரிசோதனைக்கு வரும் நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ வசதி அளிப்பதற்காக 200 எம். ஏ. எக்ஸ் கதிர் இயந்திரங்கள் பின் வரும் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(1) அரசினர் மருத்துவமனை—

விளாத்திகுளம் (1.58 இலட்சம் ரூபாயில்).

(2) அரசினர் மருத்துவமனை—

வத்தலக்குண்டு (1.58 இலட்சம் ரூபாயில்).

இதுபோன்று 1983–84 ஆம் ஆண்டில் தேவைக்கேற்ப சாதனங்கள் இல்லாத மருத்துவமனைகளுக்கு அவை வாங்கி வழங்கப் பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(i) ஒவ்வொன்றும் ரூ. 5,000 விலையுள்ள ஆடியோ மீட்டர்களை 10 மருத்துவமனைகளுக்கு வழங்கியது.

(ii) ஒவ்வொன்றும் ரூ. 6,400 விலையுள்ள இதயத் துடிப்பை அறியும் கருவியை 10 மருத்துவ மனைகளுக்கு வழங்கியது.

(iii) ஒவ்வொன்றும் ரூ. 9,300 விலையுள்ள 3 முடநீக்கு, எலும்பு முறிவு அறுவை மேசைகள் வழங்கியது,

தொழுநோய் ஒழிப்புத் தேசியத் திட்டம்: –

தொழுநோய் ஒழிப்புத் தேசியத் திட்டத்தில் நோய் கண்டறிதல், நோய்க்குத் தக்க சிகிச்சையளித்தல் சுகாதாரக் கல்வி ஆகியவற்றிற்குப் பின்பற்றும் தே முறையில் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தினை தமிழ்நாடு பின்பற்றுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் சிகிச்சை பயனற்றுப் போனவர்களை அறிந்து அவர்கள் வெளியே செல்ல விரும்புவார்களாயின் அவர்களை கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் பட்டது.

(i) மக்களைப் பரிசோதித்து நோயைக் கண்டறிதல்:—

சிகிச்சை அளித்ததின் பயனைக் கண்டறிவதற்காக, குலுக்கல் முறை மூலம் ஒவ்வொரு சுகாதார துணை நிலையத்திலிருந்தும் 5,000 மக்கள் உள்ள பகுதி தேர்ந்தெடுக்கப்படுகிறது. நோய் பீடிக்கப்பட்டுள்ளவர்களை கண்டறிவதற்காக ஆண்டு ஆய்வு



நடத்தப்பட்டு வருகிறது. மருத்துவப் பரிசோதனை செய்யப் பட்ட மக்கள், நோய் கண்டுள்ளதாகக் கண்டறியப்பட்டவர்கள், நோய் கண்டுள்ளதாக கண்டறியப்பட்டவர்களின் வீதங்கள், ஆகியவற்றின் விவரங்கள் கீழே விவரமாகக் கொடுக்கப் பட்டுள்ளன:—

| ஆண்டு. | மருத்துவ பரிசோதனை செய்யப் பட்ட மக்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | நோய் கண்டுள்ள தாகக் கண்டறியப் பட்டவர்கள். | புதிதாக நோய் கண்டுள்ள தாகக் கண்டறியப் பட்டவர்களின் வீதம் (1,000 பேருக்கு.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1979 .. .. .. | 92.8 | 41,683 | 4.5 |
| 1980 .. .. .. | 97.6 | 29,968 | 3.0 |
| 1981 .. .. .. | 105.3 | 25,475 | 2.4 |
| 1982 .. .. .. | 132.38 | 32,866 | 2.4 |
| 1983 (டிசம்பர் வரை) .. | 131.07 | 25,797 | 1.96 |

(ii) பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் மருத்துவ சோதனை:—

வறிய நிலையிலுள்ளவர்களின் குழந்தைகளுக்கு நோயெதிர்ப்பு தடுப்பு சிகிச்சை அளிக்கப்படும்போது திசுக்களில் ஏற்படும் மாற்றம் தொழுநோய்க்குரிய அறிகுறியைப்போல் தோன்றும். நகர்ப்பகுதி மக்கள், கிராமப்பகுதி மக்களின் வாழ்க்கை முறையில் பெரும் வேறுபாடுகள் உள்ளன. இதனால், நகரப் பகுதிகளிலுள்ள பள்ளிப்பிள்ளைகள் ஆண்டுதோறும் சோதனை செய்யப்படுகின்றனர்.

1979 ஆம் ஆண்டு முதல், கடந்த 5 ஆண்டுகளாகப் பள்ளிக் குழந்தைகளுக்கு, மருத்துவச் சோதனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | சோதனை செய்யப் பட்ட குழந்தைகள். | புதிதாகச் சோதனையிடப் பட்டவர். | ஏற்கனவே சோதனை செய்யப் பட்டவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1979 .. .. | 17,79,721 | 12,258 | 9,489 |
| 1980 .. .. | 18,06,851 | 9,741 | 14,630 |
| 1981 .. .. | 25,27,355 | 12,380 | 15,916 |
| 1982 .. .. | 46,78,890 | 16,095 | 28,916 |
| 1983 .. .. (தோராயமானது). | 52,09,801 | 13,369 | 28,774 |

(iii) சுகாதாரப் பரிசோதனை:—

இரண்டாவது பிரிவினர் நோயாளிகளுடனேயே வாழ்ந்து வரும் வறிய நிலையிலுள்ளவர்களாவர், நோயுற்றவர்கள் ஏனையோர்களோடு தொடர்ந்து நெருங்கிப் பழகுவதனால் அவர்களுக்கும் நோய் பரவுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே, இத்தகையோருக்கு அடிக்கடி பரிசோதனை செய்யப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | சுகாதாரப் பரிசோதனைகள். | நோயாளிகளுடன் தொடர்ந்து பழகியதால் நோய்பற்றிக் கொண்டவர்கள். | ஆண்டொன்றில் 1,000 பேருக்கு நோய் ஏற்பட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1979 .. .. | 14,60,646 | 3,707 | 2.5 |
| 1980 .. .. | 16,11,638 | 2,585 | 1.6 |
| 1981 .. .. | 16,90,472 | 2,592 | 1.5 |
| 1982 .. .. | 19,26,734 | 2,704 | 1.4 |
| 1983 .. .. (1983 டிசம்பர் வரை). | 10,92,125 | 2,004 | 1.8 |

(iv) சிகிச்சை:—

மருத்துவ அதிகாரி ஒருவரின் தலைமையில் இயங்கும் நடமாடும் மருத்துவக்குழுவினர் அண்மையிலுள்ள நோயாளிகளுக்கு திங்களோடு முறை சிகிச்சை அளிக்கின்றனர். எனவே எந்தவொரு நோயாளியும் சிகிச்சை பெறுவதற்காக அதிகத் தொலை நடந்து செல்லத் தேவையில்லை. சிகிச்சை செய்யப்படும் நாளுக்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னதாகவே சிகிச்சை அளிக்கப்படும் நாள் பற்றி நோயாளிகளுக்குத் தகவல் அளிக்கப்படுகிறது. சிகிச்சை அளிக்கப்படும் நாளன்று சிகிச்சைக்கு வராத நோயாளிகள் ஏன் சிகிச்சை பெற வரவில்லை என்பதற்கான காரணங்களை அறிந்து கொள்வதற்காகவும், தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதில் தடை ஏற்படாவண்ணம் அவர்கள் சிகிச்சைக்கு வராத நாட்களில் அவர்களுக்கு அவர்களது வீடுகளிலேயே சிகிச்சை அளிப்பதற்கும் அவர்களுடன் தொடர்பு கொள்ளப்படுகிறது. நோயாளிகளின் நலனைக் கருதி சாலையோரச் சிகிச்சை கூடங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன.



1984 ஏப்ரல் 17]

பள்ளி குழந்தைகளுக்கு ஆசிரியர்களின் உதவியோடு அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே ஒவ்வொரு திங்களிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

| ஆண்டு. | இவ்வாண்டில் நோயுற்றவர்கள் என்று கண்டறியப்பட்டவர்கள். | இவ்வாண்டில் சிகிச்சைபெற்று வருபவர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979 | 86,383 | 75,859 |
| 1980 | 75,747 | 66,173 |
| 1981 | 79,332 | 67,333 |
| 1982 | 71,582 | 60,333 |
| 1983 | 54,389 | 44,423 |

(1983 நவம்பர் வரை)

(v) சோதனை முறையில் பல மருந்துகளை ஒன்று சேர்த்துக் கொடுத்தல்:—

இத்திட்டத்தின்கீழ் வடார்க்காடு மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1983 ஆம் ஆண்டில் மே திங்களில் திருவண்ணாமலையில் சிகிச்சை அளிக்கும் முறை தொடங்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் திருப்பத்தூரிலும் அரக்கோணத்திலும் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தும் கட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. மேற்சொன்ன திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டபோது சிகிச்சை பெறுவதற்காக 99 சதவீத நோயாளிகள் வந்திருந்தனர். நோய் கண்டிருப்பவர்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மருந்துகளை ஒன்றுசேர்த்து சிகிச்சை அளிக்கும் சோதனைத் திட்டம் வட ஆர்க்காடு முழுவதிலும் 6 திங்களுக்குள் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தைத் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

மேற் சொன்ன திட்டம் தவிர தொழு நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிய தொழு நோய்க் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய தொழு நோய் நிலையங்கள், சீரமைப்புப் பிரிவுகள் சிகிச்சைப் பிரிவுகள் முதலியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(vi) பொது:

ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள், தமிழ்நாடு அரசின் மருத்துவ நிலையங்கள் மூலமாக 290 லட்சம் மக்களுக்கும், தொண்டு நிறுவனங்கள் மூலமாக 90 லட்சம் மக்களுக்கும் சோதனை செய்யப்பட்டது. மொத்தமுள்ள 411 இலட்சம் மக்கள் தொகையில் (1971 ஆம் ஆண்டு மக்கள்

தொகைக் கணக்கெடுப்பின்படி) 380 இலட்சம் மக்கள் இதுவரை சோதனை செய்யப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டமும், சிறு பகுதிகள் அடங்கிய ஒரு சில பகுதிகளில் மட்டுமே இன்னும் இத் திட்டம் செயல்படுத்தப்படாமல் உள்ளன.

காச நோய்த் தடுப்புத் திட்டம்.

காசநோயைக் கட்டுப்படுத்துவதற்கு மூன்றாவது திட்டத்தில் தேசிய காச நோய்த் தடுப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. மாவட்ட காச நோய்த் தடுப்புத் திட்டம், தேசிய காச நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் செயல்படும் ஒரு பிரிவாகும். தமிழ் நாட்டில் மாவட்ட காச நோய் தடுப்புத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்படுகிறது. மேற்கண்ட மாவட்ட காச நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் காச நோயாளிகளுக்கு; நோய் கண்டு பிடிப்பதும் சிகிச்சையும் எல்லா அரசு மருத்துவ மனைகளிலும், அரசு மருத்துவங்களிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் அளிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் மாவட்ட காச நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் 1963 முதல் 1983 வரை 12,331 இலட்சம் காச நோயாளிகள் கண்டுப் பிடிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். மருத்துவ மனைகளில் தங்கவைத்து, சிகிச்சை அளிக்கப்படுவது காச நோயால் தீவிரமாகப பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தேவையானது. தமிழ்நாட்டில் எட்டு அரசு காசநோய் மருத்துவ மனைகளும், மூன்று தனியார் நிறுவனங்களும் உள்ளன. மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும், சில வட்ட மருத்துவமனைகளிலும் காச நோயாளிகளுக்கு, அவசர சிகிச்சைக்காக சில படுக்கை வசதிகள் உள்ளன. மொத்தத்தில் காச நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக 3,569 படுக்கை வசதிகள் உள்ளன.

பி. சி. ஜி. ஊசி போடும் திட்டம் காச நோய்த் தடுப்புத் திட்டத்தில் ஒரு பகுதியாகும். தமிழ்நாட்டில் 23 பி. சி. ஜி. குழுக்கள் மாவட்ட காச நோய்த் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் வீடு வீடாகச் சென்று இளம் குழந்தைகளுக்கு பி. சி. ஜி. ஊசிகளைப்போடுகின்றன. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு பி. சி. ஜி. ஊசி தாய் சேய் நல விடுதிகளிலும் பொது மருத்துவ மனைகளின் மகப்பேறு வார்டுகளிலும் போடப்படுகின்றது. தமிழ்நாட்டில் மாவட்ட காச நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 1963 முதல் 1983 முடிய 205.40 இலட்சம் பேர்களுக்கு பி. சி. ஜி ஊசி போடப் பட்டுள்ளது.

தமிழகத்தில் இரண்டு காச நோய் விளம்பரப் பிரிவுகள் உள்ளன. ஒன்று மதுரையிலும் மற்றொன்று திண்டுக்கல்லிலும் உள்ளன. இவ்விரண்டு பிரிவுகளும் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், சேரிப்பகுதிகளிலும் காச நோய் பற்றிய திரைப்படங்களைக் காண்பித்து, காச நோய் இருப்பதை முன்கூட்டியே அறிந்து அதனைக் களைவதற்கு வேண்டிய வசதிகள் உள்ளன என்பதை மக்களுக்குத் தெளிவு படுத்துகின்றன.



கைத்தறித் தொழிலாளர்கள், பீடித்தொழிலாளர்கள் ஆகியோருக்கான சுகாதார அடங்கல் திட்டம்:—

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள்;
ஆகியோரின் பயனுக்கென்று சுகாதார அடங்கல் திட்டத்தைச்
செயலாக்கத் தமிழக அரசு 1980-ஆம் ஆண்டில் அனுமதி
வழங்கியது. இத்திட்டத்தின்கீழ், சிறிய கதிரியக்கியல் பிரிவின்
உதவியுடன் இயலூர்தி, சேலம், ஈரோடு, திண்டுக்கல்,
தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களிலிருந்து தொடங்கப்பட்டு
இம்மாநிலம் முழுவதும் இயலூர்தி மருத்துவப் பிரிவுகள் ஐந்து
அமைக்கப்பட்டுள்ளன.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், பீடித்தொழிலாளர்கள்
ஆகியோரின் மொத்த எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது.
இவர்களிடையே காச நோய் அறிகுறி தெரிவது பரிசோதிக்கப்
பட்டுள்ளது. காசநோய் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள
வர்களுக்கு முறைப்படிசிகிச்சை அளிக்கப்படுகிறது. பிறநோயுற்ற
வர்களும் கவனிக்கப்படுகி றன. அவர்களுக்கு, தொடக்கத்தில்
சிகிச்சை அளிக்கப்படுகிற பின்னர், அவர்கள் தொடர்ந்து
சிகிச்சை பெறும்பொருட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு
அனுப்பப்படுகின்றன

இத்திட்டத்தின் கீழ் செயல்பாட்டு விவரம் வருமாறு.—

| ஆண்டு. (1) | திட்டம். (2) | பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை. (3) | காச நோய் அறிகுறி உள்ளவர்கள். (4) | எக்ஸ் கதிர் (மார்புப் பகுதி) பரிசோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. (5) | எச்சில் பரிசோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. (6) | காச நோய் பாதிக்கப்பட்டவர்கள், சிகிச்சை அளிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை (7) |
|---|---|---|---|---|---|---|
| 1980 .. | கைத்தறித் தொழிலாளர்கள். | 12,720 | 402 | 112 | 108 | 20 |
| 1981 .. | டிை | 148,799 | 3,169 | 1,349 | 762 | 226 |
| 1982 .. | | 180,832 | 4,553 | 951 | 1,735 | 172 |
| 1983 .. | டிை | 396,807 | 22,099 | 17,078 | 4,142 | 836 |
| (31-12-1983 வரை மொத்தம்) .. | | 7,39,158 | 30,223 | 19,490 | 6,747 | 1,254 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1980 .. பீடித் | தொழிலாளர்கள். | 15,001 | 273 | 78 | 26 | 18 |
| 1981 .. | டிை | 58,114 | 2,046 | 532 | 147 | 112 |
| 1982 .. | டிை | 64,714 | 2,683 | 1,040 | 415 | 107 |
| 1983 .. | டிை | 69,907 | 8,559 | 5,704 | 1,221 | 63 |
| (31-12-1983 வரை). | மொத்தம் .. | 2,07,736 | 13,561 | 7,354 | 1,809 | 300 |
| 1980 முதல் (31-12-83 வரை). | பெரு மொத்தம்: (இரு திட்டங்கள்). | 946,894 | 43,784 | 26,844 | 8,556 | 1,554 |

[1984 ஏப்ரல் 17

1984-85 ஆம் ஆண்டிற்கான செயற்குறிப்பு—

திருச்சிராப்பள்ளி, அரசு இராஜாஜி மருத்துவமனையில் காச நோய்ப் பிரிவிற்காக ரூ. 1.17 இலட்சம் செலவில் கூடுதலாக 25 படுக்கை வசதிகளைச் செய்யவும் பணியாளர்களை நியமிக்கவும் அரசு அனுமதி வழங்கக் கருதியுள்ளது.

தனியார் மருத்துவ நிலையங்களுக்கான மானியங்கள்—

தனியாரால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ நிலையங்களுக்கு மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது. நம் மாநிலத்தில் கீழ்க் கண்டவகையான மானியங்கள் வழங்கப்படுகின்றன.

1. தனியார் மருத்துவ நிலையங்களுக்கான பராமரிப்பு மானியம்—

மருத்துவப்பணி—மக்கள் நல்வாழ்வு இயக்குநரின் பரிந்துரையின் பேரிலும் தணிக்கை பட்டியலை அனுப்புவதன் பேரிலும் இம்மானியம் வழங்குவதை முறைப்படுத்தும் நிபந்தனைகள் சரிவரஉள்ளன என்று ஆய்வுக் குழுவினர் தெளிவ்தன் பேரிலும் இம்மானியம் வழங்கப்படுகிறது. மொத்தம் 38 நிறுவனங்கள் பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

1983-84—ல் நாட்ராம்பள்ளியிலுள்ள இராமகிருஷ்ண மட அறக்கட்டளை மருந்தகத்திற்கு பராமரிபபு மானியமாக ரூ. 8.000 வழங்க அரசு அனுமதி அளித்தது. இந்த நிலையம் பராமரிப்பு மானியம் பெறும் நிறுவனங்களில் ஒன்றாகப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

2. கட்டிட மானியம்.

தனியார் மருத்துவ நிறுவனங்களின் மருத்துவ வசதிக்காக கட்டிடங்களைக் கட்டும் பொருட்டு, அக்கட்டிடப்பணிக்காகவும் மொத்த மதிப்பீட்டுச் செலவில் ½ பகுதித் தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகை அரசால் குறிப்பிடப்பட்ட உயரளவுத் தொகைக்கு உட்பட்டு வழங்கப்படும்.

அடையாறு புற்றுநோய் நிலையத்திற்காக கிண்டி, ராஜ் பவன் வளாகத்தின் புதிய தொகுதியில் உட்புற உறுப்புக்களில் தோன்றும் கட்டியைப்பற்றி மருத்துவ ஆராய்ச்சி செய்யும் பிரிவிற்கான கட்டிடம், மற்றும் சமையற் கூடக் கட்டிடம் கட்டு வதற்காக 1983-84-ல் ரூபாய் 5.77 இலட்சம் அனுமதிக்கப் பட்டது.



1984 ஏப்ரல் 17]

3. கருவிகள் மானியம்.

இம்மானியமும் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு கருவிகள் வாங்குவதற்காக, அக்கருவியின் விலையில் பாதித் தொகை வழங்கப்படுகிறது. இம்மானியமானது இந்நிறுவனங்கள் கருவியை வாங்கியவுடன், அதற்கான கணக்குகளுடன் தணிக்கைப் பட்டியலையும் சமர்ப்பித்த பிறகே வழங்கப்படுகிறது.

4. தனியார் தொழு நோய் நிறுவனங்களுக்கான தலைவீத மானியம்.

இம்மானியமானது தனியார் தொழு நோய் நிலையங்களில் சிகிச்சைப் பெற்று வரும் தொழு நோயாளிகளுக்கு ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 25 வீதமும் இவர்களைச் சார்ந்துள்ள ஆரோக்கியமான குழந்தைகளுக்கு ரூபாய் 12 வீதமும் மாதா மாதம் வழங்கப்படுகிறது. மேலும் தொழு நோய்த் தொண்டு நிறுவனங்களில் கவனிக்கப்படும் தொற்று நோய் சிகிச்சைக் காகவும் தொழு நோய் புனர்வாழ்வு அறுவை சிகிச்சைக்காகவும் தொழு நோய். சிகிச்சை அல்லாது வெளிப்புண்கள் சிகிச்சைக் காகவும் மேற்கூறிய தலைவீத மானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசிடமிருந்து இது போன்ற 11 (பதினொரு) நிறுவனங்க்ள் இம்மானியத்தைப் பெற்று வருகின்றன.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டக்தின் கீழ் பின்வரும் இடங்களில் 1983-84—ஆம் ஆண்டில் புதிய மருந்தகங்களைத் திறப்பதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இம்மருந்தகங்கள் தற்போது செயற்பட்டு வருகின்றன-

1. அரசு மருந்தகம், நாகலூர், சேலம் மாவட்டம்.

2. அரசு மருந்தகம். தொங்குமலை, ஜவ்வாது மலை, வடாற்காடு மாவட்டம்.

1984—85ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக் கைகள் :

1984-85 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

(1) சேலம் மாவட்டம், கல்ராயன்மலை, கருமான் துறையில் உள்ள அரசு மருத்துவமனையில் 6 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைக் கூடத்துடன் கூடிய மகப்பேறு வார்டு, சவப்பரிசோதனை கொட்டகை க்ட்டுதல்.

(2) மலைப்பகுதிகளில் செயற்பட்டுவரும் 4 அரசு மருந்தகங் கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆம்புலன்ஸ் வேன் வீதம் மொத்தம் 4 ஆம்புலன்ஸ் வேன்களை வாங்குதல்.

ஓமியோபதி.

ஓமியோபதி திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தவும் ஓமியோபதி முறை மருத்துவத்தின் மூலம் மக்களுக்குத் தீவிர சிகிச்சை அளிப்பதற்காகவும், தமிழ்நாடு மாநிலத்தில் பொதுவான ஓமியோபதி முறை மருத்துவம் மட்டுமே பின்பற்றப்பட்டு வருகிறது.

ஓமியோபதி கல்வியும், ஓமியோபதி மருத்துவ முறையும் தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு ஓமியோபதி மருத்துவமுறை—ஓமியோபதி மருத்துவர்கள் சட்டத்தின் கீழ் முறைப்படுத்தப்பட்டது. ஓமியோபதி முறை மருத்துவத்திற்கு சிறப்பிடம் அளிக்கும் நோக்கத்துடனும், ஓமியோபதி முறை மருத்துவம் இம் மாநிலத்தில் தீவிரமாக பின்பற்றப்படுவதற்கு வகை செய்யும் நோக்கத்துடனும் தமிழ்நாடு அரசு ஓமியோபதி முறை மருத்துவத்தை ஒப்பளிக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாக அங்கீகரித்துள்ளது.

ஓமியோபதி முறை மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக, 25 படுக்கை வசதியுடன் கூடிய புதிய மருத்துவமனையிணைந்த ஓமியோபதி அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று, மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் இயங்கிவருகிறது. நோயைக்கண்டறிவதற்காகவும் சிகிச்சை அளிப்பதற்காகவும் இம்மருத்துவமனையில் எக்ஸ்கதிர் X-ray) மற்றும் மருத்துவ ஆய்வுக்கூட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஓமியோபதி முறை மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக, அனைத்து மாவட்டங்களிலுள்ள அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில், ஓமியோபதி முறை மருந்தகங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1982ஆம் ஆண்டு மார்ச்திங்களில் இராமநாதபுரம் மாவட்ட அரசுத் தலைமையிட மருத்துவ மனைக்கு அருகே அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இல்லம் ஆகியவற்றை கட்டுவதற்கு, தேவையான இடத்தை கண்டறிய வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன,

1984-35 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் 2 ஓமியோபதி முறை அரசு மருந்தகங்களை தொடங்க அரசு கருதியுள்ளது.

### டேனிடா நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நல திட்டம்.

தமிழகத்தில் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள கிராம மக்களின் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்தினை மேம்பாடு அடையச் செய்வது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 14.40 கோடியாகும். அவற்றுள் டென்மார்க் அரசு நிதியுதவி ரூ. 12.71 கோடியாகும். இத்திட்டம் 1—8—1981 முதல் அமுல் படுத்தப்பட்டுவருகிறது,



இத்திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களாவன :

(1) 5,000 மக்கட் தொகைக்கு ஒரு சுகாதாரத் துணை நிலையம் வீதம் அமைத்து, ஒவ்வொரு சுகாதாரத்துணை நிலையத்திற்கும் ஒரு பலநோக்குச் சுகாதார ஆண்பணியாளரும், ஒரு பலநோக்குச் சுகாதார பெண்பணியாளரும், நியமனம் செய்தல், நான்கு சுகாதார துணை நிலையங்களுக்கு ஒரு பலநோக்குச் சுகாதார ஆண் மேற்பார்வையாளரும் ஒரு பலநோக்கு சுகாதார பெண் மேற்பார்வையாளரும் நியமித்தல்.

(2) சுகாதாரதுணை நிலையங்கள் கட்டுதல்.

(3) சில மருத்துவமனைகளில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் நலப் பகுதிகள் அமைத்தல்.

(4) சில மருத்துவமனைகளில் இருபத்தி நான்கு படுக்கைகள் கொண்ட மகப்பேறு பகுதிகள் அமைத்தல்.

(5) சில மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக் கூடங்கள் அமைத்தல்.

(6) சில ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தகக்கட்டிடங்கள் கட்டுதல்.

(7) மருத்துவ அலுவலர்களுக்கும் சுகாதார மேற்பார்வையாளர்கள் (மகளிர்) குடியிருப்புக்கான கட்டிடங்கள் கட்டுதல்.

(8) குழந்தைகள், கருவுற்றிருக்கும் மகளிர், மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காக ஊட்டச் சத்துணவு மையங்கள் நிறுவுதல்.

(9) சில கிராமங்களில் சுகாதார கழிப்பறைகள் மற்றும் உறிஞ்சு குழிகள் கட்டுதல்.

(10) துணை சுகாதார நிலையங்கள்/ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தண்ணீர் வசதி செய்தல்.

(11) புதிய மாற்று முறைத் திட்டங்கள்,

(12) சமுதாய நல நிதித் திட்டங்கள்.

(13) வழிப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்,

திட்டக்காலமாகிய 1981-86-ல் கீழ்க்கண்ட கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| (1) சுகாதாரத் துணை நிலையங்கள். | 523 |
| (2) சுகாதார மேற்பார்வையாளர்களுக்கான குடியிருப்புக்கள். | 285 |
| (3) ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தக கட்டிடங்கள். | 16 |

| | |
|---|---|
| (4) ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அலுவலர்களுக்கான குடியிருப்புக்கள். | 36 |
| (5) மகப்பேறு பகுதிகள் | 2 |
| (6) அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் | 4 |
| (7) குழந்தைகள் சிகிச்சை பகுதிகள் | 2 |

சுகாதாரத் துணை நிலையங்கள் அமைத்தல்;

முதற்கட்ட வட்டாரங்களில் அனுமதி வழங்கப்பட்ட 9 சுகாதார துணை நிலையங்களும் (சேலம் மாவட்டத்தில் 29-ம் தென்னாற்காடு மாவட்டத்தில் 66-ம்) நிறுவப்பட்டன.

இரண்டாவது கட்ட வட்டாரங்களில் அனுமதி வழங்ப்பட்ட 354 சுகாதார துணை நிலையங்களும் (சேலம் மாவட்டத்தில் 84-ம் தென்னாற்காடு மாவட்டத்தில் 270-ம்) நிறுவப்பட்டன.

மூன்றாவது கட்ட வட்டாரங்களில், அனுமதி வழங்கப்பட்ட 231 சுகாதார துணை நிலையங்களும் (சேலம் மாவட்டத்தில் 53-ம், தென்னாற்காடு மாவட்டத்தில் 178-ம்) நிறுவப்பட்டு வருகின்றன. விரைவில் நிறுவப்பட்டு விடும்.

கட்டுமானம்;

சுகாதாரத் துணை நிலையக் கட்டிடங்கள்;

சேலம் மாவட்டத்தில் 28ம், தென்னாற்காடு மாவட்டத்தில் 30-ம்ஆக முதற்கட்டமாக அனுமதி வழங்கப்பட்ட 58 சுகாதாரத் துணை நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேலும் இரண்டாம் கட்டமாக சேலம் மாவட்டத்திற்கு 133-ம், தென்னாற்காடு மாவட்டத்தில் 180ம் ஆக அனுமதி வழங்கப்பட்ட 313 சுகாதார துணை நிலையக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் அனுமதி வழங்கப்பட்ட, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 13 பொது மருந்தகத் துணை கட்டிடங்களும் மருத்துவ அலுவலர்களின் 21 குடியிருப்புக் கட்டிடங்களும், 4 அறுவைச் சிகிச்சைக் கூடங்களும் 2 மகப்பேறு மருத்துவப் பிரிவுகளும், ஒரு குழந்தைகள் சிகிச்சைப் பகுதியும் கட்டப்பட்டு வருகின்றன.

மூன்றாம் கட்டமாக அனுமதி வழங்கப்பட்ட 152 சுகாதார துணைநிலையங்களும் (சேலம் 77, தென்னாற்காடு 75) சுகாதார பெண் பார்வையாளர்களுக்கு 104 குடியிருப்புக்களும் (சேலம் 38,



தென்னாற்காடு 66) சேலம் மாவட்டத்தில் 3, பொது மருந்தக துணை கட்டடங்களும் மருத்துவ அலுவலர்களுக்கு 15 குடியிருப்புக்களும் (சேலம் 5, தென்னாற்காடு 10) மற்றும் சேலம் மாவட்டத்தில் ஒரு குழந்தைகள் நலப் பிரிவும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்துத் திட்டம்;

இரண்டு முன்னோடி வட்டாரங்களில் துவக்கப்பட்ட 111 ஊட்டச்சத்து மையங்களில், குழந்தைகள் கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 6,500 குழந்தைகளும் 3,000 பெண்களும் அன்றாடம் ஊட்டச்சத்து பெறுகிறார்கள். இவ் ஊட்டச்சத்து உள்ளூர் பெண்களைக் கொண்டு 28 ஊட்டச்சத்து உற்பத்தி நிலையங்களில் தயாரிப்பதன் மூலம் ஒவ்வொரு உற்பத்தி நிலையத்திலும் நான்கு பெண்களுக்கு வேலைவாய்ப்புஅளிக்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து மையங்கள் இயங்கிவரும் 111 கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும், அந்தந்தக் கிராமத்திலிருந்தே ஒரு சமூகப் பணியாளரும் நியமிக்கப் பட்டுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் குழந்தைகள், கருவுற்றிருக்கும் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்ட்ச்சத்து உணவு வழங்குவதுடன், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் வளர்ச்சி அவர்களின் மாதாந்திர எடையைக் கணக்கிடுவதின்மூலம் கண்காணிக்கப்படுகிறது. மகளிர்மன்றங்களை நிறுவி தங்களுடைய சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையினை பாதுகாத்துக் கொள்வதற்கான பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகளிர் மன்றங்களைப் பதிவு செய்து, சமூக நல வாரியம் மற்றும் தானாக முன்வந்து உதவி செய்யும் இதர நிறுவனங்களுடன் இணைந்து செயல்படச் செய்வதன்மூலம் மக்கள் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய மாற்று முறைத் திட்டங்கள்;

சுகாதார பராமரிப்பிற்காக மாற்று முறையாக சில புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப் படுகின்றன. உதாரணமாக கல்ராயன் மலைப்பகுதியில் மக்கள் எளிதில் அடைய முடியாத தூரத்திலுள்ள இன்னாடு என்னும் கிராமத்தில், கிராமச் சுகாதாரப் பாதுகாப்பு நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அங்கு ஒரு ஆண் மற்றும் பெண் மருத்துவர்களும் ஒரு மருத்துவப் பணியாளரும் ஒரு உதவியாளரும் பணியாற்றி வருகின்றனர். போதுமான மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சென்னையிலுள்ள பஞ்சாப் அசோசியேஷன்ஸ் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது.

[1984 ஏப்ரல் 17

பல மருந்து வழங்கு முறையைக் கொண்டு இராசிபுரம் மற்றும் விழுப்புரம் பகுதிகளில், தொழுநோயைக் குணப்படுத்துவதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தன் மூலம் சிகிச்சைக் காலத்தைக் குறைப்பதுடன், தொழுநோய் மேலும் பரவாமலும் தடுக்கவும் இயலும். இத்திட்டத்தின் முக்கிய அம்சமாவது, தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத் திட்டத்தின் நோக்கம் மற்றும் சிறப்புகளைத் தெரிவித்து தொடர்ந்து சிகிச்சை பெறச்செய்து, முன்னேற்றத்தைக் கூர்ந்து கண்காணிப்பதுமாகும்; யானைக்கால், பால்வினை நோய், தோல் சம்பந்தமான தொற்றுநோய், குரல்வளைச் சுரப்பி வீக்கம், காசநோய் போன்ற பல்வேறு வியாதிகளை குணப்படுத்துவதற்கான முறைகளைச் செயற்படுத்துவதற்கும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

சமுதாய நல நிதி ;

குறிப்பிட்ட சமூகத்தின் ஒட்டுமொத்தமான சில பிரிவினரின் அவசரத் தேவைகளுக்குப் பயன்படும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக்கொண்டு மாவட்ட அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டு சமுதாய நலநிதித்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் திட்டங்களைத் தெரிவு செய்து மாவட்ட அளவிலான குழுவிற்குப் பரிந்துரை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் திட்டப் பணிகளில் சமுதாய மக்கள் பங்கேற்க வகை செய்யப்படும்.

சுற்றுபுறச் சுகாதாரத் திட்டம்;

சுகாதாரப் பராமரிப்புக்குத் துணையாக சுற்றுப்புறச் சுகாதாரச்சூழ்நிலையை மேம்பாடு அடையச் செய்யும் பொருட்டு சுகாதாரக் கழிப்பிடங்கல் மற்றும் உறிஞ்சு குழிகள் கட்டித் தரப் படுகின்றன. இத்திட்டத்தின் முக்கிய அம்சமாவது. மக்களே இத்திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து வீட்டிற்கொரு சுகாதாரக் கழிப்பிடம் கட்டிக்கொள்ள முன்வர செய்வதாகும். இதுவரை, சேலம் மாவட்டம் பன்னவாடி கிராமத்தில் 100 சுகாதாரக் கழிப்பிடங்களும், வீமனூர் கிராமத்தில் 125 சுகாதாரக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன . இக்கிராமங்களில் உறிஞ்சுக் குழிகளும் கட்டப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் 8,000 உறிஞ்சுகுழிகளும், தென்னாற்காடு மாவட்டம் ராவுத்தன்குப்பம் கிராமத்தி 100 கழிப்பறைகளும், உறிஞ்சு குழிகளும் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படவுள்ளன.

பயிற்சி :

1983–84ஆம் ஆண்டில் 338 மருத்துவத் தாதியர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டன. 1984—85-ம் ஆண்டில் 774 தாதியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. திருக்கோயிலூர் டேனிஷ் மிஷன் மருத்துவ மனையில் வழங்கப்படும் மலைவாழ் பெண்க



ளுக்கு சுகாதாரப்பணி பற்றிய பயிற்சியும், இதர பெண்களுக்குப் பலநோக்குச் சுகாதாரப் பணிகள் பற்றிய பயிற்சியும்நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்டத்திற்கு 3 வீதம் இரு மாவட்டங்களிலும் 6 மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் அமைத்து சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது! விரிவான பாடத்திட்டங்களும் பயிற்சிகால அளவும்வகுக்கப்பட்டு இத்திட்டம் விரைவில் செயல்படவுள்ளது.

சுகாதாரத் துணை நிலையங்களுக்குக் குடிநீர் வசதி:

ரூ. 32.22 இலட்சம் செலவில், திட்டப் பகுதிகளில் உள்ள 259 சுகாதாரத் துணை நிலையங்களுக்கு குடிநீர் வசதி செய்ய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் செயல்படுத்தப்படவுள்ளது. நீர்க் குழாய்கள் அமைத்தல், ஆழ்கிணறு மற்றும் துளைக் கிணறுகள் அமைத்தல் மூலம் குடிநீர் வசதிகள் செய்யப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதலாக மருத்துவ சாதனங்கள் வழங்குதல்:

கீழ்க்கண்டவாறு மருத்துவ சாதனங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

| மருத்துவ சாதனங்கள். | ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | சேலம். | தென் ஆற்காடு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| மேற்பரப்பில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், தகடு பதிக்கப்பட்ட மகப்பேறு படுக்கை. | 32 | 34 | 66 |
| இரத்த அழுத்தம் கணக்கிடும் கருவிகள். | 35 | 34 | 69 |
| கிருமி நாசினி சாதனங்கள் (ஸ்டெரிலைசர்ஸ்) | 35 | 34 | 69 |

தகவல் தொடர்பு :

கேர் (CARE) நிறுவனத்தாரிடமிருந்து இரண்டு செய்திப் படங்கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்ட மாவட்டங்களில், பெரும்பாலான மக்களுக்குத் தகவல் தொடர்பு சாதனமாக இச்செய்திப் படங்கள் பயன்படுத்தப்படும். திட்டத்தின் தகவல்-கல்வி தொடர்பு நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம் நேரடித் தொடர்பு மற்றும் குழுத்தொடர்பு ஆகியவற்றை விளம்பர சாதனங்களின் உதவியுடன் செயல்படுத்துவதாகும். களப் பணியாளர்கள், நேரடித் தொடர்பு மற்றும் குழுத் தொடர்பு முறைப்பற்றிப் பயிற்சியளிக்கப்படுவர்.

**வழிமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு :**

செயற்படுத்தப்படும் திட்டங்கள் முறையாக வழிமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. சில சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. தேசியக் காசநோய் நிறுவனத்தால் அடிப்படை ஆய்வு நடத்தப்பட்டு தொகுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. திட்டத்தின் இடைக்கால மதிப்பீடு 1984-85 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

**நிதி நிலை அறிக்கை :**

1983-84 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவினம் மற்றும் 1984-85 ஆம் ஆண்டிற் கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடும் கீழே தரப்பட்டுள்ளன.



**டேனிடா திட்டம்.**

**திருத்த மதிப்பீடு 1983-84, செலவுக் கணக்கு 1983-84 மற்றும் வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1984-85க்கான அட்டவணை.**

(ரூபாய் இலட்சத்தில்.)

| வரிசை எண்ணும் விவரங்களும். | திருத்த மதிப்பீடு 1983-84 | செலவு. கணக்கு 1-4-1983— 31-12-1983. | எதிர்பார்க்கப் படும் செலவு 1-1-1984— 31-3-1984. | மொத்தம். | திட்ட வரவு செலவு திட்ட மதிப்பீடு 1984-85 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 கூடுதல் துணைநிலையங்கள் | 26.32 | 1.82 | 23.31 | 25.13 | 25.34 |
| 2 கூடுதல் பணியாளர் .. | 43.06 | 22.54 | 12.95 | 35.49 | 67.26 |
| 3 திட்ட அமைப்பு .. .. | 19.79 | 13.27 | 5.15 | 18.42 | 20.76 |
| 4 கட்டுமானப் பணி அமைப்பு | 4.80 | 3.89 | 1.62 | 5.51 | 5.00 |
| 5 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 7.00 | 1.10 | 1.50 | 2.60 | 6.00 |
| 6 மக்கள் தொடர்பு (நல்வாழ்வு கல்வி). | 15.00 | 1.41 | 1.59 | 3.00 | 25.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 பயிற்சி .. .. | 10.00 | 2.54 | 2.46 | 5.00 | 20.00 |
| 8 கட்டுமானம் .. .. | 311.79 | 58.96 | 262.75 | 321.71 | 148.66 |
| 9 மாற்றுத் திட்டங்கள் .. | 10.00 | 0.42 | 1.58 | 2.00 | 30.00 |
| 10 சமுதாய நல நிதி .. .. | 10.00 | 10.05 | 3.95 | 4.00 | 20.00 |
| 11 ஊட்டச்சத்து .. .. | 15.00 | 10.44 | 4.56 | 15.00 | 12.00 |
| 12 சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதல். | 31.00 | 8.56 | 12.44 | 21.00 | 31.00 |
| மொத்தம் .. | 503.76 | 125.00 | 333.86 | 458.86 | 411.02 |





## குடும்பநலத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

மக்கள் தொகை மட்டு மீறிய வகையில் பெருகி இருப்பதையும் மாநிலத்தில் நாட்டின் திட்டமிட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமென்பதையும் உணர்ந்து, தமிழ்நாடு அரசு, 1956 ஆம் ஆண்டு முதற்கொண்டே குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து வந்துள்ளது. இது, மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டமாகும். இயன்றவரை தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்தி கட்டாயப்படுத்தாமல் தாமே முன்வந்து விரும்பி ஏற்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(1) மாவட்ட ஆட்சியர்கள், அவர்களுடைய பணியாளர்கள் ஆகியோரின் மதிப்புமிக்க ஒத்துழைப்புடன் இத் திட்டம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு மாவட்ட அதிகாரிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவருடன் தொடர்பு கொள்வதைக் கருதியும் இந்திய அரசின் பரிந்துரையின்படியும் நலத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்துவதற்காக தேர்வுத்தர பதவித்தரத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் 1983 அக்டோபரிலிருந்து குடும்பநல இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(2) இந்தியாவில் மக்கள் தொகை 1971-81 ஆண்டுகளில் ஒவ்வொரு மாதமும் சுமார் 1.14 மில்லியன் விகிதத்தில் பெருகி வந்துள்ளது. மக்கட்தொகை இந்த நூற்றாண்டின் இறுதியில் 1065 மில்லியனாக அதிகரிக்கும்.

(3) தமிழ்நாடு பிறப்பு-இறப்புப் பதிவாளர் கணக்கின்படி 1977 முதல் 1981 வரையான ஐந்து ஆண்டுகளில் இம்மாநிலத் திலும், இந்திய அளவிலும் நிலவும் பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரம் வருமாறு:—

| ஆண்டு. | தமிழ்நாடு பிறப்பு வீதம் 1,000-க்கு. | தமிழ்நாடு இறப்பு வீதம் 1000-க்கு. | இந்தியா பிறப்பு வீதம் 1000-க்கு. | இந்தியா இறப்பு வீதம் 1000-க்கு. | தமிழ் நாடு குழந்தைகளின் இறப்பு வீதம் 1000-க்கு. | இந்திய குழந்தைகளின் இறப்பு வீதம் 1000-க்கு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1977 .. .. | 29.3 | 13.7 | 33.0 | 14.7 | 113.5 | 130 |
| 1978 .. .. | 28.9 | 12.8 | 33.3 | 14.2 | 99.6 | 127 |
| 1979 .. .. | 28.1 | 12.0 | 33.2 | 12.8 | 98.5 | * |
| 1980 .. .. | 27.1 | 10.9 | 33.5 | 12.5 | 99.8 | .. |
| 1981 .. .. | 26.1 | 10.9 | 33.9 | 12.5 | 81.2 | .. |

* புள்ளி விவரம் கிடைக்கவில்லை.

[1984 ஏப்ரல் 17

மக்கட் தொகை அதிகரிப்பு :

| | | |
|---|---|---|
| இந்தியா | .. .. .. .. | 24.75 சதவீதம் |
| தமிழ்நாடு | .. .. .. .. | 17.23 சதவீதம் |

(4) கடந்த ஐந்து ஆண்டுகளில் பிறப்பு, இறப்பு, குழந்தைகள் இறப்பு வீதம் குறிப்பிடத் தக்க அளவிற்குக் குறைந்து வந்துள்ளது என்பதை அறியலாம். தமிழ்நாட்டில் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்துள்ள தகுதிவாய்ந்த தம்பதியரின் சதவீதம் 30.2 ஆகும்.

பிறப்பு வீதத்தையும், இறப்பு வீதத்தையும் கி. பி. 2000 ஆண்டில் 1000-க்கு முறையே 21.9 என்ற வீதத்தில் குறைப்பதே நம்முடைய தேசிய கொள்கையாகும். இந்த குறிக்கோளை நமது மாநிலத்தில் 1991-92-க்குள் எய்தக் கருதப்பட்டுள்ளது, இக்குறிக்கோளை எய்தும் நோக்குடன் தகுதி வாய்ந்த தம்பதியர் நிலையான அல்லது தற்காலிகமான குடும்ப நலத் திட்ட முறைகளைப் பின்பற்றி ''சிறு குடும்ப முறையை'' ஏற்கும் வகையில் அவர்களுக்கு அறிவுரை வழங்கி விளக்கமளிக்க மும்முரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1983—84 ஆம் ஆண்டு குடும்பநலத் திட்டத்தின் இலக்கும் சாதனையும் :

| | குடும்பநலத் திட்ட முறைகள். | 1983-84 ஆண்டில் மத்திய அரசு வரையறுத்துள்ள இலக்கு. | 31-12-83 வரை எய்திய சாதனை. | 1982-83 ல் இதற்கு இணையான கால அளவில் எய்திய சாதனை. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | அறுவைச் சிகிச்சை .. | 3,99,000 | 3,40,663 | 1,45,468 |
| 2 | கருத்தடை வளையங்கள் பொருத்துதல். | 1,68,000 | 31,665 | 24,973 |
| 3 | மரபு முறையிலான கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துவோர். | 2,44,000 | 41,626 | 39,731 |
| 4 | கருத்தடை மாத்திரைகள் உட்கொள்வோர் 27—2—83 வரை. | 90,000 | 8,973 | 2,5[illegible]2 |



1984 ஏப்ரல் 17]

(5) கருத்தடை வளையங்கள் பொருத்துதல் :

நிரந்தர குடும்பநல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவ
தோடு, இத்திட்டத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்குத் தற்காலிக
குடும்பநல வசதிகளையும், பெருமளவில் செய்துகொடுக்கக் கருதப்
பட்டுள்ளது. கருத்தடை வளையம் பொருத்தும் நடவடிக்கையை
தீவிரப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.
தற்போது கிராமப்பகுதி குடும்பநல நிலையங்கள், நகர்ப்பகுதி,
குடும்பநல நிலையங்கள், மருத்துவமனைகள ஆகியவற்றில்
பயிற்சி பெற்ற உதவி அறுவைச் சிகிச்சை பெண் மருத்துவர்கள்
மூலம் மட்டுமே கருத்தடை வளையம் பொருத்தும் பணி மேற்
கொள்ளப்படுகிறது. கருத்தடை வளையம் பொருத்துவதில்
பெண் மருத்துவப் பார்வையாளர்களுக்குப் பயிற்சியளிக்கத்
தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசு, உள்ளாட்சி மற்ற தொண்டு
நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றும் எல்லா பெண்
மருத்துவப் பார்வையாளர்களுக்கும் பயிற்சிபெற்ற உதவி
அறுவைச் சிகிச்சை பெண் மருத்துவர்களின் நேரடி மேற்பார்வை
யின்கீழ் குறைந்தது மூன்று வார காலத்திற்கு இப்பயிற்சி அளிக்கப்
படும். இப்பயிற்சியை முடித்தவுடன் பயிற்சி பெற்றவர்களுக்கு
இப்பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
பயிற்சிபெற்ற உதவி அறுவை சிகிச்சைப் பெண் மருத்துவர்களோடு
இவர்களும் கருத்தடை வளையம் பொருத்தும் பணியில் ஈடு
படுத்தப்படுவர். இதனால், சில பயிற்சி பெற்ற உதவிஅறுவைச்
சிகிச்சை பெண் மருத்துவர்கள் கிராமப்பகுதியில் கிடைக்காம
லிருப்பதைப் போக்கும். மேற்சொன்ன பயிற்சியைச் செயல்
படுத்தும் நோக்கத்தோடு 1984 ஆம் ஆண்டு சனவரியில்
சென்னையிலும் (21—1—1984, மதுரையிலும் 25—1—1984)
குடும்பநலத்துறை இயக்கத்தின் மூலம் ''கருத்தடை வளையம்
பற்றி அறிந்து கொள்வதற்காக இரு கருத்தரங்குகள் ஏற்பாடு
செய்யப்பட்டன.

(6) பேறு காலத்திற்குப் பின் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் திட்டம்.

பிரபல்மான நகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவப்
பேறுக்காக மகளிர் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்யும்
போது குடும்பநல நடவடிக்கைகளைத் தீவிரமாக, செயல்படுத்து
வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மருத்துவமனைகளில்
அவர்களின் பேறு காலத்தின்போது அவர்களுக்குக் குடும்பநலம்
பற்றி தொடர்ந்து போதித்து குடும்பநலத் திட்டத்தை அவர்கள்
இணைந்து ஏற்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்
படுகின்றன. தற்போது இம்மாநிலத்தில், பேறு காலத்திற்குப்பின்

கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் 32 நிலையங்கள் செயல் பட்டு வருகின்றன. அவை குறித்த விவரம் வருமாறு :—

| வகை. | செயற்பட்டு வரும் நிலையங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | அரசு. | உள்ளாட்சி மன்றங்கள். | தொண்டு நிறுவனங்கள். |
| (1) | (2) | (3) | (4) |
| 'ஏ' வகை .. | 13 | .. | 1 |
| 'பி' வகை .. .. | 9 | 4 | 2 |
| 'சி' வகை .. .. | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 23 | 5 | 4 |

மேற்சொன்ன 32 நிலையங்கள் தவிர 5 துணைக்கோட்ட மாவட்ட மருத்துவமனைகளிலும் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உடலுக்குடன் குடும்பநலம் பற்றிய ஆலோசனை, நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்படுவதற்காக மேற்சொன்ன ஒவ்வொரு துணைகோட்ட மாவட்ட மருத்துவ மனைகளிலும் சில ஆரம்ப சுகாதார நிலையங்கள் இணைக்கப் பட்டுள்ளன.

(7) கருத்தடை அறுவைச் சிகிச்சை:

இத்திட்டத்தின்கீழ், நிரந்தரக் குடும்பநலத் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் மகளிருக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. இவை தவிர 1982–83 ஆம் ஆண்டின் இறுதியில் இம்மாநிலத்தில் லேப்ராஸ்கோப்பி என்னும் புதிய முறை துவங்கி பின்பற்றப்பட்டு வருகிறது. இம்முறையில் 1983-84 ஆம் ஆண்டில் தீவிரமாகப் பின்பற்றப் பட்டு 31—12—1982 ஆம் நாள் வரை இம்முறையின் மூலம் 1,75,542 நபர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இதைப்போன்றே மகளிருக்கான கருத்தடை சிகிச்சை முறை மூலம் 31—12—1983 ஆம் நாள் வரை 1,51,455 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும் 31—12—83 ஆம் நாள் வரை, 13,66 ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.



(8) நகர்ப்பகுதி குடும்பநல நிலையம்.

அரசு மருத்துவ நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றால் நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது இம்மாநிலத் தில் 245 குடும்பநல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு.

| நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள். | வகை 1 | வகை 2 | வகை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2). | (3) | (4) | (5) |
| அரசு நடத்துபவை.. | 84 | 41 | 39 | 164 |
| உள்ளாட்சி மன்றங் கள் நடத்துபவை .. | .. | 2 | 64 | 66 |
| தொண்டு நிறுவனங்கள் நடத்துபவை | .. | .. | 15 | 15 |
| மொத்தம் .. | 84 | 43 | 118 | 245 |

(9) தாய்-சேய் நலத்திட்டம்:

''சிறு குடும்பகோட்பாட்டில்'' நம்பிக்கை ஊட்டுவதற்காக தாய்-சேய் நலத்திட்டத்தைச் செம்மையாகச் செயற்படுத்துவது இன்றியமையாததாகும், குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது (D.P.T.D.T போலியோ), மற்றும் இரும்பு சத்துள்ள மாத்திரை களை வழங்குவது (F.S.D. சிறியது), கருவுற்ற தாய்மார்களுக்கு இரும்புச் சத்துள்ள மாத்திரைகளை (F.S.D. பெரியது) வழங்குவது ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் மாநில அளவில் ஒருங் கிணைந்த கட்டுப்பாடு இருக்கும் வகையில், மக்கள் நல்வாழ்வு நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநர் இத்திட்டத்திற்காகவும், நோய்த்தடுப்பூசி போடும் பணிகளை கவனிக்கவும் மாநில அளவிலான அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மாநிலம் முழுவதுமாக முகாமிட்டு, நோய்த் தடுப்பூசி போடும் பணி நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1984 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரையில் நோய்த்தடுப்பூசி போடுவதற்கான குறிக்கப்பெற்ற இலக்கும், இலக்குச் சாதனை களும்.

| ஊசி/மாத்திரை மருந்துகள். | ஆண்டுக்கான இலக்கு | வீதாசார இலக்கு | 1983-84 (சனவரி வரை எய்திய சாதனை. | சாதனை வீதாசார இலக்கு. | அளவு இலக்கில் சாதனை அளவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| டி.பி.டி. | 11,00,000 | 9,16,667 | 5,94,327 | 65 | 55 |
| டி.டி. | 9,00,000 | 7,50,000 | 6,28,789 | 85 | 70 |
| டி.டி. (எம்) | 8,00,000 | 6,66,667 | 3,60,916 | 54 | 45 |
| டி.டி. (10 வயது) | 3,00,000 | 2,50,000 | 1,54,428 | 62 | 51 |
| டி.டி. (16 வயது) | 2,00,000 | 1,66,667 | 52,266 | 31 | 26 |
| டி.ஏ. | 7,50,000 | 6,25,000 | 5,52,679 | 88 | 74 |
| போலியோ | 7,00,000 | 5,83,333 | 4,02,452 | 69 | 57 |
| எப்.எஸ்.டி.(எல்) | 8,00,000 | 6,66,667 | 5,53,278 | 83 | 69 |
| எப்.எஸ்.டி.(எஸ்) | 8,00,000 | 6,66,677 | 6,94,025 | 115 | 96 |
| வைட்டமின் 'ஏ'. | 22,00,000 | 18,33,333 | 10,38,548 | 57 | 47 |



**(10) மருத்துவச்சிகள் பயிற்சி:**

மருத்துவச்சிகள், தாய்மார்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாலும் கிராமப் பகுதிகளில் பேறு காலத்தின் போது அவர்கள் பெருஅளவில் உதவியாக இருப்பதாலும் கிராம சமுதாய வாழ்க்கையில், வழி வழிவந்த உள்ளூர் மருத்துவச்சிகளின் பங்கு மிக முக்கியமானதாகும். அவர்கள் குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு, குடும்பநலத்திட்ட முறையில் தாய்மார்களை ஈடுபடுத்துவது ஆகியவற்றில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளனர். 1983—84 ஆம் ஆண்டில் 3,000 பேர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 31—12—1983 வரையில் 916 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

**(11) மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல்:**

முறையற்ற கருக்கலைப்பு செய்து கொள்வதனால், கருவுற்ற மகளிர் இறப்பதையும், நோய்வாய்ப்படுவதையும் குறைப்பதற்காக 1971 ஆம் ஆண்டு மருத்துவமுறை கருச்சிதைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது, சுகாதார காப்பு நடவடிக்கையாக இச்சட்டம் கொண்டுவரப்பட்ட போதிலும், இது குடும்பநலத் திட்டத்திற்கு உதவியாக இருக்கிறது. தற்போது 166 அரசு மருத்துவ நிறுவனங்களிலும் 34 தனியார் மருத்துவ நிறுவனங்களிலும், மருத்துவ முறையில் கருச்சிதைவு செய்து கோள்வதற்கான வசதிகள் உள்ளன.

**(12) பிரச்சாரமும், விளம்பரமும்:**

தகுதி வாய்ந்த தம்பதியருக்கு ''சிறுகுடும்பக்கோட்பாடு'' பற்றி அறிவுறுத்தி அவற்றை பின்பற்ற ஊக்கமளிப்பதில் பிரச்சார விளம்பர பிரிவு முக்கியப் பங்கு வகிக்கிறது. அகில இந்திய வானொலி நிலையம், தொலைக்காட்சி, செய்தித் தாள்கள் போன்றவற்றின் மூலம் குடும்பநலத் திட்டம் பற்றி இப்பிரிவு மக்களுக்கு எடுத்துரைக்கிறது. பிறப்பு வீதத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் இளம் தம்பதியர்களிடையே தற்காலிகக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைப் பரப்புவதற்காக விளம்பரங்கள், சுவரொட்டிகள், வரைச்சித்திரங்கள், போக்குவரத்து வண்டிகளில் விளம்பரம் செய்தல் ஆகியவற்றோடு திரையரங்குகளில் ''சிலைடுகள்'' போட்டு காண்பித்தல் ஆகிய பணிகளை இப்பிரிவு மேற்கொள்கிறது, மக்கள் தொடர்புத் திட்டத்தின்கீழ் பொருட்காட்சிகள், கிராமிய நாடகங்கள், நாடகங்கள், தனித்திரைப்படங்கள் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன. தொண்டு நிறுவனங்களும் இத்திட்டத்தில் இம்மாநில அரசுடன் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு பங்கு எடுத்துக் கொண்டுள்ளன. பிரச்சாரப் பணியாளர் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுவருகின்றன. 1983-84 ஆம் ஆண்டில் 31-12—1983 வரையில் 775 பிரச்சாரப் பணியாளர் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

(13) வரவு—செலவுத் திட்டம்:

1984–85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,743.28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (கிராமச் சுகாதார நிலையங்கள் டானிடா திட்டத்திற்கான நிதியொதுக்கம் நீங்கலாக) 1983–84 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ரூ. 1,637.67 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டது. (தலைமைச் செயலகம் கிராமத்துணை நிலையங்கள், கட்டிடங்கள் டானிடா திட்டத்திற்கான நிதியொதுக்கம் நீங்கலாக.)



## பிற் சேர்க்கை 1.

### பட்டப் படிப்புகள்

| படிப்பின் பெயர் | கால அளவு | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| எம்.பி.பி.எஸ். .. | 51/2 ஆண்டுகள் (உட்பணி பயிற்சி உட்பட). | 1,071 |
| பி. பார்மசி .. .. | 4 ஆண்டுகள் | 56 |
| பி.டி.எஸ். .. .. | 4 ஆண்டுகள் | 49 |
| பி. எஸ்சி. செவிலியர் .. | 2 1/2 ஆண்டுகள் | பணிபுரிவோர் 20 |
| | | தனியார் 10 |

## பிற் சேர்க்கை 2.

### பட்டமேற்படிப்பு மற்றும் உயர்நிலைச் சிறப்பு வகுப்புகளுக்கான பட்டியல்.

| படிப்பின் பெயர். | ஒதுக்கப் பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| எம்.டி. .. .. .. .. | 262 |
| எம்.எஸ். .. .. .. .. | 153 |
| எம்.சி.எச். .. .. .. .. | 33 |
| டி.எம். .. .. .. .. | 21 |
| எம்.டி.எஸ். .. .. .. .. | 18 |
| எம்.பார்மசி .. .. .. .. | 3 |
| பி.எச்.டி. .. .. .. .. | 4 |

[1984 ஏப்ரல் 17

பட்டமேற்படிப்பு, பட்டயப் படிப்பு வகுப்புகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டி.ஜி.ஓ. | .. | .. | .. | .. | 95 |
| டி.எல்.ஓ. | .. | .. | .. | .. | 48 |
| டி.ஓ. | .. | .. | .. | .. | 54 |
| டி.எம்.ஆர்.டி. (D.M.R.T.) | | | .. | .. | 8 |
| டி.எம்.ஆர்.டி. (D.M.R.D.) | | | .. | .. | 25 |
| டி.ஏ. | .. | .. | .. | .. | 54 |
| டி.ஆர்.தோ. | .. | .. | .. | .. | 30 |
| டி.சி.எச். | .. | .. | .. | .. | 83 |
| டி.டி.சி.டி. | .. | .. | .. | .. | 14 |
| டி.வி. | .. | .. | .. | .. | 20 |
| டி.சி.பி. | .. | .. | .. | .. | 9 |
| டி.டி. | .. | .. | .. | .. | 18 |
| டி.பி.எம். | .. | .. | .. | .. | 16 |
| டி.ஐ.பி.எம் | .. | .. | .. | .. | 4 |
| டி.பி.எச். | .. | .. | .. | .. | 10 |
| எல்.பி.எச். | .. | .. | .. | .. | 1 |



198: ஏப்ரல் 17]

பிற்சேர்க்கை 3,

1984-85 ஆம் ஆண்டு புதிய திட்டப் பணிகளின் விரிவான பட்டியல்.

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம். (2) | இறுதிச் செலவு (3) | 1984-85ல் செலவு (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை | | |
| | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் மருத்துவக் கல்வி இயக்குநர். | | |
| | கல்லூரி இணைந்த மருத்துவ நிறுவனங்களில்நோய் கண்டறிதல்—ஆராய்ச்சி ஆகியவற்றுக்கு நவீன வசதிகளை அளித்தல். | | |
| 1 | மாவட்டங்களில் உள்ள கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளுக்குக் கருவி வழங்குதல். | 20.00 | 20.00 |
| 2 | மாநகரில் உள்ள கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளுக்குக் கருவிகள் வழங்குதல். | 25.00 | 25.00 |
| 3 | மாவட்டத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்குக் கருவிகள். வழங்குதல். | 5.00 | 5.00 |
| 4 | மாநகரில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்குக் கருவி வழங்குதல். | 5.00 | 5.00 |
| 5 | சென்னை பல்நோய் மருத்துவ மனைக்குக் கருவி வழங்குதல். | 5.00 | 5.00 |
| 6 | சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் உள்ள பெர்னார்டு ரேடியாலஜி நிறுவனத்திற்குக் கருவி வழங்குதல். | 10.00 | 10.00 |

[1984 ஏப்ரல் 17]

(ரூபாய் இலட்சத்தில்).

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 7 | சென்னை அரசினர் பொது மருத்துவமனை மத்திய கிருமி நாசினிப் பிரிவுக்குப் பணியாளர்களை நியமித்தலும் மேசை நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும் .. | 2.31 | 2.17 |
| 8 | சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் அவசர அறுவை சிகிச்சை அறைக்கான பணியாளர்களை நியமித்தல் .. | 6.53 | 6.00 |
| 9 | கோயம்புத்தூர், மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் 16 படுக்கைகள் கொண்ட சிசு நோயியல் அறுவை சிகிச்சை வார்டுக்காகக் கருவிகள் வழங்குதலும் பணியாளர்களை நியமித்தலும் .. | 1.30 | 1.22 |
| 10 | மதுரை, ராஜாஜி அரசினர் மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட வார்டிற்கு (தலைக்காய சிகிச்சை வார்டு) பணியாளர்களை நியமித்தலும் கருவி வழங்குதலும் .. | 1.72 | 1.60 |
| 11 | திருச்சிராப்பள்ளி, அரசினர் தலைமையிட மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்க பணியாளர்களை நியமித்தலும், கருவி, மேசை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும் .. | 4.73 | 4.54 |
| 12 | சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் கோபால்டு சிகிச்சைப் பிரிவிற்குப் பணியாளர்களை நியமித்தல் .. | 3.97 | 3.67 |
| 13 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் தீப்புண் காய சிகிச்சைப் பிரிவிற்குப் பணியாளர்களை நியமித்தலும் கருவி, மேசை, நாற்காலி முதலிய பொருட்கள் வழங்குதலும் .. | 5.20 | 4.95 |
| 14 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் நீரிழிவு நோய் ஆராய்ச்சி பிரிவிற்குப் பணியாளர்களை நியமித்தலும், கருவி, மேசை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும் .. | 3.35 | 3.23 |
| 15 | திருநெல்வேலி, மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட சிசு நோய் வார்டுக்கு பணியாளர்களை நியமித்தலும், கருவி, மேசை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 1.15 | 1.08 |
| 16 | தஞ்சாவூர், மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட தீப்புண் காய சிகிச்சை வார்டுக்குப் பணியாளர்களை நியமித்தலும், மேசை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 1.10 | 1.03 |
| 17 | தாம்பரம், காசநோய் நலம் பேண் மருத்துவ மனையில் மார்பு நோய் பிரிவுக்கும், புற நோயாளிப் பிரிவுக்கும் பணியாளர்களை நியமித்தலும், மேசை, நாற்காலி முதலிய பொருள்கள் வழங்குதலும். | 1.61 | 1.49 |
| 18 | மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் எச்.எல்.ஏ.டிஷ்யு டைப்பிங் துறைக்கு மானியம் வழங்குதல் .. | 6.42 | 4.55 |
| 19 | சென்னை, சிறார் நல-குழந்தைகள் மருத்துவ மனையில் நவீன சமையலறை கட்டுதல் .. | 12,60 | 3.00 |
| 20 | மருந்தாக்கியல் குழு அமைத்தல்—சென்னை மருத்துவக் கல்வி இயக்ககம் .. | 1.47 | 1.35 |

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 21 | துணை மருத்துவப் பரிசோதனை நடத்துவதற்கான பிரிவு .. | 1.58 | 1.46 |
| 22 | புள்ளி விவரப் பிரிவை வலுப்படுத்தல், புள்ளி விவர உதவி இயக்குநர் பதவியுடன் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல் .. | 1.15 | 1.09 |
| 23 | காரப்பேட்டை, அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் 150 படுக்கைகள் கொண்ட வார்டுக்கு மருத்துவ அதிகாரிகளைக் கூடுதலாக ஏற்படுத்தல் .. | 1.84 | 1.59 |
| 24 | மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவிற்குக் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல் .. | 0.57 | 0.53 |
| 25 | மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் உள்ள சிசு நோயியல் துறையில் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல் .. | 1.82 | 1.67 |
| 26 | மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவில் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல் .. | 2.00 | 1.92 |
| 27 | மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் கரசநோய் சிகிச்சைப் பிரிவில் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல் .. | 0.27 | 0.25 |
| 28 | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் சிசு நோய் அறுவைச் சிகிச்சைப் பணிக்கு வகை செய்தல் .. | 1.63 | 1.52 |
| 29 | சென்னை, சிறார் நல-குழந்தைகள் மருத்துவமனையில் 24 மணிநேர உயிர் வேதியல் பரிசோதனை வசதி அளித்தல் .. | 0.72 | 0.66 |
| 30 | சென்னை மருத்துவக் கல்லூரியில் சமூக நோய்த் தடுப்பு மருந்துப் பிரிவை நிலை உயர்த்துதல் .. | 2.34 | 2.10 |
| 31 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனையிலும் சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனத்திலும் மருத்துவச்சி பயிற்சிக்கு 2 ஆம் நிலை செவிலியர் போதகர் பதவிகளைக் கூடுதலாக ஏற்படுத்தல் .. | 0.30 | 0.28 |
| 32 | மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சில மருத்துவ நிறுவனங்களில் உள்ள செவிலியர் பள்ளியில் பொதுச் சுகாதாரச் செவிலியர் பதவிகள் 6-ஐ ஏற்படுத்தல் .. | 0.72 | 0.66 |
| 33 | சென்னை, செவிலியர் கல்லூரியில் ஆசிரியர் பதவிக்ள் இரண்டை ஏற்படுத்தல் .. | 0.60 | 0.60 |
| 34 | படுக்கைகள் 500—க்கு மேல் உள்ள சில மருத்துவமனை நிர்வாகச் செயலாளர் — பொருளாளர் நிலை II பதவிகள் பதினேழினை மருத்துவமனை நிர்வாகச் செயலாளர் — பொருளாளர், நிலை I ஆக மாற்றுதல் .. | 0.35 | 0.32 |
| 35 | அகநோயாளிகள் 1,009-க்கு மேல் உள்ள மருத்துவமனைகளில் தனி உதவியாளர் பதவிகள் இரண்டை ஏற்படுத்தல் (சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை, மனநோய் மருத்துவமனை). .. | 0.45 | 0.42 |

(ரூபாய் இலட்சத்தில் )

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 36 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனை, சென்னை, குழந்தைகள் நல மருத்துவமனை, ஓட்டேரி, திருவெட்டீஸ்வரர் காசநோய் நலம் பேண் மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவமனை நிர்வாகச் செயலாளர்—பொருளாளர் நிலை II பதவிகளை ஏற்படுத்துதல் .. | 0.52 | 0.48 |
| 37 | கல்லூரி இணைந்த மருத்துவமனைகளில் படிப்படியான நிலையில் புள்ளி விவரத் தகவல் பிரிவை ஏற்படுத்தல் .. | 2.67 | 2.48 |
| 38 | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைக்காகச் சிவில் மருத்துவர் பதவிகளை ஏற்படுத்தல் .. | 0.32 | 0.29 |
| 39 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் மருந்தாக்கவியலில் உதவி ஆராய்ச்சிப் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்படுத்தல் .. | 0.20 | 0.19 |
| 40 | சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் இல்லத்தில் நவீன சமையற்கூடம் அமைத்தல் .. | 0.74 | 0.74 |
| 41 | சென்னையிலுள்ள அரசு கண் மருத்துவமனையில் ஒலிக் கற்றைத் துறையை ஏற்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்கள் .. | 0.20 | 0.19 |
| 42 | சென்னை சிறார் நல-குழந்தை மருத்துவ மனையில் தனி சமையற்கூடத்தை ஏற்படுத்தல் | 0.24 | 0.22 |
| 43 | உடம்பில் ஏற்படும் நீர் இழப்பை ஈடுகட்டும் வாய்வழி மருந்துப் பொருட்கள் சென்னை, கிங் நிறுவனத்தில் தயாரித்தல் .. | 0.24 | 0.23 |



(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 44 | சென்னை, அரசு ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனையில் குளியலறை, கழிப்பிட வசதியுடன் கூடிய தங்கும் அறை கட்டுதல். | 0.50 | 0.50 |
| 45 | சென்னை, மனநோய் மருத்துவ மனை, புறநோய்ப் பிரிவின் தெற்கு, மேற்குப் பக்கங்களில் சுற்றுச் சுவர் கட்டுதல் .. | 1,21 | 1.21 |
| 46 | மாணவர் விடுதியில் தங்கியிராது கல்வி பயிலும் மாணவர்களுக்காக, சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் சிற்றுண்டிச்சாலையின் முதல் மாடியில் உணவு அறை கட்டவகை செய்தல் .. | 3.70 | 1.00 |
| 47 | சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை மகளிர் விடுதிக்கு கூடுதல் இடவசதி செய்து கொடுத்தல் .. | 0.98 | 1.00 |
| 48 | சென்னை, அரசு பொது மருத்துவ மனை கட்டாய சுழற்சி முறை பயிற்சி மருத்துவருக்கு தற்போதுள்ள இடவசதியை மாற்றியமைத்தல் .. | 3.00 | 1.00 |
| 49 | சென்னை, மனநோய் மருத்துவ மனையில் நீராவிச் சலவை நிலையத்திற்கு கல் கட்டுமான எரிஎண்ணெய் சேமிப்புத் தொட்டி கட்டுதல் .. | 0.70 | 0.70 |
| 50 | சென்னை, மனநோய் மருத்துவ மனையில் நீராவிச் சலவை நிலையத்திற்கு நீர்த்தொட்டி அறையும் மேல்நிலை நீர்த் தொட்டியும் கட்டுதல் .. | 0.98 | 0.98 |
| 51 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி எஸ்.பி.எம். பிளாக்கிலுள்ள ஆய்வுக்கூடப் பணி மேடைகளுக்கு நீர் வழங்கல். . | 5.56 | 0.56 |

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 52 | சென்னை, கிண்டியிலுள்ள நோய்த் தடுப்பு மருந்து கிங் நிலையத்திற்குத் தண்ணீர் வழங்குவதை மேம்படுத்தல் .. | 3.40 | 3.40 |
| 53 | சென்னை, கஸ்தூரிபா-காந்தி அரசு மகளிர்-சிறார் மருத்துவ மனையில் 5 மீட்டர் விட்டம் கொண்ட கிணறு வெட்டுதல். | 1.00 | 1.00 |
| 54 | கோயம்புத்தூர், மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையின் முதல் மாடியில் இரு அறுவை சிகிச்சைக் கூடங்களுக்கு குளுமை வசதி செய்து கொடுத்தல் .. | 8.08 | 4.00 |
| 55 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையிலுள்ள தீவிர இதய நோய் சிகிச்சைப் பிரிவில் குளுமை வசதி செய்து கொடுத்தல் .. | 0.40 | 0.40 |
| 56 | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் பிண அறை கட்டுதல். | 7.30 | 3.[illegible]0 |
| 57 | சென்னை, குழந்தைகள் நல மருத்துவமனையில் மருத்துவம் சார்ந்த சத்துணவுத் துறையை ஏற்படுத்தல் .. | 0.30 | 0.84 |
| 58 | சென்னை, ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனையில் உயிர் வேதியல் ஆய்வுக் கூடத்தை மேம்படுத்தல் .. | 0.39 | 0.37 |
| 59 | ஓட்டேரி, திருவட்டீஸ்வரர் காச நோய் நலம்பேண் மருத்துவ மனையில் இருமல் நோய் சளி பரிசோதனை கிருமி நாசினி அறை கட்டுதல் .. | 1.00 | 1.00 |
| 60 | சென்னை, அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள மருந்தாக்கவியல் துறையை வலுப்படுத்தல் .. | 0.77 | 0.71 |



(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 61 | சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் மருத்துவ வேதியல் ஆராய்ச்சி மைய மொன்றை ஏற்படுத்தல் .. | 0.49 | 0.43 |
| 62 | சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சிறுநீரக இயல் துறையை ஏற்படுத்தப் பணியாளர்கள் .. | 1.01 | 0.94 |
| 63 | சென்னை, மருத்துவக் கல்லூரியில் மரபு வழியியல் துறையை ஏற்படுத்தல் .. | 1.15 | 1.07 |
| 64 | சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் மருத்துவப் புகைப்பட மைக்ரோ பிலிமிங் யூனிட்டை ஏற்படுத்தல் .. | 0.33 | 0.32 |
| 65 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் மகப்பேறு வார்டுக்கு மேல் முதல்மாடி கட்டுதல் .. | 20.00 | 5.00 |
| 66 | மருத்துவப் பல்கலைக்கழகம் .. | 0.01 | 0.01 |
| 67 | கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் மருத்துவக் கருவிகளை பராமரிப்பதற்குரிய பணிக்களரி .. | 0.01 | 0.01 |
| 68 | அரசு பொது மருத்துவமனையில் மூப்பியல் மருத்துவ சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்துதல் .. | 2.59 | 2.59 |
| 69 | இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் துணைச் செவிலியர் பாடமுறை ஏற்படுத்துதல் .. | 0.60 | 0.60 |
| | மருத்துவப் பணிகள்-குடும்பநலத் துறை இயக்குநர்: | | |
| 70 | தென்ஆற்காடு மாவட்டம், கடலூர் மாவட்டத் தலைமையிட அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சைக் கூடத்திற்குக் குளுமை வசதிகளைச் செய்து கொடுத்தல் .. | 6.00 | 4.00 |

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 71 | தூத்துக்குடி, நாகர்கோவில், உதகமண்டலம், திருப்பூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தலைமையிட மருத்துவமனைகளில் தீவிரச் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தல் .. | 4.80 | 4.80 |
| 72 | புதுக்கோட்டை இராணி மருத்துவமனை, உதகமண்டலம் சேத் மருத்துவமனை ஆகியவற்றில் மின் உற்பத்தி கருவிக்கு வகை செய்தல் .. | 8.58 | 2.50 |
| | வட்டத் தலைமையிட மருத்துவமனைகளை மேம்படுத்துதல். | | |
| 73 | வட்டத் தலைமையிட மருத்துவமனை ஒவ்வொன்றிலும் படுக்கைகளின் எண்ணிக்கையைக் குறைந்தது 50 ஆக உயர்த்துவதற்காகக் கூடுதல் வார்டைக் கட்டுதல் .. | 9.50 | 4.50 |
| 74 | நாற்பதும், அதற்குக் கூடுதலாகவும் படுக்கைகளைக் கொண்ட வட்ட, வட்டம் அல்லாத மருத்துவமனைகளில் (13 மருத்துவமனைகள்) கையடக்கமான மின் உற்பத்திக் கருவிகளை (2.5 கி.வோல்ட்) வழங்குதல் .. | 4.00 | 4.00 |
| 75 | செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் புற நோயாளிப் பிரிவு ஒன்றை கட்டுதல் | 8.00 | 2.00 |
| 76 | புதிய கட்டிடம் ஏதும் கட்டாமல் 20 வட்ட மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 10 பிணப் பரிசோதனை படுக்கைகளை ஏற்படுத்துதல் .. | 4.67 | 4.46 |



(ரூபாய் இலட்சத்தில்.)

| | | | |
|---|---|---|---|
| 77 | கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் மகப்பேறு—அறுவை சிகிச்சைக் கூடம் கட்டுதல் .. | 4.50 | 2.00 |
| | வட்டத் தலைமையிடமல்லாத அரசு மருத்துவமனைகளை மேம்படுத்துதல்: | | |
| 78 | தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் 'எக்ஸ்' கதிர் பிரிவைக் கட்டுதல் .. | 1.55 | 1.55 |
| 79 | பெரியார் மாவட்டத்திலுள்ள திங்களூரில் அவசர சிகிச்சைப் படுக்கைகள் கொண்ட அறையுடன்கூடிய அரசினர் மருந்தகத்தைப் புதிதாகக் கட்டுதல்.. | 6.00 | 2.00 |
| 80 | வடஆற்காடு மாவட்டத்தில் ஒரு அரசினர் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டுவதன் மூலம் விபத்து—அவசர சிகிச்சைப் பணியின் ஐந்தாம் நிலைப் பணியைச் செயல்படுத்துதல்.. | 16.58 | 10.00 |
| 81 | வட்ட மருத்துவமனைகளிலும் ஏனைய மருத்துவமனைகளிலும் குருதி சேமிப்பு நிலையங்களைத் தொடங்குதல் .. | 1.13 | 1.07 |
| 82 | 17 இடங்களில் மருத்துவப் பரிசோதனை ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்துதல் .. | 4.37 | 4.14 |
| 83 | 75 படுக்கைகளும் அதற்கு மேலும் படுக்கைகள் உள்ள அரசினர் மருத்துவமனைகளில் கீழ்நிலைப் பதவிகளை அலுவலகக் கண்காணிப்பாளர் பதவிகளாக மாற்றுவதன் மூலம் அலுவலக நிர்வாகத்தை வலுப்படுத்துதல். | 0.75 | 0.69 |

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | | |
|---|---|---|---|
| 84 | சிசு நோயியல், கண் நோயியல் ஆகிய பிரிவுகளில் ஒவ்வொரு சிறப்புப் பிரிவுக்கும் 15 என்ற வீதத்தில் 30 உதவி மருத்துவர் பதவிகளை சிவில் மருத்துவ வல்லுநர் பதவிகளாக மாற்றுதல் .. | 1.51 | 1.38 |
| 85 | சென்னையில் இரண்டு இடங்களில் ஹோமியோபதி மருந்தகங்களைத் தொடங்குதல். | 0.81 | 0.61 |
| 86 | திருச்சிராப்பள்ளி, அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் காசநோய் பிரிவுக்கு 25 படுக்கைகள் வழங்குதல் (கட்டிடங்கள் கட்டாமல்). | 1.17 | 0.93 |



## பிற்சேர்க்கை 4.

### மாநில வரவு-செலவுத் திட்டமும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு செலவினங்களும்.

• 1984–85ஆம் ஆண்டுக்கான கோரிக்கை 18. மருத்துவம் மற்றும் கோரிக்கை 19. மக்கள் நல்வாழ்வு இவைகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 264 கோடியாகும். கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவற்றின் கீழ் ரூ. 113 கோடியும் காற்று, நீர் தூய்மைகெடுதலைத் தடுத்தலின் கீழ் ரூ. 0.52 கோடியும் இதில் அடங்கும். இது வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,946 கோடியில் 14 விழுக்காடாகும்.

2. மருத்துவக் கோரிக்கையின் கீழ் 1984-85க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.—

1984–85-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். மாநிலத் திட்டம். | திட்டச் செலவினம். மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | திட்டச் செலவினம். மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50:50) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | | |
| 259. அரசு மருத்துவ நிலையங்களின் கட்டட பராமரிப்பு சீர் செய்தல் பணிகளுக்கான செலவு. | 1,40,00 | .. | .. | .. | 1,40,00 |

** மக்கள் நல்வாழ்வு பற்றிய குறிப்பு தனியாக அச்சிடப்பெற்றுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **280. மருத்துவம்—** | | | | | |
| (1) கல்வி .. | 8,69,78 | 49,08 | .. | 5,83 | 9,24,69 |
| (2) பயிற்சி .. .. | 36,24 | 15,79 | 1,42 | .. | 53,45 |
| (3) ஆராய்ச்சி .. | 4,50 | 4,35 | 1,58 | .. | 10,43 |
| (4) மருத்துவ நிவாரணம் (மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மருத்துவக்கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ மனைகள் சேர்த்து.) | 65,55,51 | 5,59,72 | 98,92 | .. | 72,14,15 |
| (5) ஹோமியோபதி மருத்துவம் | 10,45 | 5,71 | .. | .. | 16,16 |
| (6) இந்தியமுறை மருத்துவம் | 95,41 | 1,44,02 | 4,41 | .. | 2,43,84 |
| (7) பிற இனங்கள் .. | 12,11,87 | 25,60 | .. | .. | 12,37,47 |
| **288. சமூக பாதுகாப்பு மற்றும் நலம் திருப்பி வசூலிப்பவை** | 74,89 .. | .. .. | .. .. | .. .. | 74,89 16,00 |
| பெரு மொத்தம்-கோரிக்கை 18-மருத்துவம் | 89,98,65 | 8,04,27 | 1,06,33 | 5,83 | 99,31,08 |

*இந்திய மருத்துவம் பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.



3. மக்கள் நல்வாழ்வுக் கோரிக்கையின் கீழ் 1984-85க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு:—

1984-85க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். (50:50) | மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (ரூபாய் ஆயிரத்தில்) | (5) | (6) |
| 279 மக்கள் நல்வாழ்வு பணிகளுக்கான கட்டட பராமரிப்பு சீர் செய்தல் பணிகளுக்கான செலவு. | 10.'0 | .. | .. | .. | 10,00 |
| 280. மருத்துவம்-ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதலியன. | 10,18,88 | 4,25,08 | 2,61 | .. | 14,46,57 |
| 281. குடும்ப நலம் .. மற்றும் துப்புரவு. | .. | 41,20 | 20,02,60 | .. | 20,43,80 |
| 282. (1) மக்கள் நல்வாழ்வு | 9,73,18 | 2,71,06 | 7,10 | 2,21,43 | 14.77,77 |
| (2) காற்று நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தல். | 17,27 | 34,47 | .. | .. | 51,74 |
| (3) கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல். | 3,99 | 1,05,19,75 | 8,00,00 | .. | 1,13,23,74 |
| கூட்டுக-திருப்பி வசூலிப்பவை | .. | .. | .. | .. | (+)80,26 |
| பெரு மொத்தம்-கோரிக்கை 9 மக்கள் நல்வாழ்வு. | 20,28,32 | 1,12 91,56 | 28,12,31 | 2,21,43 | 1,64,33,88 |

** மக்கள் நல்வாழ்வு பற்றிய குறிப்பு தனியாக அச்சிடப்பெற்றுள்ளது.

4. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1984-85ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| | | திட்டச் செலவினம். | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டமில்லாத செலவினம். | பாரித் திட்டம். | மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | மைய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50:50) | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்). | | | |
| வருவாய்க் கணக்கில் செலவு | | | | | |
| மானியக் கோரிக்கை 28. | | | | | |
| சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகங்களும். | | | | | |
| 281. மருத்துவ நிவாரணம் (உள்ளாட்சி மன்றங்களின் மகப்பேறு நிலையங்களுக்கு பராமரிப்பு மானியம் உட்பட). | 1,36,55 | 5,60 | .. | .. | 1,42,15 |
| 282. பொதுக்கழிப்பிடங்கள் கட்டுவதற்கு உதவி. | 2,00 | 6,56,00 | .. | .. | 6,58,0 |
| கோரிக்கை எண் 30. | | | | | |
| தமிழ் நாடு சத்துணவுத் திட்டம் பொது சுகாதரம். | .. | 2,78,02 | .. | .. | 2,78,02 |
| கோரிக்கை எண் 37. | | | | | |
| பொதுப்பணி: மருத்துவம் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள். | 6,51 | 9 | .. | .. | 6,60 |
| வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவுகள். | | | | | |
| மருத்துவம் குடும்ப நலம், மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் கட்டிடப் பணிகள். | 62,39 | 10,77.27 | 1,61,78 | 1,64,44 | 14,65 88 |
| 680. மருத்துவம் குறித்த கடன்கள் | 15 | .. | .. | .. | 15 |
| 682. மக்கள் நல்வாழ்வு, துப்புரவு குடிநீர் வழங்கல் குறித்த கடன்கள் | 7,42,93 | 17,87,62 | .. | .. | 25,30,55 |
| மொத்தம் .. | 9,50,53 | 38,04,60 | 1,61,78 | 1,64,44 | 50,81,35 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1984–85ல் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 315 கோடியாகும்.

5. எல்லா தலைப்புகளின் கீழும் (280 மருத்துவம், 281 குடும்பநலம், 282, மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு 480, மருத்துவ மூலதனச் செலவு) 481, குடும்பநல மூலதனச் செலவு, 482, மக்கள் நல்வாழ்வு, மற்றும் துப்புரவு, மூலதனச் செலவு, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புறவுக் கான (குடிநீா வழங்கலைச் சேர்க்காமல்) 1984-85 ஆம் ஆண்டில் திட்டப்பணிகளின் செலவு விவரம் வருமாறு:

| (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1984-85-ல் புதிதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| மாநிலத் திட்டம் | 34,61,86 | 2,78,54 | 37,40,40 |
| மத்திய அரசு பொறுப்பு ஏற்றவை. | 22,71,01 | 4,46 | 22,75,47 |
| மத்திய அரசு உதவி செய்பவை(50:50) | 3,71,82 | 19,88 | 3,91,70 |

6. 1984-85ஆம் ஆண்டில் புதிதாக ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ள திட்டங்களின் விவரம் துறைவாரியாக கீழே தரப்படுகிறது.—

| துறை. (1) | இறுதிச் செலவு. (2) | 1984-85 செலவு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மருத்துவக் கல்வி .. .. | 202.22 | 158.69 |
| 2. மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலம். | 83.92 | 50.63 |
| 3. ஆரம்ப சுகாதார நிலையங்கள். | 49.29 | 47.14 |
| 4. மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து. | 58.39 | 19.10 |
| 5. இந்திய மருத்துவம் .. .. | 26.86 | 24.01 |
| 6. மாநில சுகாதார போக்கு வரத்து அமைப்பு. | 3.01 | 2.60 |
| 7. மருந்துக் கட்டுப்பாடு துறை .. | 0.96 | 0.71 |
| மொத்தம் .. | 424 65 | 3,02.88 |
| திட்டத்தில் சேராதது | 14.70 | 8.09 |
| பெரு மொத்தம் .. | 439.35 | 310.97 |



## இணைப்பு II

(60- பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு-1985—85

### I. தோற்றுவாய்.

உடல் நலம் என்பது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். நோயற்ற வாழ்க்கை மட்டுமே நலமான வாழ்க்கை என்று கொள்ளலாகாது; ஏனெனில், உடல்நிலை, மனநிலை, சமூகநிலை ஆகியவற்றையும் உடல் நலம் முழுமையாக சார்ந்ததாக உள்ளது. உயரளவு எய்தக் கூடிய வகையிலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் மக்கள் அனைவருக்கும் வளமான நல்வாழ்க்கைக்கு வகை செய்வதே நம்முடைய நோக்கமாகும். ''அனைவருக்கும் நல வாழ்வு'' என்கிற நோக்கத்தை எய்துவதற்கு மக்கள் அனைவருக்கும் மக்கள் நல்வாழ்வு பணிகளில் முனைப்புடன் பங்கு கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய நல நிலையங்கள், சுகாதார துணை நிலையங்கள், சுகாதாரச் சிறு நிலையங்கள், நடமாடும் சுகாதாரப் பணி பிரிவுகள் ஆகியவற்றை அமைத்து ஒருங்கிணைந்த முனைப்புப்பணித் திட்டங்களின் மூலம் மேற்சொன்ன நோக்கத்தை நாம் எய்த வேண்டும். 'பலநோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம்' கொண்டுவரப்பட்டதும், மிகப் பெரிய பகுதிகளில், பெருமளவு மக்கட் தொகையினருக்கும் ஒரே வகையான சுகாதாரப் பணிகளைக் கவனித்து வந்த சுகாதாரப் பணியாளர்களுக்கு அவர்கள் நோய்த்தடுப்பு, நலவாழ்வு மேம்பாட்டுப் பணிகளைத் திறமையாக கவனிக்கும் வகையில் பலதிறப்பட்ட சுகாதாரப் பணிகளை குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஆற்றுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மக்களின் நலனை மேம்படுத்துவதில் ஆரம்பச் சுகாதாரக் கவனிப்பு முறை நடைமுறையில் இருக்கிற ஒரு அணுகுமுறையாகும். இதனைக் கருத்தில் கொண்டு ''கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நலவாழ்வு'' என்கிற நோக்கத்தை எய்த தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

### II. ஆரம்ப சுகாகார நிலைய இயக்ககம்.

#### 1. ஆரம்ப சுகாதார நிலையங்கள் :

''கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நலவாழ்வு'' அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதால் அரசு, கிராமப்புற மக்களுக்கு தரத்திலும், அளவிலும் சிறந்த கூடுதலான மருத்துவ வசதிக்கும், சுகாதார வசதிக்கும் வகை செய்து வருகிறது. படிப்படியாக ஏற்கனவே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பராமரித்து வருவதன் மூலமும், கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலமும், நடமாடும் சுகாதார குழுக்களை அமைப்பதன் மூலமும், சிறு சுகாதார நிலையங் களுக்கு அனுமதி வழங்குவதன் மூலமும், ஆரம்ப சுகாதார நிலையங்களின் நிலையினை படிப்படியாக உயர்த்துவதன் மூலமும் கிராமப் பகுதிகளில் சுகாதார கவனிப்பு வசதிகள் அளிக்கப் படுகின்றன.

கிராம மக்களுக்குச் சிகிச்சை அளித்தல், நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை வழங்கும் மைய நிலையமாக ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. 30,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவது அரசின் நோக்கமாகும். இம்மாநிலத்தில் 424 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. 385 முறையான ஆரம்ப சுகாதார நிலையங்களும் 39 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் இதில் அடங்கும். அவற்றில் 17 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 1983-84ல் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமுதாய நல நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்ட 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பட்டமேற்படிப்பு மருத்துவர்கள் இருவரை, அதாவது எம்.எஸ். (அறுவை சிகிச்சை) கல்வித் தகுதி பெற்ற ஒருவரையும் டி.ஜி.ஓ. (மகப்பேறு) கல்வித் தகுதி பெற்ற மற்றொருவரையும் கொண்டிருக்கும் என்பதால், அவை மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு மருத்துவப் பணிகளைச் சிறப்பாகக் கவனிக்கும். நிலை உயர்த்தப்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள் 30 பேருக்கு சிகிச்சை அளிக்கும் வசதியையும், எக்ஸ்-கதிர், அறுவை சிகிச்சை, ஆய்வுக்கூட வசதி முதலிய வசதிகளையும் கொண்டிருக்கும். இந்தச் சமுதாய நல நிலையங்களுக்கான (நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்) கூடுதல் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பெரியார் மாவட்டத்தில் வெள்ளக் கோயிலில் சமுதாய நல நிலையம் ஒன்று செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும் இரண்டு சமுதாய நல நிலையங்கள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

424 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 267 நிலையங்களுக்குச் சொந்த கட்டிடங்கள் உள்ளன. 71 தொடக்கச் சுகாதார நிலையங்களில் மருந்தகக் கட்டிடங்கள் மட்டுமே உள்ளன. ஏனையவற்றுக்கிடையில், அரசு 1984-85-ல் ரூ. 18 இலட்சம் இறுதிச் செலவில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பணியாளர் குடியிருப்புகளைக் கட்டும் பணியையும் எடுத்துக் கொள்ளக் கருதியுள்ளது. எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. 16 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக மனையைத் தேர்ந்தெடுப்பது தீவிர பரிசீலனையில் உள்ளது. 'டேனிடா' திட்டத்தின் கீழ் சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக 13 மருந்தகக் கட்டிடங்களும், மருத்துவ அதிகாரிகளுக்காக 21 குடியிருப்புகளும் கட்டும் பணி நடந்தேறி வருகின்றது.

1984-85 ஆம் ஆண்டில் மேலும் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

## 2. நடமாடும் சுகாதாரப் பணிகள் :

வெகு தொலைவிலுள்ள கிராமங்களுக்கும் சுகாதார பாதுகாப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் இதுவரையிலும் 249 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள ஊர்திகளைப் பயன்படுத்தியும், கூடுதலாக 2



மருந்தாளுநர்களை நியமிப்பதன் மூலமும் 1984-85 ஆம் ஆண்டில் மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 116 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. கிராம மக்களுக்கு உதவி செய்யும் மருத்துவக் குழுவிற்கு உதவி செய்யுமாறு கிராமத்தார்களால் அமைக்கப்பட்ட கிராம நலக் குழுக்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றன.

## 3. சிறு சுகாதார நிலையங்கள் :

உள்ளூர் மக்களின் முழு ஒத்துழைப்புடன் மக்களுக்கு விரிவான சுகாதாரப் பணிகளை அளிக்க வேண்டி சிறிய சுகாதார நிலையங்களை ஏற்படுத்த தொண்டு நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஊக்கம் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சிறு சுகாதார நிலையமும் 5,000 மக்களுக்கு சுகாதாரப் பணிகளை செய்யும். தற்போது ஒவ்வொரு சிறு சுகாதார நிலையத்திற்கும் ஆண்டொன்றுக்கு செலவிடப்படும் தொகையான 18,000 ரூபாயில் 5 சதவீதத்தை தொண்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. மீதமுள்ள செலவினை மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் ஏற்றுக்கொள்ளுகின்றன. 1-9-1983-ம் நாளிலிருந்து சிறு சுகாதார நிலையம் ஒன்றுக்கான செலவுத் தொகைக்குரிய வரையறையானது ஆண்டொன்றிற்கு 27,000 [illegible] உயர்த்தப்பட்டுள்ளது. இச்செலவுத் தொகையினை தொண்டு நிறுவனம், மாநில அரசு, மத்திய அரசு ஆகியவை 1 : 1 : 1 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் 264 சிறு சுகாதார நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 251 நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன.

# III. மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம்.

## 1. சுகாதாரத் துணை நிலையங்கள் :

கிராமப்புற எல்லைப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ஆரம்ப சுகாதாரப் பணியினை வழங்கும் நிறுவனங்களே சுகாதார துணை நிலையங்கள் ஆகும். இவை சமவெளிகளில் 5,000 மக்களுக்கு ஒன்று [illegible] மக்களுக்கு ஒன்று வீதமும் அமைக்கப்படுகின்றன. துணை நிலையங்கள் அமைக்கப்பட்டதில் எய்திய சாதனையின் ஆண்டு வாரியான விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1-4-1978 -ஆம் நாளன்றுள்ளவாறு | 2,964 |
| 1978—79 .. .. .. | 377 |
| 1979—80 .. .. .. | 19 |
| 1980—81 .. .. .. | 30 |
| 1981—82 .. .. .. | 442 |
| 1982—83 .. .. .. | 754 |
| 1983—84 (31-1-1984 வரையில்) .. | 323 |
| மொத்தம் | [illegible] |

31-1-1984 ஆம் நாளன்றுள்ளவாறு இம்மாநிலத்தில் 4,909 சுகாதார துணை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டு இறுதிக்குள் 5,000 துணை நிலையங்கள் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. கொள்ளை நோய்கள் கட்டுப்பாடு :

குடல் சார்ந்த நோய்களான வாந்திபேதி, கடுமையான குடற் அழற்[illegible], [illegible]டபாய்டு, [illegible]ஞ்சள் காமாலை [illegible], யானைக்கால், மூளைக்காய்ச்சல், காசநோய், தொழுநோய் போன்றவை தமிழ்நாட்டில் பரவுகின்ற பெரிய தொற்று நோய்களாகும். இந்நோய்களைக் கட்டுப்படுத்தவும், ஒழிக்கவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதனால், இந்நோயினால் ஏற்படும் இறப்புகள் மற்றும் நலிவுகள் பெருமளவுக்குக் குறைந்துள்ளன.

### வாந்திபேதி.

நோய் பாதித்துள்ளதைக் கண்டுபிடித்து உரிய நேரத்தில் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு நோய் கண்காணிப்பு முறையானது மேலும் வலுப்படுத்தப்பட்[illegible] 1982, 1983 ஆம் [illegible] நோய் கண்டுள்ளவர்கள், அந்நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| ஆண்டு. | நோயால் பாதிக்கப் பட்டோர் எண்ணிக்கை. | இறந்தோர் எண்ணிக்கை. | இறந்தோர் சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982 .. .. | 2,641 | 32 | 1.2 |
| 1983 .. .. | 3,306 | 27 | 0.8 |

1983 ல் நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையானது [illegible] கோளாறு தொடர்பான நோய் சிகிச்சை முறை, தீவிர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப் பெரிய மருத்துவ மனைகளுக்கு அனுப்புவது உட்பட சிகிச்சைப் பணிகளை உற்ற தருணத்தில் மேற்கொண்டதன் காரணமாக இந்நோயினால் இறந்தோர் எண்ணிக்கை குறைந்தது.

பிளேக் : தமிழ் நாட்டில் 1965 ஆம் ஆண்டிலிருந்து மனிதர்களைப பாதிக்கும் பிளேக் நோய் இல்லை. ஆயினும் முன்னெச்சரிக்கையாக முன்னர் இந்நோய் பரவியிருந்த மாவட்டங்களான வடஆற்காடு, தர்மபுரி, பெரியார், நீலகிரி மாவட்டங்களில் வசிப்பவர்களிடையே பிளேக் நோய் பரவாமல் இருக்க நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.





விலங்கினங்களால் ஏற்படக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த தக்க அறிவுரைகள் வழங்கவேண்டி மாநில் அளவிலும் மாவட்ட அளவிலும் குழுக்களை அரசு அமைத்துள்ளது.

### மலேரியா முறைகாய்ச்சல்.

தேசிய மலேரியா நோய் ஒழிப்புத் திட்டம் 1958 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1977 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் திருத்தப் பட்ட செயல் திட்டத்தின்படி நிறைவேற்றப்பட்டு வருகிறது. திருத்தச் செயற் திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன;

(அ) அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் கிராமப் பகுதி களில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் 15 நாட்களுக்கு ஒரு முறை சென்று மலேரியா நோயினால் எவரேனும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்று கண்டறிதல்;

(இ) இரத்த மாதிரிகளை சேர்த்து, சோதித்து மலேரியா நோயைக் கண்டறிதல்;

(உ) மலேரியா நோயினால். பாதிக்கப்பட்டவர்கள் என்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து தீவிரச் சிகிச்சை அளித்தல்;

(எ) நோய் பரவுதலை தடுக்க வேண்டி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொசுக்களைப் புழுப் பருவத்திலேயே அழித்தல், பூச்சி மருந்து தெளித்தல் மூலம் நோய் பரப்பும் கிருமிகளைக் கட்டுப்படுத்தல்;

தர்மபுரி, வடஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களில் பெண்ணையாற்றை ஒட்டிய கிராமங்களிலும் இராமேஸ்வரம் தீவு உட்பட, இராமநாதபுரம் மாவட்ட கடலோரக் கிராமங்களிலும், மலேரியா நோய் காணப்படுகின்றது. நகர்ப்புற பகுதிகளில் சென்னை மாநகரிலும், சேலம், ஈரோடு, குமாரபாளையம், இராசிபுரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் மலேரியா பரவியுள்ளது.

இம்மாநிலத்தில் 1983 ஆம் ஆண்டில் மொத்தம் 67,912 பேர் மலேரியாவினால் பாதிக்ப்பட்டுள்ளனர். மலேரியா நோயாளிகள் 60 சதவிகிதம் மாநகரத்தில் உள்ளவர்களாவர்

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் சென்னை மாநகரிலும் தமிழ்நாடு முழுவதும் மலேரியா நோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

| ஆண்டு. | மாநிலம் முழுவதும். | சென்னை மாநகராட்சி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980 | 73,381 | 36,193 |
| 1981 | 71,517 | 44,951 |
| 1982 | 66,133 | 44,981 |
| 1983 | 67,912 | 44,817 |

இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் 1980லிருந்து வருமாறு :—

| ஆண்டு. | நோயாளிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1980 | 9,541 |
| 1981 | 4,224 |
| 1982 | 3,223 |
| 1983 | 5,706 |

தென்னந்தோப்புகளில் உள்ள குழிகளில் தேங்கியுள்ள தண்ணீரைத் தூய்மைப்படுத்தாததின் காரணமாக, தொற்று நோய் பரப்பும் சிறு கிருமிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நோயினால் பாதிக்கப்பட்டோரைக் கண்டறியாதது, மீனவர்கள் அவ்வப்போது வெளியே சென்று விடுவதனால் அவர்களில் தீவிர சிகிச்சை பெறவேண்டியவர் கூட முறையாகச் சிகிச்சை பெறாதது, அவர்களில் சிலர் இத்தகைய சிகிச்சையைப் பெற மறுப்பது ஆகிய காரணங்களை முன்னிட்டு நோய் பரப்பும் கிருமிகளின் எண்ணிக்கை ஒரே அளவில் உள்ளது.

தீவிர மலேரியா தடுப்பு மற்றும் நுண்ணியிர் ஒழிப்பு நடவடிக்கைகள் எடுத்ததின் காரணமாக இந்நோயினால் ஏற்படும் பாதிப்பு குறைந்து வருகிறது. தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 1984–85ல் இராமேஸ்வரம் தீவில் ஒரு கள நிலையம் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் மலேரியா நோய் பரவுவதைக் குறைக்க சென்னை மாநகராட்சி தனியே தீவிரப் பணிகளை மேற்கொண்டுள்ளது.



## யானைக்கால் நோய்.

இந்நோய், 'கியூலெக்ஸ்' வகை கொசுக்களினால் பரவுகிறது. தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், இம் மாநிலத்தில் 19 நோய்க்கட்டுப்பாடு பிரிவுகளும், 33 யானைக்கால் நோய் சிகிச்சைப் பிரிவுகளும், நோய் ஆய்வுப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. 1984–85-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில், மேலும் ஒரு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவை அமைக்கக் கருதப்படுகிறது.

## மூளைக் காய்ச்சல் (Japanese Encephalitis).

1983-ல் இந்நோயினால் பாதிக்கப்பட்டோர் 623 பேர் ஆவர். இவர்களுள் 155 பேர் இறந்தனர். பறவைகள், பன்றிகள், கால்நடைகள் ஆகியவற்றிலிருந்து 'கியூலெக்ஸ்' வகை கொசுக்களால் மனிதர்களுக்கு இந்நோய் பரவுகிறது. கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் இந்நோய் மேலும் பரவுவதைத் தடுக்க உடனடியாக தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## நரம்புச் சிலந்தி நோய்.

தமிழகத்தில் நரம்புச் சிலந்தி நோய் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக எவரும் இந் நோயினால் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. எனினும், நரம்புச் சிலந்தி நோய் ஏற்கனவே பரவியிருந்த பகுதிகளில் கண்காணிப்புப் பணியும் பொதுமக்களுக்கு சுகாதாரக் கல்வி அளிக்கும் பணியும் தொடரப்படுகிறது.

## சந்தைகளும் திருவிழாக்களும்.

பண்டிகைக் காலங்களில் செய்யப்பட்ட துப்புரவு ஏற்பாடுகள் மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்களால் மேற்பார்வையிடப் பட்டன. சந்தைகளும் பண்டிகைகளும் கொள்ளைநோய் ஏதுமின்றி நடந்து முடிந்தன.

## 3. வறட்சி—வெள்ளத் துயர்தணிப்புப் பணிகள் :

1982-ல் பருவமழை பெய்யாத காரணத்தால், இம்மாநிலத்தில் பெரும்பாலும் எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப் பட்டன. வறட்சிக் காலங்களில், சில நீர்நிலைகள் தூய்மைக்கேடு அடைந்த காரணத்தால், டைபாய்டு, மஞ்சள் காமாலை, கடும் குடல் அழற்சி நோய், வாந்திபேதி, ஏனைய வயிற்றுப்போக்கு நோய்கள் ஏற்பட வாய்ப்பிருந்தது. எளிதில் நோய்வாய்ப்படக் கூடிய மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, நீர் நிலைகளில் குளோரின் கலப்பது, தொற்றுநோய்த் தடுப்பு ஊசி போடுதல், வயிற்றுப்போக்கு நோய்க்குத் தக்க மருந்து கொடுத்தல் ஆகிய

பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வயிற்றுப்போக்கு காரணமாக உடலில் நீர் வற்றிப் போகாமல் இருக்கவும் சிகிச்சை அளிக்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு மருத்துவ உதவி, முதலியவற்றுக்காக ரூ. 2.30 கோடி ஒதுக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் வாரத்தில் திடீரென்று தொடர்ந்து மழை பெய்ததன் காரணமாக, தஞ்சாவூர் மாவட்டமும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்வான சில பகுதிகளும், வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டன. உணவுப் பொருட்கள் மூலமும் நீர் மூலமும் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. நோய்த் தடுப்பு நடவடிக்கையாக 25,15,673 பேருக்கு வாந்தி பேதி தடுப்பூசி போடப்பட்டது. 1984 சனவரி வரையில் 2,39,107 நீர்நிலைகளில் குளோரின் கலக்கப்பட்டது.

## 4. விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடுப்பூசித் திட்டம் :

(1) தொண்டை அடைப்பான், (2) கக்குவான், (3) இசிவு நோய், (4) காசநோய், (5) இளம்பிள்ளை வாதம், (6) தட்டம்மை, (7) டைபாய்டு நோய்கள் காரணமாக பாதிக்கப்படுவோர், உயிரிழப்போர் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன் விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடுப்பூசித் திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது.

### இளம்பிள்ளை வாதத்திற்குத் தடுப்பு ஊசி போடுதல்.

மூன்று மாதம் முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு சொட்டு மருந்து 4 முதல் 8 வார இடைவெளியில் மூன்று முறை தரப்படுகிறது. 18 மாதங்களுக்கு பின்னர் வீரியத்திற்கு மீண்டும் மருந்து தரப்படுகிறது. தடுப்பு மருந்து கொடுத்த விவரம் வருமாறு :

| ஆண்டு. (1) | இலக்கு (பயனடைந்தோர்). (2) | தடுப்பு மருந்து (பயனடைந்தோர்). (3) |
|---|---|---|
| 1982–83 | 5.00 இலட்சம். | 4.14 இலட்சம். |
| 1983–84 | 7.00 இலட்சம். | 4.08 இலட்சம். (1984 சனவரி வரை). |





### தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுதல்.

3 மாதம் முதல் 2 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் 4 முதல் 8 வார இடைவெளியில் முத்தடுப்பு ஊசி 3 தடவைகளாகப் போடப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு :

| ஆண்டு. (1) | இலக்கு (பயனடைந்தோர்). (2) | தடுப்பு ஊசி (பயனடைந்தோர்). (3) |
|---|---|---|
| 1982–83 | 11.00 இலட்சம் | 7.82 இலட்சம் |
| 1983–84 | 11.00 இலட்சம் | 5.99 இலட்சம் (சனவரி 1984 வரை) |

### தட்டம்மை தடுப்பு ஊசித் திட்டம்.

ரோட்டரி சங்கத்தின் உதவியுடன் தட்டம்மை நோய்த் தடுப்பு ஊசித் திட்டம் செயலாக்கப்படுகிறது. 9 மாதம் முதல் 2 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும் தட்டம்மையால் ஏற்கெனவே பாதிக்கப்படாத 2 முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும் ஒரு முறை நோய்த் தடுப்பு ஊசி போடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு :

| ஆண்டு. (1) | தடுப்பூசி (பயனடைந்தோர்). (2) |
|---|---|
| 1982–83 | 8.17 இலட்சம் |
| 1983–84 | 1.98 இலட்சம் (1984 சனவரி வரை) |

### டைப்பாய்டு நோய்த் தடுப்பு ஊசி.

5 முதல் 6 வயதான குழந்தைகளுக்கு டைபாய்டு நோய் வராமல் தடுக்கும்பொருட்டு அவர்களுக்கு நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. அவ்விவரம் வருமாறு:—

| ஆண்டு. (1) | இலக்கு (பயனடைந்தோர்). (2) | நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொண்ட குழந்தைகள். (3) |
|---|---|---|
| 1982–83 | 7.5 இலட்சம் | 6.20 இலட்சம் |
| 1983–84 | 7.5 இலட்சம் | 5.62 இலட்சம் (1984 சனவரி வரை) |

### பள்ளிக் குழந்தைகளுக்கு இசிவு நோய்த் தடுப்பூசி.

இத்திட்டத்தின் கீழ் 10 வயது 16 வயது பள்ளிச் சிறுவர்களுக்கு இசிவு நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது 1983-84 ஆம் ஆண்டில் (1984 சனவரி வரை) 10 வயதுடைய 1.57 இலட்சம் சிறுவர்களுக்கும் 16 வயதுடைய 0.53 இலட்சம் சிறுவர்களுக்கும் இசிவு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டது.

### அம்மைப்பால் பாதுகாப்பிற்கான குளிர்ப்பதன வசதி.

குழந்தைகளுக்கு அம்மை தடுப்பு ஊசி போடப்படும் வரை தடுப்பூசி மருந்துகளின் வீரியம் குறையாமலிருக்க, அவை போதிய குளிர் அறைகளில் வைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காக அவை கிண்டி, கிங் நிறுவனத்தின் குளிர்ப்பதன அறையிலும், பின்னர் அவை வட்டார/மாவட்ட அளவிலுள்ள உறைப்பனிக்கலம் குளிர்ப்பதனப் பெட்டி முதலானவற்றிலும் பாதுகாக்கப் படுகின்றன. அவைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலிருந்து அல்லது நகராட்சி அலுவலகங்களிலிருந்து தடுப்பு ஊசி போடப்படும் இடங்களுக்கு தடுப்பு ஊசி எடுத்துச் செல்வதற்காக உள்ள பெட்டிகளில் வைத்து எடுத்துச் செல்லப்படுகின்றன. கோயம்புத்தூரில் ஒன்றும், திருநெல்வேலியில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மூன்று குளிர்ப்பதன அறைகளை கட்டு வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### 5. மகப்பேறு சேய்நலப் பணிகள்

சுகாதார வசதி அளிக்கும் திட்டத்தின் செறிவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 8 பெரிய திட்டப்பணிகளில் தாய்-சேய் நலப் பணிகளுக்கு வகை செய்வதும் ஒன்றாகும். இத்திட்டப்பணியில் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

(அ) ஊட்டச்சத்து கல்வி உட்பட உடல் நலம் பற்றிய கல்வி விளக்கம் அளித்தல்;

(இ) கருவுற்றிருப்பவர்களுக்கு கருவுற்றுள்ள காலத்திலும், பேறுகாலத்திலும், மகப்பேறுவிற்குப் பிந்திய காலத்திலும், உடல்நலப் பரிசோதனைச் செய்தல், தேவையான மருத்துவ உதவிகள் அளித்தல்;

(உ) குழந்தைகள், பாலகர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுத்தல்;

(எ) தாய்மார்கள், குழந்தைகளிடையே ஏற்படும் நலிவு, இறப்பு விகிதம் ஆகியவற்றைக் குறைப்பதற்காக தடுப்பு ஊசி போட வகை செய்தல்.

கிராமப் பகுதிகளில், 424 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 4,909 சுகாதாரத் துணை நிலையங்கள் ஆகியவற்றின் மூலமாக தாய் சேய் நலப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகரப் பகுதிகளில் 128 மகப்பேறு இல்லங்களும் 372 மகப்பேறு நிலையங்களும் இயங்கி வருகின்றன.



### 6. பள்ளி சிறார் நல்வாழ்வுத் திட்டம் :

இத்திட்டம், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 30 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவ அலுவலர்கள், சுகாதாரப் பார்வையாளர்கள் அடங்கிய குழு பள்ளிக் குழந்தைகளுக்கு (6–11 வயது) உடல் நலப் பரிசோதனை நடத்துகின்றது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் பெரிய மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். இப் பள்ளிகளில் நல்வாழ்வு, நோய்கள் பற்றிய விவரங்களையும், உடல்நலப் பாதுகாப்புக்கான வழிமுறைகள் பற்றிய சில அடிப்படை உண்மைகளையும் தெரிந்து கொள்ளும்பொருட்டு மாணவர்கள் அனைவருக்கும் நல்வாழ்வுக் கல்வி அளிக்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டில் 5,90,416 மாணவர்களுக்கு உடல் நலப் பரிசோதனை செய்யப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டில் (1984 சனவரி வரை) 4,91,927 மாணவர்களுக்கு உடல் நலப் பரிசோதனை செய்யப்பட்டது. ஒவ்வொரு பள்ளிக்குழந்தைக்கும் அவர்கள் பள்ளிக் கல்வியை முடிக்கும் வரை பராமரிப்பதற்காக தொடக்க நிலையிலிருந்து அவர்களின் சுகாதார நிலையைக் காட்டும் சுகாதார அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதுவே இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். 1984-85 ஆம் ஆண்டில் நகராட்சிப் பகுதிகளில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்காக இலட்சம் தொடர் சுகாதார பதிவு அட்டைகள் வழங் ‹‹ பட்டுள்ளது.

### 7. சத்துணவு :

நலிந்த பிரிவைச் சேர்ந்த தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து நிலைமை மேம்படுத்துவதற்காக பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

(1) ஓரளவு குறைந்த ஊட்டச் சத்து உள்ளவர்களுக்கு ஊட்டச்சத்து திறனை அதிகரிக்கும் வகையில் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை வழங்குதல்.

(2) ஊட்டச்சத்துக் குறைவினால் ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்காக சிகிச்சை அளித்தல். சிறு குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான சுகாதார நடவடிக்கை மேற் கொள்ளுதல்.

### பின்வரும் சத்துணவுத் திட்டங்கள்தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகின்றன.

#### சத்துணவுத் திட்டம்.

| | | | | |
|---|---|---|---|---|
| முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம். | தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம். | டானிடா உதவியுடன் நடத்தப்படும் திட்டம் (இரண்டு வட்டாரங்களில் மட்டும்). | ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டம். | ஏனையவை (1) வைட்டமின் ஏ கரைசல். (2) இரும்பு, பாலிக் அமில மாத்திரை வழங்குதல். |

[1984 ஏப்ரல் 17

மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்ககத்தைச் சேர்ந்த மத்திய சத்துணவுக் கழகம் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடத்திய ஆய்வுகளிலிருந்து பள்ளி செல்லும் வயதடையாத சிறுவர்கள் உட்கொள்ளும் கலோரிச் சத்துக்களின் அளவு பற்றிய விவரம் கீழ் வருமாறு :—

| வயது ஆண்டுகளில். | ஒவ்வொரு நாளும் உட்கொள்ளும் கலோரிச் சத்தின் அளவு. | | உட்கொள்ளவேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்ட கலோரிச் சத்தின் அளவு. |
|---|---|---|---|
| | சிறுவர்கள் | சிறுமியர் | |
| (1) | (2) | (3) | (4) |
| 0-1 | 470 | 453 | 710 |
| 1-2 | 719 | 741 | 1,220 |
| 2-3 | 916 | 965 | 1,220 |
| 3-4 | 1,119 | 1,116 | 1,720 |
| 4-5 | 1,194 | 1,223 | 1,720 |
| 5-6 | 1,317 | 1,307 | 1,720 |

பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் உட்கொள்ளும் உணவில் கலோரிச் சத்துக்கள் மிகக் குறைவாக உள்ளது என்பது மேற்சொன்ன அட்டவனையிலிருந்து தெளிவாகிறது.

## ஊட்டச் சத்துணவு கல்வி :

மாநிலச் சுகாதாரக் கல்விக் கழகம் சத்துணவு பற்றி அனைவரும் அறிந்து கொள்வதற்காக விளம்பரம் செய்வதோடு, விளம்பர வெளியீடுகளையும் வெளியிடுகின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், டானிடாவிடமிருந்து உதவி பெறும் திட்டம் (இரண்டு வட்டாரங்களில் மட்டும்), ஒருங்கிணைந்த சேய்நல வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் கீழ், திட்டப் பகுதிகளில் வாழும் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்தின் அவசியம், குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு பற்றி தீவிரமாக எடுத்துக் கூறப்படுகிறது.

## உடல்நலம் பேணுதல் :

சத்துக் குறைவான உணவுகள் உட்கொள்ளுவதன் மூலம் ஏற்படக் கூடிய நலிவுகள் மற்றும் இறப்புகளைக் குறைப்பதும் தொற்றக் கூடிய மற்றும் தடுக்கப்படக் கூடிய நோய்களிலிருந்து குழந்தைகளை தடுப்பு ஊசி போட்டுக் காப்பதும், அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தலும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.



1984 ஏப்ர 17]

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் :

இத்திட்டத்தினால் பயன் பெறும் குழந்தைகளின் உடல் எடையை பதிவு செய்யவும் அவர்களுடைய வளர்ச்சி, உடல் நலனில் ஏற்படும் முன்னேற்றம் குறித்துப் பதிவு செய்து குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்பச் சுகாதார நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் குழந்தைகளைப் பரிசோதனை செய்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிப்பதோடு அவர்களின் உடல் நலனையும் பேணுகின்றனர். இவர்களின் உடல் நலனைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மருத்துவ அட்டைகள் வைத்து வரப்படுகின்றன. பொதுவாக இளமை பருவத்தில் ஏற்படக் கூடிய நோய்களிலிருந்து குழந்தைகளைத் தடுப்பதற்காகத் தடுப்பூசி போடப்படுகிறது.

## ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் பயனடைபவர்கள் உரிய வளர்ச்சியும் போதிய நலனும் பெறுகின்றனரா என்று பரிசீலனை செய்வதற்காக ஒருங்கிணைந்த 'சேய் நல' வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் துணை நிலையங்களுக்குச் சென்று பார்வையிடுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் பயனடைபவர்களுக்கு ஏற்படும் சிறு உடல் நலக் குறைவுகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, தாய்மார்களுக்குப் பேறுகாலத்தில் ஏற்படும் நோய்களுக்காகத் தடுப்பூசியும் போடப்படுகிறது. சத்துணவுக் குறைவினால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அவர்கள் மருத்துவ வல்லுநர்களிடம் அனுப்பி வைக்கப்படுகின்றனர். குழந்தைகள் நல அமைப்பாளர்கள், குழந்தைகள் நலன் பற்றிய சுகாதார அட்டைகளை வைத்து வருவதோடு அந்த அட்டையில் குழந்தைகளின் எடை போன்ற விவரங்களையும் அவ்வப்போது குறித்து வைத்து வருகின்றனர்.

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் :

மக்கள் தொகையில் நலிந்த பிரிவினரின் ஊட்டச் சத்து நிலை மேம்பாடு மற்றும் பாதுகாப்பு இத்திட்டத்தில் நோக்கங்களில் முக்கியமான ஒன்றாகும். போதிய சத்துள்ள உணவுகள் வழங்கப்படாமல் உள்ள 6 முதல் 36 திங்களுக்குட்பட்ட வயதுள்ள குழந்தைகளுக்குத் தேவையான அளவு சத்து நிறைந்த உணவுகள் வழங்கப்படுகின்றன. சத்துக் குறைவான உணவை உட்கொள்ளுவதால் ஏற்படக் கூடிய சிறு உடல் நலக் குறைவிற்காகக் குழந்தைகளைச் சோதனை செய்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. வயிற்றிலுள்ள பூச்சிகளை நீக்குவதற்காக 4 திங்களுக்கு ஒரு முறை பூச்சி மருந்து கொடுக்கப்படுகிறது. ஆண்டுக்கு இரு முறை அவர்களுக்கு வைட்டமின் 'ஏ' கரைசல் கொடுக்கப்படுகிறது. நீர்வற்றுதலுக்கு முதலுதவி அளிக்க

உப்பு-சர்க்கரை கலந்த கரைசலை வீட்டிலேயே தயாரிக்கும் வழிமுறைகள் தாய்மார்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது. மகப்பேறு காரணமாக இரத்த சோகை நோய் ஏற்படுவதைத் தவிர்க்க தாய்மார்களுக்கு இரும்பு பாலிக் அமிலம் கலந்த மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

டானிடா

குளத்தூர் வளர்ச்சி வட்டாரத்திலும் (சேலம்) வளர்ச்சி வட்டாரத்திலும் (தென் ஆற்காடு) மாதிரி சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குழந்தைகளின் வளர்ச்சி மேம்பாடு குறித்து கண்காணிக்கப் படுகின்றது. ரீ-ஹைட் ரேஷன் கரைசலைஎவ்வாறு தயாரிப்பது பயன்படுத்துவது ஆகியவை குறித்துத் தாய்மார்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குழந்தைகளும், தாய்மார்களும் பரி சோதிக்கப்பட்டு தேவையேற்படும்போது மருத்துவ அதிகாரி களிடம் அனுப்பப்படுகிறார்கள்.

## குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பை கட்டுப் படுத்துவதற்கான திட்டம்

பொதுவாக 5 வயதுக்குக் குறைவாயுள்ள குழந்தைகளிடையே வைட்டமின் ஏ குறைந்து காணப்படுகிறது. உடனடி நட வடிக்கையாக குழந்தைகளுக்கு ஆண்டுக்கு இரு முறை வைட்ட மின் 'ஏ' மருந்து கொடுப்பதன் மூலம் வைட்டமின் ஏ குறைந்து காணப்படுவது தடுக்கப்படுகிறது. இத்திட்டம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ துணைபணியாளர்களால் செயற்படுத் தப்படுகிறது. வைட்டமின் 'ஏ' குறைபாட்டைகுறைப்பதற்காக உணவில் பச்சைக் காய்கறிகள், கீரைகள், ஆகியவற்றை அதிக அளவில் சேர்த்துக் கொள்ளுமாறு களப் பணியாளர்கள் சத்துணவுக் கல்வி பற்றி எடுத்துக் கூறுகின்றனர்.

## இரத்த சோகையை கட்டுப்படுத்துவதற்கான திட்டம்.

இரத்த சோகை பொதுவாக கருவுற்றிருக்கும் தாய்மார் களிடையே மகப்பேறின் கடைசி மூன்று மாதங்களில் காணப் படுகிறது. இது, இரும்புச் சத்து, பாலிக் ஆசிட் மாத்திரை களைக் கொடுப்பதன் மூலம் தடுக்கப்படுகிறது. இத்திட்டம் மருத்துவத் துணைப் பணியாளர்கள் மூலம் எல்லா துணை நிலையங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயற் படுத்தப்படுகிறது.

## 8. பிறப்பு—இறப்பு குறித்த புள்ளி விவரம்.

இம்மாநிலத்தின் எல்லா பகுதிகளிலும் பிறப்பு, இறப்பைப் பதிவு செய்வது கட்டாயமாகும். பிறப்பு இறப்பை பதிவு செய்வது குறித்து பொதுமக்கள் ஆதரவு திருப்திகரமாக உள்ளது. கிராமப் பகுதிகளில் பிறப்பு-இறப்பு பதிவாளர் களாகச் செயல்படும் கிராம நிருவாக அதிகாரிகள் பிறப்பு இறப்பு குறித்துப் பதிவுசெய்யும் பணியைக் கவனிக்கிறார்கள். கிராம நிர்வாக அதிகாரி பதவிகள் அனைத்தும் நிரப்பப் பட்டுவிட்டால், பிறப்பு இறப்பைப்பதிவு செய்வது சீரடையும். நகர்ப்பகுதிகளில் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் அனைவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, நகர்ப்பகுதிகளில் பிறப்பு இறப்பு முழுவதும் பதிவு செய்யப்படுகிறது. நம்பத் தகுந்த பிறப்பு வீதம், இறப்பு வீதம், குழந்தைகள் இறப்பு வீதம் ஆகியவற்றை மதிப்பிட அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட 150 கிராமப் பகுதிகளில் பிறப்பு. இறப்பு மாதிரிப் பதிவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 1978 முதல் 1982-ஆம் ஆண்டு வரையில்கிராம நகர்ப் பகுதிகளின் பிறப்பு இறப்பு வீதம் வருமாறு



| ஆண்டு | 1,000 பேருக்கு பிறப்பு வீதம். | | | 1.000 பேருக்கு இறப்பு வீதம். | | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமப் பகுதி | நகர்ப் பகுதி. | இரண்டும் சேர்ந்து. | கிராமப் பகுதி. | நகர்ப் பகுதி. | இரண்டும். சேர்ந்து |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1978 .. | 30.0 | 26.3 | 28.9 | 14.5 | 9·0 | 12.8 |
| 1979 .. | 28.9 | 26.2 | 28.1 | 13.6 | 8.6 | 12.0 |
| 1980 .. | 28.6 | 23.6 | 27.1 | 12.3 | 7.8 | 10.9 |
| 1981 — | 28.4 | 20.8 | 26.1 | 12.8 | 6.5 | 10.9 |
| 1982 .. | 27.1 | 24.9 | 26.4 | 11.7 | 7.1 | 10.2 |

தமிழ்நாட்டில் 1978 முதல் 1982-ஆம் ஆண்டு வரையில் கிராமப் பகுதி, நகர்ப்பகுதிகளின் குழந்தை இறப்பு வீதம் வருமாறு—

உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு இறப்பு வீதம்.

| ஆண்டு. | கிராமப்பகுதி | நகர்ப் பகுதி | இரண்டும் சேர்ந்து. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1978 .. | — 116.4 | 60.3 | 99.6 |
| 1979 .. | — 111.1 | 63 3 | 96.8 |
| 1980 .. | .. 115.7 | 62.7 | 99,9 |
| 1981 .. | .. 93.8 | 51.7 | 81.2 |
| 1982 .. | — 89.5 | 52.2 | 77.2 |

9. பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டம்

பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள்
1—10-1982 முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. திட்டத்தை
துணை நிலையத்திலும் பல நோக்கு சுகாதார ஆண் பணி ஒவ்வொரு
யாளர் ஒருவரும் பெண் பணியாளர் ஒருவரும் பணிபுரிகின்றனர்.
இவர்கள், குறிப்பிட்டதொரு சுகாதாரப் பணியை மட்டுமே
கவனித்து வந்த சுகாதாரப் பணியாளர்களின் பணிகளை ஒருங்
கிணைப்பதன் மூலம் குறிப்பிட்ட பகுதியில் (அதாவது சம
வெளிப் பகுதிகளில் 5.000 மக்கள் தொகையும், மலைப்பகுதி
யிலும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும் 3,000 மக்கள்
தொகையும் கொண்ட பகுதி) தாய்சேய் நலப்பணிகள் சத்துணவு
குடும்பநலம் உட்பட பொதுச் சுகாதாரப் பணிகள் அனைத்
தையும் கவனிக்கின்றனர். ஒவ்வொரு நான்கு ஆண் சுகாதாரப்
பணியாளர்களுக்கு ஓர் ஆண் மேற்பார்வைப் பணியாளரும்,
ஒவ்வொரு நான்கு பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு
ஒருபெண் மேற்பார்வைப் பணியாளரும் உள்ளனர். இத்
திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, ஆரம்பச் சுகாதார
நிலையங்களிலுள்ள பணியாளர்களுக்கும் மாவட்ட அளவில்
உள்ள பணியாளர்களுக்கும் பணிபுரியும்போதே பயிற்சியளிக்கப்
படுகிறது.

10. உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்

உணவுப்பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு
சுகாதாரச் சட்டங்கள் மற்றும் நல்வாழ்வுக் கல்வி வழியாக.
திறம்பட்ட முறையில் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன
இத்துறையின்கீழ் பகுப்பாய்வகங்கள் இயங்கிவருகின்றன, கிண்டி
மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள
உணவுப் பொருட்கள் பகுப்பாய்வகங்களில் சட்டப்படிக்கான
உணவுப்பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.
பாளையங்கோட்டை, சேலம் ஆகியஇடங்களிலுள்ள உணவுப்
பொருட்கள் பகுப்பாய்வகங்களில் ஏனைய உணவுப்பொருள்
மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. சென்னை
மாநகராட்சியின் நேரடிக்கட்டுப்பாட்டின்கீழ்ஒரு உணவுப்பொருள்
பகுப்பாய்வகம் இயங்குகிறது. உணவுப்பொருட்களின் மாதிரி
களைப் பரிசோதிக்கும் பணிக்காக, நகராட்சிப்பகுதிகளிலும்,
தெரிந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளிலும், 1954-ஆம்
ஆண்டு உணவுக்கலப்பட தடுப்புச்சட்டம் (மத்தியச் சட்டம்
37/1954) செயல்படுத்தப்படுகிறது. நகர்ப்பகுதிகளில் மாநகராட்சி
சுகாதார அலுவலர்கள், நகராட்சிசுகாதார அலுவலர்கள்நகராட்சி
ஆணையர்கள் ஆகியோர் சுகாதார அலுவலர்கள் என்றமுறையில்
உள்ளூர் சுகாதார அதிகாரிகளாகப் பணிபுரிகின்றனர். ஆரம்பச்
சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் கிராமப் பகுதிகளில்
உள்ளூர் சுகாதார அதிகாரிகளாகப் பணி புரிகின்றனர். கடந்த



மூன்று ஆண்டுகளில் பகுப்பாய்வு செய்யப்பட்ட உணவுப்பொருள்
மாதிரிகள் குறித்த புள்ளிவிவரம் கீழ்க்காணும்விவர அறிக்கையில்
கொடுக்கப்பட்டுள்ளது.

| தொடர் எண், | விவரங்கள். | 1981-82 | 1982—83 | 1983—84 (1984—ம் ஆண்டு சனவரி வரையில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 20,396 | 18,481 | 16,191 |
| 2 | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டறியப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை— | 2,195 | 1,887 | 2,046 |
| 3 | அபராதம் விதிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை. | 592 | 471 | 466 |
| 4 | சிறைத்தண்டனை அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை. | 194 | 142 | 74 |
| 5 | வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை. (ரூபாயில்), | 3,45,965 | 3,08,4[illegible]0 | 2,49,815 |

11. நல்வாழ்வுக் கல்வி

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககத்தின்
மாநில நல்வாழ்வுக்கல்வி நிலையம் கீழ்க்கண்ட நோக்கத்துடன்
நல்வாழ்வுக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

(1) கி. பி. 2000 ஆண்டுக்குள் மக்கள் அனைவருக்கும்
நல்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் நல்வாழ்வுக் கல்வி அளித்து
உதவுவது.

(2) மக்கள் தங்களின் நல்வாழ்வுப் பிரச்சினைகளைப்
புரிந்து கொண்டு, அவற்றைக் கண்டுபிடித்து மக்களை சிறந்த
முறையில் பங்குப்பெறச் செய்வதன் மூலமும் அவர்களுடைய
ஒத்துழைப்போடும் அவற்றைத் தீர்த்துக் கொள்ள அவர்களுக்கு
உதவுவது.

(3) நல்வாழ்வுப் பணியாளர்கள் நல்வாழ்வுக்கல்வி கொள்கைகளை நன்கு புரிந்துகொண்டு நல்வாழ்வுத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த அவர்களுக்கு உதவுவது.

செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நல்வாழ்வுப் பணித்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த சம்பந்தப் பட்ட திட்டம் தொடர்பாக மக்களுக்கு நல்வாழ்வுக் கல்வி யானது, சிறுகுழு விவாதம் மூலமாகவும் தனிப்பட்டவர்களை சந்திப்பதன் மூலமாகவும், நல்வாழ்வுக்கல்வி- சாதனங்கள் உப கரணங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி புகட்டப்படுகிறது. இதைத்தவிர, தொலைக்காட்சி வானொலி, செய்தித்தாள் பொருட்காட்சி, திரைப்படம் முதலியவற்றின் மூலமாகவும், சுவரொட்டிகள், விளம்பரத்துண்டுச் சீட்டுக்கள் ஆகியவற்றை விநியோகிப்பதன் மூலமாகவும் போதிக்கப்படுகிறது.

விளம்பரப் பிரிவுகள் தற்பொழுது பத்து சுகாதார மாவட் டங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் பத்து சுகாதார மாவட்டங்களில் விளம்பரப் பிரிவுகளை 1984-85-ல் அமைத்து ஒவ்வொரு பிரிவிற்கும் திரைப்படக்கருவி ரூ.30,000 செலவிலும் திரைப்படச் சுருள் ரூ- 2000 செலவிலும் வழங்கக் கருதப் பட்டுள்ளது.

I மாநில மருந்துக் கட்டுப்பாடு 1984—85

தமிழ்நாட்டில், மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகம் மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலரை தலைவராகக் கொண்டு 26-11-1981 முதல் தனித் துறையாக இயங்கி வருகிறது. தலைமையிடத்திற்கு இரண்டு துணை மாநிலமருந்துக்கட்டுப்பாடு அலுவலர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. துணை மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர்கள் மருந்து மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்க புது உரிமங்கள் வழங்கு வதற்கும் புதுப்பித்தலுக்கும் உரிமம் வழங்கும் அதிகாரிகள்.

2. தமிழ்நாட்டில், மருந்துக் கட்டுப்பாட்டுத்துறை நிர்வாக வசதிக்காக, பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு உதவி மாநில மருந்துக் கட்டுப்பாடு அதிகாரி யின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. அவரே அந்த மண்டலத் திற்குரிய புதிய விற்பனை உரிமம் வழங்குவதற்கும் விற்பனை உரிமங்களை புதுப்பிப்பதற்கும் உரிமம் வழங்கும் அதிகாரி ஆவார். இம்மாநிலத்தில் 59 மருந்து ஆய்வாளர்கள், உதவி மாநில மருந்துக் கட்டுப்பாடு அலுவலர்களின் கண்காணிப்பில் பணிபுரிந்து வருகிறார்கள். மருந்துகள் ஆய்வாளர்கள், மருந்து கள் விற்பனை மற்றும் தயாரிப்புக் கூடத்தினை ஆய்வு செய்தல் மருந்து மாதிரிகளை எடுத்தல், புகார் தொடர்பான புலனாய்வு செய்தல் மற்றும் சட்டத்தின் பல்வேறு வழிவகைகளை செயல் படுத்துதல் போன்ற பணிகளைச் செய்து வருகிறார்கள்.



3. தேனாம்பேட்டையில் உள்ள மருந்துகள் சோதனைக் கூடம் மருந்துக்கட்டுப்பாடு அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் 1-4-1982 முதல் இயங்கி வருகிறது. சோதனைக்காக எடுக் கப்படும் மருந்து மாதிரிகள், தேனாம்பேட்டை மருந்துகள் சோதனைக் கூடத்திலும் மற்றும் கிண்டி, கிங் நிலையத்திலும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. மருந்துகள் சோதனைக் கூடத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட மருந்து மாதிரிகளின் எண்ணிக்கை, தவறு புரிந்துள்ள மருந்து தயாரிப்புக் கூடங்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகள், நீதி மன்றத்தின் முன் உள்ள வழக்குகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டு குற்றம் சாட்டப் பட்டுள்ள மருந்து நிறுவனங்கள். | 71 | |
| தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 71 | (13-2-8 தேதிய நிலவரப் படி) |
| தண்டனை அடைந்தவர்கள் | 7 | |
| தண்டனைப்பணம் மற்றும் சிறைத் தண்டனை | 4 | |
| தண்டனைப்பணம் மட்டும் | 3 | |
| நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் | 64 | |
| சோதனைக்காக பெறப்பட்ட மாதிரி களின் எண்ணிக்கை. | 1,129 | (31-12-83 தேதிய நிலவரப் படி) |
| தேனாம்பேட்டை மருந்துகள் சோதனைக் கூடத்திலும் மற்றும் கிண்டி கிங் நிலையத் திலும் சோதனை செய்த மாதிரிகளின் எண்ணிக்கை | 1356 | (31-12-83 தேதிய நிலவரப் படி) |

4. தமிழ்நாட்டில் மருந்துகள் விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை 13,155 மருந்துகள் தயாரிப்புக் கூடங்களின் எண்ணிக்கை 1,496 (31-12-83 தேதிய நிலவரப்படி).

31-12-83 தேதிய நிலவரப்படி, வழங்கப்பட்ட மருந்து விற்பனை உரிமங்களின் எண்ணிக்கை 2,565 மருந்து தயாரிப்பு உரிமங்கள் 358

5. பன்முகப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்கள் கீழே குறிப் பிடப்பட்டுள்ள சட்டங்களை திறமையான முறையில் செயல் படுத்த உதவி புரிந்துள்ளன.

(அ) மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் 1949.

[1984 ஏப்ரல் 17

(ஆ) மருந்துகள் மற்றும் மாயக் குணமளிப்புகள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டம் 1954.

(இ) மருந்துகள் விலைக்கட்டுப்பாடு ஆணை, 1979.

(ஈ) அபாயகரமான மருந்துகள் சட்டம். 1930.

மேற்குறிப்பிட்ட சட்டங்களின் பல்வேறு வழிவகைகள் மூலம் கீழ்க்காணும் பணிகளை செயல்படுத்தப்படுவது நோக்கமாகும்;—

1. மருந்துகள் பற்றாக்குறை தவிர்க்கப்பட்டு சீரான முறையில் பொதுமக்களுக்கு அத்தகைய மருந்துகள் கிடைக்க வழிவகைகள் செய்யப்படுகின்றன.

2. நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தில், மருந்துகள் தயாரிக்கப்படுவதை தொடர்ந்து கண்காணித்து, அவைகள் அரசு மருத்துவமனை மூலமாகவும் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு கிடைப்பதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

3. போதை மருந்து புலனாய்வு நிலையத்துடன் இணைந்து செயல்பட்டு, போதை மருந்துகள் கள்ளத்தனமான வழிகளில் விற்கப்படுவது தீவிரமாக தடுக்கப்படுகிறது.

4. நோய் தீர்க்கும் குணமற்ற மற்றும் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் சரியான கலவையில்லாமல் தயாரிக்கப்படும் மருந்துகளின் உற்பத்தினை கண்டுபிடித்து களையெடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட மருந்துகளின்தயாரிப்பு நிறுத்தப்பட்டிருக்கின்றது.

5. தேவைக்கு மிஞ்சிய மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் உருவாவதைத் தடுப்பதற்கு ஒரு நிறுவனத்திற்கு 6 உரிமங்கள் தான் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மருந்து சோதனைக்கூட வசதிகள் இல்லாத நிறுவனத்திற்கு மருந்துகள் தயாரிப்பு உரிமம் வழங்கப்படுவதில்லை.

6 1984-85ஆம்நிதியாண்டில், மருந்துக் கட்டுப்பாடு தலைமையகத்திலும் மற்றும் தேனாம்பேட்டை மருந்து சோதனைக்கூடம் மற்றும் பத்து மண்டல அலுவலகங்களிலும் உள்ள கணக்குகளை தணிக்கை செய்வதற்காக, ரூ. 71,000 செலவில் தணிக்கைப் பிரிவு ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## V. தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத்துறை-

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனம் 1981-ஆம் ஆண்டில், அரசின் ஒரு தனித் துறையாக மாற்றி அமைக்கப்பட்டது. இதன் காரணமாக 1983 நவம்பர் 26 முதல் இதன் பெயர் தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையாக மாற்றி அமைக்கப்பட்டது.



1983 ஏப்ரல் 17]

2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்ற பல்வேறு இயக்குநரகங்களின் மோட்டார் வாகனங்கள் பழுது பார்த்தல் பராமரித்தல் பணிகளை கவனிப்பதுதான் இத்துறையின் முதன்மையான பொறுப்பாகும். இப்பொறுப்புக்கு ஏற்றபடி இத்துறை பணித்துறை எனவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

3. இத்துறையால் பழுதுபார்த்து பராமரிக்கப்பட வேண்டிய மோட்டார் வண்டிகளின் தற்போதைய எண்ணிக்கை 1626 ஆகும். ஓடாத நிலையில் உள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையை எப்போதும் குறைந்த அளவிலேயே வைத்திருப்பதுதான் இத்துறையின் குறிக்கோளாக உள்ளது. இக்குறிக்கோளைக் கருத்திற்கொண்டு, மாவட்டங்களிலும் மற்றும் வட்டார மையங்களிலும்பழுது பார்த்தல் மற்றும் பராமரிக்கும் வசதிகளை அரசு விரிவுபடுத்தியுள்ளது. இத்துறை தனது கட்டுப்பாட்டின் கீழ், சென்னை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் 3 வட்டார பணிமனைகளையும் திருச்சியில் ஒரு மைய பணிமனையையும் பல்வேறு மாவட்டத் தலைமையிடங்களில் 15 நடமாடும் பணிமனைகளையும் மற்றும் 11 மாவட்ட அளவு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பிரிவுகளையும் கொண்டுள்ளது.

4. கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஓடா நிலையில் உள்ள வாகனங்களின் விழுக்காட்டினை இத்துறை ஒவ்வோராண்டும் படிப்படியாக குறைத்துக்கொண்டு வருகிறது

| | வாகனங்களின் எண்ணிக்கை. | ஓடும் நிலையில் உள்ளவை. | விழுக்காடு. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1982 ஜனவரி 1-ன் நிலவரப்படி | 1,516 | 1,244 | 82 |
| 1983 ஜனவரி 1-ன் நிலவரப்படி | 1,672 | 1.404 | 84 |
| 1984 ஜனவரி 1-ன் நிலவரப்படி | 1,626 | 1,395 | 86 |

70 வாகனங்கள் கழிக்கப்பட வேண்டியிருப்பதால் நிறுத்தப்பட்டுள்ளன. ஆகையால் இதில் சேர்க்கப்படவில்லை.

5. 1982-83ஆம் ஆண்டிலும் 1983-84 ஆம் ஆண்டிலும் (1983 டிசம்பர் முடிய) இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட சிறியமற்றும் பெரிய அளவில் பழுதுபார்க்கப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை விவரம் கீழேதரப்பட்டுள்ளது.

| ஆண்டு. (1) | சிறிய அளவில் பழுது பார்க்கப்பட்ட வண்டி களின் மொத்த எண்ணிக்கை. (2) | பெரிய அளவில் பழுது பார்க்கப்பட்ட வண்டி களின் மொத்த எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1982-83 | 105 | 667 |
| 1983-84 (1983 டிசம்பர் முடிய) | 122 | 720 |

6. 1983-84 ஆம் ஆண்டின் சாதனைகள்;

1. கீழ்க்கண்ட மாவட்டங்களில் மாவட்ட அளவு பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டன.

(1) வட ஆற்காடு (2) தர்மபுரி (3) கோயம்புத்தூர் (4) புதுக்கோட்டை மற்றும் (5) கன்னியாகுமரி.

2. மூன்று வட்டாரப் பணிமனைகளுக்கும் வெவ்வேறு வகையான 17 தொழிற்நுட்ப பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது.

3. வட்டாரப் பணிமனைகள் இரண்டிற்கும் ஆறு மாவட்டப் பணிமனைகளுக்கும் தொலைபேசி இணைப்பு வசதி ஏற்படுத்தித்தர ஒப்புதல் அளிக்கப்பட்டது.

4. பெட்ரோலினால் இயங்கக்கூடிய 50 வாகனங்களை ரூ. 15 இலட்சம் செலவில் டீசலில் இயங்கக் கூடியதாக மாற்றுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

1984-85 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கிற திட்டங்கள்

1. ரூ. 1 இலட்சம் செலவில்' சென்னையில் வட்டாரப் பணிமனையிலும், திருச்சி மையப் பணிமனையிலும் குழாய்க் கிணறு வசதி செய்து தருதல்.

2. ரூ. 40000 செலவில் எஞ்சியுள்ள ஐந்து மாவட்டப் பணிமனைகளில் தொலைபேசி இணைப்பு வசதி செய்து தருதல்

3. வட்டாரப் பணிமனைகள் மூன்றிற்கும் மையப் பணி மனைக்கும் கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.



இணைப்பு

| தொடர் எண். (1) | திட்டப்பணிகளின் விவரம். (2) | இறுதிச் செலவு (3) | 1984-85ல் செலவு (4) |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநர்— | | | |
| 1. | கூடுதலாக 10 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்குதல். | 24.60 | 22.59 |
| 2. | நடமாடும் சுகாதாரப்பணிக்காக 25 மருந்தாக்குநர்களை நியமித்தல். | 6.69 | 6.55 |
| 3. | ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர் குடியிருப்பு கட்டுதல். | 18.00 | 18.00 |
| பொதுச்சுகாதாரம்—நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்— | | | |
| 4. | நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒரு இலட்சம் பள்ளிச் சிறார் களுக்கு உடல் நலம் பற்றிய தகவல் அடங்கிய அட்டைகள் வழங்குதல். | 1.00 | 1.00 |
| 5. | அரசு எடுத்துக் கொண்ட 100 நகராட்சி ஒன்றிய துணை நிலையங்களுக்குக் கருவிகளும், மேஜை, நாற்காலி முதலிய பொருள்களும் வழங்குதல். | 3.00 | 3.00 |
| 6. | இராமேஸ்வரம் தீவில் மலேரியா கட்டுப்பாட்டிற்கான சிறப்புக் களப்பணியாளர்களுக்குக் கட்டி டங்கள் கட்டுதல். | 40.80 | 5.00 |
| 7. | சுகாதாரப் பிரிவு மாவட்டங்கள் பத்தில் பிரச்சாரப் பிரிவுகளை ஏற்படுத்துதல். | 4.38 | 4.05 |
| 8) | மாநிலத்தில் உள்ள 16 மாவட்டக்கணக்கு இணக்க அலுவலகங்கள் ஒவ்வொன் றிலும் உதவியாளர் பதவி ஒன்றை ஏற்படுத்தல். | 1.59 | 0.92 |

| தொடர் எண். (1) | திட்டப்பணிகளின் விவரம். (2) | இறுதிச் செலவு. (3) | 1984-85ல் செலவு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 9. | ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் மேற்பட்ட 11 நகராட்சிகளில் புள்ளி விவர உதவியாளர் 11 பேரை நியமிப்பதன் மூலம் நகர்புறப் பகுதிகளில் பதிவை வலுப்படுத்தும் திட்டத்தை நீட்டித்தல். | 1.82 | 1.23 |
| 10 | கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயிலில் யானைக்கால் நோய்த்தடுப்பு பிரிவு ஒன்றை ஏற்படுத்தல், கன்னியாகுமரி, செங்கல்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் ஐந்து யானைக்கால் நோய் பிரிவு சிகிச்சை அமைத்தல். | 5.80 | 3.90 |
| திட்டத்தில் சேராதது— | | | |
| 11. | இராமேஸ்வரம் தீவில் மலேரியா கட்டுப்பாட்டிற்கான சிறப்புக் களப்பணியாளர்கள். | 0.96 | 0.54 |
| 12. | விரிவுப்படுத்தப்பட்ட நோய்த் தடுப்பூசித் திட்டப் பணிக்காகக் கூடுதல் பணியாளர்களை நியமித்தல். | 10.68 | 4.96 |
| மாநில மருந்துக் கட்டுப்பாடு அதிகாரி— | | | |
| 13. | தலைமையிடத்தில் தணிக்கைப் பணியாளர் குழு ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள். | 0.96 | 0.71 |
| மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவன இயக்குநர் | | | |
| 14. | சென்னை, வட்டாரப் பணிக்களரிக்கும் (சுகாதாரம்) திருச்சிராப்பள்ளி, மத்திய பணிகளரிக்கும் (சுகாதாரம்) துளை கிணறு அமைத்தல். | 1.00 | 1.00 |



| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம். (2) | இறுதிச் செலவு. (3) | 1984-85ல் செலவு. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 15. | தொலைபேசி ஒன்றுக்கு ரூ. 8.00 என்ற வீதத்தில் ஐந்து மாவட்டப் பணிக்களரிகளுக்குத் தொலைபேசி வசதி அளித்தல் | 0.40 | 0.40 |
| 16. | சென்னை, சேலம், மதுரை வட்டாரப் பணிக்களரிக்கும் திருச்சிராப்பள்ளி மத்திய பணிக்களரிக்கும் (சுகாதாரம்) கூடுதல் பணியாளர்களை நியமித்தல். | 1.61 | 1.20 |

## இணைப்பு III.

[ 60ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1984—85 ஆம் ஆண்டுக்கான கோரிக்கை எண். 19—ன் துணைக் கோரிக்கை.

நிதி மதிப்பீடு ரூ. 11,323.74 இலட்சங்கள்.

---

### முகவுரை :

''தன்னிறைவுத் திட்டம்'' அடிப்படைத் தேவைத் திட்டம்
மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கும் விரைவுத் திட்டம் என்னும்
திட்டங்களின் மூலம் இந்த மாநிலத்திலுள்ள அனைத்துக்
குடியிருப்புகளுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்
கான எல்லா முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.
இருபது அம்சத்திட்டத்தின் முக்கிய அம்சமான ''குடிநீர் வசதி''
அரசின் தனிக் கவனத்தால் சிறப்பான முன்னேற்றம் அடைந்
துள்ளது.

நகர்ப்புற குடிநீர் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து
பல்வேறு திட்டங்கள் இதுவரை நிறைவேற்றப்பட்டு மேலும்
பல செயலாக்கத்தில் உள்ளன. சென்னை பெருநகர் தவிர்த்து
தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வசதித் திட்டங்களை தமிழ்நாடு
குடிநீர் வடிகால் வாரியம் செயலாக்குகிறது. சென்னை நகரைப்
பொறுத்தமட்டில் இவ்வசதிகளை சென்னைப் பெருநகர் குடிநீர்
வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் நிறை
வேற்றுகிறது.

### ஊரகக் குடிநீர்த் திட்டம்:

தமிழக அரசு, ஊரகப்பகுதிகளிலுள்ள அனைத்து குடியிருப்பு
களுக்கும், குறித்த காலவரைக்குள், குடிநீர் வழங்குவதற்காக
ஒரு மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. எனவே,
இதற்கான வகையில் ஒரு விஞ்ஞான ரீதியான கணக்கெடுப்பு
மேற்கொண்டு, அதனடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளும்
கீழ்க்கண்ட ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டன:—

| வகை. | விளக்கம். | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | குடியிருப்புகளுக்குள் நீர் மூலங்களே இல்லாத குடியிருப்புகள் .. .. .. | 3,567 |







| வகை. | விளக்கம். | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 2 | குடிக்கத் தகுதியற்ற நீர் மூலங்கள் உடைய குடியிருப்புகள் .. .. .. | 2,051 |
| 3 | குடிக்கத் தகுதியான நீர் மூலங்கள் கொண்ட ஆனால், அனைத்துப் பருவத்திலும் நீர் கிடைக்காத குடியிருப்புகள் .. .. | 6,487 |
| 4 | குடிப்பதற்கு ஏற்ற மற்றும் அனைத்து பருவங்களிலும் நீர் கிடைக்கும் குடியிருப்புகள், ஆனால் நீர் நிலைகள் தனி நபருக்குச் சொந்தமான அல்லது பாதுகாக்கப்படாத நீர் மூலங்கள் கொண்டது .. .. | 4,955 |
| 5 | குடியிருப்புக்குள்ளே நல்ல நீர் நிலைகள் இல்லாத ஆனால், 1 கிலோ மீட்டர் சுற்றுக்குள் மாற்று நீர் நிலைகள் கொண்ட குடியிருப்புகள் .. .. | 1,107 |
| | மொத்தம் .. | 18,167 |
| 6 | நல்ல நீர் நிலைகள் கொண்ட குடியிருப்புகள் | 29,106 |

இக்கணக்கெடுப்பின்படி வகை ஒன்று முதல் ஐந்து வரை
அடங்கியுள்ள 18,167 குடியிருப்புகள் போதுமான குடிநீர் வசதி
யற்றதாக உள்ளன. குடிநீர்ப் பிரச்சனை உள்ள குடியிருப்பு
களுக்கு முன்னுரிமை அளித்துப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்
வழங்கும் பணியை மாநில அரசு மேற்கொண்டு வகை 1, 2-இல்
அடங்கும் குடியிருப்புகளுக்கு 1980-81 க்குள் குடிநீர் வழங்கத்
திட்டமிட்டது. ஒன்று மற்றும் இரண்டு வகையில் அடங்கும்
5,618 குடியிருப்புகளில் 31—3—1980 வரை 3,465 குடியிருப்பு
களுக்கு குடிநீர் வழங்கும் பணி முடிந்துள்ளது.

கிராமங்களில் சமுதாய பொருளாதார முன்னேற்றத்திற்காக
அவற்றின் அடிப்படைத் தேவைகளைக் குறுகிய காலத்திற்குள்
அளிப்பதற்காக தன்னிறைவுத் திட்டத்தை 1980—81 ஆம் ஆண்டு
அரசு துவங்கியது. ''பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்'' இத்
திட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும். எல்லா வட்டாரங்களிலும்
தன்னிறைவுத் திட்டம் 30—3—1983-இல் நிறைவு பெற்ற
போதிலும் கிராமங்களில் உள்ள குடிநீர் பிரச்சனை மற்றும்

எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கட்பட்ட குடிநீர் வேண்டிய தேவை ஆகியவற்றைக் கருதி வழங்க திட்டத்தின் குடிநீர் . வழங்கும் அம்சம் மட்டும் தன்னிறைவுத் ஆண்டிற்குப் பிறகும் தொடரப்பட்டு ஒவ்வொரு 1982—83 ஆம் செலவுக் கணக்கிலும் ணிசமான நிதி ஆண்டு வரவு- பட்டது. ஒதுக்கீடும் செய்யப்

1980—81 இல் 2,300 குடியிருப்புகளுக்கும், 2,986 குடியிருப்புகளுக்கும், 1982—83 ல் 4,069 1981—82 இல் களுக்கும் ரூ. 86.22 கோடி செலவில் தமிழ்நாடு குடியிருப்பு வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தால் குடிநீர் செய்து தரப்பட்டுள்ளது. குடிநீர் வசதி

## 1983—84 ஆம் ஆண்டு சாதனைகள்:

1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளில் இம்மாநிலத்தில் கடும் வறட்சி நிலவியது. 1983—84 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டுக் காலம் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்று தமிழ்நாடு முழுவதும் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பெரும் பணியேற்கப்பட்டது. எனவே, திட்டப்பணிகள் 983 அக்டோபர் மாதம் முதல்தான் முழு ஏனைய முயற்சியுடன் செயலாக்கப்படத் துவங்கியது. 1983—84 இல் 1,400 பிரச்னைக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக ஊரகக் குடிநீர் வழங்கும் விரைவுத் திட்டத்தின்கீழ் மைய அரசு ரூ. 7.69 கோடி அளித்தது. இதே ஆண்டில் கூடுதலாக 372 பிரச்சனைக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக மேலும் ரூ. 5 கோடியை ஊக்க நிதியாக அளித்தது. இது தவிர, தமிழ்நாடு அரசு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 22 கோடி மற்றும் அடிப்படை தேவைத் திட்டத்தின்கீழ் ரூ. 13 கோடி அளித்தது. இவை எல்லாம் சேர்ந்து மொத்தம் ரூ. 47.69 கோடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் 3,500-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்படும்.

## 1984—85 ஆம் ஆண்டுக்கான திட்டம்:

புதிய இருபது அம்ச திட்டத்தின்கீழ் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் அதாவது 31-3-1983க்குள், எல்லா பிரச்சனைக் கிராமங்களிலும் குறைந்த அளவு ஒரு பாதுகாக்கப் பட்ட குடிநீர் ஆதாரயாவது செய்து தரப்படும். கிராம முழுமைக்குமான குடிநீர் தேவையை ஒரு குடிநீர் ஆதாரம் மட்டும் பூர்த்தி செய்ய இயலும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதால் அரசு இது போதுமானது அல்ல என்று கருதுகிறது. எனவே, அரசு தேவையான நடவடிக்கைகளை எப்போதும் எடுத்து வந்ததுபோல 1984—85 ஆம் ஆண்டிலும் சராசரியாக 250—300 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு கையிறைப்பான் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்



படும். மக்கள் தொகை 750-க்கு மேற்படும் குடியிருப்புகள் அல்லது குடிநீருக்காக சுய ஆதாரத்தின் மூலம் குடிநீர் வழங்க இயலாத இடங்களில், விசையிறைப்பானுடன் கூடிய மேல்நிலைத் தொட்டி நிறுவும் திட்டம் தொடரப்படும். தொடர்ந்த வறட்சி நிலை காரணமாக நிலத்தடி நீர் மட்டம் தாழ்ந்துபோனபடியால், மாவட்ட ஆட்சியாளர்களின் பரிந்துரையின் மேல் இதுவரை வகை 6 இல் உள்ள குடியிருப்புகளில் பெரும் பகுதி (14,826) வகை 3 முதல் 5 வரையுள்ள பிரச்சனைக் கிராமங்களாக வகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வகைமாற்றம் செய்யப்பட்ட கிராமங்கள் பிரதம மந்திரியின் 20 அம்ச திட்டத்தின்கீழ் பிரச்சனைக் கிராமங்களின் வகையில் சேர்க்கத்தக்கது அல்ல. 1984—85 இல் இந்த வகை மாற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் பெரும்பாலானவற்றுக்கு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

## வறட்சி நிவாரணப் பணி.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் போதுமான அளவு மழை பெய்யாததால், இதுவரை கண்டிராத குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காக ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டது. ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளின் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கான செலவு முழுவதும் அரசு மானிய மாகவும், நகராட்சிகளுக்கு 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் கொடுக்கப்பட்டது. இப் பணிகளைப் போர்க்கால நடவடிக்கையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றியது.

பாதிக்கப்பட்ட இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி 1982 செப்டம்பரில் துவக்கப்பட்டு ரூ. 20.60 கோடி செலவில் கைப் பம்புடன் கூடிய 9,688 ஆழ்துளைக் கிணறுகள் 1982—83 ஆம் ஆண்டிலும், ரூ. 25.19 கோடி செலவில் கைப் பம்புடன் கூடிய 11,850 ஆழ்துளைக் கிணறுகள் 1983—84 ஆம் ஆண்டிலும் அமைக்கப்பட்டன. மேற்கொண்ட பணிகள் செப்டம்பர் 1983 இல் முடிந்த பிறகும் கூட, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், குடிநீர்ப் பஞ்சம் தொடர்ந்து இருந்ததால், ரூ. 91.80 இலட்சம் செலவில் 454 ஆழ்துளைக் கிணறுகள் இம்மாவட்டங்களில் அமைக்கப் பட்டன.

மத்திய அரசு ரூ. 20.16 கோடியை வரம்பாகக் கொண்டு 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுக்கான உதவித் தொகையாக ரூ. 20.16 கோடியை விடுவித்தது. மொத்தம் செலவான தொகை ரூ. 47 கோடியாக இருப்பதால், மத்திய அரசு தன்னுடைய உதவியை அதிகரித்து மேலும் ரூ. 4.63 கோடி அளித்தது. மீதமுள்ள தொகைமாநில அரசின் நிதியி லிருந்து வழங்கப்பட்டது.

## வெளிநாட்டு உதவியுடன் நிறைவேற்றப்படும் குடிநீர்த் திட்டங்கள்.

### அ. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட உள்ள குடிநீர் மற்றும் குறைந்த செலவினாலான துப்புரவுத் திட்டங்கள்.

கோவை, மதுரை, சேலம் ஆகிய மூன்று பெரிய நகரங் களுக்கும், 75 நடுத்தர நகரங்களுக்கும் குடிநீர்த் திட்டமும் மற்றும் 14 நகராட்சிகளுக்கான குறைந்த செலவினாலான துப்புரவுத் திட்டமும் 1984—85 முதல் உலக வங்கியின் உதவியுடன் நிறை வேற்றப்படவுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு:—

(அ) பவானி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் கூடுதல் குடிநீர் கோவை மற்றும் கோவை மாவட்டத்தி லுள்ள 20 நகரங்கள், 476 கிராமக் குடியிருப்புகளுக்கு வழங்குதல்.

(ஆ) வைகை அணையிலிருந்து மதுரை நகரத்திற்கு தினம் ஒன்றுக்கு மொத்தம் 90 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குதல்.

(இ) காவிரி ஆற்றி ருந்து நாளொன்றுக்கு 85 மில்லியன் லிட்டர் கூடுதல் குடிநீர் சேலம் மற்றும் 264 கிராமக் குடியிருப்பு களுக்கும், 11 நகரங்களுக்கும் வழங்குதல்.

(ஈ) போதுமான நீர் ஆதாரமில்லாத 44 நகரங்களுக்கு குழாய்க் கிணறு, திறந்த வெளிக் கிணறு, ஊடுறுவல் கிணறுகள் வழியாகப் போதுமான அளவு குடிநீர் வசதி செய்து தருதல்.

(உ) 14 நகரங்களுக்குக் குறைந்த செலவில் துப்புரவு வசதிகள் செய்து தரும் ஒரு முன்னோடித் திட்டம்.

(ஊ) ஆலோசனைப் பணிகளும், பயிற்சித் திட்டங்களும்.

உலக வங்கித் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 149.42 கோடி ஆகும். இதில் 740 கிராமக் குடியிருப்புத் திட்டங் களுக்காக ரூ. 14.14 கோடி செலவிடப்படும். இத்திட்டத்தினால் பயனடையும் மக்கட் தொகை 38.96 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தில், கோவை மாநகராட்சிக்கு ரூ. 21.24 கோடியும், மதுரை மாநகராட்சிக்கு ரூ. 32.51 கோடியும், சேலம் நகராட்சிக்கு ரூ. 16.23 கோடியும் திட்ட மதிப்பீடு ஆகும். கோயம்புத்தூர் மாநகராட்சி திட்டத்திற்கு 100 விழுக்காடு கடனும், மதுரை மாநகராட்சி திட்டத்திற்கு 80 விழுக்காடு கடன் மற்றும் 20 விழுக்காடு மானியமும், சேலம் நகராட்சித் திட்டத்திற்கு 20 விழுக்காடு கடன் மற்றும் 80 விழுக்காடு மானியமும் நிதி வழங்கப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தி லுள்ள 20 பேரூராட்சித் திட்டங்களுக்கு 75 விழுக்காடு மானியம்



25 விழுக்காடு கடன் முறையிலும், சேலம் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சித் திட்டங் ளுக்கு 100 விழுக்காடு மானியமும் ஏனைய 44 நகரங்களுக்கான நிதி 75 விழுக்காடு மானியமும், 25 விழுக்காடு கடனாகவும், 740 கிராமப்புற குடியிருப்புகளுக்கு முழு மானியமாகவும் நிதி வ ங்கப்படும். இத் திட்டங்கள் 1984 இல் தொடங்கப்பட்டு 4½ ஆண்டுக் காலத்திற்குள் முடிக்கப்படும்.

உலக வங்கியுடன் பிப்ரவரி 1984 இல் பேச்சு வார்த்தை நடந்தது. திட்டத்திற்கான நிதி ஜூன் 1984 இல் வரத் துவங்கும் என எதி ர்க்கப்படுகிறது. முன்னேற்பாடான வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

### ஆ. ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் ப்ளூரைட் கலந்துள்ள நீருள்ள குடியிருப்புகளுக்கு நல்ல குடிநீர் வழங்குதல்.

குடிநீரில் லிட்டருக்கு 1.5 மி.லி. கிராம் அதிகமாக ப்ளூரைட் கலந்திருத்தல் உடல் நலத்திற்கு கெடுதல் ஆகும். பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் தண்ணீரில் அதிக ப்ளூரைட் உள்ள 726 குகுயிருப்பு பகுதிகளுக்கு தொலை தூர நீர் ஆதாரங் களிலிருந்து குடிநீர் கொண்டு வந்து வழங்கும் ஒரு திட்டத்திற்கு ரூ. 15.20 கோடி நிதியுதவி அளிக்க ஐரோப்பிய பொருள தாரக் குழு ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் மக்கள்தொ 3,78,000 கும். திட்டப் பணிகள் 1984–85இல் தொடங்கப்பட்டு 2½ ஆண்டுக் காலத்திற்குள் முடிவடையும்.

### இ. கையிறைப்பான் புதுப்பித்தல்.

கையிறைப்பான்களை லகுவாக இயக்கவும், தரத்தினை உயர்த்திடவும் டேனிடா (DANIDA) மற்றும் யூனிசெப் (UNICEF) உதவியுடன் பழைய கையிறைப்பான்களைப் புதுப்பித்து அவை களில் இந்தியா மார்க் II கையிறைப்பான் பொருத்தும் பணி 1982–83 முதல் தொடங்கப்பட்டது.

டேனிடா நிறுவனம் 2,500 கையிறைப்பான்களை புதுப்பிப்ப தற்காக தென்னாற்காடு மற்றும் சேலம் ஆகிய இரு மாவட்டங் களுக்கு தந்துள்ளது. தென்னாற்காடு, சேலம் ஆகிய மாவட்டங் களிலுள்ள எல்லா கையிறைப்பான்களையும் புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. எஞ்சியுள்ள கையிறைப்பான்களை செங் ல்பட்டு மாவட்டத்தில் உள்ள கையிறைப்பான்களைப் புதுப் பிக்கும் பணிக்குப் பயன்படுத்தப்படும்.

புதுப்பிக்கும் பணிக்கு, யூனிசெப் 3,000 இந்தியா மார்க் II கையிறைப்பான்களை தந்துள்ளது. தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், வடஆற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங் களில் உள்ள எல்லா பழைய கையிறைப்பான்களும் 1984–85ல் புதுப்பிக்கப்படும். மற்ற மாவட்டங்களில் உள்ள பழைய கையிறைப்பான்களும் படிப்படியாக யூனிசெப் உதவியுடன் புதுப்பிக்கப்படவிருக்கிறது.

ஈ. மலைவாழ் பழங்குடியினர் அபிவிருத்தித் திட்டம்:

சமுதாய முன்னேற்றத் திட்டத்தின் கீழே யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 61 குடிநீர்த் திட்டங்கள் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மலைவாழ் பழங்குடியினர் அபிவிருத்தித் திட்டத்திற்கும் கிராம குடிநீர்த் திட்டத்திற்கும் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இத்திட்டங்களுக்குச் செலவு செய்யப்படும். யூனிசெப் நிறுவனம் இதற்கான குழாய்களையும் தனிக் கருவிகளையும் கொடுத்துதவும். 7 திட்டங்கள் 1983-84-இல் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப் பட்டன. 16 திட்டங்கள் 1984—85 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

உவர்த் தண்ணீரை குடிநீராக மாற்றுதல்:

உப்புக்கரிப்பு அல்லது உவர் நீராக உள்ள இடங்களில் நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என்ற கருத்துடன் இந்திய அரசு இலவசமாக சுத்திகரிப்பு கருவிகளை சோதனை முறையில் நிறுவ ஒப்புக்கொண்டுள்ளனர். அவை இராமநாதபுரத்திலுள்ள இரு கிராமங்களில் இவ்வாண்டில் நிறுவப்படும். மாநில அரசு ஏனைய அடிப்படை வசதிகளையும், சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கவும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவினங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யும்.

கிராம குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல்:

தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியத்திடமிருந்து கையிறைப் பான்களைப் பராமரிக்கும் பணி 23—7—1971 அன்றும், விசை யிறைப்பான்களைப் பராமரிக்கும் பணி 29—11—1982 அன்றும் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டது. பொது மக்களின் ஒத்துழைப்புடன் சிறந்த முறையில் பராமரிப்பதற்காக இம்மாறுதல் செய்யப்பட்டது.

கையிறைப்பான், விசையிறைப்பான் பராமரிப்பு மூன்று நிலை கொண்ட பராமரிப்புக் குழுவால் செய்யப்படுகிறது. கையிறைப்பான் பாதுகாவலர் கிராமப்பகுதியில் சிறு பழுதுகளைப் பார்ப்பார். அவரால் சரி செய்ய முடியாதவைகளை ஊராட்சி ஒன்றிய பொருத்துநர்களுக்கு அவர்களால் முடிந்த அளவுக்கு பழுது பார்ப்பதற்குத் தெரியப்படுத்துவார். அதிலும் கடினமான பழுதுகளை நடமாடும் குழு நீக்கும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் உதவி செயற்பொறியாளர் உதவியுடன் கையிறைப்பான், விசையிறைப்பான் பராமரிப்பு பணியினைக் கண்காணிப்பார்.

நகரக் குடிநீர்த் திட்டம்:

மாநிலத்திலுள்ள 728 நகரங்களில், 315 நகரங்கள் குடிநீர் வசதி பெற்றுள்ளன. மீதியுள்ள 413 நகரங்களில், 213 நகரங் களில் உலக வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடன்



உதவியுடன் குடிநீர் வசதிக்கான ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மீதியுள்ள 200 நகரங்களுக்கான குடிநீர் வசதிக் கான ஆய்வு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களில் தன்னிறைவுத் திட்டம்:

19 நகராட்சிகளில் ரூ. 45.84 இலட்சம் மதிப்பீட்டில் 112 குடிநீர்த் திட்ட வேலைகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திடம் ஒப்புடைக்கப்பட்டன. இவற்றில் 105 வேலைகள் ஏற்கனவே முடிந்து விட்டன. மீதமுள்ள வேலைகள் விரைவில் முடிக்கப் பெறும்.

1983–84 ஆம் ஆண்டுக்கான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 92.66 இலட்சம் செலவில் 200 நகரப் பஞ்சாயத்துக்கான குடிநீர்த் திட்ட வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன

நகரக் குடிநீர்த் திட்ட பராமரிப்பு :

1984–85ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரசுத் திட்டங்களின் பராமரிப்பு செலவிற்காக ரூ. 44.65 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று திட்டங்கள்:

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நகரில் தற்போதுள்ள குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதிகளின் முன்னேற்றத்திற்காகவும் குடிநீர் பெறுவதற்கான மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் (Major Augmentation) மாநில அரசு உதவியுடன் பல திட்டங்களை ரூ. 68,16.67 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டுடன் 1984—85 ஆம் ஆண்டில் (1) சென்னை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் பகுதி 1–ன் கீழ் செயல்படுத்தப்படும் உடனடிப் பணிகள் திட்டம் (2) மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தும் சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டம் உள்ளிட்ட திட்டப் பணிகள் எனும் இரு முக்கியத் தலைப்புகளில் செயல்படுத்த உள்ளன. அவற்றிற் கான விவரங்கள் பின்வருமாறு:—

| | குடிநீர் வழங்கல். | கழிவு நீரகற்றல். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சங்களில்) | | |
| 1. சென்னை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் பகுதி 1-ன் கீழ் செயல் படுத்தப்படும் உடனடிப் பணிகள் திட்டம் .. | 2.65 | 9.00 | 11.65 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2 மாநில அரசு நிதி யுதவியுடன் செயல் படுத்தும் திட்டங்கள் | 265.36 | 2,89.65 | 5,55.01 |
| 3 சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டம் .. | 62.50.00 | 0.01 | 62,50.01 |
| மொத்தம் .. | 65,18.01 | 2,98.66 | 68,16.67 |

(1) உடனடிப் பணிகள் திட்டம் : (சென்னை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (1)—

அ. குடிநீர்ப் பிரிவு :

உடனடிப் பணிகள் திட்டத்தின் கீழ் தற்போது குடிநீர் விநியோக முறையிலுள்ள நீர்க்குழாய்களில் உள்ள பழைய அளவைக் கருவிகள் மற்றும் தடுக்கிநழ்களை மாற்றி ஏற்கனவே வாங்கியுள்ள புதிய அளவைக் கருவிகளைப் பொருத்திப் புதுப் பிக்கும் பணி இவ்வாண்டு முடிவடையும். இவ்வாறு செய்வது குடிநீர் விநியோக முறையிலுள்ள நீர்ச் சேதத்தையும் நீர்க் கசிவையும் பெருமளவுக்குக் குறைந்து குடிநீரினைச் சேமிக்க உதவும்.

ஆ. சழிவு நீரகற்றல் பிரிவு:

உத்தேசிக்கப்பட்டுள்ள 15 கழிவு நீரேற்று நிலையங்களில் 14 கழிவு நீரேற்று நிலையங்களின் பணிகள் முடிக்கப் பெற்று செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள ஒரு நிலையத்தின் பணியும் நடைபெற்று வருகிறது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட வல்லுநர்களால், முதலீடும் முன்செய்யப் பெற்ற ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ள இந்த 15 முக்கிய கழிவு நீரேற்று நிலையங் களைப் புதுப்பிக்கும் பணி முடிவுற்று, இவை செயல்படத் தொடங்கியதும் இவற்றால் பயன் பெறும் பகுதிகளில் தற்போது நிலவிவரும் கழிவு நீர் தேங்கித் ததும்பி வழிந்தோடி நீர் நிலைகளில் கலந்து அசுத்தப்படுவது கணிசமான அளவு குறையும். இப்பணி இந்த ஆண்டு இறுதியில் நிறைவுறும்.

(2) மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்:

அ. குடிநீர் வழங்கல்.

நகருக்கு தினசரி 190 மில்லியன் லிட்டர் குடிநீர் கொணர் வதற்காகச் செங்குன்றத்திலிருந்து கீழ்ப்பாக்கம் தலைமை நீர் நிலையம் வரை 10 கி.மீ. நீளத்தில் ரூ. 288.00 இலட்சம் மதிப்பீட்டில் 3ஆவது குழாய்ச் சால்வாய் கட்டும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.



திருவான்மியூரின் தெற்கேயுள்ள கடலோர நீர் நிலைகளில் இருந்து 25 இலட்சம் லிட்டர் நிலத்தடி நீர் எடுக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு இந்திரா நகர், கஸ்தூரிபா நகர், பக்தவத்சலம் நகர் ஆகிய பகுதிகளுக்கு கூடுதல் குடிநீர் வினியோகிக்கப் பட்டுள்ளது. மேலும், சாலிக்கிராமம், விருகம்பாக்கம், கனகம்-தரமணி, வேளச்சேரி முதலிய பகுதிகளில் பணி துரிதமாக நடந்து வருகிறது. எருக்கஞ்சேரி, வில்லிவாக்கம் பகுதிகளில் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

சென்னை நகரில் இதுவரை குடிநீர் வசதி பெறாத இடங் களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு களில் குடிநீர் குழாய் போடும் பணியினை இவ்வாரியம் தொடர்ந்து செயல்படுத்தும்.

40 முதல் 50 ஆண்டுக் காலமாக நடைமுறையிலிருக்கும் தூர்ந்த பழைய குடிநீர்க் குழாய்களைப் புதுப்பிக்கும் பணி யினை இவ்வாரியம் இவ்வாண்டு தொடர்ந்து படிப்படியாகச் செய்யும். இதனால், குடிநீர்க் குழாய்களில் தற்போதுள்ள நீர் அழுத்தம் அதிகரித்து பொது மக்களுக்கு நல்ல முறையில் குடிநீர் வழங்க இயலும்.

கடந்த 60 ஆண்டுக் காலமாக உபயோகத்திலிருக்கும் கீழ்ப் பாக்கம் நீா நிலையத்திலிருந்து கீழ்ப்பாக்கம் குழாய் பிரிவாகும் இடம் வரை (shaft) உள்ள 48 அங்குலம் விட்டமுள்ள பழுதடைந்துள்ள எஃகு குழாயினை சுமார் ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு 60 அங்குலம் விட்டமுள்ள குழாயாக ரூ. 120 இலட்சம் செலவில் புதுப்பிக்கும் பணி எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இது, சென்னை நகருக்குக் குடிநீரினை சிறிது அதிக அழுத்தத்துடன் தற்போதுள்ள பழைய குழாயினால் தடங்கல் ஏதுமிருப்பின் அதனையும் நீக்கி விநியோகிக்க உதவும். மேலும் கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்தில் உள்ள இயந்திரங்களின் நீர் இறைக்கும் திறனை அதிகரிக்க அவைகளை ரூ. 175 இலட்சம் செலவில் புதுப்பித்து மாற்றியமைக்கும் பணியும் மற்றும் ரூ. 295 இலட்சம் செலவில் துரித இயந்திர வடிகட்டும் முறையும் சுத்திகரிப்பு செய்யும் ஒரு அதிகப்படியான சுத்திகரிப்பு நிலையமும் இவ்வாண்டு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. மேற்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டால், தற்போதுள்ள பல காலமாக செயல்பட்டு வரும் பழமையான இயந்திரங்கள் புதுப்பிக்கப் பட்டு, நகரின் குடிநீர் விநியோக முறையில் பெரும் தடங்கல் ஏதும் ஏற்படாமல் இருக்க ஏதுவாகும். இந்த அதிகப்படியான குடிநீர் சுத்திகரிப்பு வடிகட்டிகள் கீழ்ப்பாக்கத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள சுத்திகரிப்பு வசதியை மேம்படுத்து வதற்கும் வழங்கும் குடிநீரின் தரத்தினை உயர்த்தவும், செங்குன்றத்திலிருந்து பெறப்படும் நீர் முழுவதையும் ஒரே நிலை யான தரத்துடன் சுத்திகரிக்கவும் உதவும்.

நாரவாரிக்குப்பம் பகுதியிலிருந்து வரும் கழிவு நீர் புழலேரியில் கலந்து அசுத்தப்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகக் கட்டிடக் கால்வாய் கட்டும் பணியும் வேலி போடும் வேலையும் இவ்வருடம் செயல்படுத்தப்படும்.

ரூ. 30.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும் பொதுக் குழாய்களைச் சீர்படுத்துதல், தரக்கட்டுப்பாட்டுத் துறையினை மேம்படுத்தல் ஆகிய திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இது நகரின் குறைந்த வருவாயுள்ள மக்கள் வாழும் பகுதிகளிலுள்ள பொதுக் குழாய்களின் சுற்றுப்புறங்களை மேம் படுத்திச் சுத்தமாக வைக்க உதவும். மேலும், நகரில் வழங்கப் படும் குடிநீரின் தரத்தினை சீராக வைக்கவும் சிறந்த முறையில் கண்காணிக்கவும் உதவும்.

**ஆரணியாறு, கொடுதலை ஆறு மற்றும் பாலாறு கரையோரப் பகுதிகளில் நீர் புவி அமைப்பு மற்றும் செயற்கை நீர் செலுத்தும் முறை பற்றிய ஆய்வு.**

21 மாதங்களில் இரண்டு பருவ காலங்களை உள்ளடக்கி நடத்தப்பட்ட முதல் கட்ட ஆய்வில் சாதாரணமாக மழை பெய்யும் வருடங்களில் இந்த மூன்று ஆறுகளிலிருந்து கணிசமான அளவு தண்ணீர் வீணாகக் கடலுக்குள் செல்வதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்த முறையில் செய்யப்பட்ட இந்த ஆய்வில் ஆரணியாறு—கொடுதலையாறு படுகையிலும் மற்றும் பாலாற்றின் கடைமுனைப் படுகையிலும் தண்ணீரை செயற்கை முறையில் பூமிக்குள் செலுத்தி கூடுதலான நீரை பூமியில் தேக்கி மழையில்லாத காலங்களில் இந்த நீரை இறைத்து உபயோகிக்க முடியும் என்று அறியப்பட்டுள்ளது. தற்போதைய கணக்கீட்டின்படி ஆரணியாறு-கொடுதலையாறு பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 11 மில்லியன்காலனும் (நாளொன்றுக்கு 52 மில்லியன் லிட்டர்) மற்றும் பாலாறு படுகையில் நாள் ஒன்றுக்கு 22.7 மில்லியன் காலன் (நாளொன்றுக்கு 103 மில்லியன் லிட்டர்) ஆண்டுதோறும் கிடைக்குமென்று தெரிய வந்துள்ளது.

திட்டத்தின் 2வது கட்ட ஆய்வில் மேலும் செயற்கை முறையில் பூமியின் அடியில் நீரைச் செலுத்தி ஆழ்ந்த ஆய்வுக்குப் பின் முதல் கட்ட பணிகளின்போது கண்டவற்றை உறுதிப் படுத்தித் திட்டத்தை முழு அளவில் செயல்படுத்த சாத்தியக் கூறுகள் தெரியவரும்.

**ஆ. கழிவு நீரகற்றுப் பிரிவு :**

ஜார்ஜ் டவுன் பகுதியில் 70 ஆண்டுக் காலமாக இருந்து வரும் கழிவு நீர்க் குழாய்களைப் புதுப்பித்து மாற்றி அமைக்கும் பணி 18 தெருக்களில் முடிவுற்றுள்ளது. மற்றும் 4 தெருக்களில் இந்த மாற்றி அமைக்கும் பணி இந்த வருடம் எடுத்துக்கொள்ளப்படும்.



இதனால், இப்பகுதியில் நிரந்தரமாக நிலவிவரும் குறைபாடு களை குழாய்களில் கழிவு நீர் தேங்கி ததும்பிச் சாலையில் வழிந் தோடுவது மற்றும் வீட்டுக் கழிவு நீர்க் குழாய்களில் அடைப்பு ஏற்படுவது முதலியவை நீங்கும்.

தற்போது நகர எல்லைக்குள் பாதாள சாக்கடை வசதி யில்லாத மேல்பட்டடை, பள்ளிப்பட்டு போன்ற பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதி ஏற்படுத்துவதற்காகத் துவங்கப்பட்டுள்ள பணி இவ்வருடம் மேலும் துரிதமாகச் செயல்படுத்தப்படும். ஜனத்தொகை அதிகமான மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் நீண்ட காலத் தேவையான கழிவு நீரகற்று வசதி அமைக்கும் பணி ரூ. 60 இலட்சம் செலவில் இந்த வருடம் எடுத்துக் கொள்ளப்படும். இதனால், வெகுகாலமாக அசுத்தமடைந்து வரும் நீர்வழிகள் மேலும் அசுத்தமடைவதிலிருந்து தடுக்கப் படுகின்றன.

சைதாப்பேட்டை மற்றும் நந்தனம் பகுதிகளின் கழிவு நீரினால் அடையார் நதி அசுத்தமாவதைத் தடுப்பதற்காக மொத்தம் ரூ. 116.00 இலட்சம் செலவில் இரு திட்டங்கள் செய்ல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் தொழில் நிறுவனங்களில் உபயோகத்திற்காகப் பயன்படுத்துவதற்கான நிலையம் அமைக்க ஏதுவான மாதிரி நிலையம் ஒன்றைக் கோயம்பேடு அருகில் ரூ. 25.00 இலட்சம் செலவில் அமைக்கும் பணி இவ்வாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

ஜனநெருக்கடியான பகுதிகளில் உள்ள கழிவு நீர்க் குழாய் களில் தொடர்ந்து ஏற்படும் அடைப்புகள் மற்றும் கழிவுநீர் வழிந்தோடுவது ஆகிய குறைபாடுகள் நீங்குவதற்காக இந்தப் பகுதியில் உள்ள கீழ்வளைக்கால்களைத் தொட்டிகளாக மாற்றி அமைக்கும் திட்டம் ரூ. 30.00 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல், கழிவுநீர்க் குழாய்களில் மாட்டுத் தொழுவங்களிலிருந்து கசடுகள் சென்று அடைப்பதைத் தவிர்ப்பதற்காக சாணத் தொட்டி கட்டும் பணியும் ரூ. 10 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள சில குடிசைப் பகுதிகளில் கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்காக இப்பகுதிகளுக்கு கழிவு நீர் வடிகால் வசதியினை அமைத்துக் கொடுக்க ரூ. 20.00 இலட்சம் செலவில் திட்டமொன்று நிறைவேற்றப்பட உள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்பட்ட சென்னை நகர்ப் புற வளர்ச்சித் திட்டம் பிரிவு I-ன் கீழ் வாங்கப்பட்ட கழிவு நீர்க் கால்வாய் சுத்திகரிப்பு இயந்திரங்கள் கழிவுநீர்க் குழாய் களைச் சுத்தப்படுத்தி சிறந்த முறையில் பராமரிப்பதற்குப் பயன் படுவதால் மேலும், சில அதே மாதிரியான கருவிகளை வாங்கி நகரம் முழுவதும் உபயோகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்

பட்டுள்ளது. திருவான்மியூர் மற்றும் வில்லிவாக்கம் பகுதிகளுக்குக் கழிவு நீர் வடிகால் வசதி அமைத்தல் மற்றும் நகரின் கழிவு நீ போகும் கால்வாய் வசதியினை மேம்படுத்துதல் ஆகிய புதிய திட்டங்கள் இவ்வாண்டு எடுத்துக் கொள்ளப்படும். ரூ. 1,348 இலட்ச மதிப்பீட்டிலான இத்திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(3) சென்னை குடிநீர் வழங்கல் திட்டம்:

சென்னைப் பெருநகர் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காணும்முகத்தான் சென்னைப் பெருநகர் குடிநீர் வினியோகத்திற்கு கிருஷ்ணா நதியிலிருந்து 15 T.M.C. நீரைப் பங்கிட்டுக் கொள்வதற்கான ஓர் ஒப்பந்தத்தை ஆந்திரபிரதேச அரசுடன் இவ்வரசு செய்து கொண்டுள்ளது. கிருஷ்ணா நதி நீரை கொணர்ந்து சுத்திகரித்து சென்னை மற்றும் புற நகர்ப்பகுதிகளில் வினியோகம் செய்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் இவ்வாண்டு துவங்கும். இவ்வாண்டு இதற்காக ரூ. 6,250.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ 6,000 இலட்சம், ஆந்திர மாநிலத்தில் உள்ள பணிகளுக்கான இவ்வரசின் பங்குத் தொகையாக ஆந்திரபிரதேச அரசுக்கு அளிக்கப்படும். மிகுந்துள்ள நிதி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் மேற்கொள்ளவிருக்கும் பணிகளுக்குரியதாகும்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
136258

D
Y211,31 N84

N84.66-1 51